# களஞ்சியம்

## சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

# KALANJIYAM

## International Journal of Tamil Studies (KIJTS)

## SPECIAL ISSUE – PART I

பகுதி I • Articles 01 – 20

# தமிழ் வளர்ச்சியில் பல்துறை ஆய்வுகள்

## (சங்க காலம் முதல் தற்காலம் வரை)

*Multidisciplinary Studies in the Development of Tamil: From the Sangam Age to the Present Day*

**Vol. 10 • No. 02 • September 2026**

DOI: https://doi.org/10.63300/kijts10sp02.2026

Quarterly • Peer-Reviewed • Open Access • Multidisciplinary • International
Crossref DOI • Google Scholar • SJIF Impact Factor 4.0

**Available online at: www.ngmtamil.in**

# பொருளடக்கம்

## CONTENTS – INDEX OF ARTICLES (PART I: ARTICLES 01–20)


| S.No. | Title of the Article / Author(s) | Page |
|---|---|---|
| 01 | **சேக்கிழார் கற்பிக்கும் பக்திநெறி**<br>*The Path of Devotion Taught by Sekkizhar*<br>முனைவர் சு.லலிதா | 1 |
| 02 | **தொல்காப்பியம் பொருளதிகாரம் களவியல்: தலைவன்–தலைவி உறவுநிலைகள் பகுப்பாய்வு**<br>*Tolkappiyam Porulathigaram – Kalaviyal: An Analysis of the Relationship Dynamics Between the Hero and the Heroine*<br>முனைவர் த. முத்துலட்சுமி | 10 |
| 03 | **சங்கம் வளர்த்த தமிழ்**<br>*Tamil Nurtured by the Sangam*<br>அ.பாலகிருஷ்ணன் \| முனைவர் எம். இராமசந்திரன் | 16 |
| 04 | **ஆற்றுதல்: கலித்தொகை காட்டும் வாழ்வியல் நெறி**<br>*Aatruthal: The Way of Life Portrayed in Kalithogai*<br>பெ. சண்முகவடிவேல் | 20 |
| 05 | **காப்பியங்களில் பழக்க வழக்கங்களும், நம்பிக்கை மரபுகளும்**<br>*Customs, Practices, and Belief Traditions in Epics*<br>திருமதி அ.ரூபாதேவி | 28 |
| 06 | **எழுத்தாளர் இமையம் படைப்புகளில் நாட்டார் சமய மரபுகள்**<br>*Folk Religious Traditions in the Works of Writer Imayam*<br>கோ. கிருஷ்ணன் \| முனைவர் அ. சுபா | 34 |
| 07 | **சங்க இலக்கியங்கள் வழி அறியலாகும் பண்டைய மக்களின் பழக்கவழக்கங்கள்**<br>*Customs and practices of ancient people as revealed through Sangam literature*<br>முனைவர் ப. கற்பகராமன் | 43 |
| 08 | **எட்டுத்தொகை வழி அறியலாகும் சங்ககால தலைவியின் ஆளுமைப் பண்பு**<br>*The personality traits of the Sangam-era heroine as revealed through the Ettuthogai anthology*<br>முனைவர் பெ. தீபா | 52 |
| 09 | **தமிழ் வளர்ச்சியில் பல்துறை ஆய்வுகள் (சங்க காலம் முதல் தற்காலம் வரை)**<br>*Multidisciplinary Studies in the Development of Tamil: (From the Sangam Era to the Contemporary Age*<br>முனைவர். இரா. அனுஷா | 64 |
| 10 | **ஆண்டாள் திருப்பாவை கூறும் உளவியல் கருத்துக்கள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு சிந்தனைகள் - ஓர் ஆய்வு**<br>*Psychological Insights and Concepts of Social Unity in Andal's Thiruppavai: A Study*<br>முனைவர். செ. ராஜேஸ்வரி | 73 |
| 11 | **தமிழ் வளர்ச்சியில் பல்துறை ஆய்வுகள் சங்க காலம் முதல் தற்காலம் வரை**<br>*Multidisciplinary Studies on the Development of Tamil: From the Sangam Age to the Present Day*<br>திருமதி.அ.கேத்தரின் \| முனைவர் எம்.சம்பத்குமார் | 79 |
| 12 | **எட்டுத்தொகை உணர்த்தும் திருக்குறள் வாழ்வியல் கூறுகள்**<br>*Aspects of Life in Thirukkural as Reflected in Ettuthogai*<br>திருமதி. முனைவர். ஜெ.ஜெயபிரியா | 85 |

| S.No. | Title of the Article / Author(s) | Page |
|---|---|---|
| 13 | **சங்க இலக்கியத்தில் குறிஞ்சிப்பண்**<br>*Kurinjipan in Sangam literature*<br>முனைவர் த.மலர்விழி | 93 |
| 14 | **திருக்குறள் காட்டும் நிர்வாகச் சிந்தனைகள் – அன்றும் இன்றும்**<br>*Administrative Thoughts Propounded by Thirukkural – Then and Now*<br>சே. சுப்புத்தாய் | 100 |
| 15 | **கோமல் சுவாமிநாதன் நாடக நூலில் பெண்ணியத்தின் நிலைப்பாடு (என் வீடு என் கணவன் என் குழந்தை)**<br>*The Feminist Perspective in Komal Swaminathan's Play (My Home, My Husband, My Child*<br>வ. மோ. சத்தியவதி \| முனைவர் ப. ஜெயபாரதி | 108 |
| 16 | **நாட்டுப்புறப் பாடல்களில் இசைநயங்கள்**<br>*Musical Nuances in Folk Songs*<br>முனைவர் கி.கீதா | 114 |
| 17 | **சங்க இலக்கியங்கள் உணர்த்தும் பண்டைய கால மகளிரின் வாழ்வியல்**<br>*The Lifestyle of Ancient Women as Depicted in Sangam Literature*<br>முனைவர் மு. நளா | 122 |
| 18 | **எழுத்தாளர் மௌனி படைப்புகளில் கதைப் பின்னனியின் தன்மைகள்**<br>*Characteristics of the Narrative Setting in the Works of Writer Mouni*<br>பெ.நித்தியா | 128 |
| 19 | **சங்க இலக்கியங்கள் வழி அறியலாகும் பண்டைய சடங்குகள்**<br>*Ancient rituals known through Sangam literature*<br>முனைவர் உ நிர்மலா | 134 |
| 20 | **தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கியத்தின் பங்களிப்பு**<br>*The Contribution of Devotional Literature to the History of Tamil Literature*<br>மு. சபரி அனந்த் | 140 |

**ARTICLE 01 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 1–9

# சேக்கிழார் கற்பிக்கும் பக்திநெறி

## The Path of Devotion Taught by Sekkizhar

**முனைவர் சு.லலிதா**
தமிழ் இணைப்பேராசிரியர்
வேளாளர் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரி
திண்டல், ஈரோடு – 12

### Abstract

Living beings have been classified based on their functions into categories ranging from those possessing a single sense to those with six senses. Having evolved from the five-sensed state to the six-sensed state, we humans ought to progress towards a 'seventh sense' rather than allowing our evolution to regress. The noble path lies in seeking and attaining true divine wisdom. Devotion, which initially arose from fear, has matured over time; today, it has reached a stage where human, social, and global unity are seen as achievable solely through devotion. Devotees like Sekkizhar, who were deeply immersed in such devotion, categorized the paths to attaining the Divine into two types: the path of intellect (Arivu Maargam) and the path of love (Anbu Maargam). This research paper examines these two paths through the lens of Sekkizhar’s Periyapuranam.

### ஆய்வுச் சுருக்கம்

உயிரினங்களின் செயல்பாடுகளுக்கு ஏற்ப அவற்றை ஓரறிவு முதல் ஆறு அறிவு வரை பகுத்துள்ளனர். இத்தகைய உயிரினப் பாகுபாட்டில் ஐந்தறிவிலிருந்து ஆறறிவை நோக்கி வளர்ந்த மனிதர்களாகிய நாம், ஏழாம் அறிவை நோக்கி வளர வேண்டுமே தவிர, நம்முடைய வளர்ச்சியானது மீண்டும் கீழ்நோக்கியதாக இருந்துவிடக் கூடாது. உண்மையான இறை ஞானம் என்பது எது என்பதைத் தேடி அதனை அடைவதே உயர்நெறி. ஆரம்பத்தில் பயத்தின் காரணமாக தோன்றிய இந்தப் பக்தியானது காலப்போக்கில் பண்பட்ட நிலையினை அடைந்து இன்று மனித ஒருமைப்பாடு, சமுதாய ஒருமைப்பாடு, உலக ஒருமைப்பாடு ஆகிய அனைத்தும் பக்தியால்தான் நிகழும் என்ற வளர்ந்த நிலையை அடைந்துள்ளது. இத்தகைய பக்தியில் திளைத்த சேக்கிழார் போன்ற பக்திமான்கள் இறைவனை அடையும் வழியை, அறிவு மார்க்கம் மற்றும் அன்பு மார்க்கம் என்று இரண்டு வகையாகப் பகுத்துள்ளனர். அந்த இரண்டு மார்க்கங்களையும் சேக்கிழாரின் பெரியபுராணம் கொண்டு ஆராய்வதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** கடவுள் - அன்பு மார்க்கம் - அறிவு மார்க்கம் - அவியுணவு – அருச்சனை.

## ஆய்வு அணுகுமுறை

அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துள்ள இளைவனை அடைகின்ற வழிகளைப் பெரியபுராணத்தில் எவ்வாளுறு சேக்கிழார் வகுத்துக்கூறுகின்றார் என்பதை ஆராய்ந்து விளக்குவதால் இந்த ஆய்வுக்கட்டுரையானது விளக்கமுறை ஆய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வு நோக்கம்

இறைநிலையை அடைய இறை ஞானிகள் வகுத்துக்கூறிய மார்க்கங்களான அறிவு மார்க்கம் மற்றும் அன்பு மார்க்கம் ஆகியவற்றை ஆராயந்து விளக்குவதே இந்த ஆய்வின் நோக்கமாக அமைந்துள்ளது.

## முன்னுரை

உலகில் உள்ள அனைத்து உயிரினங்களும் தங்களுக்குத் தெரிந்த வழிகளில் இறைவனை வணங்குகின்றன. எந்த மதமாயினும், எந்த உயிரினமாயினும் அவை மேற்கொள்ளும் வழிபாட்டில் முதன்மையாக இருப்பது அன்பு மட்டுமே. அன்பு ஒன்றே உயிரினங்களை மட்டுமின்றி இறைவனையும் நம்மோடு இணைக்கும் தன்மை கொண்டது. அறிவானது எவ்வளதான் மேலான செயல்களைச் செய்தாலும் அன்பின் வழியில் அதுவும் அடங்கும் தன்மை கொண்டது. அன்பு மேலெழும்போது அறிவு அடங்கிவிடும். இத்தகைய அன்பால் முழுமையாக நிறைந்த நிலையே இறைவன் விரும்பும் நிலை. இதையே சேக்கிழாரும் தன்னுடைய பெரியபுராணத்தில் கண்ணப்பர் புராணம் மூலம் விளக்குகின்றார். அந்த அறிவு மார்க்கத்தை எடுத்து இயம்புவதாக இவ்வாய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

## பெரியபுராணம்

செயற்கு அரிய செய்வர் பெரியர் என்னும் குறள் வரிக்கேற்ப அறுபத்து மூன்று நாயன்மார்கள் புரிந்த இறைப் பக்தியையும், தொண்டு நெறியையும் வரலாற்று முறையில் கூறும் நூலே பெரிய புராணம் (பெரியர் புராணம்) ஆகும். இந்நூல் பல்வேறு நாடு, ஊர், சாதி, தொழில் கொண்ட நாயன்மார்களுடைய வாழ்க்கையை விவரிக்கிறது. அக்காலச் சமுதாய வரலாற்றையும் எளிய, இனிய நடையில் எடுத்து சொல்கிறது. தில்லை அம்பலத்தே ஆடும் சிவபெருமான் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்கச் சேக்கிழார், பக்தி வளமும், இறையருட் திறமும் குறைவிலாது சிறக்குமாறு இலக்கியப் பெருங்களஞ்சியமாக, பெரிய புராணத்தை இயற்றி அருளினார்.

பெரிய புராணம் என்னும் பெருங்காப்பியம் தமிழகச் சூழலையும், 63 அடியார் பெருமக்களையும் மையமாகக் கொண்டு திகழ்கின்றது. இந்நூல் பெரும் பிரிவாக இரண்டு காண்டங்களையும், உட்பிரிவாக 13 சருக்கங்களையும் உடையது. 4286 விருத்தப் பாக்களையுடைய ஒரு பெரு நூலாகும்.கி.பி.11, 12-ஆம் நூற்றாண்டில் சோழநாட்டை ஆட்சி செய்த மன்னன் இரண்டாம் குலோத்துங்க சோழனாவான் (அநபாய சோழன்). அம்மன்னனின் அவையில் முதல் அமைச்சராகப் பணி புரிந்தவர் சேக்கிழார். சோழ மன்னனின் வேண்டுகோளுக்கு இணங்க, சிவனடியார்களின் உயர்ந்த வாழ்க்கையைக் கதைப் பின்னலாகக் கொண்டு பெரிய புராணத்தைப் பாடினார் சேக்கிழார்.

சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையை முதல் நூலாகவும், நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியை வழிநூலாகவும் கொண்டு பெரிய புராணத்தைச் சார்பு நூலாகப் படைத்தார் சேக்கிழார்.

சிவனை முதன்மைப்படுத்தி வழிபடும் சமயமாகிய சைவத்தையும், அடியார்களது வரலாறு, தொண்டு நிறைந்த வாழ்வு, முத்தி பெற்ற நிலை ஆகியவற்றையும் விரிவாகவும் தெளிவாகவும் புலப்படுத்துவதே பெரிய புராணத்தின் நோக்கம் ஆகும்.

## சேக்கிழார்

சென்னைக்கு அருகிலுள்ள குன்றத்தூர் என்னும் ஊரில் வேளாளர் மரபில் பிறந்தவர் அருண்மொழித் தேவர். இப்பெயரே அவருக்குப் பெற்றோர் இட்டு வழங்கியதாகும். சேக்கிழார் என்பது இவரது குடிப்பெயராகும். இவர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியதால், இரண்டாம் குலோத்துங்க சோழன் அவையில் முதலமைச்சராகப் பணிபுரிந்தார். அம்மன்னனின் வேண்டுகோளை ஏற்று, அடியார்களின் பெருமையை வரலாறாக எழுதினார். இந்நூலின் பெருமையை உணர்ந்த மன்னன், அவரைப் பட்டத்து யானையின் மீதேற்றி நகர்வலம் செய்து உத்தம சோழப் பல்லவராயன் என்னும் பட்டம் தந்து சிறப்பித்தான். இவருடைய காலம் கி.பி. 12 -ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். சிவத் தொண்டர்களின் வரலாற்றைச் சிறப்பித்த காரணத்தால் இவருக்குத் தொண்டர்சீர் பரவுவார் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு. கல்வெட்டுகள் இவரை மாதேவடிகள் என்றும், இராமதேவர் என்றும் சிறப்பிக்கின்றன. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை, பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ என்று இவரைப் பாராட்டுகின்றார்.

## கடவுள்

கடவுள் என்பவர் அண்டம் முழுவதையும் படைத்துக் காப்பவர். அவர் எல்லாச் சக்திகளும் பொருந்தியவர். பிறப்பு-இறப்பு, இரவு-பகல், இன்பம்-துன்பம் போன்ற உலக வாழ்வியலில் தொடர்புடைய அனைத்தையும் கடந்து ஏகாந்தம் என்று கூறப்படும் மறைபொருளாக இருப்பவர். மேலும் அன்பு, புனிதம், கருணை என்பதன் மறுபொருள் கடவுள். பிரபஞ்சத்தின் படைப்பாளராகவும் பாதுகாவலராகவும் பிரபஞ்சமாகவும் இருப்பவர் கடவுள். இத்தகைய கடவுளை அறிவதற்காக ஒவ்வொரு ஆன்மாவும் பயணிக்கும் வழியே மதங்கள். இந்த மதங்கள் ஒவ்வொன்றும் தாங்கள் கற்றறிந்த ஆன்மீக அறிவுக்கு ஏற்ப கடவுள் பற்றி பல்வேறு விதமாக விளக்குகின்றன.

இந்து சமயத்தவர் கடவுளைப் பல உருவங்களிலும் பெயர்களிலும் வணங்குகின்றனர். இவ்வாறு வணங்கப்படும் இந்துக் கடவுள்கள் காலத்துக்குக் காலமும் இடத்துக்கு இடமும் பல வேறுபாடுகளுடன் காணப்படினும், இவை அனைத்தையும் ஒரே நெறிக்குள் இந்து சமயம் அடக்கி வைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இசுலாம் சமயத்தவர், கடவுள் ஒருவரே. அவரே அல்லாஹ். அவரைத் தவிர வேறு கடவுள் இல்லை என்ற நம்பிக்கை கொண்டவர்கள். அல்லாஹ் என்பது கடவுள் என்ற பொருள் கொண்ட பால் வேறுபாடு காட்டாத ஒரு படர்க்கை சொல். அது அரேபிய நாடோடிக் குழுக்கள் தங்கள் தெய்வத்தைக் குறிக்க பயன்படுத்திய சொல். அல்லாஹ் ஒருவரே

இருக்கிறார். படைத்துப் பரிபாலிக்கும் ஆற்றல் அவருக்குரியது. அவருக்கு நிகராகவோ, துணையாகவோ யாரும் கிடையாது. வணக்கத்திற்குத் தகுதியானவர் அவர் ஒருவர் மட்டும்தான் என்கிறார்கள்.

கிறித்தவ சமயத்தவர் ஓர்இறைக் கொள்கையுடையவர்கள். இவர்கள் இயேசுவை மெசியா மற்றும் கிறிஸ்து என்று அழைப்பர். இவ்விரு சொற்களின் பொருளும் திருப்பொழிவுப் பெற்றவர் என்பதாகும்.

சமண சமயத்தவர்கள், மனித ஆன்மாவே கடவுள். மனித ஆன்மாவைத் தவிர வேறு கடவுள் இல்லை என்ற நம்பிக்கைக் கொண்டவர்கள்.

பௌத்த சமயத்தவரோ கௌதம புத்தரின் போதனைகளின் அடிப்படையில் வாழ்பவர்கள். அனைத்தையும் உருவகிக்கும், நிர்வகிக்கும் ஓர் உயரிய சக்தி உண்டு என்ற நம்பிக்கை இவர்களுக்கு இல்லை என்றாலும், தேவர்கள் என்ற ஓர் இனம் உண்டு என்பதிலும், அவர்களும் கர்ம வினைகளுக்குக் கட்டுப்பட்டவர்களே என்பதிலும் நம்பிக்கை கொண்டவர்கள்.

இவ்வாறு ஒவ்வொரு மதத்தவரும் கடவுள் குறித்த பல்வேறு கொள்கையைக் கொண்டவர்களாக இருப்பினும் இவர்கள் அனைவரும் சென்றடையும் இடம் வீடுபேறு என்ற ஒரே இடம்தான் என்பதில் துளியும் ஐயமில்லை.

## கடவுள் நம்பிக்கை

இயற்கைச் சக்திகளைத் துணையாகக் கொண்டு வாழ்க்கையை நடத்திவந்த ஆரம்பகால மனிதர்களிடம் கடவுள் நம்பிக்கையானது பயத்தின் காரணமாகவே தோன்றியது. பலவகையான விலங்குகளை வேட்டையாடி விலங்குகளின் ரத்தத்தை மட்டுமே கண்டுவந்த மனிதனுக்கு ஒரு மரக்கிளைப் பட்டு அவன் முகத்தில் குருதி வடியவே, முதன்முதலில் வலியை உணர்கிறான். அப்போதுதான் குருதியை முதன்முதலில் பார்க்கிறான். அன்றுமுதல் பயந்து மரத்தினை வழிபடலாயினான். அதையே நாம் காலப்போக்கில் கந்து வழிபாடு(மர வழிபாடு) என்கிறோம்.

தன்னைவிட ஆற்றல்படைத்த சக்திகளால் தனக்குத் தீங்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்ற அச்சத்தின் காரணமாக ஆரம்பக்காலத்தில் மனிதனிடம் தோன்றிய கடவுள்; நம்பிக்கை, காலப்போக்கில் பண்பட்ட நிலையினை அடைந்து, தெளிந்த ஆன்மீகத்தில் தன்னுடைய வாழ்க்கை முழுதும் செலுத்தி இன்பம் அடையும் உயரிய நிலையை இன்று அடைந்துள்ளது.

## பக்தி

மனிதனுடைய வாழ்க்கையை நன்னெறியில் செலுத்தப் பயன்படுவதே பக்தி. இந்தப் பக்தியினால் அறம், அன்பு, இரக்கம் என்னும் நல்லுணர்வுக் கூறுகள் மனிதனிடம் மிகுந்துக் காணப்படும்.

## அன்பு மார்க்கம் அறிவு மார்க்கம்

இறைவனின் மேல் செலுத்தப்படும் இந்தப் பக்தியைச் சேக்கிழார் இரண்டு வகையாகப் பகுத்துக் கூறுகின்றார். ஒன்று கற்றறிந்தார் ஏத்தும் அறிவு மார்க்கம். இதில் மந்திரங்கள் மற்றும் இறைவனின் பெயர்கள் போன்றவை ஓங்கி ஒலிக்கப்படும். மற்றொன்றோ படிக்காத பாமரர் வணங்கும் அன்பு மார்க்கம். இதில் மந்திரங்களை உச்சரிக்கக்கூட தேவையில்லை. தன்னிடம் என்ன உள்ளதோ அதைக் கொண்டு, தனக்கு என்ன தெரிகின்றதோ அதன் அடிப்படையில் வழிபடுவதே அன்பு மார்க்கமாகும். இந்த அன்பு மார்க்கத்தை குழந்தை நிலை என்று குறிப்பிடுவர். கண்ணப்பர் புராணத்தில் இந்த இரண்டுவகையான மார்க்கத்தையும் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார் என்பது கூர்ந்துநோக்கத்தக்கது.

அன்பு மார்க்கம் என்பது படித்தவர், படிக்காதவர் என்று அனைவரும் கடவுளை வழிபடும் எளிய மார்க்கம். தன்னைச் சார்ந்தவர்களோடு அன்பு செலுத்துவதிலேயே கடவுளைக் காண்பது இம்மார்க்கம்.

தான் விரும்பிய இறைவனை வழிபட எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றித் தன்னுடைய மனதினை மட்டும் சாட்சியாக வைத்து வழிபடும் இந்த அன்பு மார்க்கத்தில் இறைவனுக்குப் படைக்கப்படும் பொருளை முதலில் பக்தன் சுவைத்து, அதில் சிறந்தது எது என்பதை எடுத்து இறைவனுக்குப் படைப்பான். இத்தகைய அன்புவழி மார்க்கத்தை மேற்கொண்டுதான் இறைவனுடைய அன்பைக் கண்ணப்பர் பெற்றுள்ளார் என்பதை சேக்கிழாரும்,

“கொழுவிய தசைகள் எல்லாம்
கோலினில் தெரிந்து கோர்த்து அங்கு
அழலுறு பதத்தில் காய்ச்சிப்
பல்லினால் அதுக்கி நாவில்
பழகிய இனிமை பார்த்துப்
படைத்தஇவ் விறைச்சி சால
அழகிது நாயநிரே
அமுது செய்து அருளும் என்றார்”
(பெரியபுராணம் - கண்ணப்பர் பராணம் - பா- 125)
என்ற பாடல் வரிகளிலும் மற்றும்,
“செங்கண் வெள் விடையின் பாகர்
திண்ணனார் தம்மை ஆண்ட
அங்கணர் திருக்கா ளத்தி
அற்புதர் திருக்கை அன்பர்
தங்கண்முன் இடக்கும் கையைத்
தடுக்க மூன்று அடுக்கு நாக
அங்கணர் அமுத வாக்குக்
கண்ணப்ப நிற்க என்ற”
(பெரியபுராணம் - கண்ணப்பர் பராணம் - பா- 132)
என்ற பாடல் வரிகளிலும் உணர்த்துகின்றார்.

இவ்வாறு அன்பு மார்க்கத்தில் வழிபட்ட கண்ணப்பரைச் சிவபெருமான் ஏற்றுக்கொண்ட தன்மையினை, அரு சோமசுந்தரம் அவர்கள்,

“திண்ணன் பகலில் வேட்டையாடியும் இரவில் காவல் காத்தும் பொழுதுபோக்கினான். சிவகோசியார் நாள்தோறும் இறைவன் சந்நிதியில் இறைச்சிக் கிடக்கக்கண்டு தூய்மை செய்துவந்தார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. ஐந்தாம்நாள் இரவு, சிவபெருமான் சிவகோசியார் கனவில் தோன்றி, ‘அப்பனே, அவனை வேடனென்று எண்ணாதே. அவன் அன்புக்கு எல்லையில்லை. அவன் மெய்யறிவும் இனிய செயலும் கொண்ட அன்புருவம். நீ சூடிய பூக்களை அவன் காலால் நீக்குவான். அவன் காலடி நமக்கு முருகனின் காலடியிலும் கனிவு தருகிறது. அவன் உமிழும் மஞ்சன நீர் கங்கையிலும் தூயது. அவன் தலைமயிரில் சொருகிவரும் பூ பிரம்மா, திருமால் சாத்தும் பூக்களிலும் புண்ணியமானது. அவன் சுவைத்துப்பார்த்து அளிக்கும் இறைச்சி அவியுணவினும் அரியது. அவன் பேசும் சொற்கள் வேதங்களினும் விழுமியன. அனைத்திற்கும் காரணம் அவனது தூய அன்பே ஆகும். அதனை நீ நாளை நம் பக்கத்தில் மறைந்திருந்து பார் என்றாh.;”

என்று விளக்குகின்றார்.

அறிவு மார்க்கம் என்பதோ பலவகையான மந்திரங்கள் கூறி, முறையான அபிஷேகம், அருச்சனைகள் முதலியன செய்து ஆகம விதிப்படி இறைவனை வணங்குவதாகும். இந்த அறிவு மார்க்கத்தில் பலவகையான யாகங்கள் செய்து ஆகாயத்தில் இருக்கும் இறைவனைப் பஞ்ச பூதங்களின்வழி இறக்கி அருள்பெற்று மகிழ்வர். இதில் இறைவனுக்குப் படைக்கப்படும் நைவேத்தியங்களை முகந்துப் பார்க்கக்கூடக் கூடாது. இத்தகைய அறிவு வழியான பக்தி மார்க்கத்தை மேற்கொண்டு இறைவனின் திருவருளைப் பெற்றவர் சிவகோசியார் என்பதை,

“பழுது புகுந் தது தீரப்
பவித்திரமாம் செயல்புரிந்து
தொழுது பெரு வனகொண்டு
தூய பூசனைத் தொடங்கி
வழும்பவில்திரு மஞ்சனமே
முதலாக வரும்பூசை
முழுது முறைமையின் முடித்து
முதல்வனார் கழல் பணிந்தார்”
(பெரியபுராணம் - கண்ணப்பர் பராணம் - பா- 112)
என்ற பாடல் வரிகளிலும் மற்றும்,
“பணிந்தெழுந்து தனி முதலாம்
பரனென்று பல்முறையால்
துணிந்த மறை மொழியாலே
துதி செய்து சுடர்த் திங்கள்
அணிந்தசடை முடிக் கற்றை
அங்கணரை விடை கொண்டு
தணிந்த மனத் திரு மனிவர்

தபோ வனத்தின்இடை சார்ந்தார்”
(பெரியபுராணம் - கண்ணப்பர் பராணம் - பா- 102)
என்ற பாடல் வரிகளிலும் சேக்கிழார் விளக்குகின்றார்.

இவ்வாறு அன்பு மார்க்கத்திலும் அறிவு மார்க்கத்திலும் இறைவனின் மேல் செலுத்தும் பக்தி, தீமைக்கு அஞ்சி நன்மைபுரிந்து வாழவேண்டும் என்ற எண்ணத்தை மனிதர்களிடம் ஏற்படுத்துகின்றது. பரந்து விரிந்துள்ள இந்த உலகில் மனிதன் சிறந்த வாழ்க்கையை இன்பமாக வாழ்வதற்கு அவனிடம் உள்ள இந்தப் பக்தியே காரணம் என்பது குறிப்பிடத்தக்கது. தன்னுடைய அறிவுக்கு ஏற்பவும், தன்னுடைய வசதிக்கு ஏற்பவும் தான் மேற்கொள்ளும் வழிபாட்டினை அமைத்துக்கொள்ளலாம். இறைவன் என்பவன் நாம் அனைவருக்கும் மேலானவன். நாம் அனைவரும் அவனுக்குக் கீழ்hனவர்கள். டினவே நாம் எந்தவிதமான வழிபாட்டினை மேற்கொண்டாலும் அவற்றை நம் கடவுள் ஏற்றுக்கொள்ளும். நாம் வழிபடவேண்டும் என்பது மடமுமே முக்கியம்.

## ஆன்மாவை வளப்படுத்தும் கல்வி வழிபாடு

இறைவனின் திருவடியை அடைவதற்காகவே நாம் அனைவரும் பிறவி எடுத்துள்ளோம். ஆனலால் அந்தத் திருவடியைச் சிந்தித்தலும், துதித்தலும், வணங்குதலுமே நம்முடைய முக்கியக் கடமை. உடம்பு நயப்படுவதற்கு உணவும், மனம் நயப்படுவதற்குக் கல்வியும் தேவைப்படுவதைப் போல ஆன்மா நயப்படவதற்குக் கடவுள் வழிபாடு அவசியம் தேவையாகும். நாம் செய்யும் தொழிலுக்குக் கருவியாக இருப்பது உடம்பு. பொருட்களின் தன்மையை நாம் சரியாக அறிந்துகொள்ள கருவியாக இருப்பது மனம். அனால் இந்த உடம்பும், மனமும் ஆன்மாவின் கருவிகள். எனவே உடம்பை நயப்படுத்துவதற்கு வேண்டிய கல்வியைவிடவும், மனதை நயப்படுத்துவதற்கு வேண்டிய கல்வியைவிடவும் மேலானது ஆன்மாவை நயப்படுத்துவதாகிய கடவுள் வழிபாடு.

நாம் எதை அதிகமாக சிந்திக்கிறோமோ அதில் நமக்கு உறுதியான பற்று உண்டாவது போல கடவுளினிடத்தில் சிந்தனையைச் செலுத்துபவன் கடவுளின் அன்புக்கு உரியவனாகிறான்.

இத்தகைய இறை வழிபாடு என்பது உலகில் பன்னெடுங்காலமாக நடைபெற்றுவரும் புனிதமான செயலாகும். இந்த இறை வழிபாட்டினை மேற்கொள்பவர்கள் மட்டுமல்லாது அவர்களுடைய சந்ததியினரும் குறைவுபடாத செல்வச் செழிப்போடு வாழ்வார்கள் என்பதைத் தொல்காப்பியர்,

“வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ”
தொல்காப்பியம் - பொருளதியாரம் - செய் - நூ-106)
என்ற நூற்பா வழி சுட்டுகின்றார்.

## வழிபாட்டினால் உண்டாகும் ஒருமைப்பாடு

இறைவனுடைய அருளைப் பெருவதற்காக மேற்கொள்ளப்படும் இந்த வழிபாடு, தன் பொருட்டுச் செய்யும் தனிமனித வழிபாடு, பிறர் பொருட்டுச் செய்யும் கூட்டு வழிபாடு என்று இரண்டு முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றது.

தன் பொருட்டுச் செய்யும் தனிமனித வழிபாட்டால் தனிமனித ஒருமைப்பாடு ஏற்படுகின்றது. எப்படி என்றால் இடக்கை மணியடிக்க, வலக்கை மலர் தூவுகிறது. வாய் மந்திரங்களைக் கூற, உள்ளம் இறைவனுடன் ஒன்றி நிற்கிறது. இதே போன்று பிறர்பொருட்டுச் செய்யும் கூட்டு வழிபாட்டிலும் கூட்டுணர்ச்சி உண்டாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இறைவனை வழிபடுவதினால் தனிமனித வழிபாடும் மக்கள் ஒருமைப்பாடும் ஏற்படுவதைப் போலவே, இயற்கை ஒருமைப்பாடும் உண்டாகின்றது என்பது கூர்ந்து நோக்கத்தக்கது. மத்தளத்தைத் சூடுபடுத்துவதனால் நெருப்புடனும், சங்கு நீரிலிருந்து எடுப்பதனால் நீருடனும், மணி உலோகத்திலும் (நிலத்திலிருந்து எடுக்கப்படுவது), குழல் காற்றுடன் தொடர்பு கொள்வதாலும் ஓதும் மந்திரம் அண்ட வெளியெங்கும் கேட்பதாலும் பஞ்ச பூதங்களும் இறை வழிபாட்டினால் தூய்மை அடைவதுடன் ஒற்றுமையும் அடைகின்றன.

## ஐம்புலன்களும் பயனடைதல்

பஞ்ச பூதங்களைப் போலவே இறைவனின் திருமேனியைக் காண்பதால் கண்ணும், அவருடைய திருப்புகழைக் கேட்பதினால் காதுகளும், அவற்றை ஓதுவதால் வாயும், நறுமணப் புகையை நுகருவதால் மூக்கும், திருமேனியை வலம் வந்து தொழுவதால் கைகளும், கால்களும் அவற்றிற்குரிய படைப்பின் பயனை அடைகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இறை வழிபாட்டினால் தனிமனிதனுடைய வாழ்க்கையும், மனித இனத்தினுடைய ஒட்டுமொத்த வாழ்க்கையும், இயற்கையின் தொழிலும் என அனைத்தும் ஒருமைப்பாடு அடைகின்றன என்பதில் எந்தவித ஐயமுமில்லை. எனவே மனத்தூய்மையுடன் பக்தி செழுத்தி, முறையான வழிபாடுகளை மேற்கொண்டு இறைநிலையோடு இணைந்து இன்பமாக வாழ்வோம்.

## முடிவுரை

ஆரம்பத்தில் பயத்தின் காரணமாக நம்மிடம் தோன்றிய பக்தியானது காலப்போக்கில் நம்முடைய அறிவின் வளர்ச்சியால் இன்று பன்பட்ட நிலையினை அடைந்து சமயம், வழிபாடு என்று விரிந்துள்ளது. பல்வேறு மதத்தவரும் தங்களுக்குத் தெரிந்த முறைகளில் இறைவனை வணங்கினாலும், எல்லா மதங்களும் இறைவனின் பாதங்களிலேயே நாம் அனைவரையும் கொண்டுசேர்க்கின்றது. போகும் பாதைகள் வேறு வேறாக இருந்தாலும் போய் சேரும் இடம் ஒன்றாகவேதான் இருக்கின்றது. உலக உயிரினங்களின் முக்திக்கு வித்தகாக விளங்குகின்ற இந்த கடவுள் வழிபாடானது அறிவு மார்க்கம் என்றும் அன்பு மார்க்கம் என்றும் இரண்டு

வகைகளில் சேக்கிழாரால் விளக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு வழிபாட்டுமுறைகளில் அன்புவழிபாட்டையே இறைவன் ஏற்றுக்கொண்டான் என்பதையும் கண்ணப்பர் வழியாக நமக்கு எடுத்துரைககின்றது. எனவே சேக்கிழார் வகுத்த அன்பு மார்க்க வழிபாட்டையே சாமும் மேற்கொண்டு இறைவனோடு இரண்டறக் கழந்து இன்பம் அடைவோமாக.

## துணைநூற் பட்டியல் (References)


1. வரதராசன், மு. தமிழ் இலக்கிய வரலாறு. சாகித்திய அகாதெமி பதிப்பகம், 1991.
2. இளம்பூரணர், உரையாசிரியர். தொல்காப்பியம் – பொருளதிகாரம். திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 2000.
3. சேக்கிழார். பெரியபுராணம். கங்கை புத்தக நிலையம், 1999.
4. சிவத்தம்பி, கா. [அல்லது பொருத்தமான ஆசிரியர் பெயர்]. பக்தியும் வழிபாடும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், [ஆண்டு குறிப்பிடப்படவில்லை].
5. ஞானசம்பந்தன், அ. ச. பெரிய புராணம்: ஓர் ஆய்வு. கங்கை புத்தக நிலையம், 1999.

**ARTICLE 02 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 10–15

# தொல்காப்பியம் பொருளதிகாரம் களவியல்: தலைவன்–தலைவி உறவுநிலைகள் பகுப்பாய்வு

## Tolkappiyam Porulathigaram – Kalaviyal: An Analysis of the Relationship Dynamics Between the Hero and the Heroine

**முனைவர் த. முத்துலட்சுமி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சுயநிதிப்பிரிவு
ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி
குரோம்பேட்டை, சென்னை-44
Email: muthulakshmi.d@sdnbvc.edu.in, ORCiD: https://orcid.org/0000-0003-4326-1326

### Abstract

In his grammatical work Tolkappiyam, the grammarian Tolkappiyar presents life philosophies applicable to all people within Kalaviyal (the section on clandestine love), which is part of the third major division, Porulathigaram (the section on subject matter). Tolkappiyar has codified the lifestyle of a hero and heroine who, bound by mutual affection, fall in love, unite in marriage, and live together.

The two phases of Akathinai (the genre concerning the inner life of love) are Kalavu (clandestine love) and Karpu (marital life). The master grammarian Tolkappiyar has laid down grammatical rules governing the relationship dynamics between the hero and heroine across both these phases.

The Kalaviyal section extensively highlights details regarding the inner life of love (Akapporul) as well as the characteristics of the hero and heroine. Kalavu refers to the virtuous conduct of love that occurs secretly between the hero and heroine, unknown to others. In this process, the roles played by both the hero and heroine are paramount.

Analyzing the insights presented in Tolkappiyar's Kalaviyal to elucidate the nature of their relationship and its structural framework, this article functions under the title: "Tolkappiyam Porulathigaram Kalaviyal: An Analysis of Hero–Heroine Relationship Dynamics."

### ஆய்வுச் சுருக்கம்

தொல்காப்பியர் தம் இலக்கண நூலானத் தொல்காப்பியத்தில் மக்கள் அனைவருக்குமான வாழ்வியல் தத்துவங்களை மூன்றாம் பகுதியாகிய பொருளதிகாரக் களவியலில் எடுத்துரைத்துள்ளார். ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் அன்புக் கொண்டு மணம் புரிந்து ஒன்று பட்டு வாழ்கின்ற வாழ்வியலை இலக்கணமாக வகுத்துத் தந்துள்ளார் தொல்காப்பியர். அக வாழ்க்கையைக் கூறும் அகத்திணையின் இரு பகுதிகள் களவு, கற்பு ஆகும். இந்த இருபகுதிகளிலும் தலைவன் மற்றும் தலைவியின் உறவு நிலைகள் பற்றி இலக்கணம் வகுத்துள்ளார் இலக்கண ஆசான் தொல்காப்பியர். அகப்பொருள் பற்றிய செய்திகளைத் தலைவன், தலைவி இயல்புகளைக் களவியல் மிகுதியாகச் சுட்டுகின்றது. களவு எனப்படுவது தலைவன் தலைவியிடையே பிறர் அறியாதபடி மறைவாக நிகழும் காதல் என்ற ஒழுக்கமாகும். இதில் தலைவன் தலைவியின் பங்களிப்பு மிக அதிகமாக உள்ளது. அவர்களின் உறவு நிலையினை உறவு நெறியின் கட்டமைப்பினை எடுத்துரைப்பதாகத் தொல்காப்பிய களவியலில் சுட்டப்பட்டுள்ள செய்திகளை ஆராயும் தன்மையில் தொல்காப்பியம் பொருளதிகாரம் களவியல்: தலைவன்–தலைவி உறவுநிலைகள் பகுப்பாய்வு என்ற தலைப்பில் இக்கட்டுரை இயங்குகின்றது.

**திறவுச் சொற்கள்:** உறவுநெறிகள், இயற்கைப் புணர்ச்சி,இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம்

## முன்னுரை

செவ்வியலிலக்கியங்கள் யாவும் தலைவன், தலைவியைச் சுற்றி மையமாகக் கொண்டு இயங்குகின்றன. தலைவன் தலைவியைச் சுற்றியே தோழி, தோழன், செவிலி, நற்றாய் என அனைவரின் செயல்களும் நடைபெறுகின்றன. தலைவன், தலைவி என்ற இருவரின் வெளிப்பாடுகள் உரையாடல் திறன், ஒழுக்க நிலைகள் என அனைத்தும் தமிழ் நிலத்திற்கு உரியனவாக இருக்கின்றன. அவற்றைத் தொல்காப்பியர் தம் களவியல் உரையில் தலைவன், தலைவிக்குரிய இலக்கணங்களை நூற்பா வழி விளக்குகின்றார். **தொல்காப்பியம் பொருளதிகாரம் களவியல்: தலைவன்–தலைவி உறவுநிலைகள் பகுப்பாய்வு** என்ற தலைப்பின் கீழ் இக்கட்டுரை இயங்குகின்றது.

## தொல்காப்பியம்

தொல்காப்பியர் இயற்றிய இலக்கண நூல் தொல்காப்பியம். தொல்காப்பியம் மூன்று அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று பிரிவாக உள்ளது. அவற்றுள் பொருளதிகாரத்தின் மூன்றாவது இயலாக களவியல் அமைந்துள்ளது. பொருளதிகாரத்தின் அகத்திணைப் பகுதியாகிய களவு கற்பு என்னும் இருவகையொழுகலாறுகளுள் களவொழுக்கத்திற்குரிய விதிகளைக் களவியலில் விரித்துக் கூறியுள்ளார். தொல்காப்பியர் களவியலில் 51 நூற்பாக்களை வகுத்துள்ளார். திருமணத்திற்குரிய பருவம் எய்திய ஆணும், பெண்ணும் தாமே எதிர்பட்டுக் காதலித்து மணந்து கொள்வதற்கு முன்னர் சொல்லப்பட்டவை அனைத்தும் களவு(காதல்) வாழ்வியலில் அடங்கும். தொல்காப்பியர் இவ்வாழ்வியற் கூறுகளைத் தம் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின் மூன்றாம் பகுதியாகிய பொருளதிகாரத்தில் கூறியுள்ளார்.

## களவியல்

களவியலில் **இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம்** என்ற நான்கு கூறுகளாகக் களவொழுக்கம் கூறப்படுகிறது. இவற்றில் தலைவன் தலைவியுடன் இணைவதற்காகத் தோழன், தலைவியின் தோழியுடன் பேசுவதாக நூற்பா அமைந்துள்ளன. எனவே தலைவனின் பங்களிப்பு மிகுதியாக இருந்தாலும் தலைவியின் பிரதிபலிப்பு தான் நூற்பாவின் மூலம் அறியமுடிகின்றது. ஒத்த அன்பும் ஒத்த பண்புமுடைய தலைவனும் தலைவியும் தற்செயலாகக் கண்டு கூடி இன்புறுதலே **இயற்கைப் புணர்ச்சியாகும்**. தலைவன் தலைவியை விட குலத்திலும் பண்பிலும் உயர்ந்தவனாக இருந்தாலும் ஏற்றுகொள்ளலாம். அடுத்து இயற்கைப் புணர்ச்சியில் தலைவியைக் கண்டு இன்புற்ற தலைவன் அடுத்த நாளும் அதே நோக்கத்துடன் அங்கே வந்திருந்த தலைவியைக் கண்டு கூடி இன்புறுதல் **இடந்தலைப்பாடு** ஆகும். அடுத்து மீண்டும் தலைவியைச் சந்திப்பதற்கானத் தகவலைப் பாங்கனுக்குக் கூறி, அவன் மூலமாக தலைவி அங்கே வந்திருப்பதை அறிந்து, அவ்விடம் சென்று, அவளைக் கண்டு கூடி இன்புறுதல் **பாங்கற் கூட்டமாகும்**.

அடுத்துத் தலைவியை அடையும் வேட்கையால், தலைவியின் தோழியை அறிந்து, அவளை இரந்து வேண்டி, அத்தோழியின் உதவியால் தலைவியை அடைந்து கூடி இன்புறுதல் **தோழியிற் கூட்டமாகும்**. இந்த களவுப்புணர்ச்சியில் இருக்கும் மாந்தர்கள் தலைவன், தலைவி ஆவார்கள். அடுத்து தலைவனும் தலைவியும் இணைவதற்கு காரண மாந்தர்களாகப் பாங்கன், தோழி, செவிலி, நற்றாய், தந்தை, தமையன்மார் என்ற ஆறுவர் உள்ளனர். களவியலில் இவர்களது பங்களிப்பில் தலைவன், தலைவி இருவரும் அனைவருடன் தொடர்ந்து பயணிக்கின்ற நிலையில் **தலைவன்–தலைவி உறவுநெறிகள்** பற்றியச் செய்திகளைக் காண முடிகின்றது.

## தலைவன்–தலைவி உறவுநெறிகள் பகுப்பாய்வு

தொல்காப்பியத்தின் களவியல் பகுதியில் நூற்பா பதினொன்றில் தலைவன் கூற்று அமைந்துள்ளது. நூற்பாவில் தலைவன் செயல்கள் சுட்டப்பட்டாலும், தலைவியின் பிரதிபலிப்பால் மட்டுமே தலைவனின் செயல்கள் தொடர்வதை ஆழ்ந்து நோக்கும் போது காணமுடிகின்றது. தலைவன் தலைவி உறவு நெறிகள் ஒன்றனை ஒன்றுத் தொடர்ந்து, இதனை இவர் தான் செய்ய வேண்டும் என்ற நெறியை, பாதையைக் காட்டி ஆற்றுப்படுத்துகின்றது களவியல்.

"மெய்தொட்டுப் பயிறல் பொய்பா ராட்டல்
இடம்பெற்றுத் தழாஅல் இடையூறு கிளத்தல்
நீடுநிலைத் திரங்கல் கூடுத லுறுதல்
சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித்
தீராத் தோற்றம் உளப்படத் தொகைஇப்
பேராச் சிறப்பின் இருநான்கு கிளவியும்
பெற்றவழி மகிழ்ச்சியும் பிரிந்தவழிக் கலங்கலும்
நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும்
குற்றம் காட்டிய வாயில் பெட்பினும்
பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுப்பினும்
ஊரும் பேரும் கெடுதியும் பிறவும்
நீரிற் குறிப்பின் நிரம்பக் கூறித்
தோழியைக் குறையுறும் பகுதியும் தோழி
குறையவட் சார்த்தி மெய்யுறக் கூறலும்
தண்டா திரப்பினும் மற்றைய வழியும்
சொல்லவட் சார்த்தலிற் புல்லிய வகையினும்
அறிந்தோள் அயர்ப்பி னவ்வழி மருங்கில்
கேடும் பீடுங் கூறலும் தோழி
நீக்கலி னாகிய நிலைமையும் நோக்கி
மடல்மா கூறும் இடனுமார் உண்டே”
(தொல், பொருள், களவியல் .நூற்பா. 11)

**மெய்தொட்டுப் பயிறல்** என்பது தலைவியிடம் தான் வேட்கைக் குறிப்பு முதலில் தோன்றுகிறது. தலைவியின் வேட்கையை, குறிப்பை அறிந்தத் தலைவன்அதன் பின்னர் தான், அவளிடம் தோன்றும் அச்சம், நாணம் நீங்குதற் பொருட்டுஅவள் மெய்யினைத் தீண்டற்கு முயற்சிக்கிறான்.

## பொய் பாராட்டல் என்பது தலைவியின் மெய்யினைத் தீண்டற்கு

முயலும் தலைவன் ஓர் ஏதுவை, பொருளை, நிகழ்ச்சியைக் கற்பித்துக் கொண்டு அதன்வாயிலாக அவள் நலத்தினைப் பாராட்டுவான்.

## இடம்பெற்றுத்தழாஅல்

என்பது தலைவி, தலைவன் தன்னைத் தீண்டுதற்கு முதலில் அனுமதி தருகின்றாள். அடுத்து தலைவன் தலைவியின் அனுமதியுடன் மெய் தீண்டுவான்.

## இடையூறு கிளத்தல்

என்பது தலைவி அன்பு மிகுதியால் இடையூறு செயல்கள் செய்கின்றாள். அதன் பின்னர் தலைவன் கூட்டத்திற்கு இடையூறாதலைத் தலைவியிடம் எடுத்துரைப்பான்.

**நீடுநினைந்திரங்கல்** என்பது தலைவி இடையூறுகளால் காலம் நீடுகின்றது. நீடுதலைத் தலைவன் எடுத்துரைப்பான்.

## கூடுதலுறுதலாவது தலைவனது ஆற்றாமையைக் கண்ட தலைவி

மனம் தாளாமல் கூட்டத்திற்கு உள்ளம் பொருந்தி நிற்பதாகும். இங்கு தலைவி தலைவனுக்காக இசைகின்ற செயல் முதலில் ஏற்படுகின்றது.

## வல்லே பெற்றுழித்தீராத் தேற்றம் உளப்படத்தொகைஇப்

பேராச் சிறப்பின் இரு நான்கு கிளவியும் என்பதற்குத் தெய்வப் புணர்ச்சியான இன்ப நுகர்ச்சியைப் பெற்ற தலைமக்கள் விரைந்து பெற்றவழித் தலைவி இது மாயமோ மருட்கையோ கனவோ நினைவோ எனத் திகைத்து கலங்குவாள்.

**பெற்றவழி மகிழ்ச்சியும்** என்பதற்குத் தலைவியைத் தேற்றி ஆய்த்துய்த்து நீங்கிய தலைவன் மறுநாளும் வரும் தலைவியை எய்தி நுகர்ச்சி பெற்று மகிழ்ச்சியுறுவான்.

**பிரிந்தவழிக் கலங்கலும்** என்பதற்கு இடந்தலைப்பட்டுக் கூடிய தலைவி பிரிந்து சென்று தோழியரோடு சேர்தலைக் கண்டு இனி அவளை அடைதல் அரிது எனத் தலைவன் எண்ணி மனம் கலக்கமுறுவான்.

## நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும் என்பதற்கு மற்றை

நாளும் தலைவியைத் தலைப்படுதலை விரும்பிச் சென்ற தலைவன், தலைவி வாராதநிலையில் அவளை எய்தும் வழி யாதென எண்ணிதன்நெஞ்சிற்குரைத்தலாகும்.

## குற்றங்காட்டிய வாயில் பெட்பினும் என்பதற்குத் தலைவனது

குலப்பிறப்பு அறிவாற்றல் தகுதி போன்றவற்றை எடுத்துக்காட்டிப் துன்பம் களையுமாறு பாங்கனிடம் பேசுவதாகத் தலைவன் கூற்று நிகழ்கின்றது.

**பெட்டவாயில் பெற்று இரவு வலியுறுப்பினும்** என்பது தலைவியைச் சேர்வதற்குத் தோழியின் துணையை வேண்டுவான்.

**ஊரும் பேரும் கெடுதியும் பிறவும் நீரிற்குறிப்பின் நிரம்பக் கூறித் தோழியைக் குறையுறும் பகுதியும்** என்பது தலைவன், தலைவியும் தோழியும் தனித்திருக்கும் போது சென்று அவர்களது ஊர், பெயர் முதலியவற்றைக்கேட்டு தன் நெஞ்சத்தைத் தோழிக்குத் தெரிவிப்பான்.

### தோழி குறையவட்சார்த்தி மெய்யுறக் கூறலும் என்பது தலைவன் தான்

குறையுறுதல் தலைவியிடத்து மட்டும் எனத் தோழி தலைவியைச் சார்த்தி (ஓர்ந்து) உண்மையென உணருமாறு கூறுவான்.

> தண்டாதிரப்பினும் என்பது தோழி கூற்றானும் குறிப்பானும் தலைவனைத்தெரியாதது போல நடந்துகொள்ளுமிடத்துத் எளியனாய்க் கையற்று கூறுதலாகும்.

**சொல்லவட் சார்த்தலின் புல்லிய வகையினும்** என்பது தலைவன் தான் இரந்து கூறுவனவற்றைத் தோழி தலைவியைச் சார்த்திமொழிதலின் புல்லிய நெஞ்சத்தையுடையவனாய் இருத்தல்,

**அறிந்தோளயர்ப்பின் அவ்வழிமருங்கிற் கேடும் பீடும் கூறலும்** என்பது தலைவன் வரையாது களவுநீட்டித்தலைத் தவிர்க்க வேண்டித் தலைவி இற்செறிக்கப் பெற்றாள் என்பதை அறிதல்.

**மடன்மா கூறும் இடனுமாருண்டே** என்பது இறுதியாக தலைவன் மடலேறி தலைவி மீது கொண்ட காதலை உலகிற்கு உணர்த்துவான்.

இவ்வாறு தலைவன் பண்பு நலன்கள் யாவும் தலைவியைச் சுற்றி அமைகின்றது. தலைவன் தலைவி உறவு நிலையை, உறவு நெறிகளை இதனை இவர் தான் செய்ய வேண்டும் என்ற அறத்தொடு நிற்றல் மாண்புகளைக் களவியல் வெளிப்படுத்துகின்றது.

## முடிவுரை

தமிழரின் அகவாழ்வை காட்சிப்படுத்தும் நெறிப்படுத்தும் இலக்கண நூலாகத் திகழும் தொல்காப்பியத்தின் களவியல், தலைவன்–தலைவி உறவுநெறிகளை ஆழமாகவும் நுட்பமாகவும் விளக்குகின்றது. களவொழுக்கம் என்பது வெறும் காதல் உணர்வை மட்டும் சுட்டுவதல்ல. மாறாக அன்பு, அறம், ஒழுக்கம், நாணம் ஆகிய வாழ்வியல் பண்புகளை அடிப்படையாகக் கொண்டது. தலைவன் துணிவு, அறிவு, அன்பு, ஒழுக்கம் ஆகிய பண்புகளோடும், தலைவி நாணம், கற்பு, பொறுமை ஆகிய பண்புகளோடும் செயல்படுவதைத் தொல்காப்பியர் இலக்கண வரம்பிற்குள் எடுத்துரைக்கின்றார். இவ்விருவரின் உறவைச் செம்மைப்படுத்துவதில் தோழி உள்ளிட்ட துணைமாந்தர்களின் பங்களிப்பு போற்றுதற்குரியதாக உள்ளது. எனவே, தொல்காப்பியர் வகுத்துக் காட்டும் தலைவன்–தலைவி உறவுநெறிகள் சங்ககாலத் தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களையும் குடும்ப மற்றும் சமூக ஒழுக்கக் கோட்பாடுகளையும் வெளிப்படுத்துகின்றன. தொல்காப்பியர் சுட்டும் தலைவன்–தலைவி உறவுநெறிகள் பண்டைய இலக்கிய மரபிற்குரியதாக மட்டுமல்லாமல், அன்பு, அறம், நம்பிக்கை, பொறுப்புணர்வு ஆகியவற்றை வலியுறுத்தும் வாழ்வியல்

சிந்தனைகளைக் கொண்டு இன்றைய சமூகத்திற்கும் பொருத்தமுடையதாகத் திகழ்கின்றன.

## முதன்மை நூல்கள்

சிவலிங்கனார்.ஆ(தொகுப்பாசிரியர்), முனைவர் கோ. விசயராகவன் (பதிப்பாசிரியர்)., தொல்காப்பியம் – பொருளதிகாரம்., உலக தமிழாராய்ச்சி நிறுவனம்.

https://share.google/1riFW5X8Gt2qN3Znv

தொல்காப்பியம் இளம்பூரணம், பொருளதிகாரம் ஒன்பது இயல்களும், பதிப்பாசிரியர்: வ. உ. சிதம்பரம்பிள்ளை, எஸ். வையாபுரிப்பிள்ளை, பிரசுரித்தவர் ; பிரசுரித்தவர் ; வாவிள்ள. இசாமஸ்வாமிசாஸ்த்ருலு அண்ட் சன்ஸ், சென்னை.

தொல்காப்பியம் ,பொருளதிகாரம், பதிப்பாசிரியர் டாக்டர் கு. சுந்தரமுர்த்தி, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1986.

தொல்காப்பியப் பொருளதிகார ஆய்வு : நாவலர் சோமசுந்தர பாரதியார் நினைவுச் சொற்பொழிவு, பேராசிரியர் க வெள்ளை வாரணர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

## துணைநூற் பட்டியல் (References)

1. Pope, G. U. The Sacred Kural or the Tamil Veda of Tiruvalluva Nayanar. Oxford: Oxford University Press, 1886. Useful for comparative discussion of Tamil concepts of love and virtue.
2. Shulman, David. Tamil: A Biography. Cambridge, MA: Harvard University Press, 2016.
3. Useful for understanding the historical and literary context of Tamil love traditions.
4. Selby, Martha Ann. Grow Long, Blessed Night: Love Poems from Classical India. Oxford University Press, 2000.
5. Useful for comparative study of classical Indian conventions of love poetry.
6. எழுத்தாளர் பிரகடனம் - முரண்பாடுகள் அறிக்கை (Author Declaration - Conflict of Interest Statement)
7. இவ்வாய்வுக் கட்டுரையின் உள்ளடக்கத்திலோ, தரவுப் பகுப்பாய்விலோ அல்லது அதன் முடிவுகளிலோ எந்தவிதமான நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட முரண்பாடுகளும் (No Conflict of Interest) இல்லை என்று இதன் முதன்மை எழுத்தாளர் உறுதிபடப் பிரகடனம் செய்கிறார். இக்கட்டுரை முற்றிலும் கல்வி மற்றும் சமூக மேம்பாட்டு ஆராய்ச்சிக்காக மட்டுமே நடுநிலைமையோடு எழுதப்பட்டுள்ளது.

### ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று (Declaration of Conflicting Interests)

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.

**ARTICLE 03 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 16–19

# சங்கம் வளர்த்த தமிழ்

## Tamil Nurtured by the Sangam

*ஆய்வாளர்:* **அ.பாலகிருஷ்ணன்**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கூரப்பாளையம் ஈரோடு மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.

*நெறியாளர்:* **முனைவர் எம். இராமசந்திரன்**
நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கூரப்பாளையம் ஈரோடு மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா.

### Abstract

The antiquity and rich literary tradition of the Tamil language were preserved and nurtured through the institutional framework known as the Sangam (Tamil Academies). Established under the patronage of the Pandya kings, three successive academies brought poets, scholars, and grammarians together to critically refine, evaluate, and develop classical Tamil literature. This paper investigates the historical evolution, socio-linguistic impact, and literary heritage of Sangam Tamil. Drawing upon ancient commentaries—particularly the Iraiyanar Akapporul Urai—alongside epigraphical evidence and classical corpuses like Ettuthokai, Pattuppattu, and Tolkappiyam, this study analyzes the structural taxonomy of the Three Sangams, their distinctive Akam (interior/love) and Puram (exterior/heroism) poetic conventions, the prominent role of women poets, and the secular humanist values embedded within this classical era.

**Keywords:** Sangam Literature, Three Academies (Muchangam), Classical Tamil, Tolkappiyam, Ettuthokai, Pattuppattu, Pandya Dynasty, Akam and Puram.

### ஆய்வுச் சுருக்கம்

தமிழ் மொழியின் தொன்மையும் இலக்கிய வளமும் சங்கம் என்ற அமைப்பின் வழியாகவே செழுமை அடைந்தன. பாண்டிய மன்னர்களின் பேராதரவோடு முச்சங்கங்கள் நிறுவப்பட்டு, புலவர்கள் ஒன்றுகூடித் தமிழை ஆராய்ந்து வளர்த்தனர். இவ்வாய்வுக் கட்டுரை சங்கம் பற்றிய வரலாற்றுத் தரவுகள், முச்சங்கங்களின் வரலாறு, சங்க கால இலக்கண–இலக்கியச் சிறப்புகள், சங்க இலக்கியங்கள் காட்டும் மனித விழுமியங்கள் மற்றும் தமிழின் தனித்துவத்தை விரிவாக ஆராய்கிறது. இறையனார் களவியல் உரை, சங்க இலக்கியப் பாடல்கள், மற்றும் கல்வெட்டுச் சான்றுகளின் அடிப்படையில் சங்கத்தின் இருப்பு, அதன் வளர்ச்சி, தமிழ் மொழிக்கு அது ஆற்றிய பங்களிப்பு ஆகியவை இதில் ஆழமாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** முச்சங்கம், சங்கத் தமிழ், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, தொல்காப்பியம், இறையனார் களவியல், பாண்டியர், அகம் & புறம்.

## முன்னுரை

"என்றுமுள தென்றமிழ்" எனப் போற்றப்படும் தமிழ் மொழி, உலகச் செம்மொழிகளில் தலையாய இடத்தை வகிக்கிறது. மொழிகள் தோன்றி, வளர்ந்து, கால மாற்றத்தால் மறைந்துபோகும் வரலாற்றிற்கு மத்தியில், பல்லாயிரமாண்டுகளாகத் தன் தனித்தன்மையை இழக்காமல் நிலைத்து நிற்பதற்குச் சங்க அமைப்புகளே மூலக்காரணமாகும்.

புலவர்கள் ஒன்றுகூடி மொழியை ஆய்ந்து, செப்பனிட்டு, இலக்கியங்களை அரங்கேற்றிய தமிழ்ச்சங்க வரலாறு உலக இலக்கிய வரலாற்றிலேயே தனித்துவமானது. "தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை" என்று சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுவது போல, மதுரையைத் தலைமை இடமாகக் கொண்டு தமிழ் செழித்தோங்கியது.

'சங்கம்' என்ற சொல்லாட்சி மற்றும் வரலாற்றுப் பின்னணி:

சங்கம் என்ற சொல் சமஸ்கிருத மூலத்திலிருந்து வந்ததாகக் கருதப்பட்டாலும், அதற்கு இணையான 'கூடல்', 'அவை', 'புலவர் குழாம்' போன்ற தூய தமிழ்ச் சொற்கள் சங்க இலக்கியங்களிலேயே பரவலாக ஆளப்பட்டுள்ளன.

## இறையனார் களவியல் உரை

நக்கீரர் எழுதிய இறையனார் அகப்பொருள் உரையே முச்சங்கங்கள் பற்றிய விரிவான வரலாற்றுத் தகவல்களை முதன்முதலில் பதிவு செய்தது.

## மணிமேகலை மற்றும் சிலப்பதிகாரம்

காப்பியக் காலத்திலும் சங்கம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. மணிமேகலையில் "துவராபதிப் பிறந்த தென்மதுரைச் சங்கம்" என்ற வரி இடம்பெறுகிறது.

## கல்வெட்டுச் சான்றுகள்

சின்னமனூர்ச் செப்பேடுகளில் "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்ற குறிப்பு சங்கம் இருந்த வரலாற்று உண்மையை உறுதிப்படுத்துகிறது.

## முச்சங்கங்களின் வரலாறு

தமிழறிஞர்கள் சங்க காலத்தை முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என மூன்று காலகட்டங்களாகப் பிரித்துள்ளனர்:

முதற்சங்கம் - தென்மதுரை - காய்சினவழுதி முதல் கடுங்கோன் வரை (89 பேர்)
இடைச்சங்கம் - கபாடபுரம் - வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் வரை (59 பேர்)
கடைச்சங்கம் - இன்றைய மதுரை - முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி வரை (49 பேர்)

புலவர்கள் - அகத்தியர், சிவபெருமான், முரஞ்சியூர் முடிநாகராயர் | அகத்தியர், தொல்காப்பியர், கீரந்தையார் | நக்கீரர், கபிலர், பரணர், ஔவையார் |

இலக்கண நூல் - அகத்தியம், தொல்காப்பியம்
அழிவிற்குக் காரணம்: கடற்கோள் (கடல் கொந்தளிப்பு) | கால மாற்றம் / அரசியல் சூழல்

## சங்க இலக்கிய வகைப்பாடும் மொழியமைப்பும்

கடைச்சங்க காலத்தில் புலவர்களால் இயற்றப்பட்டுப் பாதுகாக்கப்பட்ட இலக்கியங்களே இன்று நாம் காணும் “சங்க

இலக்கியங்கள்”- பாட்டும் தொகையும் (பதினெண் மேற்கணக்கு நூல்கள்) ஆகும்.

### அ. எட்டுத்தொகை

1. நற்றிணை
2. குறுந்தொகை
3. ஐங்குறுநூறு
4. பதிற்றுப்பத்து
5. பரிபாடல்
6. கலித்தொகை
7. அகநானூறு
8. புறநானூறு

### ஆ. பத்துப்பாட்டு

திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம்.

### இ. தொல்காப்பியம் தந்த நெறி

சங்கத் தமிழுக்கு இலக்கண வரம்பை அமைத்துக் கொடுத்தது தொல்காப்பியமாகும். இது எழுத்து, சொல் மட்டுமின்றி *பொருளதிகாரம்* வாயிலாக மக்களின் வாழ்வியலையும் இலக்கணப்படுத்திய பெருமைக்குரியது.

### சங்கத் தமிழ் காட்டும் வாழ்வியல் விழுமியங்கள்

சங்க இலக்கியங்கள் வெறும் கற்பனை நயங்கள் அல்ல; அவை அக்கால மக்களின் மெய்யான வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடிகள்:

### அகவாழ்க்கை

மனித உணர்வுகளின் உச்சமான காதலைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்திணைகளாகப் பிரித்து, இயற்கையோடு இணைந்த வாழ்வாக வாழ்ந்தனர்.

### புறவாழ்க்கை

வீரம், கொடை, நட்பு, நீதிநெறி தவறாத ஆட்சி ஆகியவை புறப்பொருள் பாடல்களில் போற்றப்பட்டன.

### யாதும் ஊரே யாவரும் கேளிர்

கணியன் பூங்குன்றனாரின் இக்கருத்து, சங்கத் தமிழ் உலகளாவிய மானுடப் பொதுமையை முதன்மையாகக் கொண்டிருந்தது என்பதை விளக்குகிறது.

### பெண்பாற் புலவர்கள்

ஔவையார், காக்கைப்பாடினியார், வெண்ணிக் குயத்தியார், வெள்ளிவீதியார் போன்ற 40-க்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் சங்கத்தில் சம உரிமை பெற்றுத் திகழ்ந்தனர்.

## சங்கம் வளர்த்த தமிழின் தனித்துவங்கள்

1. இயற்கையோடு இயைந்த மொழி: இயற்கைப் படிமங்களும் உவமைகளும் (உள்ளுறை, இறைச்சி) சங்கத் தமிழின் தனிச்சிறப்பு.

2. மதச்சார்பின்மை: சங்க இலக்கியங்கள் மனிதனை மையமாகக் கொண்டவையே தவிர, குறிப்பிட்ட ஒரு மதத்தின் ஆதிக்கத்திற்கு உட்படாதவை.

3. செப்பமான வடிவம்: கடுமையான இலக்கண விதிகளுக்கு உட்பட்டு, சொற்செட்டும் பொருட்செறிவும் கொண்ட செய்யுள் மரபு பேணப்பட்டது.

## முடிவுரை

சங்கங்கள் அமைத்து மொழியை வளர்த்த பெருமை தமிழ் மொழிக்கு மட்டுமே உரிய தனித்துவமான வரலாறாகும். பாண்டியர்களின் புரவலர் தன்மையும், புலவர்களின் தன்னலமற்ற மொழிப்பற்றும் சங்கத் தமிழைத் தழைக்கச் செய்தன.

சங்க இலக்கியங்கள் வெறும் பழம்பெருமை பேசும் ஏடுகள் மட்டுமல்லாமல், நவீன தமிழ்ச் சமூகம் தன் வேர்களை அடையாளம் காணவும், மொழியின் தனித்தன்மையை உலகிற்குப் பறைசாற்றவும் உதவும் அரிய கருவூலங்களாக இன்றும் திகழ்கின்றன. "சங்கம் வளர்த்த தமிழ்" என்றென்றும் தன் அழகையும் ஆழத்தையும் இழக்காமல் தமிழரின் வாழ்வியலோடு நிலைத்து நிற்கும்.

---

## துணைநூற் பட்டியல் (References)

1. இறையனார் அகப்பொருள் உரை – நக்கீரர் உரை, உ. வே. சாமிநாதையர் பதிப்பு.
2. தொல்காப்பியம் (பொருளதிகாரம்) – இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை.
3. சங்க இலக்கியம் (எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும்) – நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
4. தமிழர் நாகரிகமும் பண்பாடும் – முனைவர் அ. தட்சிணாமூர்த்தி, யாழ் வெளியீடு.
5. சங்ககால வரலாறு – முனைவர் கே.கே. பிள்ளை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
6. சங்க இலக்கியத்தில் வாழ்வியல் – பேராசிரியர் ந. சஞ்சீவி, சென்னைப் பல்கலைக்கழகம்.

**ARTICLE 04 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 20–27

# ஆற்றுதல்: கலித்தொகை காட்டும் வாழ்வியல் நெறி

## Aatruthal: The Way of Life Portrayed in Kalithogai

**பெ. சண்முகவடிவேல்**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-600005.
Email: shanmugavadivel2000@gmail.com
ORCID: https://orcid.org/0009-0001-7698-5964

### Abstract

Sangam literature serves as a vital record, illuminating the lifestyle norms and the cultural foundations of human relationships among ancient Tamils. Among these texts, *Kalithogai* offers a clear definition of the concept of *Aatruthal* (succor/support), stating, "To provide succor is to help the destitute." This line conveys that the essence of *Aatruthal* lies in empathizing with the suffering of others and standing by them when they are in need. This article examines the significance of the concept of *Aatruthal* within *Kalithogai* and elucidates how it evolves from an individual virtue into a social responsibility. Furthermore, by drawing comparisons with ethical concepts found in *Thirukkural*—such as *Eegai* (charity), *Aruludaimai* (compassion), *Oppuravarithal* (social reciprocity), and *Virundhombal* (hospitality)—the study explores the role of helping others within the Tamil ethical framework. The research establishes that *Aatruthal* transcends mere material assistance; it is a humanitarian virtue that encompasses empathizing with the sorrow of others and providing support tailored to their specific needs. Finally, in the contemporary context where individual self-interest and competitive mindsets are on the rise, the article highlights that alleviating the suffering of others and offering appropriate assistance is essential for social harmony and a humane way of life.

### ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் வாழ்வியல் நெறிகளையும் மனித உறவுகளின் பண்பாட்டு அடிப்படைகளையும் வெளிப்படுத்தும் முக்கியமான இலக்கியச் சான்றுகளாகத் திகழ்கின்றன. அவற்றுள் கலித்தொகை, “ஆற்றுதல் என்பது அலந்தவர்க்கு உதவுதல்” என ஆற்றுதலுக்குத் தெளிவான வாழ்வியல் வரையறையை வழங்குகிறது. பிறரது துன்பநிலையை உணர்ந்து, அவர்களுக்கு வேண்டிய நேரத்தில் துணைநிற்றலே ஆற்றுதலின் அடிப்படை என இவ்வரி உணர்த்துகிறது. இக்கட்டுரை, கலித்தொகையில் இடம்பெறும் ஆற்றுதல் என்னும் கருத்தின் பொருண்மையை ஆராய்ந்து, அது தனிமனிதப் பண்பிலிருந்து சமூகப் பொறுப்பாக விரிவடையும் தன்மையை விளக்குகிறது. இதனுடன் திருக்குறளில் இடம்பெறும் ஈகை, அருளுடைமை, ஒப்புரவறிதல், விருந்தோம்பல் போன்ற அறக்கருத்துகளுடன் ஒப்புநோக்கி, பிறருக்கு உதவுதல் தமிழரின் அறச்சிந்தனையில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதையும் ஆராய்கிறது. இவ்வாய்வின் வழியாக, ஆற்றுதல் என்பது பொருளுதவி செய்வதை மட்டும் குறிக்காமல், பிறரது துயரத்தை உணர்ந்து அவர்களின் தேவைக்கேற்ப துணைநிற்றலை உள்ளடக்கிய மனிதநேயப் பண்பாக விளங்குகிறது என்பது நிறுவப்படுகிறது. மேலும், தனிமனித சுயநலமும் போட்டி மனப்பான்மையும் வலுப்பெறும் சமகாலச் சூழலில், பிறரின் துயரைக் களைந்து அவர்களுக்கு உரிய வகையில் உதவுதல் சமூக ஒற்றுமைக்கும் மனிதநேய வாழ்வுக்கும் இன்றியமையாதது என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**திறவுச் சொற்கள்:** கலித்தொகை, ஆற்றுதல், உதவுதல், திருக்குறள், ஈகை, அருளுடைமை, ஒப்புரவறிதல், மனிதநேயம், வாழ்வியல்.

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் தமிழரின் வாழ்வியலை உணர்த்தும் பண்பாட்டு ஆவணங்களாக விளங்குகின்றன. அவற்றுள் கலித்தொகை, மனித உறவுகளின் நுட்பங்களையும் சமூகப் பண்புகளையும் பதிவு செய்கிறது. பிறரது துயரத்தை உணர்ந்து, அவர்களின் நிலைக்கேற்பத் துணைநிற்றலை **“ஆற்றுதல்”** என்னும் பண்பாகக் கலித்தொகை வரையறுக்கிறது. இப்பண்பு தனிமனித இரக்கத்தைக் கடந்து, பிறர்நலத்தை மையமாகக் கொண்ட சமூகப் பொறுப்பை வெளிப்படுத்துகிறது. இக்கட்டுரை, கலித்தொகையில் இடம்பெறும் **“ஆற்றுதல் என்பது அலந்தவர்க்கு உதவுதல்”** என்ற தொடரை மையமாகக் கொண்டு, அதன் பொருண்மையையும் வாழ்வியல் அடிப்படையையும் ஆராய்கிறது. இதனுடன் திருக்குறளின் தொடர்புடைய அறக்கருத்துகளை ஒப்புநோக்கி, பழந்தமிழ் அறச்சிந்தனையின் தொடர்ச்சியையும், சமகால வாழ்வில் ஆற்றுதல் பெறும் தேவையையும் இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது.

‘ஆற்றுதல்’ - பொருண்மை விளக்கம்

கலித்தொகையின் நெய்தற்கலியில் இடம்பெறும் 133-ஆம் பாடல், அகத்திணைச் சூழலில் அமைந்திருந்தாலும், அதன் இறுதிப்பகுதி மனித வாழ்விற்குத் தேவையான பல்வேறு பண்புகளை வரையறுக்கும் தனித்துவம் பெற்றதாக விளங்குகிறது. நல்லந்துவனார், ஆற்றுதல், போற்றுதல், பண்பு, அன்பு, அறிவு, செறிவு, நிறை, முறை, பொறை ஆகியவற்றைத் தனித்தனியாக விளக்குகிறார். அவற்றுள் முதலில் இடம்பெறும் “ஆற்றுதல்” என்பதற்கு,

“ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்” (கலித்தொகை, 133:6)

என்று வரையறை தரப்படுகிறது. இவ்வரியில் ‘ஆற்றுதல்’ என்பது தனக்குரிய துயரத்தைத் தாங்குதல் என்ற பொருளில் அமையாமல், பிறரது துன்பநிலையை உணர்ந்து அவர்களுக்கு உதவுதல் என்ற சமூகப் பொருண்மையைப் பெறுகிறது. ‘அலந்தவர்’ என்பதற்கு வறுமையுற்றவர் அல்லது துன்பத்தால் தளர்ந்தவர் என்ற விளக்கம் வழங்கப்படுகிறது. ‘உதவுதல்’ என்பது அவர்களின் நிலையை மாற்றுவதற்குத் தேவையான துணையை வழங்குவதாகப் பொருள் கொள்ளப்படுகிறது.

அறிதல் முதலிடத்தைப் பெறுகிறது. ஒருவரின் துன்பத்தை வெளிப்படையாகக் காண்பது மட்டும் ஆற்றுதல் அல்லாமல், அத்துன்பத்தின் தன்மையை உணர்ந்து, அதற்கேற்ற உதவியை வழங்கும் மனப்பாங்கே அதனை முழுமையான பண்பாக மாற்றுகிறது. இங்கு இரக்கம் ஓர் உணர்வாகவும், உதவுதல் ஓர் செயலாகவும், இவ்விரண்டையும் இணைக்கும் மனிதநேய மனப்பாங்கு ஆற்றுதல் எனவும் புரிந்துகொள்ள முடிகிறது.

மேலும், இந்த வரி உதவியின் அளவைவிட அதன் நோக்கத்தை முதன்மைப்படுத்துகிறது. “அலந்தவர்க்கு” என்ற சொல்லின் பயன்பாடு, உதவி செய்வதற்கு முன் உதவி பெறுபவரின் நிலையை அறிந்துகொள்ள வேண்டியதைக் குறிப்பதாக உள்ளது. எல்லோருக்கும் ஒரே வகையான உதவி தேவையில்லை. ஒருவருக்கு பொருள் தேவைப்படலாம்;

இன்னொருவருக்கு துணை தேவைப்படலாம்; வேறொருவருக்கு துயரத்தைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு சொல் போதுமானதாக இருக்கலாம். எனவே, கலித்தொகையின் ஆற்றுதல் என்பது தேவையை உணர்ந்து அதற்கேற்பச் செயல்படும் அறிவார்ந்த உதவி என்ற பரந்த பொருளைத் தருகிறது.

இதன் வழியாக ஆற்றுதல் தனிமனித இரக்கத்திலிருந்து சமூகப் பொறுப்பாக உயர்கிறது. பிறருடைய துன்பம் தமக்குத் தொடர்பில்லாத ஒன்று என்று ஒதுக்காமல், அவர்களின் நிலையைத் தமது கவனத்திற்குரியதாகக் கருதும் மனநிலை சமூக உறவுகளின் அடித்தளமாகிறது. இதனாலேயே ஆற்றுதல், கலித்தொகையில் தனிப்பட்ட நற்குணமாக மட்டுமன்றி, மனிதர்கள் ஒருவரை ஒருவர் தாங்கி வாழ்வதற்கான வாழ்வியல் அறநெறியாக விளங்குகிறது.

## சங்க இலக்கியங்களில் ஆற்றுதல் - கருத்துத் தொடர்ச்சியும் விரிவும்

ஆற்றுதல் என்பது ஒருவரது துயரத்தை அறிந்து அதற்கேற்ப உதவ முனையும் மனிதநேயச் செயலாகப் புரிந்துகொள்ளப்படுகிறது. இதே கருத்து சங்க இலக்கியத்தின் பிற பகுதிகளிலும் வேறுபட்ட சூழல்களில் வெளிப்படுகிறது. புறநானூற்றில் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார்,

> "ஒருவீர் ஒருவீர்க்கு ஆற்றுதிர்; இருவீரும்
> உடனிலை திரியீர் ஆயின் இமிழ்திரைப்
> பௌவம் உடுத்தஇப் பயங்கெழு மாநிலம்
> கையகப் படுவது பொய்யா காதே" (புறநானூறு, 58)

என சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவனுக்கும், பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதிக்கும் இடையிலான ஒற்றுமையைக் குறிப்பிடுகிறார். இங்கு "ஆற்றுதீர்" என்பது ஒருவருக்கொருவர் துணையாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது. கலித்தொகையில் துன்புற்றவர்க்கு உதவுதல் எனக் குறிப்பிட்ட கருத்து, புறநானூற்றில் மனிதர்கள் ஒருவரை ஒருவர் தாங்கி வாழ்தல் என்ற பரந்த சமூக உறவாக விரிகிறது. இதனால் ஆற்றுதல் என்பது தனிப்பட்ட இரக்கச் செயலாக மட்டும் இல்லாமல், சமூக உறவுகளை நிலைநிறுத்தும் பண்பாகவும் விளங்குகிறது.

சங்க இலக்கியங்களில் பிறருக்கு உதவும் பண்பு ஒரே வடிவில் வெளிப்படவில்லை. கொடை, ஈகை, விருந்தோம்பல், இரவலர்க்கு வழங்குதல், துன்பத்தில் துணைநிற்றல் போன்ற பல்வேறு செயல்களின் வழியாக அது வெளிப்படுகிறது. இச்செயல்களின் அடிப்படையாக இருப்பது, தனக்குக் கிடைத்த வளத்தைத் தனக்கென மட்டும் கருதாமல், தேவையுடையவருடன் பகிர்ந்துகொள்ளும் மனப்பாங்காகும். இதனால் "ஆற்றுதல்" என்பது குறிப்பிட்ட ஒரு உதவிச் செயலைக் குறிக்கும் சொல்லாக மட்டும் இல்லாமல், பிறரது தேவையை உணர்ந்து அதற்கேற்பப் பதிலளிக்கும் வாழ்வியல் பண்பாக விரிவடைகிறது.

இந்த நிலையில், ஆற்றுதலுக்கும் வெறுமனே உதவி செய்வதற்கும் இடையே ஒரு நுட்பமான வேறுபாடு காணப்படுகிறது. உதவி என்பது

வெளிப்படையான செயல்; ஆற்றுதல் என்பது அந்தச் செயலுக்குப் பின்னால் இருக்கும் மனிதனை மையமாகக் கொண்ட அக்கறை. ஒருவர் மற்றவருக்கு எது தேவை என்பதை அறியாமல் செய்யும் உதவி சில நேரங்களில் பயனற்றதாகலாம். ஆனால் அவரது நிலையைப் புரிந்துகொண்டு செய்யப்படும் உதவி, துன்பத்தைத் தணிக்கும் ஆற்றலைப் பெறுகிறது. ஆகவே, சங்க இலக்கியப் பார்வையில் ஆற்றுதலின் சிறப்பு உதவியின் அளவில் அல்லாமல் உதவி பெறுபவரின் நிலையை உணர்ந்து செயல்படும் முறையில் உள்ளது. இக்கருத்து சங்க இலக்கியத்திற்குப் பிறகானத் தமிழ் அறநெறி மரபில் திருக்குறளால் மேலும் விரிவுபடுத்தப்படுகிறது. ஒப்புரவறிதல் அதிகாரத்தில் திருவள்ளுவர்,

“புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற.” (திருக்குறள், 213)

என்று கூறுகிறார். பிறருக்குப் பயன்படும் ஒப்புரவைவிடச் சிறந்த பண்பைப் பெறுவது அரிது என்பது இக்குறளின் மையக்கருத்தாகும். இதனை கலித்தொகையின் “அலந்தவர்க்கு உதவுதல்” என்ற கருத்துடன் இணைத்துப் பார்க்கும்போது, உதவுதல் தனிமனித இரக்கத்தின் வெளிப்பாடாக மட்டும் இல்லாமல், சமூகப் பயன்பாட்டை நோக்கிய அறச்செயலாக உயர்வதை அறிய முடிகிறது. அதனைத் தொடர்ந்து வரும் குறளும் இக்கருத்தை இன்னும் விரிவாக்குகிறது:

“ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும்.” (திருக்குறள், 214)

இங்கு பிறருடன் ஒத்த வாழ்வையும், அவர்களுக்குப் பயன்படும் வாழ்வையும் அறிந்தவனுடைய வாழ்க்கையே பொருளுடையதாகக் கருதப்படுகிறது. இதனை கலித்தொகையின் ஆற்றுதல் கருத்துடன் இணைத்துப் பார்க்கும்போது, மனித வாழ்க்கையின் மதிப்பு தனக்காக வாழ்வதில் மட்டுமல்ல; பிறருக்கும் பயனுடையதாக இருப்பதில் உள்ளது என்ற கருத்து வெளிப்படுகிறது.

இதனால், கலித்தொகையின் ஆற்றுதல் தனிப்பட்ட மனிதநேயப் பண்பிலிருந்து திருக்குறளில் சமூகப் பயன்பாடு சார்ந்த அறநெறியாக விரிவடைகிறது. சங்க இலக்கியச் சூழலில் பிறரது துன்பத்தைக் கண்டு துணைநிற்றல் எவ்வாறு மனித உறவின் இயல்பாகப் பதிவாகிறதோ, திருக்குறள் அதனை வாழ்வின் அறப்பொறுப்பாக உயர்த்துகிறது. இந்தத் தொடர்ச்சி, தமிழரின் அறச்சிந்தனையில் “பிறருக்குப் பயன்படுதல்” என்பது நல்வாழ்வின் அடிப்படை அளவுகோல் என்பதைக் காட்டுகிறது.

இக்கருத்தைச் சமகாலத்திற்குக் கொண்டு வரும்போது இன்னொரு முக்கியமான பரிமாணம் தோன்றுகிறது. இன்றைய உலகில் உதவி என்பது பெரும்பாலும் பொருளாதார உதவியுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. ஆனால் சங்க இலக்கியமும் திருக்குறளும் தரும் விரிந்த பார்வை, பொருள் மட்டுமல்லாது நேரம், அறிவு, உழைப்பு, ஆறுதல், வாய்ப்பு, பாதுகாப்பு ஆகியவற்றையும் பிறருடன் பகிர்ந்துகொள்ள வேண்டியதைக் குறிக்கிறது. குறிப்பாக, உதவி பெறுபவரைத் தாழ்வுபடுத்தாமல் அவரது தன்மானத்தைப் பாதுகாத்து

உதவுதல், இன்றைய மனிதநேயச் சமூகத்திற்கு அவசியமான வாழ்வியல் நெறியாகக் கொள்ளலாம்.

## ஆற்றுதலும் மனிதநேய வாழ்வியலும்

ஆற்றுதல் என்பது துன்புற்ற ஒருவருக்கு உதவுவதைக் குறிக்கும் செயல் என்ற அளவில் மட்டும் புரிந்துகொள்ளப்படும்போது, அதன் மனிதநேயப் பரப்பு சுருங்கிவிடுகிறது. ஒருவரது துயரத்தை உணர்ந்து, அவருடைய தேவையை அறிந்து, அவருக்குப் பொருத்தமான துணையை வழங்கும் மனப்பாங்கே ஆற்றுதலின் முழுமையான வடிவமாகிறது. இத்தகைய அணுகுமுறையில் உதவி செய்பவரின் உயர்வு முதன்மைப்படுவதில்லை; உதவி பெறுபவரின் தேவையும் தன்மானமும் முதன்மை பெறுகின்றன. இதுவே ஆற்றுதலை ஒரு சாதாரண உதவிச் செயலிலிருந்து வேறுபடுத்துகிறது. இதனைத் திருவள்ளுவர்,

> "அருளல்லது யாதெனில் கொல்லாமை கோறல்
> பொருளல்லது அவ்வூன் தினல்." (திருக்குறள், 254)

என்று அருளின் அடிப்படையை உயிர் மீது கொண்ட அக்கறையோடு தொடர்புபடுத்துகிறார். இங்கு அருள் என்பது வெறும் உணர்ச்சியாக இல்லாமல், பிற உயிருக்கு தீங்கு விளைவிக்காத வாழ்வியல் நிலையாகக் காட்டப்படுகிறது. ஆற்றுதலின் அடிப்படையிலும் இதே மனிதநேயப் பார்வை காணப்படுகிறது. பிறரது துன்பத்தைப் புறக்கணிக்காமல், அதனைத் தணிப்பதற்கான முயற்சியில் ஈடுபடுதல், அருளைச் செயலாக்கும் ஒரு வடிவமாகும்.

ஆனால், மனிதநேயம் என்பது துன்பத்தைப் பார்த்து இரங்குவதோடு முடிவதில்லை. இரக்கம் உணர்வாகத் தொடங்குகிறது; ஆற்றுதல் செயலாக நிறைவு பெறுகிறது. ஒருவர் பசியால் வாடுவதை அறிந்து வருந்துவது இரக்கம்; அவருக்குத் தேவையான உணவை வழங்குவது உதவி; அவர் தொடர்ந்து பசியால் வாடாத வகையில் வாழ்வாதார வாய்ப்பை உருவாக்குவது விரிந்த மனிதநேயம். இந்த வேறுபாடு ஆற்றுதலின் ஆழத்தை உணர்த்துகிறது. தற்காலிகத் தேவையை நிறைவு செய்வதோடு நின்றுவிடாமல், துன்பத்தின் காரணத்தையும் கவனத்தில் கொள்வதே நிலையான ஆற்றுதலுக்கான அடிப்படையாகிறது.

சங்க இலக்கியங்களில் காணப்படும் கொடை மரபையும் இத்தளத்தில் அணுகலாம். கொடையாளி தன்னிடம் உள்ள வளத்தைப் பகிர்வது மட்டுமல்லாமல், இரவலரின் தேவையை உணர்ந்து வழங்குதல் என்பதும் முக்கியத்துவம் பெறுகிறது. இதனால் கொடை என்பது செல்வத்தின் வெளிப்பாடாக மட்டும் அமையாமல், சமூக உறவுகளைத் தாங்கும் பண்பாகிறது. கலித்தொகையின் "அலந்தவர்க்கு உதவுதல்" என்ற வரையறை இத்தகைய செயல்களின் அடிப்படை நோக்கத்தை மனிதநேயக் கோணத்தில் புரிந்துகொள்ள உதவுகிறது.

திருக்குறளின் **"வறியார்க்கொன்று ஈவதே ஈகை"** என்ற கருத்தும் இத்தொடர்ச்சியில் முக்கியமானது. ஈகையின் மதிப்பு என்பது தேவைப்படுபவரின் தேவையை உணர்ந்து வழங்குவதிலேயே உள்ளது. இக்கருத்து கலித்தொகையின் **"அலந்தவர்க்கு"** என்ற சொல்லோடு

தொடர்புபடுத்தத்தக்கது. உதவி பெறுபவரின் நிலையை அறிதல், உதவியின் பொருத்தத்தை நிர்ணயிக்கிறது. எனவே, ஆற்றுதல் என்பது தேவையை அறிந்து பயனுள்ள வகையில் வழங்குவது எனப் புரிந்துகொள்ளலாம்.

## சமகால வாழ்வில் ‘ஆற்றுதல்’ - ஓர் அறவழி

இன்றைய வாழ்க்கை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியால் வேகமடைந்துள்ள போதிலும், மனிதர்களுக்கிடையிலான நேரடி உறவுகள் பல்வேறு மாற்றங்களை எதிர்கொள்கின்றன. தொடர்பு கொள்ளும் வாய்ப்புகள் அதிகரித்துள்ள நிலையில், ஒருவரின் உண்மையான துயரத்தை உணர்ந்து அவருக்குத் துணையாக இருப்பதற்கான நேரமும் மனப்பாங்கும் சில சூழல்களில் குறைந்து வருகின்றன. இத்தகைய நிலையில், “ஆற்றுதல் என்பது அலந்தவர்க்கு உதவுதல்” என்ற கலித்தொகையின் எளிய வரையறை, இன்றைய சமூக வாழ்வில் மீண்டும் சிந்திக்க வேண்டிய மனிதநேய நெறியாகிறது.

சமகாலத்தில் “உதவி” என்பது பெரும்பாலும் பணம் அல்லது பொருள் வழங்குவதோடு தொடர்புபடுத்தப்படுகிறது. ஆனால் மனித வாழ்வின் தேவைகள் அதைவிடப் பரந்தவை. முதியவருக்கு நேரம் ஒதுக்குதல், மாணவருக்கு வழிகாட்டுதல், வேலை தேடுபவருக்கு வாய்ப்புத் தகவலைப் பகிர்தல், அறிவைப் பிறருக்குக் கற்றுத்தருதல், துயரத்தில் இருப்பவரின் பேச்சைக் கவனமாகக் கேட்பது போன்றவையும் ஆற்றுதலின் வடிவங்களே. இதனால், உதவியின் மதிப்பு அதன் பொருளாதார அளவில் அல்லாமல் அது நிறைவேற்றும் மனிதத் தேவையில்தான் உள்ளது.

இன்றைய நகரமயமான வாழ்க்கையில் அண்டை வீட்டாருடனான உறவு குறைதல், முதியோர் தனிமை, பொருளாதாரப் பாகுபாடு, வேலை வாய்ப்புச் சிக்கல் மற்றும் கல்வி வாய்ப்பில் வேறுபாடு போன்ற சூழல்கள் காணப்படுகின்றன. இவற்றைத் தீர்ப்பதற்கு அரசுத் திட்டங்களும் நிறுவன அமைப்புகளும் அவசியமானவை என்றாலும், அவற்றுடன் இணைந்து தனிமனிதனும் சமூகப் பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

இங்கு திருக்குறளின் “ஒப்புரவறிதல்” சிந்தனை சமகாலத்திற்கு முக்கியமான வழிகாட்டுதலை வழங்குகிறது. சமூகத்தில் ஒருவருக்கொருவர் பயன்படுதல் என்பது தனிப்பட்ட பெருந்தன்மை அல்ல; இணைந்து வாழ்வதற்குத் தேவையான அடிப்படைப் பண்பாகும். இதனை இன்றைய சூழலில் விரிவுபடுத்தும்போது, தனது அறிவு, திறமை, நேரம், வளம் ஆகியவற்றில் ஒரு பகுதியை சமூக நலனுக்காக ஒதுக்குதல் ஒரு வாழ்வியல் கடமையாகக் கருத வேண்டும்.

மேலும், இன்றைய இணையச் சூழலும் ஆற்றுதலுக்குப் புதிய களமாகியுள்ளது. உதவி தேவைப்படும் ஒருவரின் தகவலைப் பகிர்தல், அவசரத் தேவைக்கான நம்பகமான தகவலை வழங்குதல், கல்வி வளங்களை இலவசமாகப் பகிர்தல் போன்றவை தொழில்நுட்பத்தின் வழியாகச் செய்யக்கூடிய சமூக உதவிகளாகும். அதேவேளையில், சரிபார்க்கப்படாத தகவல்களைப் பரப்புதல், ஒருவரது துயரத்தைப்

பொது வெளியில் கேலியாக்குதல், உதவி செய்யும் பெயரில் தனியுரிமையை மீறுதல் போன்றவை ஆற்றுதலின் அடிப்படை நோக்கத்திற்கே எதிரானவை. எனவே, டிஜிட்டல் காலத்தில் ஆற்றுதல் என்பது உதவுவதோடு மட்டுமல்லாமல், பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்பதையும் உள்ளடக்கியதாகிறது.

மேலும், இன்றைய சமூகத்தில் உதவியைப் பதிவு செய்து வெளிப்படுத்தும் பழக்கம் அதிகரித்துள்ள சூழலில், உதவி பெறுபவரின் தன்மானமும் தனியுரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது முக்கியமான அறவழியாகிறது. உதவி செய்வதன் நோக்கம் ஒருவரது துயரத்தைத் தணிப்பதாக இருக்க வேண்டுமே தவிர, உதவி செய்பவரின் புகழை உயர்த்துவதற்காக இருக்கக் கூடாது. இதுவே சங்க இலக்கியத்தில் காணப்படும் கொடைச் சிந்தனையை நவீன மனிதநேயக் கண்ணோட்டத்தில் மறுபரிசீலனை செய்யும் இடமாகும்.

கல்வித் துறையிலும் ஆற்றுதல் புதிய பொருளைப் பெறுகிறது. பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவருக்கு உதவித்தொகை வழங்குவது மட்டுமல்லாமல், அவருடைய திறனை அடையாளம் காணுதல், உயர்கல்வி வாய்ப்புகளை அறிமுகப்படுத்துதல், மொழி அல்லது தொழில்நுட்பத் திறன்களை வளர்க்க உதவுதல் போன்றவை நீண்டகால ஆற்றுதலாக அமைகின்றன. அதுபோலவே, வேலைவாய்ப்பற்ற ஒருவருக்கு சிறு தொகை வழங்குவதைக் காட்டிலும், அவருடைய திறனுக்கேற்ற வேலைவாய்ப்பை அறிமுகப்படுத்துதல் அல்லது திறன் மேம்பாட்டிற்கான வழியை ஏற்படுத்துதல் அவரைத் தன்னிறைவு நோக்கி அழைத்துச் செல்லக்கூடியதாகும்.

இதனால், சமகால ஆற்றுதல் மூன்று நிலைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று இக்கட்டுரை முன்வைக்கிறது. முதலில், துன்பத்தை உணர்தல்; அடுத்து, தேவைக்கேற்ப உடனடியாகத் துணைநிற்றல்; இறுதியாக, அந்தத் துன்பநிலையிலிருந்து ஒருவர் மீண்டு தன்னிறைவுடன் வாழ்வதற்கான வாய்ப்பை உருவாக்குதல். இம்மூன்றும் இணையும் போது உதவி ஒரு தற்காலிகச் செயலாக இல்லாமல், மனிதநேய மாற்றத்திற்கான கருவியாகிறது.

## முடிவுரை

கலித்தொகையின் “ஆற்றுதல்” என்னும் கருத்து, பிறரின் துயரத்தை உணர்ந்து அவர்களின் தேவைக்கேற்பத் துணைநிற்பதன் வழியாக மனித உறவுகளுக்கு அறநெறி அடித்தளத்தை வழங்குகிறது. சங்க இலக்கியங்களில் காணப்படும் ஈகை, கொடை, துணைநிற்றல் ஆகியவை இச்சிந்தனையின் சமூகப் பரப்பை உணர்த்துகின்றன. திருக்குறள் அதனை அருள், ஒப்புரவு, ஈகை போன்ற அறக்கோட்பாடுகளால் மேலும் செழுமைப்படுத்துகிறது. இப்பார்வையைச் சமகாலத்தில் முன்னெடுக்கும்போது, உதவி என்பது பொருள் வழங்குதலுடன் முடிவடையாமல், அறிவு, நேரம், திறன், வாய்ப்பு ஆகியவற்றைப் பகிர்வதையும் உள்ளடக்குகிறது. குறிப்பாக, உதவி பெறுபவரின் தன்மானத்தைப் பாதுகாத்து, தன்னிறைவை நோக்கி நகர்த்தும் துணையே நிலையான ஆற்றுதலாகும். இந்நெறியே

சமகாலத்திற்கான சமூக அக்கறையையும் பொறுப்புணர்வையும் வளர்க்கும் வாழ்வியல் வழிகாட்டியாக அமைகிறது.

## துணைநூற் பட்டியல் (References)

1. இளங்குமரன். இரா., (உரை), புறநானூறு மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2022.
2. ஞானசுந்தரம். தெ., கற்பக மலர்கள் - திருக்குறள் கட்டுரைகள், சந்தியா பதிப்பகம், சென்னை, 2020.
3. தமிழண்ணல் (உரை), கலித்தொகை மூலமும் உரையும் வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 2022.
4. தமிழண்ணல், திருவள்ளுவர் அருளிய திருக்குறள், அன்னை முத்தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 2009.
5. திருவள்ளுவர், திருக்குறள் - நாமக்கல் கவிஞர் உரை, பூம்புகார் பதிப்பகம், சென்னை, 2010.
6. திருவள்ளுவர், திருக்குறள் - பரிமேலழகர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை, 2018.

### ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று (Declaration of Conflicting Interests)

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.

**ARTICLE 05 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 28–33

# காப்பியங்களில் பழக்க வழக்கங்களும், நம்பிக்கை மரபுகளும்

## Customs, Practices, and Belief Traditions in Epics

**திருமதி அ.ரூபாதேவி**
உதவிப் பேராசிரியர், ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி(தன்னாட்சி), சிவகாசி.
Email: rubadevi.a@gmail.com, Tel: 9790144858.

### Abstract

Sangam literature serves as an important source for understanding the Tamil society that existed in Tamil Nadu more than two thousand years ago. The Tamil word "practice" is derived from the root word "To become accustomed" and is used to denote the meanings of habit, practice, custom, and conduct. The customs, practices, and beliefs followed and contemplated by the Tamil people have evolved over time. These customs, practices, and belief systems constitute the subject of the present study. When such practices are studied across different human communities and comparatively analysed, it becomes possible to identify their distinctive characteristics, values, and emotional dimensions. In this context, the present study examines the customs, practices, and beliefs of the Tamil people, with the aim of bringing to light the cultural conditions of Tamil society, its development of civilisation, related social practices, variations according to time, place, and circumstances, and the emergence of new practices.

### ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியம், இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகத்தை அறிந்து கொள்ளம் துணைசெய்கிறது. பழக்கம் என்ற சொல்லில் 'பழகு' எனும் வேர்ச்சொல் பழக்கம், பயிற்சி, வழக்கம், ஒழுக்கம் என்ற பொருள்களில் கையாளப்படுகிறது. பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும் தமிழரால் சந்திக்கப்பட்டும், சிந்திக்கப்பட்டும் வந்துள்ளது. வருகின்ற இந்தப் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளுமே இங்கு ஆய்வுப் பொருட்களாக அமைகின்றன. பல மனித குழுக்களிடமும் இவ்வாய்வு நிகழும் போது அவற்றை ஒப்பிட்டு ஆராயும் போது தனிப்பட்ட சிறப்புகள், உணர்வுகள் வெளிப்படவும் அங்கே வாய்ப்புண்டு. இந்நிலையில் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டு நிலை, நாகரிக வளர்ச்சி, அவை தொடர்பாக அமையும் செயற்பாடுகள், காலம், இடம், சூழலுக்கு ஏற்ப மாறுபடுதல், புதியன தோன்றல் போன்ற அனைத்தும் வெளிவர வாய்ப்புண்டு என்ற நிலையில் இங்குத் தமிழரின் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் ஆய்வு செய்யப்படுகின்றன.

**திறவுச் சொற்கள்:** பழக்கவழக்கம், நம்பிக்கை, பயிற்சிவிதி, சிலம்புகழி நோன்பு, வடக்கிருத்தல், உண்ணா நோன்பு, கைம்மை நோன்பு, நீராடல் நோன்பு, காமன் நோன்பு, அருந்ததி நோன்பு, சதுர்த்தி விரதம், ஏக பத்தினி விரதம், மகட்பேறு வேண்டி நோன்பு.

முன்னுரை

தமக்கென ஒரு விழுமிய வரலாறும், வாழ்க்கை நெறியும் படைத்த தமிழினம், பழமையும் சிறப்பும் கொண்டு துலங்குவதாகம். நாட்டின் வரலாற்றினை எழுதுவதற்கு இலக்கியம் பெரிதும் துணை செய்யும். அம்முறையில் சங்க இலக்கியம், இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகத்தை அறிந்து கொள்ளம்

துணைசெய்கிறது. பழக்கம் என்ற சொல்லில் 'பழகு' எனும் வேர்ச்சொல் பழக்கம், பயிற்சி, வழக்கம், ஒழுக்கம் என்ற பொருள்களில் கையாளப்படுகிறது. உளவியலார் பழக்கத்தைப் 'பயிற்சிவிதி' என்று சுட்டுவர். பழக்க வளர்ச்சி விதி எனவும் கூறுவர்.

பழக்கம் தனி மனிதனிடம் இயல்பாக வந்தமைந்த நடத்தையைக் குறிப்பதாகும் என்பதும் உண்டு. பழக்கம் என்பது தனிமனிதனைச் சார்ந்த தொடக்கநிலை. வழக்கம் என்பது சமுதாயம் சார்ந்த தொடர்நிலை. சமூகத்தில் அதிகமாகப் பின்பற்றப்படும் பழக்கமான நடவடிக்கையை வழக்கமாகும்.

'நம்பு மேவு நகையாகும்மே' (திருவள்ளுவமாலை.12)

நம்பிக்கையே உள உருவாக்கம் என்பர். நம்பிக்கை பொதுவாகச் செவி வழிப் பரவுவது. நம்பிக்கைகளை அறிவியல் முறையில் சோதனைக்கு உட்படுத்துதல் கடினமானது. பெரும்பாலான நடவடிக்கைகளுக்குக் காரணம் காட்ட முடியாது. பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளும் தமிழரால் சந்திக்கப்பட்டும், சிந்திக்கப்பட்டும் வந்துள்ளது. வருகின்ற இந்தப் பழக்கவழக்கங்களும், நம்பிக்கைகளுமே இங்கு ஆய்வுப் பொருட்களாக அமைகின்றன. பல மனித குழுக்களிடமும் இவ்வாய்வு நிகழும் போது அவற்றை ஒப்பிட்டு ஆராயும் போது தனிப்பட்ட சிறப்புகள், உணர்வுகள் வெளிப்படவும் அங்கே வாய்ப்புண்டு. இந்நிலையில் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டு நிலை, நாகரிக வளர்ச்சி, அவை தொடர்பாக அமையும் செயற்பாடுகள், காலம், இடம், சூழலுக்கு ஏற்ப மாறுபடுதல், புதியன தோன்றல் போன்ற அனைத்தும் வெளிவர வாய்ப்புண்டு என்ற நிலையில் இங்குத் தமிழரின் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் ஆய்வு செய்யப்படுகின்றன. இவற்றின் மூலம் மானுடவியல் உளவியல், சமூகவியல் துறை சார்ந்தவர்க்கும் சில சிந்தனைகளைத் தர இயலும்.

நம்பிக்கை சார்ந்த பழக்கவழக்கங்கள்

நம்பிக்கை மனிதன் தானே உருவாக்கிக் கொண்டது. நம்பிக்கை நாளடைவில் தனிமனிதப பயிற்சி என்ற நிலையிலிருந்து, வளர்ச்சி அடைந்து சமுதாய நம்பிக்கையாக உருப்பெறுகின்றது. நோன்பு பற்றிய இவ்வாய்வை முப்பிரிவாக அமைக்கலாம்.

பழந்தமிழரிடம் காணப்பட்டவை
1. சிலம்புகழி நோன்பு
2. வடக்கிருத்தல்
3. உண்ணா நோன்பு

காப்பியங்களில் மரபாக அமைவன
1. கைம்மை நோன்பு
2. நீராடல் நோன்பு

காப்பியங்களில் புதியன
1. காமன் நோன்பு
2. அருந்ததி நோன்பு
3. சதுர்த்தி விரதம்
4. ஏக பத்தினி விரதம்
5. மகட்பேறு வேண்டி நோன்பு

## சிலம்புகழி நோன்பு

பண்டைத் தமிழர் வழக்கிலிடம் பெற்று இன்று முழுமையாக வழக்கொழிந்த நிலையில் இலக்கியம் வழியாகத் தெரியவரும் நோன்பு சிலம்புகழி நோன்பு. சிலம்பு மகளிர் அணியும் ஒரு வகை காலணி. மணவினையின் போது மணமகளின் காலினின்றும் சிலம்பினை நீக்குதல் மரபு. இச்செய்தியினை அகநானூற்றில் பிரிவை உரிப்பொருளாகக் கொண்ட பாலைத்திணைப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. மேலும் சிலம்பு பருவ மகளிரின் அணியாகத் திருமணத்திற்குப் பின்னும் அவர்கள் அணிந்திருந்தமையினை இலக்கியம் காட்டுகின்றது. காப்பியங்களில் சிலம்புகழி போன்ற செயல்முறை பற்றிய குறிப்பு இடம் பெறவில்லை.

'உற்றநோய் நோற்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு'(குறள்.261)

என தம் உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்தலும், தம் பிற உயிர்கட்குத் துன்பம் செய்யாமை ஆகியவற்றைத் தவத்தின் இரண்டு கூறுகளாகச் சுட்டுவதால் நோன்பின் தன்மை உணரமுடிகிறது. பெருங்கதையில் வாசவதத்தை மணவினையின் போது காலில் சிலம்ப அணிந்திருந்த செய்தி இடம் பெறுகிறது. இன்று சிலம்பு கழி நோன்பு முழுமையாக வழக்கொழிந்துவிட்டது.

## வடக்கிருத்தல்

தமிழரின் நம்பிக்கை சார்ந்த பழக்க வழக்கங்களில் இதனை ஆடவர் மேற்கொண்டனர். ஊருக்கு வடபால் ஓரிடத்தில் வடக்குத் திசை நோக்கி அமர்ந்த வண்ணம் உண்ணாநோன்பிருந்து உயிர்த்துறப்பதை வடக்கிருத்தல் எனக் கொண்டனர். பழந்தமிழரிடம் காணப்பட்ட உண்ணாநோன்பு மேலும் காப்பியங்களில் மரபாக அமைவன.

1. கைம்மை நோன்பு
2. நீராடல் நோன்பு

பழந்தமிழர் பலநிலையில் உண்ணா நோன்பை மேற்கொண்டனர். வஞ்சினம் கூறியபொழுது உண்ணா நோன்பை மேற்கொண்ட நிலையைப் பதிற்றுப்பத்து பாடலில்,

'மாண்புனையிஞ்சி மதில் கடந்தல்லது
உண்கிது மல்லேம் புகாவெனக் கூறிக்

**கண்ணி கண்ணிய வயவர் பெருமகன்'(பதிற்றுப்பத்து.70)**

முனிவர், தவம் செய்வோர், நோன்பியர் ஆகியோர் உண்ணாநோன்பை மேற்கொண்டனர். சமணப் பெண் துறவியாகிய கவுந்தியடிகள் உண்ணா நோன்பிருந்து உயிர்விட்டமை சிலப்பதிகாரத்தில் சுட்டப்பட்டுள்ளது.

'தவத்திரு சிற்ப்பிற் கவுந்தி சீற்ற
நிவந் தோங்கு செங்கோனீணில வேந்தன்
போகுயிர் தாங்கப் பொறை சாலாட்டி
என்னோ டிவர் வினை புகுத்ததோ குவன
உண்ணா நோன்போடுயர் பதப் பெயர்த்தலும்'

(சிலப்.வஞ்சி.நீர்ப்படைக்காதை.79-83)

புனலாடல்

தை நீராடலைச் சிறுமியர் கன்னியர் மகளிர் சடங்கு அறிந்த முதுப்பார்பினியர் நோற்கும் முறை காட்டப்படுகின்றது. பனியுடை புலர்தற்கண் ஆடி, ஈர ஆடையை உலர்த்திக் காய வைப்பர். தாயுடன் நீராடுதலால் 'அம்பா ஆடல்' என்று கூறப்படுகிறது. இந்நோன்பு தொடங்கப்படும் நாள் குறித்துப் பல மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. இந்நோன்பு மார்கழி மாதம் திருவாதிரை நாளில் தொடங்கியது என்றும் கூறுவர்.

'மார்கழி முழுமதி நாளில் தொடங்கித் தைத் திங்கள்
முடிக்கும் ஒரு நோன்பு'
'பனிப்படுபைதல் விடுதலைப் பருவத்து' (பரிபாடல்-11.75)

என்பதால் மார்கழி மாதம் என்பார் நச்சினார்க்கினியர். மார்கழி மாதம் முழுவதும் நோன்பிருந்து, நீராடினாலும், தையில் நீராடுவதோடு நோன்பு முற்றுப் பெறுவதால் இதற்கு தைநீராடல் எனப் பெயர் வந்தது என்பது பொருத்தமாக அமைகிறது. மார்கழி மாதம் முழுமையும் நீராடி நோன்பிருந்து தை மாதம் முதல் நாள் நீராடி, நோன்பு முடிவடைதல் நடைபெறுவதால் மை மாதத்தின் பெயரை நீராடலுக்கு உரியது ஆக்கி தைநீராடல் எனப் பெயர் வந்தது என்பது பொருத்தமான அமைகிறது என்பர். (தை – தையலார்) பெண்கள் மேற்கொள்ளும் நோன்பு என்பதாலும் தைநீராடல் எனச் சுட்டியிருக்கலாம் என்ற கருத்தும் உண்டு. அந்தன மகளிரும் விரும்பிப் புனலாட்டிற்றுச் சென்றனர். மகளிர் தாம் விரும்பிய நன்மணம் நிறைவேறுதற் பொருட்டு, கூடி நீராடியக் காட்சி,

'அருண்கடி மூதூர்ப் பெருங்குடி மகளிரொ
டென்ன லாகத்துப் பெண்ணுல கேய்ப்பக்
கன்னி மகளிர் கதிர்த்த கோலமொடு
நன்மணி யைம்பா நங்கையொடு போந்தோர்'

எனச் சுட்டப்படுவதைக் காணலாம். நன்மணம் வேண்டியும், வளம் வேண்டியும் மேற்கொண்ட புனலாடல் இன்றும் வழக்கில் இடம்பெறுகிறது. புது நீர் வருகையை வரவேற்குமுகத்தான் ஆடி மாதம் பதினெட்டாம் நாளன்று கன்னியர் மணம் நிகழ வேண்டி நோன்பு நோற்றல் உண்டு. காவிரி நீர் வருகையின் போது மாலையில் கன்னியர் கூடி தீபம் ஏற்றி அதனை இலையில் மதிக்கவிட்டு மாவிளக்கிட்டு ஆற்று நீரை வழிபடுதல் இன்றும் வழக்கில் இடம்பெறுவதைக் காணலாம். 'பதினெட்டாம் பேர்' என்றும் இந்நோன்பைச் சுட்டுவர்.

## காமன் நோன்பு

பழந்தமிழர் காமனுக்கு விழா எடுத்த செய்தியை கலித்தொகை பரிபாடல் ஆகியவற்றில் காணலாம். இளவேனில் காலத்தில் விழாவெடுத்த செய்தியை கலித்தொகை,

'இருங்குயிலாலப் பெருந்துறை கவின்பெறக்
குழவி வேனில் விழவெதிர் கொள்ளுஞ்
சீரார் செவ்வியும் வந்தன்று'

எனச் சுட்டுகின்றது. காமன் என்னும் கடவுள் மாயோனின் மகன் என்றும் வேதகாலக் கடவுள் என்றும் கருதப்படுகின்றான். மன்மதன்,

வேனிலான், வில்லவன், காமவேள், உருவிலான், கரும்பு வில்லேந்தியவன், மகரவேலன், கொடி மைந்தன் எனப் பல பெயரால் அழைக்கப்பட்ட காமனுக்கு, கன்னியர் நோற்ற நோன்பையும் அது விழாவில் இடம் பெற்ற நிலையையும் காப்பியங்களின் வாயிலாக அறியமுடிகின்றது.

## ஏகபத்தினி விரதம்

ஏக-ஒரு முகமாக, ஒன்றுக்கு மேற்படாது, பத்தினி – மனைவி, விரதம், ஒழுக்கம், உடல், உள்ள ஒருமித்த கற்பு விரதம், ஏகபத்தினி விரதம் எனலாம். இவ்விரதம் பற்றிய குறிப்பினை முதன்முதலாக கம்பராமாயணத்தில் காணமுடிகிறது.

'வந்து எனைக் கைப்பற்றிய வைகல்வாய்
இந்த இப்பிறவிக்கு இருமாதரைச்
சிந்தையாலும் தொடேன், என்ற செல்வரம்
தந்து வார்த்தை திருச்செவி சாற்றுவாய்'(சுந்தரகாண்டம்.சூடாமணி.34)

எனச் சீதை அனுமனிடம் தன் கணவனுக்குச் சொல்லியனுப்பிய செய்தியாக இது இடம்பெறுகிறது.

தொகுப்புரை

தனிமனித நம்பிக்கை நாளடைவில் சமூக நம்பிக்கையாக உருமாற்றம் அடைகிறது.

சிலம்புகழி நோன்பு, வடக்கிருத்தல் போன்ற பண்டைத் தமிழரிடம் வழக்கிலிருந்த சில பழக்கவழக்கங்கள் தற்போது வழக்கொழிந்துவிட்டன.

காமன் நோன்பு அருந்ததி நோன்பு ஏகபத்தினி விரதம் போன்றவை காப்பியங்களில் சுட்டிக்காட்டப்படுகின்றன.

தை நீராடலை முதுப்பார்பினியர் நோற்கும் முறை காட்டப்படுகிறது.

தமிழரின் நம்பிக்கை சார்ந்த பழக்கவழக்கங்களில் ஆடவர் வடக்கிருத்தல் சுட்டப்படுகிறது.

## துணைநூற் பட்டியல் (References)

1. வித்யா ரத்னா, டாக்டர்.மு.சந்தானராமன், திருவள்ளுவமாலை(விளக்கவுரை), பூங்கொடி பதிப்பகம், சென்னை-2007.
2. முல்லை பி.எல்.முத்தையா(உ.ஆ), திருக்குறள், முல்லை பதிப்பகம், சென்னை-2003.
3. ஔவை சு.துரைச்சாமிப்பிள்ளை(உ.ஆ), பதிற்றுப்பத்து, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1950.
4. ஆர்.கே.சண்முகம் செட்டியார்(உ.ஆ), சிலப்பதிகாரம், புதுமலர் நிலையம், கோயம்புத்தூர்-1872.
5. புலியூர்க்கேசிகன்(உ.ஆ), பரிபாடல், சாரதா பதிப்பகம், சென்னை-2009.
6. மா.இராசமாணிக்கனார்(உ.ஆ), கலித்தொகை, பூம்புகார் பதிப்பகம், சென்னை-2011.
7. எழுத்தாளர் பிரகடனம் - முரண்பாடுகள் அறிக்கை (Author Declaration - Conflict of Interest Statement)

8. இவ்வாய்வுக் கட்டுரையின் உள்ளடக்கத்திலோ, தரவுப் பகுப்பாய்விலோ அல்லது அதன் முடிவுகளிலோ எந்தவிதமான நிதி சார்ந்த அல்லது தனிப்பட்ட முரண்பாடுகளும் (No Conflict of Interest) இல்லை என்று இதன் முதன்மை எழுத்தாளர் உறுதிபடப் பிரகடனம் செய்கிறார். இக்கட்டுரை முற்றிலும் கல்வி மற்றும் சமூக மேம்பாட்டு ஆராய்ச்சிக்காக மட்டுமே நடுநிலைமையோடு எழுதப்பட்டுள்ளது.

**ARTICLE 06 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 34–42

# எழுத்தாளர் இமையம் படைப்புகளில் நாட்டார் சமய மரபுகள்

## Folk Religious Traditions in the Works of Writer Imayam

**கோ. கிருஷ்ணன்**
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது
பார்பிரெட்டிப்பட்டி, தருமபுரி - 636905

**முனைவர் அ. சுபா**
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது
பார்பிரெட்டிப்பட்டி, தருமபுரி - 636905

**Abstract**

Folk religious traditions refer to modes of worship that are integral to the lives of the people and are transmitted across generations through oral narratives and rituals. These traditions encompass the worship of natural elements—such as trees, stones, rivers, and mountains—as deities; the veneration of deceased ancestors as protective spirits; the traditional worship of specific deities for the protection of the family or community; and the open-air worship of guardian deities like Ayyanar, Mariyammal, and Karuppasamy, often represented by stucco sculptures. The works of the writer Imayam vividly portray the lived realities of people from the marginalized sections of society. Furthermore, these folk religious traditions are prominently featured in his writings. This research paper aims to systematically examine and highlight these aspects.

**ஆய்வுச் சுருக்கம்**

நாட்டார் சமய மரபுகள் என்பது மக்களின் வாழ்வியலோடு இயைந்து, தலைமுறை தலைமுறையாக வாய்மொழியாகவும் சடங்குகளாகவும் நடத்தப்பட்டு வரும் வழிபாட்டு முறைகளைக் குறிக்கிறது. இது மரம் கல் ஆறு மலை போன்ற இயற்கை சக்திகளைத் தெய்வமாக வணங்குதல், இறந்த முன்னோர்கள் நம்மைப் பாதுகாக்கும் சக்திகள் என்று எண்ணி அவர்களை வணங்குதல், குடும்பம் அல்லது இனத்தின் பாதுகாப்பிற்காகப் பாரம்பரியமாக ஒரு தெய்வத்தை வழிபடுதல்.ஊரைக் காக்கும் அய்யனார்இ மாரியம்மாள், கருப்பசாமி போன்ற சிறுதெய்வங்களைச் சுதைச் சிற்பங்களுடன் திறந்தவெளியில் வணங்குதல் போன்றவற்றைக் குறிக்கும். எழுத்தாளர் இமயம் அவர்களின் படைப்புகள் சமுதாயத்தில் கீழ் நிலையில் வாழும் மக்களின் யதார்த்த வாழ்வியலை படம் பிடித்துக் காட்டுவனவாக அமைந்திருக்கும். மேலும் அவருடைய படைப்புகளில் இந்த நாட்டார் சமய மரபுகள் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். அவற்றை முறையாக ஆராய்ந்து வெளிப்படுத்துவதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** சயனத்தடங்கள் - துஷ்டன் - உவகாரம் – ஏவல், பில்லி, சூனியம் வைப்பு.

## ஆய்வு அனுகுமுறை

எழுத்தாளர் இமயம் அவர்களுடைய எழுத்துக்களில் காணப்படும் நாட்டார் சமய மரபு குறித்த தகவர்களை எடுத்து இயம்புவதால் இந்த ஆய்வுக்கட்டுரை எடுத்துக்கூறும் முறை ஆய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வு நோக்கம்

ஒரு எழுத்தாளனிடம் அவனுடைய எழுத்தையும் அவன் சமுதாயத்தையும் பிரிக்க இயலாது. தான் வாழும் காலத்தில் ஏற்படுகின்ற சமுதாயச் சிக்கல்களை தன்னுடைய படைப்புகளில் வெளிப்டுத்தவும் தவற மாட்டான். அதே சமயம் அந்தச் சிக்கல்களுக்கான தீர்வையும் மிகத் தெளிவாக எடுத்துக்கூறுவான். இதன் அடிப்படையில் எழுத்தாளர் மயம் அவர்களின் படைப்புகளில் காணப்படும் நாட்டார் சமூக மரபினை ஆராய்ந்து விளக்குவதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முன்னுரை

தன் இன மக்களின் வாழ்வியலை வாய்மொழியாக காலம் காலமாக விளக்கப்பட்டு வருவதே நாட்டார் சமய மரபாகும். இது கிராமபுற மக்களின் ஆன்மீகம், சமூகம் மற்றும் இயற்கையோர் அவர்களுக்கு இருந்த னக்கமான வாழ்வியலைக் காட்டுகின்றது. எழுத்து வடிவம் பெறாமல் மக்களால் பேசப்பட்டு வருபவை அனைத்தும் இந்தநாட்டார் சமய மரபு என்ற வகைகள் அடங்கும். பிறப்பு முதல் இறப்பு வரையிலான சடங்குகள் மற்றும் திருவிழாக்கள் ஆகியவை இதில் அடங்கும். சிறு தெய்வ வழிபாடு, கிராம தெய்வ வழிபாடுஇ நேர்த்திக்கடன் மற்றும் குலதெய்வ பூசைகள் போன்றவையும் இதில் அடங்கும். மக்கள் நேரடியாக கண்டு மகிழும் கலை வடிவங்களான கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், தெருக்கூத்து, வில்லுப்பாட்டு, கும்மி ஆகியவை இதில் முக்கியத்துவம் பெறும். சமூகப் பிணைப்புச் சார்ந்த செய்திகள், வரலாற்றுப் பதிவுகள் சார்ந்த செய்திகள், ஒழுக்கக் கட்டமைப்புகள் போன்றவை இதில் சிறப்புடன் இடம்பெறும். இத்தகைய நாட்டார் சமய மரபுகளை எழுத்தாளர் இமயம் அவர்கள் தன்னுடைய படைப்புகளில் மிகத்தெளிவாக எடுத்துரைத்துள்ளார். அவற்றை முiறாக ஆராய்ந்து விளக்குவதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

## எழுத்தாளர் இமையம்

காலம்தோறும் பல்வேறு பொருண்மைகளில் இலக்கியங்கள் தோன்றிய நிலையில், இயந்திர மயமான இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ற இலக்கியமாக சிறுகதையும் நாவலும் திகழ்கின்றன. இதில் சிறுகதை என்பது குறுகிய கால நிகழ்வை வெளிப்படுத்தும் இலக்கியமாகவும், நாவல் என்பது நீண்ட நெடிய நிகழ்வை வெளிப்படுத்தும் இலக்கியமாகவும் திகழ்கின்றன. மாபாரதம், காப்பியங்கள் போன்றவற்றைப் படிப்பதற்கான கால அவகாசம் இல்லை என்று வருந்தும் நிலையைப் ளேபாக்குவதற்காக எழுந்ததே இந்த நாவல் இலக்கியம்.

இத்தகைய நாவல் மற்றும் சிறுகதை உலகில் சிறப்புபெற்றவர்கள் பல்லாயிரக் கணக்கானோர் இருப்பினும் எழுத்தாளர் இமையம் அவர்கள், இவர்கள் அனைவரினும் வேறுபட்டுத் திகழ்பவர். வெ. அண்ணாமலை என்னும் இயற்பெயர் கொண்ட இவர், தமிழ்நாட்டில் உள்ள கடலூர் மாவட்டத்தின் கழுதூர் என்ற ஊரில் 1964 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் தேதி பிறந்தார். முதுகலை பட்டம் பெற்ற இவர் பள்ளிக் கல்வித் துறையில் அரசுப் பள்ளி ஆசிரியராக விருதாசலத்தில் வசித்துவருகின்றார். இவருடைய மனைவி ச. புஷ்பவள்ளி அவர்களும் முதுநிலை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவருக்குக் கதிரவன், தமிழ்ச் செல்வன் என்று இரண்டு மகன்கள் உள்ளனர்.

“கோவேறு கழுதைகள்” என்ற தலைப்பில் 1994 ஆம் ஆண்டு தன்னுடைய முதல் நாவலைத் எழுதத் தொடங்கிய இவர் இதுவரை 23 நாவல்கள் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் 2018 ஆம் ஆண்டு எழுதி வெளியிட்ட “செல்லாத பணம்” என்ற நாவலுக்கு 2020ஆம் ஆண்டு சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது.

இமையம் அவர்களின் படைப்புலகம்

எழுத்தாளர் இமையம் அவர்கள்,

1. கோவேறு கழுதைகள்
2. ஆறுமுகம்
3. செடல்
4. பெத்தவன்
5. எங் கதெ
6. செல்லாத பணம்
7. வாழ்க வாழ்க
8. இப்போது உயிரோடு இருக்கிறேன்
9. நெஞ்சறுப்பு

என்ற தலைப்புகளில் நாவல்களும்,

1. மண்பாரம்,
2. வீடியோ மாரியம்மன்,
3. கொலைச் சேவல்,
4. சாவுசோறு,
5. பெத்தவன்,
6. நறுமணம்,
7. நன்மாறன் கோட்டைக்கதை
8. தாலி மேல சத்தியம்
9. திருநீறு சாமி

என்ற சிறுகதைத் தொகுப்புகளையும் படைத்துள்ளார்.

மேலும், இவருடைய

1. கோவேறு கழுதைகள்
2. ஆறுமுகம், பெத்தவன்
3. சொல்லாத பணம்
4. எங் கதெ

ஆகிய படைப்புகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துள்ளன.

## இமையம் பற்றி சமகால புலவர்கள்

ஒருவரைப் பற்றிப் பலரும் பேசும்போதுதான் அவருடைய பன்முகத்தன்மை வெளிப்படும். எழுத்தாளர் இமயம் அவர்கள் அவர் வாழ்ந்த சமகாலத்திலேயே பல்வேறு அறிஞர்களாலும், எழுத்தாளர்களாலும், தமிழ் ஆய்வாளர்களாலும் தமிழ் ஆர்வளர்களாலும் போற்றப்பட்டவர். பல்வேறு இளம் எழுத்தாளர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர். இவருடைய எழுத்துக்களைப் பார்த்து எழுத்துலகத்திற்கு வந்தவர்கள் ஏராலம். ஒடுக்கப்பட்ட மக்களின் ஒட்டுமொத்தக் குரலாக ஒலித்ததால், பலத்தரப்பட்ட மக்களாலும் கொண்டாடப்பட்டவர். தமிழ் எழுத்தாளர் உலகில் தன்னுடைய எழுத்துக்களின்மூலம் தனக்கென்று தனியான பாதையை வகுத்துக்கொண்டவர்.

இத்தகைய சிறப்புவாய்ந்த சமூக சீர்திருத்தவாதியான எழுத்தாளர் இமையம் அவர்களைப் பற்றி முப்பத்து மூன்று ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான நூல்கள் இருக்கக்கூடிய இடமான நூலகத்தில் பணியாற்றும் நூலகரான திரு அன்புகணேசன் சபாபதி அவர்கள்,

“கால்நூற்றாண்டுக்கும் மேலாகத் தமிழ் எழுத்துலகில் இயங்கிவரும் இமையத்தின் முதல் நாவலான 'கோவேறு கழுதைகள்' வெளியானபோதே தமிழ் இலக்கிய உலகில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஒடுக்கப்பட்டவர்களிலும் ஒடுக்கப்பட்டவர்களாக வாழும் புதிரை வண்ணார்களின் வாழ்க்கையையும் அவர்கள்மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகளையும் பதிவு செய்த 'கோவேறு கழுதைகள்' பல உரையாடல்களைத் தமிழ்ச் சமூகத்தில் எழுப்பியது.

'கோவேறு கழுதைகள்' நாவலில் இருந்து தொடர்ச்சியாகத் தன் எழுத்துகளில் எளிய மனிதர்களின் வாழ்க்கையையும், சாதியப்பிரச்னைகளையும் பதிவு செய்துவருகிறார் இமையம். இலக்கியத்தில் அரசியல்கூடாது, அது உன்னதப் படைப்பு என்ற மேட்டுக்குடிப் பார்வையில் இருந்து விலகி நிற்கும் இமையம் அரசியலை மறைபொருளாகவும் சமயங்களில் நேரடியாகவும் தன் கதைகளில் பதிவு செய்ய மறப்பதில்லை.”

(எழுத்தாளர் இமயம் பற்றி பல்வேறு அறிஞர்கள்- ப – 54)
என்று குறிப்பிட்டுள்ளது கூர்ந்து நோக்கத்தக்கது.

தமிழ் இலக்கியத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலையும், சமூக எதார்த்தத்தையும் துணிச்சலுடன் பதிவு செய்துவரும் வெ. அண்ணாமலை என்ற இயற்பெயர் கொண்ட எழுத்தாளர் இமையம் குறித்து சக எழுத்தாளரான சுந்தரராமசாமி அவர்கள்,

“தமிழ் எழுத்துலகில் கடந்த நூறு ஆண்டுகால வளர்ச்சியில் இமயத்தின் கோவேறு கதைகள் நாவலுக்கு இணையானது வேறொன்றும் இல்லை”
(எழுத்தாளர் இமயம் பற்றி பல்வேறு அறிஞர்கள்- ப – 59)
என்று புகழ்ந்துருகுகிறார்.

தலித் சிந்தனை எழுத்தாளர் என்று பலராலும் அறியப்படும் இராசு கௌதமன் அவர்களோ,

“இமையத்தின் படைப்புகள் ஒடுக்கப்பட்ட விளிம்புநிலை மக்களின் அவலங்களை மட்டுமே முன்னிறுத்துவதாகவும், சாதிய ஒடுக்குமுறைகளை விட மேல்சாதியினர் புகழக்கூடிய வகையிலும் அமைந்திருக்கின்றது.”

(எழுத்தாளர் இமயம் பற்றி பல்வேறு அறிஞர்கள்- ப – 64)

என்று விளக்குகிறார்.

ஒருவருடைய பலம் எது பலவீனம் எது என்று அவர்களே தெரிந்துகொள்ள தவறும் இன்றைய உலகில், ஒருவருடைய பலத்தையும் பலவீனத்தையும் மற்றவர்கள் அறிந்து சொல்வது என்பது மிகவும் வியக்கத்தக்க ஒன்று. இவ்வாறு மற்றவர்களைப் பற்றி ஆராயும் தன்மை ஒருவருக்கு வாய்க்கப்படுமேயாயின், அவ்வாறு கூறுபவர் அந்த நபரின் எழுத்துக்களை ஆரம்பம் முதல் இறுதி வரை அணு அணுவாய் ஆராய்ந்தவராகவே இருக்கக்கூடும். இதன் அடிப்படையில் எழுத்தாளர் இமயம் அவர்களின் எழுத்துக்களைப் பற்றி இலக்கிய விமர்சகரான அரவிந்தன் அவர்கள்,

“இமையத்தின் எழுத்துக்களில் ஆசிரியர் தலையீடு மிக அரிதாகவே காணப்படும். வட்டாரப் பேச்சு வழக்குகளையும், இயல்பான உரையாடல்களையும் கொண்டு கதாப்பாத்திரங்களைத் தங்களின் சுயத் தன்மையோடு வெளிவர அனுமதிப்பது இமையத்தின் பலம்” (எழுத்தாளர் இமயம் பற்றி பல்வேறு அறிஞர்கள்- ப – 66)

என்று தன்னுடைய எழுத்துக்களால் எடைபோடுகின்றார்.

## இமையம் படைப்புகளில் நாட்டார் சமய மரபுகள்

ஆரம்ப காலம்முதல் இன்றுவரை மனிதனுடைய வாழ்வில் சமயம் என்பது புறக்கணிக்க இயலாத ஒன்றாகவே இருந்துள்ளது. இயந்திரமயமான இன்றைய காலத்திலும் சமயம் அனைத்துப் பிரிவினரிடமும் ஆழமாகவே வேரூன்றியுள்ளது என்பதே மறுக்க இயலாத உண்மை. மனிதன் பல்வேறு மதகளைத் தனக்குள் வகுத்துக்கொண்டு பல்வேறு வழிபாட்டுமுறைகளை மேற்கொள்வதற்கும் இந்தச் சமயமே அடித்தளமாக அமைகின்றது என்பதை,

“மதம் என்பது மூன்று அத்தியாவசிய அம்சங்களைக் கொண்டது. முதலாவது நம்பிக்கை, இரண்டாவது சடங்குகள், மூன்றாவது ஜதீகங்கள் இவற்றின்வழி வளர்த்தெடுக்கப்பெறும் சமூகக் கண்ணோட்டம் அல்லது உலக நோக்கு. ;இம்மூன்றும் ஒருங்கிணையும் பண்பாட்டிலிருந்தும், இலக்கியத்திலிருந்தும் பிரித்து நோக்க முடியாது” (கா.சிவதம்பி–தமிழிலக்கியத்தில் மதமும் மானுடமும் இலக்கியவரலாற்றாய்வு–ப-34)

என்று சிவதம்பி விளக்கம் கூறுகின்றார்.

### நாட்டார் சமயம்

தமிழ்ப் புனைக் கதைகளில் வட்டார மொழி எழுத்துக்கள் வலுவுடன் தோன்றி எழுபதுக்குப் பின்பாக பத்தாண்டுகளில் நாட்டார் பண்பாடும்

சமயமும் கவனம் பெறலாயின. அதுவரை புனைகதையுலகில் புறக்கணிக்கப்பட்டுவந்த நாட்டார் தெய்வங்கள் சிறுகதைகள் வழியே இடம்பெறத் தொடங்கின. பொதுமக்களின் வாய்மொழி மரபை முன்னிருத்துவது ஒருவிதமான மாற்றுப் பண்பாட்டை முன்னெடுப்பதற்கான களமாகக் காணப்பட்டது. கிராமப்புற வாழ்வியல் மீதான ஏக்கம், ஆதிக்க சாதி எதிர்ப்பு, தாய்வழித் தலைமைக்கான மீட்டுருவாக்கம் போன்ற பல நோக்கங்களுக்காக நாட்டார் தெய்வங்களின் கதைகள் பயன்படுத்தப்பட்டன.

தமிழ்ச் சமுதாயச் சூழலில் ஒழுக்கப்பட்ட மக்களைப் பற்றியும், வட்டாரப் பின்புலங்களோடு எதார்த்தமான நடமாடும் மாந்தர்களைக் கதைப் பின்னனியாகக் கொண்டு புனைவுகள் படைப்பதில் குறிப்பிடத்தக்கவராக இமயம் திகழ்கின்றார். அப்புனைவுகளில் நாட்டார் தெய்வங்களை மையமிட்டு நடைபெறும் நிகழ்வுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

சக மனிதர்களோடு பேசுவது போன்று நாட்டார் தெய்வங்களோடு நேரடியாகப் பேசுவது, தன்னுடைய துன்பமம், மகிழ்ச்சி போன்ற அனைத்து நிகழ்வையும் அத்தெய்வங்களோடு பங்கிட்டுக் கொள்வது என்று தங்களோடு சமமாக நினைத்துப் போற்றும் வழக்கம் இமையம் படைப்புகனின் கதை மாந்தர்களிடையே காணப்படுவதை,

“குவாட்டரு பாட்டிலு, சிகரட்டு, எலுமிச்சங்கா, பூ பழமின்னு ஒனக்கு வேண்டிய எல்லாத்தையும் கொண்டாந்து படையல் போட்டான். எல்லாக் கருமாதியும் செஞ்சப்பின்னாலையும் எனக்கு ஏன் உத்தரவு கொடுக்க மாட்டங்குற? கைநெறையா பொருளு கெடைக்கணும், கேடைக்கறத்திலதான் பாதியக் கொண்டாந்து ஒனக்கு சூலம், மணி, அங்கவஸ்திரம், கோழகாவு, குவாட்டரு பாட்டுலுன்னு கல்லு கருமாந்தரம் எடுக்குறனே, அப்புறம் என்ன? எனக்கு ஏன் உத்தரவு கொடுக்காம லேட்டாக்குற? போன வெள்ளிக் கிழம வேப்பூர் சந்தக்கிப் போனன். பாவப்பட்ட சனியந்தான் மாட்டிச்சி. பாவப்பட்டதுன்னு நெனனச்சா நான் எப்பிடிச் சோறு திங்குறது? என் வயிறு மண்ணயா திங்கும்? ஒரு பவின்னு நெனச்சிக் கொண்டுபோயி கொடுத்தேன். தேஞ்சுப்போச்சி, மக்கிப்போச்சி, முக்கா பவுனுதான் தேறுமன்னு சொன்னான். கையில காசு வாங்குனன். மறுநாளு ஒனக்கு படையல் போட்டனா இல்லியா? நேரமாவறது பல்லியின் சத்தம் கேட்கிறதா என்று கவனமாகக் கேட்டான். சலிப்பு மேலிட ‘சயனத் தடங்கலோட போவக் கூடாதின்னு ஒனக்குத் தெரியாதா? என்று கேட்டான்”

(இமையம் - சாவுச்சோறு – ப – 47)

என்ற வரிகளில் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

மக்களே பூசாரியாக இருந்து செயல்படுவது, இறைச்சி மது போன்றவற்றைப் பலியிட்டுப் படைப்பது, தங்களுடைய வாய்வழியாக வந்த சொற்களைக் கொண்டு போற்றிப் புகழ்ந்துப் பாடுவது, தன் பரம்பரையாக முன்னோர்கள் இட்டு வணங்கியதனால் தானும் இட்டு வணங்குவது, மனிதரிடம் தெய்வமாக இறங்கி அருள்வாக்குக் கூறுவது

போன்ற நாட்டார் தெய்வ வழிபாடுகளில் தோன்றும் வழிபாட்டு முறைகளைத் தன்னுடைய படைப்புகளிலும் பல்வேறு இடங்களில் மிகவும் நுட்பமாகப் படைத்து மகிழ்ந்துள்ளார் எழுத்தாளர் இமையம் என்பதற்கு,

“என்னா செய்யனும் சொல்லு. நீ சொல்றது கருப்பையாகிட்டே இங்கு உள்ளத மட்டும்தான் சொல்லனும். இது சாமி குடிகொண்டிருக்கிற எட. .இந்தப் பைய கோவக்காரன். துஷ்டன். ஆனா நல்லவங்களுக்கு மட்டுந்தான் உவகாரம் செய்வான். ஈடு மருந்து விச்சியிருந்தாலும், எல்லாத்தையும் சாம்பலாக்கிப்புடுவா. ஏவல், பில்லி, சூனியம் வைப்பு எடுக்கிறதிலேயும் வைக்கிறதிலியும் பெரிய சூரன் இந்தப்பய. மத்த சாமி மாரி இல்லெ இவின். மாயாஜாலக்காரன், நான் நில்லுன்னா நிப்பான். ஏன்னா இவ என்னோட எல்லெ என்னோட உத்தரவு இல்லாம அவன் இந்த எல்லையத் தாண்ட முடியாது. எங்க முப்பாட்டன் குமாரயிலிருந்து இந்த ஊருக்கு வரும்போது குலசாமின்னு கருப்பையாவையும் கொண்டாந்து குடிவச்சாரு. அதனால என்னோட ஏவல்ல அவன் நின்னாவனும். என்னா ஒண்ணு, ரத்த வெறி பிடிச்ச பய. பலி கேப்பான். அவ்வளவுதான். அவனுக்கு வேண்டியதக் கொடுத்திட்ட நாம்ப சொல்ற மீற மாட்டான்”

(இமையம் - கொலைச்சேவல்-ப-69)

என்ற வரிகளே சான்றாக அமைகின்றன.

ஒவ்வொரு உயிரின் தோற்றத்திற்கும் பெண்மையே முதன்மை. இதனை உணர்ந்ததன் காரணத்தினால்தான் பல அறிஞர்களும் பெண்ணின் பெருந்தக்க யாவுள, பெண்மையைப் போற்றுவோம், பெண்மை வாழ்க என்று கூத்திடுவேமடா, அறிது அறிது மங்கையராய்ப் பிறப்பதறிது என்றெல்லாம் புகழ்ந்துள்ளனர். இத்தகைய பெண்மை நினைத்தால் எதையும் செய்துவிடலாம். பெண்மை என்பது மென்மைதான். ஆனால் இது ஆண்களிடம் காணப்படும் வன்மையையும் தோற்கடிக்கச் செய்யும் ஆற்றல் படைத்தது.

உலகம் உருவாவதற்கும், உருவாகிய உலகம் இயங்குவதற்கும் காரணமாகச் செயல்படும் இத்தகைய பெண்மையை இரண்டாம் தரமாகவும், இழிந்த அடையாளமாகவும், போகப்பொருளாகவும் பார்த்துவரும் மரபினருக்கிடையில், வழிபடும் தெய்வங்களாகப் பெண்மையைப் போற்றும் வழக்கத்தைக் கடைபித்து வந்த நாட்டார் வழிபாட்டு முறையை,

“பொன்னருவியினுடைய சாபத்திலிருந்து கோபத்திலிருந்து தப்பிப்பதற்கு வழி தேடுமாறு பெண்கள் புலம்ப ஆரம்பித்ததோடு அவர்களே பொங்கள் வைத்துப் படைத்தால் அவளுடைய கோபம் தணியும் என்று சொன்னார்கள். அதனால் ஊர்ப்பஞ்சாயத்து கூடியது. பஞ்சாயத்தில் ஒரு ஆள் தவறாமல் எல்லோருமே பொங்கல் வைத்துப் படைக்கலாம் என்று சொன்னார்கள். சிவன் கோயிலுக்கு எதிரிலுள்ள வீட்டுக்காரரான சிதம்பரம் பிள்ளை மட்டும் ‘பறச்சிய எப்பிடியே சாமி ஆக்கிட்டீங்க’ என்று சொன்னார். அவருடைய பேச்சு பஞ்சாயத்தில் எடுபடவில்லை. குடிக் தெருக்காரர்கள் பொங்கல் வைத்துப் படைக்க

முடியாது. அதனால் பொன்னருவியினுடைய சொந்தக்காரர்களிடமே அந்தப் பொறுப்பை ஒப்படைக்கலாம் என்றும் பஞ்சாயத்தில் முடிவாகியது. பஞ்சாயத்தில் முடிவானபடிதான் பொட்டைக்குளக் கரையில் பொன்னருவிக்கு முதல் பொங்கல் படைத்தது."

(இமையம் - வீடியோமாரியம்மன் - ப- 119)

என்ற வரிகளின் மூலம் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

## முடிவுரை

தமிழ் இலக்கியத்தில் நாட்டார் மரபு சங்ககாலம் தொட்டே இருந்துவருகின்றது. நாட்டார் மரபுகளை இன்றைய காலத்தில் செவ்வியலுடன் கலந்த ஒன்றாக மாற்றும்போது அங்கே அழகியல் உச்சம் கொள்கின்றது. இந்த நாட்டார் சமய மரபு என்பது வெறுமனே தமிழ் மரபில் மட்டுமே இருக்கின்ற ஒன்றல்ல. ஜெர்மனியில் தொழில்புரட்சிக்கு முந்தைய காலத்தில்கூட இதனைத்தான் நாடினர். ஹிட்லர்கூட அங்குள்ள மக்களைக் கட்டுப்படுத்த இந்த நாட்டார் மரபினைத்தான் நாடியுள்ளார். அத்துடன் நிறுத்திக்கொள்ளாமல் அதனைத் தன்னுடைய தேசியவாதத்துடன இணைத்தார். இதன்மூலமே தூய ஜெர்மணியவாதம் கட்டமைக்கப்பட்டது. எனவே இந்த நாட்டார் சமய மரபு என்பது சமுதாயத்தில் ஒரு முக்கிய அம்சம் என்பது யாராலும் மறுக்க இயலாத உண்மை. எழுத்தாளர் இமயம் அவர்கள் தன்னுடைய படைப்பில் இந்த நாட்டார் சமய மரபினைப் பல்வேறு இடங்களில் மிகத்தெளிவாகப் பதிவு செய்கின்றார். நாட்டார் சமய மரபில் மதம் என்பது எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை விளக்குகின்றார். சக மனிதர்களோடு பேசுவது போன்றே நம்முடைய முன்னோர்களாகிய தெய்வங்களோடு பேசும் முறையை விளக்குகின்றார். மேலும் தன்னுடைய துன்பம் மற்றும் மகிழ்ச்சி ஆகிய அனைத்து நிகழ்வினையும் அத்தெய்வங்களோடுப் பகிர்ந்துக் கொள்கின்றார். தன்னுடைய முன்னோர்களான நாட்டார் தெய்வங்களைத் தங்களுக்குச் சமமாக, தங்களோடு அன்றாடம் பழகுபவர்களாகப் போற்றும் மனப்பாண்மையையும் தன்னுடைய படைப்புகளில் பதிவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## துணைநூற் பட்டியல் (References)

1. அன்புகணேசன் சபாபதி - இமயம் பற்றி -நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்- எண். 41-B, சிட்கோ தொழிற்பேட்டை (SIDCO Industrial Estate), அம்பத்தூர், சென்னை - 600098.
2. எழுத்தாளர் இமயம் பற்றி பல்வேறு அறிஞர்கள் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்- எண். 41-B, சிட்கோ தொழிற்பேட்டை (SIDCO Industrial Estate), அம்பத்தூர், சென்னை - 600098.
3. கா. சிவதம்பி – தமிழிலக்கியத்தில் மதமும் மானுடமும் இலக்கிய வரலாற்றாய்வு - பாரி நிலையம் - முதல் தளம், எண். 184, பிராட்வே சாலை (Broadway Road), மன்னாடி மெட்ரோ ரயில் நிலையம் அருகில், ஜார்ஜ் டவுன், சென்னை - 600001.
4. இமையம் - சாவுச்சோறு – கங்கை புத்தக நிலையம் - பழைய எண். 13, புதிய எண். 23, தீனதயாளு தெரு, பாண்டி பஜார், தி. நகர், சென்னை - 600017.

5. மையம் - கொலைச் சேவல் - பாரி நிலையம் - முதல் தளம், எண். 184, பிராட்வே சாலை (Broadway Road), மன்னாடி மெட்ரோ ரயில் நிலையம் அருகில், ஜார்ஜ் டவுன், சென்னை - 600001.
6. இமையம் - வீடியோமாரியம்மன் - பாரி நிலையம் - முதல் தளம், எண். 184, பிராட்வே சாலை (Broadway Road), மன்னாடி மெட்ரோ ரயில் நிலையம் அருகில், ஜார்ஜ் டவுன், சென்னை - 600001.

ARTICLE 07 | Original Research Paper – Peer Reviewed
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 43–51

# சங்க இலக்கியங்கள் வழி அறியலாகும் பண்டைய மக்களின் பழக்கவழக்கங்கள்

## Customs and practices of ancient people as revealed through Sangam literature

**முனைவர் ப. கற்பகராமன்**
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை, சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் -05
அலைபேசி எண்: 9894210651
மின்னஞ்சல் முகவரி:sonakarpagaraman@gmail.com
ORCID ID: https://orcid.org/0000-0003-1625-7209

### Abstract

Since ancient times, the practice of naming individuals has been driven by the desire for one's lineage to endure within society. Specifically, bestowing the names of ancestors fosters the belief that they continue to live among us, transcending their physical existence. Sangam literature reveals that the custom of naming a child after the father originated from this very sentiment. This research paper examines various customs and practices—such as lighting lamps at dusk, the Madal-eru-thal ritual, Brahmins wearing the kudumi (tuft of hair), the beating of drums parai, and specific marriage, worship, and festival traditions—as they are depicted in Sangam literature.

### ஆய்வுச் சுருக்கம்

தொன்றுதொட்டு தன்னுடைய வம்சம் அப்பெயரின் மூலமாக சமூகத்தில் நிலைத்து நிற்கவேண்டும் என்ற எண்ணத்தில்தான் ஒவ்வொருவருக்கும் பெயர் வைக்கப்படுகின்றது. அதிலும் முன்னோர்கள் பெயரை வைப்பதன் மூலம் அவர்களுடைய பூத உடல்களையும் தாண்டி அவர்கள் நம்மோடு வாழ்வார்கள் என்கிற எண்ணம் தோன்றும். இதன் அடிப்படையிலேயே தந்தையின் பெயரை பிள்ளைக்கு வைக்கும் வழக்கம் பண்டைய காலத்தில் இருந்துள்ளது என்பது சங்க இலக்கியங்கள் மூலம் நமக்குத் தெரிகின்றது. இதன் அடிப்படையிலேயே மாலைப் பொழுதில் விளக்கேற்றுதல், மடலேறுதல், பார்ப்பணர் குடுமி வைத்திருந்தல் பறையறைதல், திருமண முறைகள், வழிபாட்டு முறைகள், திருவிழாக்கள் போன்ற பழக்கவழக்கங்கள் சங்க இலக்கியங்கள் மூலம் வெளிப்படுவதை ஆராய்வதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

**திறவுச் சொற்கள்:** மடலேறுதல் - பார்ப்பனக் குறுமகப்போல – பறை - தைந்நீராடல் - தைந்நீராடல் - கைம்மை - பூண்தொடை விழா - உள்ளி விழா.

## ஆய்வு அனுகுமுறை

பண்டைய கால மக்களின் அன்றாட பழக்கவழக்கங்கள் சார்ந்த வாழ்வியல் செய்திகளை சங்க இலக்கியங்கள் வழி எடுத்துரைப்பதால் இந்த ஆய்வுக்கட்டுரை எடுத்துக்கூறும் முறை அய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வு நோக்கம்

பண்டைய கால மக்களின் வாழ்வியல் சார்ந்த பழக்கவழக்கங்கள், வதிருமண முறைகள், பல்வேறு வகையான வழிபாட்டு முறைகள், உடல் மற்றும் மனதை செம்மையாக்கும் திருவிழாக்கள் போன்றவற்றைச் சங்க

இலக்கியங்கள் வழி ஆராய்ந்து வெளிப்படுத்துவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

## முன்னுரை

படைப்பு என்பது கற்பனை கலந்ததாக மட்டும் நின்றுவிடாமல் நிகழ்கால உண்மைகளையும் பதிந்ததாக அமைய வேண்டும். படைப்பாளி என்பவன் தான் வாழும் சமுதாயம் மீது மிகுந்த பற்றகொண்டவனாக இருந்தால் மட்டுமே அவனால் அந்த சமுதாயம் பலன் பெறும். சங்க இலக்கியங்களை இயற்றிய ஆசிரியர்கள் அனைவருமே தங்கள் சமுதாயம் மீது மிகுந்த பற்று கொண்டவர்களாகவே விளங்கியுள்ளனர் என்பதை அவர்களுடைய படைப்புகளே எடுததுக்காட்டுகின்றன. பழக்கம் என்பது நாம் பழகிக் கொள்வதாகும். வழக்கம் என்பது நம் முன்னோர் பழகிய பழக்கம் நமக்கு வழக்கமாக வருவதாகும். எனவே நம் முன்னோர் பழக்கம் நமக்கு வழக்கமாகும். நம் பழக்கம் நம் பின்னோர்க்கு வழக்கமாகும். இப்பழக்க வழக்கங்கள் மூலம் சங்ககால மக்களின் வாழ்க்கை முறையை அறியலாம்.

## சங்ககால மக்களின் பழக்க வழக்கங்கள்

மக்களின் தேவைகளின் அடிப்படையில் பழக்கங்கள் தோன்றுகின்றன. அவை சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நிலையில் வழக்கங்களாக உருப்பெறுகின்றன. சங்ககால மக்கள் கடைபிடித்த பழக்கவழக்கங்களாக, தந்தை பெயரை பிள்ளைகளுக்கு வைத்தல், கடன் கொடுத்தல் வாங்கல், மாலைப்பொழுதில் விளக்கேற்றல், மடலேறல், கள்ளுண்ணல், பார்ப்பனர் குடுமி வைத்திருத்தல், பறையறைதல், தை நோன்பு, நடுகல் வழிபாடு போன்றவற்றைக் கூறலாம். இப்பழக்க வழக்கங்கள் பற்றி அகப்பாடல்கள் சான்று பகர்கின்றன.

## தந்தை பெயரைப் பிள்ளைக்கு வைத்தல்

பழங்கால மக்களிடம் தந்தை பெயரை மகனுக்கு வைக்கும் மரபு காணப்பட்டது. மலைவாழ் மக்களிடம் இன்றும் தந்தையின் பெயரை மகனுக்கு வைக்கும் முறை பின்பற்றப்படுகிறது. தலைவன் பரத்தையர் வீட்டில் தங்கியதால் தலைவி வருத்தத்துடன் இருக்கிறாள். தந்தையின் பெருமை மிக்க பெயரை முறையாகச் சூட்டியுள்ள தன் மகனை அணைத்துக் கொண்டு பொய்யாக துயில் கொள்வதை,

> “முதல்வன் பெரும்பெயர் முறையுளிப் பெற்ற
> புதல்வற் புல்லிப் பொய்த் துயில் துஞ்சும்”
> (கலித்தொகை மருதக்கலி - பா- 75)

என்னும் கலித்தொகைப் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. சங்ககால நடைமுறை காலப்போக்கில் மாறி தங்களுக்கு விருப்பமான பெயரை நாகரிகம் என்ற பெயரில் வைத்து வருகின்றனர்.

## மாலைப் பொழுதில் விளக்கேற்றல்

இரவுப்பொழுதுக்குத் தேவையான வெளிச்சத்திற்கும், வீடு மங்களகரமாக இருப்பதற்குமாக மாலை நேரத்தில் மகளிர்

விளக்கேற்றும் பழக்கம் சங்க காலத்தில் இருந்தது. அன்றைய மக்களின் பழக்கமே இன்றும் நடைமுறையில் இருந்து வருவதைக் காணமுடிகிறது. மகளிர் செந்தீயால் மாலைப் பொழுதில் விளக்கேற்றியதை,

“செந்தீச் செவ்வழல் தொடங்க வந்ததை
வால்இழை மகளிர் உயிர் பொதி அவிழ்க்கும்”
(கலித்தொகை நெய்தல்கலி - பா- 118)

எனும் கலித்தொகைப் பாடலடிகளால் அறியலாம்.

## மடலேறுதல்

தலைவன் தான் விரும்பிய தலைவி தனக்குக் கிடைக்காத நிலையில் எருக்கம் பூ மாலை சூடி, பனை மடலால் ஆன குதிரையின் மீது ஏறி தலைவியின் வடிவம் தீட்டியகொடியை ஏந்தி மடலேறுவான். பெண்கள் எந்த நிலையிலும் மடலேறுதல் செய்வதில்லை. மடலேறுதல் குறித்த செய்திகள் அகப்பாடலில் காணப்படுகின்றன.

பனங்கருக்கால் செய்த குதிரையின் மீது அமர்ந்து தலைவியின் உருவத்தைப் படமாக வரைந்து கையிலே பிடித்துக் கொண்டு பல பேர் அறிய ஊர் நடுவே நாற்சந்தியில் மயிற்பீலி, பூளைப்பூ, ஆவிரம்பூ, எருக்கம்பூ ஆகியவற்றைக் கொண்டு மாலையாகக் கட்டப்பட்டதை கழுத்தில் அணிந்து தலைவன் மடலேற நிற்பதை,

“மணிப்பீலி சூட்டிய நூலோடு மற்றை
அணிப்பூளை, ஆவிரை, எருக்கொடு பிணித்து யாத்து
மல்லல் ஊர் மறுகின்றகண் இவட்பாடும்”
(கலித்தொகை நெய்தல்கலி - பா- 138)

என்னும் கலித்தொகைப் பாடல் சுட்டுகின்றது. தலைவன் தான் விரும்பிய தலைவியை அடைய முடியாத நிலையில் மடலேறுவேன் என்று கூறுதலும் அதன் பிறகு திருமணம் நிகழ்ந்ததும் சங்ககாலத்தில் இருந்த மரபு என்பது புலனாகிறது. மடலேறுதல் வழி தாம் விரும்பிய பெண்ணை மணந்து கொள்ளும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது தெளிவாகிறது.

## பார்ப்பனர் குடுமி வைத்திருத்தல்

பண்டைய காலத்தில் பார்ப்பனர்கள் குடுமி வைத்திருப்பார்கள். தங்கள் வீட்டுச் சிறுவர்கள் குடுமி வைத்திருந்தனர் என்பதை,

“அன்னாய் வாழி வேண் டன்னை நம்மூர்ப்
பார்ப்பனக் குறுமகப்போலத் தாமும்
குடுமித் தலைய மன்ற
நெடுமலை நாடன் ஊர்ந்த மாவே”
(ஐங்குறுநூறு -குறிஞ்சிக்கலி -202)

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன. இன்றும் பார்ப்பனர்கள் குடுமி வைத்திருப்பதைப் பார்க்கின்றோம்.

## பறையறைதல்

பழங்காலத்தில் மக்களுக்கு ஒரு செய்தியைத் தெரிவிக்க பறையறைந்து சொல்லும் வழக்கம் இருந்தது. மதங்கொண்ட யானை நீராட்டுதற்கு வெளியே கொண்டுவரும் பொழுது பறையறைந்து

மக்களை வெளியே வரவேண்டாம் என்று எச்சரிக்கும் வழக்கம் இருந்ததை பின்வரும் கலித்தொகைப் பாடல் வழி புலனாகின்றது.

“நிறை அழிகொல் யானை நீர்க்கு விட்டாங்கு
பறை அறைந்தல்லது செல்லற்க என்னா
இறையே தவறு உடையான்”
(கலித்தொகை நெய்தல்கலி - பா- 141)

கிராமப்புறங்களில் பொதுமக்களுக்கு செய்தியை அறிவிக்க பறை பயன்படுத்துவது நடைமுறை வழக்கத்தில் உள்ளது. அது மட்டுமன்று காவிரியாற்றுப் படுக்கையில் நீர்ப்பெருக்கு ஏற்படும் போது மக்களுக்கு எச்சரிக்கை செய்வதற்காக மாவட்ட நிர்வாகம் பறை அடித்து செய்தியை அறிவிக்கின்ற வழக்கம் இன்றும் வழக்கத்தில் உள்ளது.

## தைந்நீராடல் (அ) தை நோன்பு

தை மாதத்தில் நீராடுதல் தைந்நீராடல் எனப்படும். மணமாகாத பெண்கள் மார்கழி முழுமதி நாள் தொடங்கித் தை முழுமதி நாள் வரை விடியற்காலையில் நீராடி நோன்பிருப்பர். இளம் பெண்களால் நிகழ்த்தப்பெறும் தைந்நீராடல் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. திருப்பாவை, திருவெம்பாவை பக்தி இலக்கியங்கள் தோன்றுவதற்கும் தைந்நீராடல் அடிப்படையாய் அமைந்தது எனலாம். தைந்நீராடல் பற்றி “பெண்கள் மார்கழியில் நோன்பிருந்து தைமாதம் முதலில் நீராடுவர். இதற்குத்தான் தைந்நீராடல் என்று பெயர்” என்று சாமி.சிதம்பரனார் அவர்கள் ‘பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும்’ என்ற நூலில் குறிப்பிடுகிறார். நல்ல கணவன் கிடைக்கவேண்டும் என்பதற்காக இளம்பெண்கள் தைமாதத்தில் விடியற்காலையில் நீராடி நோன்பு இருந்துள்ளனர். இப்பழக்கம் சங்ககாலப் பெண்களின் வழக்கமாக இருந்துள்ளது.

தைத்திங்களில் நீராடி நோன்பு மேற்கொண்டதன் பயனாக என்னைப் பெற்றாள் என்று தலைவன் கூறியதை,
“தைத்திங்கள் தன்கயம் படியும்
பெருந்தோட் குறுமகள்”
(நற்றிணை – பா- 80)

என்ற பூதன்தேவனாரின் நற்றிணைப் பாடல் வரிகள் விளக்குகின்றன. இன்றும் திருமணமாகாத பெண்கள் மார்கழி மாதத்தில் பாவை நோன்பிருக்கும் வழக்கத்தைக் காணமுடிகிறது.

## நடுகல் வழிபாடு

இறந்தவர்களின் நினைவாக எடுக்கப்படும் நினைவுக் கல் நடுகல் ஆகும். போரில் விழுப்புண்பட்டு இறக்கும் வீரனுக்காக அவனைப் போற்றும் வகையிலும் தியாகத்தை வெளிப்படுத்தும் வகையிலும் கல் ஒன்றினை நட்டு அதனை வழிபடும் வழக்கம் சங்க காலத்தில் இருந்தன. இதைப் பற்றி அகநானூற்றில் நோய்பாடியார் வெட்சி வீரர்கள் கொண்டு சென்ற ஆநிரைகளை மீட்க நடத்திய போரில் கரந்தை வீரர்கள் இறந்தனர். அவர்களுக்கு நடுகல் நட்டதை,

“பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல்

வேல்ஊன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்"
(அகநானூறு – பா -67)

என்னும் அகநானூற்றுப்பாடல் வழி அறியமுடிகிறது. இன்றும் இராணுவத்தில் பணியாற்றும் வீரர்கள் போரில் வீரமரணம் அடைந்தால் அவர்களுக்கு அரசு மரியாதை செய்து துப்பாக்கிக் குண்டுகள் முழங்க அவர்களின் இறுதிச்சடங்கு நடைபெறுகிறது.

## திருமணமுறை

ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து இல்லறம் மேற்கொள்ள நடத்தப்பெறும் வாழ்க்கை ஒப்பந்தம் மணம் எனப்படும். இல்லற வாழ்க்கைக்கு அடிப்படையாய் அமைவது திருமணம் என்று கூறமுடிகிறது. சங்ககாலத் தமிழரின் வாழ்க்கை நெறியை களவு, கற்பு என்று இரு வகையாகக் கூறலாம். ஊரறியாத வகையில் வயது வந்த ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வது களவு என்றும் ஊரறியத் திருமணம் செய்து கொண்டு வாழ்வது கற்பு என்றும் கூறலாம். தொல்காப்பியர்,

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"
(தொல்காப்பியம் - பொருளதிகாரம் - கற்பியல் - 01)

என்ற நூற்பாவில் திருமணத்தைக் கற்பு என்ற சொல்லால் சுட்டுகிறார்.

சங்ககாலத்தில் காதல் திருமணமும் பெற்றோரால் நடத்தப்படும் திருமணமும் இருந்திருக்கின்றன. தலைவன் தலைவி காதலான களவு வாழ்க்கையில் ஊரால் அலர் ஏற்படும். இதையறிந்த தலைவியின் பெற்றோர் (இற்செறிப்பர்) இல்லின் கண் கட்டுப்பாட்டோடு அடைத்து வைப்பர். களவொழுக்கம் காரணமாக பெற்றோரின்; தடையால் உடன்போக்கு நிகழ்தலும் உண்டு. தலைவன் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று திருமணம் செய்வது மரபு. சில நேரங்களில் தோழி இடையிட்டு அறத்தோடு நின்று திருமணத்தை நடத்தி வைத்தலும் உண்டு. தலைமக்களின் வாழ்வை அறவழியில் நிலைப்படுத்த தோழி, தலைவனும் தலைவியும் பிறர் அறியாமல் காதல் கொண்ட உண்மையை எடுத்துரைப்பதை,

"எந்தையும் யாவும் உணரக் காட்டி
ஒளித்த செய்த வெளிப்படக் கிளந்த பின்
மலைகெழு வெற்பன் தலைவந் திரப்ப
நன்று பரி கொள்கையின் ஒன்றா கின்றே"
(குறுந்தொகை – பா- 374)

என்னும் குறுந்தொகைப் பாடல் வரிகள் விளக்குகின்றன. களவு மணம் கற்பாக மாறுவதற்கு தோழியின் பங்கு இன்றியமையாததாக இருந்தது.

## புதுமணல் பரப்புதல்

புதுமணல் பூசி வீட்டை அழகுபடுத்தி திருமண காலத்தில் மகிழ்ச்சியோடு இருந்தனர். புதுமணல் பரப்பி வீட்டை அழகுபடுத்தும் முறை வழக்கமாகப் பின்பற்றப்படும் முறை எனலாம். புதுமணல் பரப்பி

எருமையின் கொம்பை வீட்டினுள் நட்டு அதனைத் தெய்வமாக வழிபட்டதை,

“தருமணல் தாழப்பெய்து இல்பூவல் ஊட்டி
எருமைப் பெடையோடு எமர்ஈங்கு அயரும்
பெருமணம் எல்லாம் தனித்தே ஒழியே”
(கலித்தொகை - முல்லைக்கலி- பா 144)

என்ற பாடல் வழி அறிந்துகொள்ள முடிகிறது.

## தீ வலம் வருதல்

திருமணத்தின் போது தீ வலம் வருதல் அந்தணர்களிடம் காணப்பட்டது. மணமக்கள் இருவரும் கையினைப் பிடித்துக் கொண்டு தீயினைச் சுற்றி வலம் வருதல் கலித்தொகையில் ஒரு பாடலில் மட்டும் இடம்பெற்றுள்ளது. இதனை,

“காதல் கொள் வதுவைநாள் கலிங்கத்துள் ஒடுங்கிய
மாதர் கொள் மான் நோக்கின் மடந்தைதன் துணை
ஓதுடை அந்தணன் எரிவலம் செய்வான் போல்”
(கலித்தொகை - மருதக்கலி- பா 04)

என்னும் கலித்தொகைப் பாடல் வாயிலாக அறியலாம். மணமக்களுக்கு மங்கல நீராட்டியும் வீட்டிற்கு புதுமணல் பரப்பியும் அலங்காரம் செய்தும் திருமணம் நடத்தியதும் தாலி என்ற ஒன்று சங்க காலத்தில் இல்லை என்பதும் புலனாகிறது.

## சடங்குகள்

பிறப்பு முதல் இறப்பு வரை மக்களின் வாழ்க்கைக்கேற்பவும் தரத்திற்கேற்பவும் சடங்குகள் இடம்பெறுகின்றன. வளமைக்காக, வாழ்வியலில் சிலம்புகழி நோன்பு, வெறியாட்டு, ஈமச்சடங்கு, கைம்மைநோன்பு போன்ற சடங்கினை சங்ககால மக்கள் தங்கள் வாழ்க்கையில் மேற்கொண்டு;ள்ளனர்.

## மழை வேண்டல்

மழை பெய்யாமல் போனால் பயிர்கள் இல்லாமல் போகும். உணவின்றி மக்கள் வாடுவர் ஆகையால் மழையைப் பெய்விக்க குறவர்கள் ஆரவார ஒலி எழுப்பி மழையை வேண்டி மந்திரச் சடங்கை செய்தனர். இதனை,

“குன்றக் குறவன் ஆர்ப்பின் எழிலி
நுண்பல் அழிதுளி பொழியும் நாட”
(ஐங்குறுநூறு – பா – 251)

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல்வரிகளில் அறியமுடிகிறது.

## சங்ககால மக்களின் வழிபாடு

வழிபடு என்னும் சொல்லிலிருந்து பிறந்தது. வழிபாடு என்பதற்கு வணங்குதல், பின்பற்றுதல், நெறிப்படுத்துதல், என்று பொருள் கூறலாம். தெய்வங்களை மகிழ்விப்பதற்காக வழிபாடுகள் செய்யப்படுகின்றன. மர வழிபாடானது சங்ககாலத்தில் பெருமளவு இருந்துள்ளதை சங்கப்பாடல்கள் தெரிவிக்கின்றன. ஆலமரம், கடம்பமரம், வேங்கை மரம் போன்ற மரங்களை வழிபட்டுள்ளனர்.

## ஆலமர வழிபாடு

ஆலமரம் மிகப் பரந்து தழைத்திருந்தது. இம்மரத்தின் கீழ் சிவபெருமான் தவம் புரிந்ததாகக் கூறினர். இதனை கலித்தொகை

"ஆலமர்ச் செல்வன்" (கலித்தொகை - மருதக்கலி- பா -45)

என்னும் வரிகளில் சுட்டுகிறது.

## கடம்பமரம்

கடம்பமரத்தில் முருகன் இருப்பதாக நம்பி அதை வழிபட்டனர். முருகனே கடம்பன் என்று அழைக்கப்பட்டான். கடம்ப மரக் கடவுள் வழிபட்டால் கொடியோர்களை விரட்டும் என்ற நம்பிக்கை இருந்தது. இம்மரம் மன்றத்தில் இருந்ததை,

"மன்ற மராஅத்த பேஎமுதிர் கடவுள்
கொடியோர்த் தெறூஉம் என்ப"
(குறுந்தொகை – பா-87)

எனும் குறுந்தொகைப் பாடல் வரிகளில் கபிலர் கூறுகிறார்.

## வேங்கை மரம்

வேங்கை மரம் வயல்களை ஒட்டி வளர்ந்திருக்கும. வேங்கை மரக்கடவுள் கண்ணகி. இம்மரத்தை வணங்கினால் வயல் சிறப்பாக விளையும் என்ற கருத்தினை,

"எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்
குருகார் கழனி"
(நற்றிணை - பா– 216)

எனும் நற்றிணைப் பாடல் வரி மூலம் அறியமுடிகிறது.

## திருவிழாக்கள்

மக்களால் விரும்பி நடத்தப்படும் விழாக்கள் மகிழ்ச்சியும் கொண்டாட்டமும் பொழுதுபோக்கும் நிறைந்தது. விழா என்பதற்கு, "திருவிழா, மங்கலச் சடங்கு, விழவு" என்று மதுரைத் தமிழ்ப் பேரகராதி பொருள் தருகிறது. திருவிழா கொண்டாடுதல் பண்டையத் தமிழ் மக்களின் மரபாக இருந்துள்ளன.

## கார்த்திகைத் திருவிழா

சங்ககால மக்கள் கொண்டாடிய விழாக்களில் ஒன்று. இது கார்த்திகை மாதத்தில் கொண்டாடும் விழா. தெருக்களில் தம் வீட்டுவாசலில் விளக்குகளை ஏற்றி மாலைகளைத் தொங்கவிட்டதை நக்கீரர் அகநானூற்றில்,

"அறுமீன் சேறும் அகல் இருள் நடுநாள்
மறுகுவிளக்கு உறுத்து மாலை தூக்கி"
(அகநானூறு – பா-141)

என்னும் பாடலில் பதிவு செய்துள்ளார். தீபநாளில் விளக்கேற்றி வழிபட்டால் வாழ்வில் அனைத்து செல்வங்களையும் பெறலாம் என்ற நம்பிக்கையில் கொண்டாடப்பட்டது. இன்றும் கார்த்திகை தீபம் அன்று விளக்கேற்றி வழிபடுவது தொன்று தொட்டு வரும் வழக்கம் எனலாம்.

## பொங்கல் விழா

தை மாதத்தில் கொண்டாடப்படும் விழா. அறுவடை விழாவாகத் தொடங்கிப் பின்னர் வளமையைக் குறிக்கும் விழாவாக மாறியது. பொங்கல் விழா பற்றியக் குறிப்பு கிடைக்கவில்லை. தைத்திங்களின் போது நீராடி நோன்பு இருந்து உண்ணுதலை நற்றிணை,

“…….. ……… நோன்பியர்
கைஊண் இருக்கையின் தோன்றும் நாடன்”
(நற்றிணை – பா-22)

என்ற பாடல் வரிகளில் கூறப்பட்டுள்ளன. இன்று பொங்கல் விழா தென்னிந்தியா முழுவதும் கொண்டாடப்படும் விழாவாக இருக்கிறது.

பூண்தொடை விழா
பகைவரை வென்ற மழவர்கள் எடுக்கும் விழா பூண்தொடை விழாவாகும். இதனை அகநானூற்றில் மாமூலனார்,
“வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்
பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன
தருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்”
(அகநானூறு-பா – 187)

என்னும் பாடல் வரிகளில் தெளிவுபடுத்துகிறார். வீரர்களின் திறமையைக் கொண்டாடும் வகையில் இவ்விழா அமைந்துள்ளது.

## காமன் விழா

மாயோனின் மகனாகக் கருதப்படும் காமனுக்கு இளவேனில் காலத்தில் எடுக்கும் விழாவாகும். தலைவன் பொருளீட்டுவதற்கு தலைவியைப் பிரிந்து சென்றதால் அவள் வருந்துகின்றாள். அவளை ஆற்றுப்படுத்தும் தோழி நம் காதலர் வருவார் காமவேலுக்கு விழா எடுக்கும் காலம் வந்துவிட்டது என்று கூறுவதை,

“காமவேள் விழவாயின் கலங்குவள் பெரிது என
ஏமுறு கருந்திண் தேர் கடவி”

என்ற பாடல் வரிகள் வழி அறியலாம்.

## பங்குனி விழா

முருகனுக்காக பங்குனி மாதத்தில் நடைபெறும் விழா பங்குனி விழாவாகும். உறையூரில் பங்குனி உத்திர நாளில் இவ்விழா நடைபெறும் இவ்விழா பற்றி,

“உருவவெண் மணல்முருகு நாறு தண்பொழில்
பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்”
(அகநானூறு -பா– 137)

என்னும் அகநானூற்றுப் பாடல் வரிகளில் முதுகூத்தனார் சுட்டுகிறார். இன்றும் முருகன் கோவில்களில் பங்குனி உத்திர விழா சிறப்பாக நடைபெறுவதைக் காணமுடிகிறது.

## முடிவுரை

பெயர் வைப்பதில் தொடங்கி, மாலையில் இமறை நம்பிக்மகைக்காக விளக்கேற்றுதல் என்று சங்ககால மக்கள் மிகவும் செம்மையாக தங்கள் வாழ்க்கையை வாழ்ந்தனர். பார்ப்பணர் முதல்

பறையர் வரை தங்களுக்குத் தெரிந்த நற்செயல்களை சமூகத்தில் பரவ விட்டனர். விரதம் இருத்தல், நடுகல் போன்றவற்றை வழிபடல் என்று தங்களுடைய வழிபாட்டுமுறைகளில் மிகச் சிறந்தவர்களாகக் காணப்பட்டனர். திருமணத்திற்கு முன்பும் பின்பும் பல்வேறு மங்கல நிகழ்வுகளை நிகழ்த்தி மகிழ்ந்தனர் என்ற இத்தகைய வாழ்வியல் செய்திகள் அனைத்தையும் வெளிப்படுத்தும் காலக் கண்ணாடியாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## துணைநூற் பட்டியல் (References)

1. தொல்காப்பியம் – பொருளதிகாரம்- இளம்பூரணர் (உரையாசிரியர்) - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - பதிப்பு ஆண்டு – 1956
2. அகநானூறு – புலியூர்க்கேசிகன் (உரையாசிரியர்) - பாரி நிலையம், 90, பிராட்வே, சென்னை – 600 108 - பதிப்பு ஆண்டு-1960
3. நற்றிணை - திருமாளிகைச் சௌரிப் பெருமாள் அரங்கன் (உரையாசிரியர்) - முல்லை நிலையம், பாரதி நகர், சென்னை - பதிப்பு ஆண்டு - 2000
4. க லித்தொகை - புலியூர்க்கேசிகன் உரையாசிரியர்) - பாரி நிலையம், 90, பிராட்வே, சென்னை – 600 108 - பதிப்பு ஆண்டு-2000
5. ஐங்குறுநூறு - உ.வே. சாமிநாதையர் (பதிப்பாசிரியர்) - உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை- பதிப்பு ஆண்டு-1980

**ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று (Declaration of Conflicting Interests)**

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.

**ARTICLE 08 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 52–63

# எட்டுத்தொகை வழி அறியலாகும் சங்ககால தலைவியின் ஆளுமைப் பண்பு

**The personality traits of the Sangam-era heroine as revealed through the Ettuthogai anthology**

**முனைவர் பெ. தீபா**
துறைத்தலைவர் தமிழ்த்துறை
வைஸ்யா கல்லூரி, சேலம்.
மின்னஞ்சல் முகவரி: kaveeswar@gmail.com

## Abstract

Personality is not a trait exclusive to men; it is a quality possessed by women as well. The ability to initiate a task and bring it to a successful conclusion is a distinct aspect of the female personality—a trait women have embodied since the Sangam era. An exemplary female leader strives for success in all her endeavors. Sangam literature, specifically the Ettuthogai (The Eight Anthologies), beautifully portrays the numerous successes achieved by women of that period. This research paper examines and elucidates the multifaceted personality of the Sangam woman through the Ettuthogai—highlighting her traits across various contexts: from the successful realization of marital goals to the pursuit of personal objectives, and demonstrating qualities such as courage, innate instincts, the capacity for cooperation, steadfast adherence to principles, communication skills, and the ability to articulate emotions.

## ஆய்வுச் சுருக்கம்

ஆளுமைப் பண்பு என்பது ஆண்களுக்கு மட்டுமே உரியதன்று. அது பெண்களுக்கும் இருக்கும் குணம். எந்தவொரு செயலையும் தொடங்கி அதனை வெற்றிகரமாக முடிப்பது என்பது பெண்களின் தனி ஆளுமையாக அவர்களால் சங்ககாலம் முதலே கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. ஒரு சிறந்த தலைவி என்பவள் தான் செய்யும் செயல்கள் அனைத்திலும் வெற்றியை அடைய வேண்டும். சங்ககாலத் தலைவிகள் தங்கள் வாழ்வில் எண்ணற்ற வெற்றிகளைக் குவித்துள்ளதை சங்க இலக்கியமான எட்டுத்தொகை மிக அழகாகப் படம்பிடித்துக் காட்டுகின்றது. சங்ககால் மக்கள் தங்கள் திருமண இலக்கை வெளற்றிகரமாக முடிப்பதில் தொடங்கி, தன் இலக்கினை அடைவதில் மாறுபட்ட இயல்பினை வெளிப்படுத்துதல், துணிவு, இயல்பூக்கங்கள், ஒத்துழைக்கும் ஆற்றல், கொள்கைவழி நிற்கும் திறன், தகவல் பரிமாறும் திறன், தன்னுடைய உணர்வை வெளிப்படுத்தும் ஆற்றல் என்று அனைத்திலும் தலைவியின் ஆளுமை இருந்துள்ளது என்பதைச் சங்க இலக்கியங்களுள் ஒன்றான எட்டுத்தொகை வழி ஆராய்ந்து விளக்குவதாகவே இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** காப்புணர்ச்சி - இயல்பூக்கம் - வாழத்தூண்டும் இயல்பூக்கம் - இறப்பு இயல்பூக்கம் – காமநோய்.

## ஆய்வு அனுகுமுறை

சங்ககாலத் தலைவி ஆண்களுக்கு நிகராக எடுத்த காரியங்களை வெற்றியடையச் செய்யும் ஆளுமைத் திறன் பெற்றிருந்தாள் என்பதைச் சங்க இலக்கியங்களில் ஒன்றான எட்டுத்தொகை வழி எடுத்துக்

கூறியுள்ளதால் இந்தக் கட்டுரை எடுத்துக்கூறும் முறை ஆய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வு நோக்கம்

தலைவிக்கு தினைப்புனம் காப்பது மட்டுமே பணி. அதைத் தாண்டினால் காதல் செய்வாள். வேறுஏதும் அவளுக்குத் தெரியாது என்ற நிலையில் சங்ககாலப் பெண்கள் வாழவில்லை. ஒரு பெண் தலைவி என்ற நிலைக்கு உயரும்போது அவளிடம் தன்னுடைய வாழ்க்கை வெற்றிக்குத் தேவையான பல்வேறு வகையான ஆளுமைப் பண்பு இருந்துள்ளது என்பதை எட்டுத்தொகை வழி ஆராய்ந்து எடுத்துரைப்பதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

## முன்னுரை

சங்க இலக்கியங்களில் ஒன்றான எட்டுத்தொகை நூல்களின் வழியாகச் சங்ககாலத் தலைவியின் ஆளுமைப் பண்புகள் மிக உயர்வாகவும், போற்றத்தக்கதாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவள் வெறும் குடும்பப் பெண்ணாக மட்டுமின்றி, தற்காலப் பெண்களுக்கு இணையான மனவலிமையும் சுயமரியாதையும் கொண்டவளாக வாழ்ந்துள்ளாள். சங்ககாலத் தலைவியின் ஆகச்சிறந்த ஆளுமையாகக் கருதப்படுவது அவளது கற்புப் பண்பு ஆகும். இது கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது மட்டுமல்ல, எத்தகைய இக்கட்டான சூழ்நிலையிலும் தன் கணவன் மீதான அன்பிலும் நெறியிலும் உறுதியாக இருப்பதாகும். தலைவன் பொருள் ஈட்டவோ அல்லது போருக்கோ பிரிந்து சென்றிருக்கும் நீண்ட காலத்தில், பிரிவைத் தாங்கிக் கொண்டு, மன வலிமையோடு இல்லறத்தைக் காக்கும் ஆளுமை அவளிடம் இருந்தது. குடும்பத்தை வழிநடத்தும் சிறந்த இல்லறத் தலைவியாக (இல்லத்தரசி) அவள் திகழ்ந்தாள். வறுமை வந்த காலத்திலும் கூட, அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் சுற்றத்தாரையும் விருந்தினரையும் உபசரிக்கும் உயர்ந்த ஆளுமை அவளுக்கு இருந்தது. தலைவி தன் தோழியிடம் காட்டும் அன்பும், அவளது ஆலோசனைகளுக்குக் கொடுக்கும் மதிப்பும் அவளது சிறந்த சமூக ஆளுமையைக் காட்டுகிறது. இன்ப துன்பங்கள் அனைத்தையும் தோழியுடன் பகிர்ந்து கொண்டு, இக்கட்டான சூழலில் அவளது அறிவுரையின்படி செயல்படும் நிதானம் தலைவியிடம் இருந்தது. இத்தகைய குணங்கள் அனைத்தையும் எட்டுத்தொகை ஆசிரியர்கள் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளனர் என்தை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## திருமணம் என்ற இலக்கு

தலைமைக் குணங்களுள் ஒன்றே ஆளுந்திறன். தன் இலக்கில் வெற்றிப் பெறுவதற்காக பிறரை நல்வழியில் நெறிப்படுத்துகின்ற திறன் உடையவரே ஆளும் வகையினர் (சுரடட்iபெ வலிந). ஆளும் வகையினரின் இயல்பினை,

> “தம் இலக்குகளையும் விருப்பங்களையும் அடைவதில் மிகுந்த ஈடுபாடும் உண்மையான உழைப்பும் கொண்டவர். அதற்காகப் பிறரைப் பயன்படுத்திக் கொள்ளத் தயங்காதவர்கள்”

(இரா.காஞ்சனா, ஆளுமை வளர்ச்சியும் ஆளுமைக் கோட்பாடுகளும், ப.57 )

என்று இரா. காஞ்சனா குறிப்பிடுகின்றார்.

இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள தலைவி வேறுபட்ட சூழல்களை ஆளும் திறன் படைத்தவள். ஆதலால், சூழலுக்கேற்ப பிறமாந்தர்களை ஆளுகின்ற ஆற்றலினைப் பெற்றுள்ளாள். தலைவியின் ‘சிறைப்புறக் கூற்றுக்கள்’ மற்றும் ‘வாயில்மறுத்தல’; போன்றவை அவளது ஆளும் திறனுக்குச் சான்றாகும்.

“அணங்குடை நெடுவரை உச்சியின் இழிதரும்
குணம் கொள் அருவிக் கான் கெழுநாடன்
மணம்கமழ் வியல் மார்பு அணங்கிய செல்லல்
இதுஎன அறியா மறுவரற் பொழுதில்,
‘படியோர்த் தேய்த்த பல் புகழ்த் தடக்கை
நெடுவேட் பேணத் தணிருவள் இவள்’ என
முது வாய்ப் பெண்டிர் அது வாய் கூற
களம் நன்கு இழைத்து, கண்ணி சூடி
வள நகர் சிலம்பப் பாடி, பலி கொடுத்து,
உருவச் செந்தினை குரதியொடு தூஉய்…”
(அகம்.22:1-10)

அகநானூறு, சிறைப்புறக் கூற்றில் தலைவியின் ஆளுந்திறனை வெளிப்படுத்துகின்றது. ‘வரைவின் பொருட்டு பிரிந்து சென்ற தலைவன் வரைவினை நீட்டித்து இரவுக்குறியில் வந்து ஒழுகினான். இதனைத் தடுக்க எண்ணிய தலைவி அன்னை வெறியாட்டு நிகழ்த்த முற்படுவதை தோழியிடம் உரைப்பது போல தலைவனுக்கு உணர்த்துகின்றாள்’. திருமணம் என்ற இலக்கு தலைவியின் ஆளுந்திறனால் முடிக்கப்படுகின்றது.

## மாறுபடும் இயல்பு

தன் இலக்கினை அடைய மாறுபட்ட கோணங்களில் தன் நடத்தையை செயல்படுத்துவதே ‘மாறுபடும் இயல்பு’ ஆகும். மாறுபடும் இயல்பினை உளநூலார்,

“ஊக்கியால் தூண்டப்பட்ட ஒருவன் தன் குறிக்கோளை அடைவதற்கு ஒரே மாதிரியான நடத்தையில் ஈடுபடாமல் பல்வேறு செயல்களின் மூலம் குறிக்கோளை அடைய முயல்கிறான்.”
(தா.ஏ.சண்முகம், மு.நூ ப.227 )

என்று குறிப்பிடுகின்றனர். தன் களவு வாழ்க்கையினை கற்பு வாழ்க்கையாக மாற்ற விரும்பிய தலைவி இத்தகைய மாறுபடும் இயல்பினை கையாளுகின்றாள்.

தலைவி செவிலியிடம் அறத்தொடு நிற்கவும், தலைவனிடம் தூதுக்கு செல்லவும் தோழியைத் தூண்டுகின்றாள்.

சிறைப்புறக் கூற்றின் வாயிலாக தலைவனைத் தூண்டுகின்றாள். தன் ஆற்றலால் பிற மாந்தர்களை நெறிப்படுத்துகின்ற ஆளுமை உடையவளாகத் தலைவி திகழ்கின்றாள். இவை மட்டுமின்றி பிற செயல்பாடுகளையும் தலைவி கையாளுகின்றாள் என்றே குறிப்பிடலாம்.

தன் இலக்கினை அடைய விலங்குகளின் அன்பை தலைவனுக்குச் சுட்டுதல், தலைவன் நாட்டைச் சார்ந்த மலை மற்றும் ஆற்றினைக் கண்டு பேசுதல், இயற்கையிடம் பேசுதல் மற்றும் தன் உடல் உறுப்பினை முன்னிறுத்தி மொழிதல் போன்றவை தலைவியின் மாறுபட்ட நடத்தையினைக் குறிப்பிடுவதாகும்.

தலைவியின் இத்தகைய செயல்பாடுகள் உளவியலாளர் குறிப்பிட்ட 'மாறுபட்ட இயல்பினைச்' சுட்டுவதாக அமைகின்றது. தலைவனின் பிரிவினை ஆற்றாத தலைவி அவன் நாட்டைச் சார்ந்த மலையினின்று ஓடிவரும் ஆற்றினை நோக்கி பேசுகின்றாள்.

"மென்தோள் நெகிழச் சாஅய், கொன்றை,
ஊழுறு மலரின் பாழ்பட முற்றிய
பசலை மேனி நோக்கி, நுதல்பசந்து,
இன்னேம் ஆகிய எம்இவண் அருளான்,
நும்மோன் செய்த கொடுமைக்கு, இம்மென்று,
அலமரல் மழைக்கண் தெண்பனி மல்க,
நன்றுபுற மாறி அகறல், யாழநின்
குன்றுகெழு நாடற்கு என் எனப்படுமோ?
கரைபொரு நீத்தம்! உரை' எனக்கழறி,"
(அகம்.398:3-11)

'ஆற்றினை நோக்கி தலைவனால் தான் அடைந்த துன்பத்தினை குறிஞ்சி நிலத்தலைவி எடுத்துரைக்கின்றாள். மேலும் அறத்திற்கு புறமாதல் உன்நாட்டைச் சார்ந்த தலைவனுக்கு பொருந்துமோ?' என்று குறிப்பிட்டு தலைவனின் மனநிலையை தன் மாறுபட்ட நடத்தையினால் மாற்ற முயல்கின்றாள்.

## காப்புணர்ச்சி

வினையின் பொருட்டு பிரிந்து சென்ற தலைவன் காலம் தாழ்த்தியும், விரைவில் வருவான் என்று நம்பிக்கைக் கொள்கின்றாள். தலைவன் வரும் வரை தன்னால் ஆற்றியிருக்க முடியும் என்று தன்னம்பிக்கை கொள்கின்ற முறையே அவளது சார்பற்ற காப்புணர்வுத் திறனுக்கு தக்க சான்றாகின்றன. தலைவனின் நட்பு மீது கொண்ட நம்பிக்கையினால் தலைவி அடைகின்ற காப்புணர்வுத் திறனை குறு.170 வது பாடல் உணர்த்துகின்றது.

"பலரும் கூறுக, அஃது அறியாதோரே
அருவி தந்த நாட்குரல் எருவை
கயம்நாடு யானை கவளம் மாந்தும்
மலைகெழு நாடன் கேண்மை
தலைபோகாமை, நற்கு அறிந்தனென், யானே"
(குறு.170)

மலைநாட்டுத் தலைவனின் நட்பானது தெய்வத்தால் கிட்டியதாகும். ஆதலால் அழியாது என்றும் தொடரும் என்று நம்பிக்கை கொள்கின்றாள். தலைவி தன் மீதும், தலைவன் மீதும் கொண்டுள்ள தன்னம்பிக்கை உணர்வே அவளது சார்பற்ற காப்புணர்ச்சியாக பிரதிபலிக்கின்றது.

## துணிவு

தலைவியின் ஆளுமைப் பண்புகளுள் ஒன்றே ‘துணிவு’ ஆகும். தலைவனைப் பிரிந்த ஆற்றாமையின் காரணமாக தலைவியின் துணிவாற்றல் வெளிப்படுகின்றது. துணிவு என்ற சொல்லிற்கு வேமன் தமிழ் - தமிழ் அகராதி,

“திடன், துண்டு, நம்பிக்கை, நோக்கம், வெட்டு”
(கொற்றவை சகி.ஜெயஸ்ரீ, வேமன் தமிழ் -தமிழ் அகராதி, ப.666 )

என்று பொருள் கொள்கின்றது. வினையின் பொருட்டு பிரிந்து சென்ற தலைவனின் பிரிவைத் தாங்காத பாலை நிலத்தலைவி தன் மனநிலையை துணிவாகத் தோழியிடம் எடுத்துரைக்கின்றாள்.

“செழுமனை மறக்கும் செவ்வி வேனில்
தானே வந்தன்று ஆயின், ஆனாது
இலங்குவளை நெகிழ்ந்த எவ்வம் காட்டிப்
புலந்தனம் வருகம், சென்மோ – தோழி!
‘யாமே எமியம் ஆக நீயே
போன்நயந்து அருளிலை யாகி,
இன்னை ஆகுதல் ஒத்தன்றால் எனவே” (அகம்.355:8-14)

இனிய இளவேனிற் காலம் வந்தும் தலைவன் வரவில்லை. ஆதலால் வளை நெகிழும் தன் துன்பநிலையை எடுத்துரைத்து, ‘தன் மீது அருள் இல்லாது சென்றவிடத்துத் தங்கி இருந்தாய். இவ்வாறு இருத்தல் நின் தகுதிக்கு தகுமோ?’ என்று தலைவன் இருக்கும் இடம் சென்று ஊடி வருவோம் என்று தன் ஆற்றாமை மீதூர உரைக்கின்றாள். இப்பாடல் தலைவியின் ஆற்றாமையை உரைப்பது போல் இருப்பினும் அவளது துணிவினை புலப்படுத்துவதாக அமைகின்றது. மேலும் இதேப்போல் தலைவனை நாடிச் செல்லும் நோக்குடன் பாலை நிலத்தலைவி திகழ்வதை அகம் 309 வது பாடல் குறிப்பிடுகின்றது.

வினைக்காக தலைவன் செல்லும் போது தலைவியை உடன் அழைத்துச் செல்லுதல் மரபன்று. மேலும் தலைவனைத் தேடியும் தலைவி செல்வதில்லை. இத்தகைய மரபினை தனது துணிவான ஆளுமைத் திறனால் கட்டுடைப்பவளாக அக இலக்கியத் தலைவி திகழ்கின்றாள்.

## இயல்பூக்கங்கள்

இயல்பூக்கக் கொள்கையை மிக்டுகல் எனும் அறிஞர் விவரிக்கின்றார். இக்கொள்கை மனிதனின் நடத்தைக்கான காரணத்தை உணர்த்துவதாக அமைகின்றது. குழந்தை பிறக்கும் போதே இயல்பூக்கமானது உருவாகி விடுகின்றது. இயல்பூக்கம் பற்றி பெ.வெங்கட்டம்மாள் என்பவர்,

“ஒவ்வொரு இயல்பூக்கமும் ஒரு குறிப்பிட்ட மன வெழுச்சியை
உண்டாக்குகிறது.
(பெ.வெங்கட்டம்மாள், பொது உளவியல்,ப.154)

என்று தன் நூலில் குறிப்பிடுகின்றார். மனிதனிடம் இயல்பூக்கம் உருவாகின்ற மனவெழுச்சியை இரண்டு விதமாக குறிப்பிடப்படுகின்றன.

## வாழத் தூண்டும் இயல்பூக்கம்

இன்ப நாட்டத்தை மையமாகக் கொண்டதே வாழத்தூண்டும் இயல்பூக்கம் ஆகும். இவ்வியல்பூக்கத்தால் மனிதனிடம் இன்பம் மற்றும் ஆசைகள் தோன்றுகின்றன. இத்தகைய இன்ப ஆசைகள் வயிற்றுப்பசி, பணப்பசி, பாலியல் தாக்கம் ஆகியவற்றின் வடிகாலாக தோன்றுகின்றன. இவற்றை நிறைவு செய்ய மனிதன் விரும்புகின்ற உணர்வே வாழத்தூண்டும் இயல் பூக்கமாக உருமாறுகின்றது. அகஇலக்கியத் தலைவியிடம் இத்தகைய மனஉணர்வானது காணப்படுகின்றது.

தலைவனுடன் வாழ விரும்புதல், செலவின் போது தன்னையும் அழைத்துச் செல்ல வேண்டுதல், பிரிவின் போது தலைவன் விரைவில் வருவான் என்று ஆற்றியிருத்தல், தலைவனுடன் தான் அடைந்த இன்பத்தை நினைத்துப் பார்த்தல் மற்றும் வரைவிற்காகத் தலைவனையும், தோழியையும் தூண்டுகின்ற முறைகளிலும் அகஇலக்கியத் தலைவியின் வாழத் தூண்டும் இயல்பூக்கமானது (டுகைந ஐளெவinஉவ) புலப்படுகின்றது

தலைவன் தன்னை பிரிந்து செல்லக் கூடாது என்னும் உணர்வால் தூண்டப்பட்ட தலைவியின் வாழத் தூண்டும் இயல்பூக்கமானது பாலைக்கலி 6 மற்றும் 20 போன்ற பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

> “அனை அரும் வெம்மைய காடு? எனக் கூறுவீர்!
> கனை கழிகல்லாத கல் பிறங்கு ஆர் இடை,
> பணை எருத்து எழில் ஏற்றின் பின்னர்ப்
> பிணையும் காணிரோ? பிரியுமோ, அவை யே?”
> (கலி.20:21-25)

பிரிவினை உணர்த்திய தலைவனிடத்து தன்னையும் உடன் அழைத்துச் செல்லுமாறு தலைவி குறிப்பிடுகின்றாள். கலைமானைத் தொடர்ந்து செல்லும் பிணைமானைச் சுட்டிக்காட்டி தன்னையும் அழைத்துச் செல் என்று குறிப்பிடும் பாலைநிலத் தலைவியின் கூற்றானது அவளது வாழத்தூண்டும் இயல்பூக்கத்தை உணர்த்துகின்றது. தன் இயல்பூக்கத்தால் தலைவனின் உள்ளத்தையும் தூண்டுகின்றாள்.

தலைவனுடன் வாழ வேண்டும் என்ற வேட்கையினைக் கொண்டவளாக மருதநிலத்தலைவி திகழ்கின்றாள். அவளது வேட்கையுணர்வு தலைவனிடத்து நம்பிக்கையை உண்டாக்குகின்றது. மருதநிலத் தலைவியின் வாழத் தூண்டும் இயல்பூக்கத்தை,

> “ஆம்பிற் பூவின் சாம்பல் அன்ன
> கூம்பிய சிறகர் மனைஉறை குரீஇ
> முன்றில் உணங்கல் மாந்தி, மன்றத்து
> எருவின் நுண்தாது குடைவன ஆடி,
> இல்இறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்
> புன்கண் மாலையும், புலம்பும்
> இன்றுகொல் - தோழி! அவர் சென்ற நாட்டே!” (குறு.46)

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. தன்னை வாட்டும் மாலைப்பொழுது தலைவன் சென்ற நாட்டிலும், தன்னைப் பிரிந்த

துயரும் தலைவனுக்கும் உள்ளது. ஆதலால் தலைவன் விரைவில் வருவார் என்று நம்பிக்கை கொள்கின்றாள்.

இவ்விரு பாடல்களும் தான் தலைவனுடன் இன்பமாக வாழ வேண்டும் என்ற தலைவியின் உணர்வினை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. இத்தகைய இன்ப உணர்வே உளவியலாளர் குறிப்பிடுகின்ற வாழத்தூண்டும் இயல்பூக்கம் ஆகும்.

## இறப்பு இயல்பூக்கம்

‘சாகத் துணிந்தவனுக்கு கடல்நீரும் கால்மட்டம்’ என்பர். மனம் ஒன்றை நினைத்து அவை நிறைவேறாத பொழுது உயிர் நீக்கும் எண்ணம் ஏற்படுகின்றது. இத்தகைய மனவெழுச்சியே இறப்பு இயல்பூக்கம் எனப்படும். இறப்பு இயல்பூக்கத்தை,

> “விதியின் வலிமையை ஏற்றுத் தவிர்க்க இயலாத விளைவான சாவையும் எதிர்கொள்ளும் துணிச்சலே இறப்பு இயல்பூக்கம்.”
> (இரா.காஞ்சனா, இலக்கியமும் உளவியலும்,ப.34 )

என்று குறிப்பிடுகின்றன. இக்கூற்றின் அடிப்படையில்; இறப்பு இயல்பூக்கமானது துணிச்சலான ஒரு செயலாகவே கருதப்படுகின்றன.

அகஇலக்கியத் தலைவி தன் மனஆற்றாமையை இறப்பு இயல்பூக்கம் வழியாக புலப்படுத்துகின்றாள். ஆற்றாமையை புலப்படுத்துவதன் வாயிலாக தன் காரியத்தை சாதித்துக் கொள்வதற்கும் இவ்வியல் பூக்கத்தைக் கையாளுகின்றாள். தலைவி பிரிவுத்துயரை தாங்காது தோழியிடம் தன் மனநிலையை உரைப்பதாக குறு.103 மற்றும் அகம்.157 போன்ற பாடல்கள் அமைகின்றன.

> “கடும்புனல் தொடுத்த நடுங்கு அளுர்அள்ளல்,
> கவிர் இதழ் அன்ன தூவிச் செவ்வாய்,
> இரைதேர் நாரைக்கு எவ்வம் ஆகத்
> தூஉம் துவலைத் துயர்கூர் வாடையும்
> வாரார் போல்வர், நம் காதலர்,
> வாழேன் போல்வல் - தோழி! யானே” (குறு.103)

தலைவன் வருவதாக உரைத்த கார்பருவம் கடந்து கூதிர்ப்பருவம் வருகையுற்ற பின்பும் தலைவன் வரவில்லை. வாடை தனக்கு துன்பத்தை உண்டாக்குகின்றது. பிரிவுக் காலம் நீட்டித்தமையால் தான் உயிர் வாழ மாட்டேன் என்று நெய்தல்நிலத் தலைவி குறிப்பிடுகின்றாள். இஃது தலைவியின் ஆற்றாமையால் நிகழ்ந்த கூற்றாக இருப்பினும் தோழியின் மனதை செயற்படுத்தக் கூடிய ஆற்றலை அளிப்பதாகும்.

சிறைப்புறமாக உள்ள தலைவனின் உள்ளத்தை அசைக்கும் வண்ணம் தலைவி சுட்டுகின்ற இறப்பு இயல்பூக்கத்தை,

> “இலங்கு வளை நெகிழச் சாஅய், யானே,
> உளனே வாழி – தோழி! – சாரல்
> தழைஅணி அல்குல் மகளிருள்ளும்
> விழவு மேம்பட்ட என்நலனே, பழவிறல்
> பறை வலம் தப்பிய பைதல் நாரை
> திரைதோய் வாங்குசினை இருக்கும்
> தண்ணம் துறைவனொடு கண்மாறின்றே”(குறு.125)

என்ற பாடலடியால் அறியலாம். வரைவினை தலைவன் நீட்டிப்பதாயின் தான் இறந்துபடுவேன் என்பதை நுட்பமாக தோழியிடம் உரைக்கின்றாள். தலைவியின் இறப்பு இயல்பூக்கம் சிறைப்புறமாக உள்ள தலைவனின் மனதை ஆட்கொள்கின்றது. வரைவு பற்றி தலைவன் சிந்திப்பதற்கு இறப்பு இயல்பூக்கத்தை ஏதுவாகக் கையாளுகின்றாள்.

இவ்விரு பாடல்களும் நெய்தல் நிலத்தலைவியின் இறப்பு இயல்பூக்கத்தைச் சுட்டுகின்றது. இறப்பு இயல்பூக்கத்தால் தலைவி தன் ஆற்றாமையை புலப்படுத்துவதோடு தோழி மற்றும் தலைவனை சிந்திக்கவும் தூண்டுகின்றாள்.

## ஒத்துழைக்கும் ஆற்றல்

ஒரு காரியத்தில் நாம் வெற்றி பெற வேண்டுமெனில் பிறருடன் ஒத்துழைத்துச் செல்லுதல் வேண்டும். ஒத்துழைத்துச் செல்லும் ஆற்றல் பிறருடன் சுமூகமான உறவினை மேற்கொள்வதற்கு ஏதுவாகின்றது. பலர் கூடி மனமொத்து வாழ்கின்ற திறனை ஒத்துழைக்கும் ஆற்றல் அளிக்கின்றது.

தலைவி தன்னைச் சூழ்ந்துள்ள மாந்தர்களின் மனநிலைக்கு ஏற்ப ஒத்துழைக்கின்ற திறனுடையவளாவாள். அன்னையின் இற்செறிப்புக்கு ஒத்துப்போதல், தோழி மற்றும் தலைவனுக்கு வாயில் ஏற்கும் நிலை, தலைவனிடம் ஊடலைத் தீர்க்கின்ற நிலை போன்ற சூழல்களில் எல்லாம் தலைவி ஒத்துழைத்துச் செல்கின்றாள். தலைவியின் ஒத்துழைக்கும் ஆற்றலினை கெம்ப் குறிப்பிடும் ஆளுமைத்திறனான, ‘தம் சூழ்நிலைக்கேற்ப ஏற்படுத்திக் கொண்ட பொருத்தப் பாட்டுடன்’ ஒப்பிடலாம். இவ்வாறே தலைவி தன் சூழலுக்கு ஏற்ப ஏதேனும் ஒரு நிலையினை கையாளுபவளாகத் திகழ்கின்றாள். பரத்தமை ஒழுக்கத்தை மேற்கொண்ட தலைவனிடம் ஊடலைத் தீர்த்து ஒத்துழைக்கும் திறனுடையவளாக மருதநிலத் தலைவி திகழ்கின்றாள்.

> “யாமும் காதலம், அவற்கு’ எனச் சாஅய்
> சிறுபுறம் கவையினனாக, உறுபெயல்
> தன் துளிக்கு ஏற்ற பல உழுசெஞ்செய்
> மன் போல் நெகிழ்ந்து, அவற் கலுழ்ந்தே
> நெஞ்சு அறைபோகிய அறிவினேற்கே?” (கலி.26:22-26)

பரத்தையிடமிருந்து பிரிந்து வந்த தலைவனிடம் ஊடல் கொண்டு புதல்வனை நோக்கி தலைவி நகர்ந்தாள். அச்சமயம் தலைவன் புதல்வனின் மீது தானும் அன்புடையோரே என்று புதல்வனைத் தழுவினான். இச்சொல்லினைக் கேட்ட தலைவியின் உள்ளம் செம்மையான வயலின் மண்ணைப் போல தன் நெஞ்சமானது நெகிழ்ந்தது என்று ஊடலினைத் தீர்த்துக் கொள்கின்றாள். இங்ஙனம் தலைவி ஒத்துழைத்துச் செல்கின்ற முறையினால் தன் இல்லற வாழ்வில் சுமூகமான உறவினை மேம்படுத்துபவளாகத் திகழ்கின்ற முறையினை அறிய முடிகின்றது.

## கொள்கை வழி நிற்கும் திறன்

‘கருமமே கண்ணாய் இரு’ என்பர். எச்சூழலிலும் தனது கொள்கைகளிலிருந்து விலகாத தன்மையினைப் பெற்றிருத்தலே சிறந்த ஆளுமையாகும். ஆளுமைவாதி மனம் தளராது தான் அடைய வேண்டிய இலக்கை மட்டுமே சிந்திப்பவராக செயல்படுவர். அகஇலக்கியத் தலைவி தம் கொள்கையை எச்சூழலிலும் மாற்றிக் கொள்ளாதவளே ஆவாள். இற்செறித்தல் மற்றும் நொதுமலர் வரைவு போன்ற கடுமையான சூழலிலும் தனது இலக்கினை மாற்றி அமைத்துக் கொள்ளாதவளே ஆவாள். தலைவியின் உடல்வேறுபாடு கண்டு அன்னையால் இற்செறிக்கப்பட்ட தலைவி சற்றும் தன் கொள்கையில் விலகாது திகழ்கின்ற முறையினை குறு.401 வது பாடல் குறிப்பிடுகின்றது.

“அடும்பின் ஆய்மலர் விரைஇ, நெய்தல்
நெடுந்தொடை வேய்ந்த நீர்வார் கூந்தல்
ஓரை மகளிர் அஞ்சி, ஈர் ஞெண்டு
கடலில்பிரிக்கும் துறைவனொடு, ஒருநாள்,
நக்கு விளையாடலும் கடிந்தன்று,
ஐதே கம்ம, மெய்தோய் நட்பே!” (குறு.401)

தலைவியின் களவினை அறிந்த ஊர்மக்கள் அலரினைத் தூற்றினர். அலரினால் அன்னை அவளை இற்செறித்தனர். அன்னை தன்னை இற்செறித்ததால் தலைவனைக் காண முடியாது வருந்தினாள். தலைவியின் இத்தகைய மனஉணர்வு அவளது உள்ளத்தைப் புலப்படுத்துகின்றது. காப்பு மிகுதியோ அல்லது ஊர் மக்களின் அலரோ தலைவியின் உள்ளத்தை சற்றும் அசைக்கவில்லை என்பதனையும் இப்பாடல் உணர்த்துகின்றது.

## தகவல் பரிமாற்றும் திறன்

தன் கருத்தை பிறர் புரிந்து கொள்ளுமாறு உணர்த்துவதே ‘தகவல் பரிமாற்றும் திறன்’ ஆகும். இவ்வாற்றலை உடையோர் தகவலை தெரிவிப்பதில் ஒரு நேர்த்தியும், புரிதலும் உடையவராக இருப்பர். தகவல் பரிமாற்றத்தின் நோக்கமானது,

“தொடர்பு கொள்வதின் நோக்கம் நம் மனதிலுள்ள எண்ணத்தையோ,
வேண்டுகோளையோ, பரிந்துரையையோ, கட்டளையையோ
உரியவருக்குத் தெரிவித்து அதனை நிறைவேற்றிக் கொள்ளல்.”17
(எஸ்.சுந்தர சீனிவாசன்,ஆளுமை மேம்பாடு,ப.82)

என்ற முறைகளில் குறிப்பிடப்படுகின்றது. அகஇலக்கியத் தலைவி சூழலுக்கு ஏற்ப நேர்த்தியாக தகவலை பரிமாற்றம் செய்யக் கூடிய ஆற்றலினை பெற்றுள்ளாள்.

பகல் மற்றும் இரவுக்குறியினை மறுத்து வரைவுகடாதலின் போதும் அன்னை இற்செறித்த போதும் சிறைப்புறமாக தன் கருத்தை தலைவனுக்கு எடுத்துரைக்கும் போதும் பரத்தைப் பிரிவின் போதும் வாயில் நேரும் தலைவனுக்கு வாயிலினை மறுக்கின்ற போதும் அகஇலக்கியத் தலைவி நுட்பமாகத் தன் நிலையை தலைவனுக்கு

உணர்த்துகின்றாள். தலைவியின் இத்தகைய ஆற்றல் அவளது தகவல் பரிமாற்றும் திறனை புலப்படுத்துவதற்கு சான்றாகின்றது.

இற்செறிப்பின் போது தன் மனநிலையை தலைவனுக்கு உணர்த்தும் குறிஞ்சி நிலத்தலைவியின் ஆற்றலை அகம்.52 வது பாடல் பதிவு செய்துள்ளது.

> "…. அன்னைக்கு
> அறிவிப்பேம் கொல்? அறியலெம்கொல்?' என
> இருபாற் பட்ட சூழ்ச்சி ஒருபால்
> சேர்ந்தன்று – வாழி, தோழி! – யாக்கை
> இன்உயிர் கழிவது ஆயினும், நின்மகள்
> ஆய்மலர் உண்கண் பசலை
> காம நோய்' எனச் செப்பாதீமே…" (அகம்.52)

என் உடம்பில் தோன்றிய பசலைக்கு தலைவன் மீது கொண்ட காமமே காரணம் என்ற உண்மையை உரைக்காதே என்று சிறைப்புறம் நிற்கும் தலைவன் அறியுமாறு குறிப்பிடுகின்றாள். தலைவியின் உடல் துன்பத்திற்கு தானே காரணம் என்பதை தலைவன் உளமறியும் வண்ணம் குறிஞ்சிநிலத்தலைவி நுட்பமாக உரைக்கின்றாள். தலைவியின் இவ்வாற்றல் அவளது தகவல் பரிமாற்றும் திறனை உணர்த்துகின்றது.

## தன் உணர்வை புலப்படுத்தும் ஆற்றல்

ஆளுமைத் திறனில் மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்று 'தன் உணர்வை பிறருக்குப் புலப்படுத்துவதாகும்;'. தன் மனஉணர்வை பிறர் உணரும் வண்ணம் நேரடியாகவோ (அ) மறைமுகமாகவோ புலப்படுத்துகின்ற ஆற்றலே ஆளுமைப்பண்பின் சிறப்பாகும். அக இலக்கியத் தலைவி தன் மன உணர்வை மிகச்சிறப்பாக ஏனைய மாந்தர்களுக்கு உணர்த்துகின்றாள்.

நெஞ்சோடு கிளத்தல், பருவம் கண்டு உரைத்தல், இயற்பட மொழிதல், வாயில் மறுத்தல், ஊடல் கொள்ளல் மற்றும் ஊடலினைத் தீர்த்தல் என்ற முறைகளில் தலைவி தன் மன உணர்வை புலப்படுத்துகின்றாள். தலைவியின் ஆற்றாமை மொழிகள் அவளது ஆழ்ந்த மன உணர்வினை புலப்படுத்துகின்றது.

தலைவனுக்கு வாயில் மறுக்கின்ற மருதநிலத் தலைவி தன் மனநிலையை தோழிக்கு உணர்த்துவதாக கலி.67 வது பாடல் அமைகின்றது.

> "நலத்தகை, எழில் உண்கண் நல்லார்தம் கோதையால்
> அலைத்தபுன் வடுக்காட்டி, அன்பின்றிவரின் - எல்லா!
> புலப்பேன்யான் என்பேன்மன்? அந்நிலையை அவற்காணின்
> கலப்பேன் என்னும்இன் கையறு நெஞ்சே
> கோடுஎழில் அகல்அல்குல் கொடியன்னார் முலைமூழ்கிப்
> பாடுஅழி சாந்தினன், பண்பின்றி வரின் - எல்லா!
> ஊடுவேன் என்பேன்மன்? அந்நிலையே, அவற்காணின்
> கடுவேன்என்னும்,இக்கொள்கைஇல் நெஞ்சே"(கலி.67:6-13)

மருதநிலத் தலைவி தலைவனின் பரத்தமைச் செயலால் கோபித்து ஊடல் கொள்ள வேண்டும் என்று எண்ணுகின்றாள். ஆனால் தலைவனைப் பார்த்தவுடன் தனது உள்ளம் செய்வதறியாது அவன் மீதே ஆசை கொள்கின்றது என்று தனது கலங்கிய மனநிலையை புலப்படுத்துகின்றாள். குறு.41 வது பாடலில் தலைவி தன் மனஉணர்வை புலப்படுத்துகின்ற ஆற்றலை,

"காதலர் உழையர் ஆகப் பெரிது உவந்து
சாறுகொள் ஊரின் புகல்வேன், மன்ற
அத்தம் நண்ணிய அம்குடிச் சீறுர்ர்
மக்கள் போகிய அணில் ஆடு முன்றிற்
புலப்பில் போலப் புல்லென்று
அலப்பென் தோழி! அவர் அகன்ற ஞான்றே" (குறு.41)

என்ற பாடலடியால் அறியலாம். தலைவனின் மீது கொண்டுள்ள அன்பினை புலப்படுத்தும் வண்ணம் தன் மன உணர்வை பாலைநிலத் தலைவி நுட்பமாக வெளிப் படுத்துகின்றாள். தலைவன் அருகில் உள்ள போது விழாக் கொண்ட ஊரினைப் போல மகிழ்ந்தும், பிரிவின் போது அணில் விளையாடுகின்ற முற்றத்தைப் போல பொலிவிழந்து வருந்துகின்ற இயல்பினை உடையவளாகத் தலைவி திகழ்கின்றாள். இங்ஙனம் தலைவி தனது மாறுபட்ட மனஉணர்வினை புலப்படுத்துகின்றாள்.

## முடிவுரை

எட்டுத்தொகை காட்டும் சங்ககாலத் தலைவி அன்பில் மென்மையானவளாகவும், கடமையிலும் இல்லற நிர்வாகத்திலும் திறமையானவளாகவும்இ தன் உரிமைகளிலும் சுயமரியாதையிலும் ஆளுமை மிக்க வீரப் பெண்ணாகவும் திகழ்ந்துள்ளாள். எட்டுத்தொகைப் பாடல்களில் தலைவிக்கு குரலும் கருத்தும் முடிவெடுக்கும் ஆற்றலும் வழங்கப்பட்டுள்ளன. அவள் காதலிக்கிறாள், எதிர்பார்க்கிறாள், மறுக்கிறாள், ஊடுகிறாள், அறிவுறுத்துகிறாள், தன் மனநிலையை வெளிப்படுத்துகிறாள். எனவே சங்ககாலத் தலைவி வெறும் காதல் பாத்திரமாக அல்லாமல் சிந்திக்கும், உணரும், முடிவெடுக்கும் தனித்துவமான ஆளுமை கொண்ட பெண்ணாக விளங்குகிறாள். எட்டுத்தொகை காட்டும் சங்ககாலத் தலைவி அன்பு, கற்பு, அறிவு, நுண்ணுணர்வு, தன்னம்பிக்கை, துணிவு, பொறுமை, பொறுப்புணர்வு, சமூகப் பண்புணர்வு ஆகிய பல்வேறு பண்புகளின் ஒருங்கிணைந்த வடிவமாகத் திகழ்கிறாள் இதனால் சங்ககாலப் பெண் உணர்வும் அறிவும் தன்னுணர்வும் கொண்ட முழுமையான ஆளுமை உடையவளாக இருந்ததை எட்டுத்தொகை வழி அறியலாம்.

## துணைநூற் பட்டியல் (References)

1. இரா.காஞ்சனா, ஆளுமை வளர்ச்சியும் ஆளுமைக் கோட்பாடுகளும் – விஷ்ணுப்பிரியா பதிப்பகம் -எஸ்.பி.ஜி.பிரிண்டர்ஸ் - மதுரை – 19. முதற்பதிப்பு – ஜனவரி 2015,
2. சண்முகம். தா.ஏ உளவியல் இரண்டாம் பாகம், தி.தெ.சை.சி.நூ கழக வெளியீடு-திருநெல்வேலி, 1980.

3. கொற்றவை சகி.ஜெயஸ்ரீ, வேமன் தமிழ் -தமிழ் அகராதி - ஹரிஹரன் பதிப்பகம்-வைகை பிரிண்டர்ஸ் ரூ பப்ளிசர்ஸ்-மதுரை=முதற்பதிப்பு – 2004, நவம்பர்.
4. பெ.வெங்கட்டம்மாள், பொது உளவியல் - ஹரிஹரன் பதிப்பகம்-வைகை பிரிண்டர்ஸ் ரூ பப்ளிசர்ஸ்-மதுரை=முதற்பதிப்பு – 2004, நவம்பர்.
5. இரா.காஞ்சனா, இலக்கியமும் உளவியலும் - விஷ்ணுப்பிரியா பதிப்பகம் - எஸ்.பி.ஜி.பிரிண்டர்ஸ் - மதுரை – 19. முதற்பதிப்பு – ஜனவரி 2015,
6. எஸ்.சுந்தர சீனிவாசன்,ஆளுமை மேம்பாடு- தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்-41-டீ, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், முதல் பதிப்பு, சென்னை, 2008.
7. செயபால்.இரா (உ.ஆ) -அகநானூறு-(முதல் மற்றும் இரண்டாம் தொகுதி) (மூலமும் உரையும்) -நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,-41– பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,அம்பத்தூர்,முதல் பதிப்பு, ஏப்ரல், 2004.சென்னை – 600 098.
8. நாகராசன்.வி (உ.ஆ) -குறுந்தொகை-(முதல் மற்றும் இரண்டாம் தொகுதி) (மூலமும் உரையும்)-நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41 –பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர்-முதல் பதிப்பு, ஏப்ரல், 2004. சென்னை – 600 098.
9. விசுவநாதன்.அ (உ.ஆ) -கலித்தொகை-(முதல் மற்றும் இரண்டாம் தொகுதி) (மூலமும் உரையும்)-நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41 –பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்-அம்பத்தூர், முதல் பதிப்பு-ஏப்ரல், 2004. சென்னை – 600 098.

**ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று (Declaration of Conflicting Interests)**

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.

**ARTICLE 09 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 64–72

# தமிழ் வளர்ச்சியில் பல்துறை ஆய்வுகள் (சங்க காலம் முதல் தற்காலம் வரை)

## Multidisciplinary Studies in the Development of Tamil: (From the Sangam Era to the Contemporary Age

**முனைவர். இரா. அனுஷா**
M.A, M.PHIL, B.ED, P.H.D.
துணை முதல்வர், ஏவிஎஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
சேலம் – 636106 செல்: 97896 60355

### Abstract
This research paper provides a critical and comprehensive evaluation of the multidisciplinary evolution of the Tamil language across distinct historical periods—from the ancient Sangam age to the contemporary era of Artificial Intelligence. Tamil's classification as a classical language relies not only on its poetic heritage, but on its capacity to function as a precise medium for empirical sciences, astronomy, ecology, architecture, jurisprudence, medicine, mathematics, and computational linguistics. By embedding explicit textual citations, verse numbers, and line references from classical works such as Tolkappiyam, Purananuru, Pattinappalai, Thirukkural, Silappathikaram, and Thirumandhiram, this paper demonstrates the empirical foundation of Tamil scholarship. Furthermore, it addresses contemporary technological challenges and outlines strategies for integrating Tamil into modern machine-learning models and higher education.

**Keywords:** Tamil Development, Multidisciplinary Studies, Sangam Literature, Textual Citations, Medical Tamil, Computational Linguistics, Artificial Intelligence, Technical Terminology.

### ஆய்வுச் சுருக்கம்
இவ்வாய்வுக் கட்டுரை, பண்டைய சங்க காலம் தொட்டு இக்காலச் செயற்கை நுண்ணறிவு யுகம் வரையிலான தமிழின் பல்துறை வளர்ச்சியைச் சான்றுகளுடன் விரிவாக ஆராய்கிறது. செம்மொழியான தமிழ், வெறும் கற்பனை சார்ந்த கவிதை மொழியாக மட்டும் இல்லாமல் புவியியல், வானியல், கடல்சார் பொறியியல், சட்டவியல், மருத்துவம், கணிதம், கட்டடக்கலை மற்றும் கணினி மொழியியல் எனப் அனைத்துத் துறைகளிலும் பயன்பாட்டு மொழியாக இயங்கியுள்ளது. தொல்காப்பியம், புறநானூறு, பட்டினப்பாலை, திருக்குறள், சிலப்பதிகாரம், திருமந்திரம் உள்ளிட்ட செவ்விலக்கியங்களிலிருந்து பெறப்பட்ட பாடல் வரிகள், வரி எண்கள் மற்றும் அதிகாரக் குறிப்புகளுடன் தமிழின் பல்துறை அறிவாண்மை நிறுவப்படுகிறது. அத்துடன், கணினி யுகத்தில் தமிழ் சந்திக்கும் சவால்களையும், செயற்கை நுண்ணறிவுத் தளங்களில் தமிழை மேலும் வலுப்படுத்துவதற்கான எதிர்காலத் திட்டங்களையும் இக்கட்டுரை விரிவாக முன்வைக்கிறது.

**திறவுச் சொற்கள்:** தமிழ் வளர்ச்சி, பல்துறை ஆய்வுகள், சங்க இலக்கியம், இலக்கியச் சான்றுகள், மருத்துவத் தமிழ், கணினி மொழியியல், செயற்கை நுண்ணறிவு, கலைச்சொல்லாக்கம்.

## 1. முன்னுரை

"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி" என்று போற்றப்படும் தமிழ் மொழி, மூவாயிரத்திற்கும் மேற்பட்ட நீண்ட வரலாற்றுத் தொடர்ச்சி கொண்டது. உலகின் தொன்மையான

மொழிகள் பல இன்று எழுத்துவழக்கிலோ அல்லது பேச்சுவழக்கிலோ இன்றி வழக்கழிந்து போன நிலையில், தமிழ் மொழி இன்றளவும் துடிப்பான ஆற்றலுடன் நிலைத்து நிற்பதற்கு முதன்மைக் காரணம் அதன் நெகிழ்வுத்தன்மையும் பல்துறை பரிணாமமுமே ஆகும்.

ஒரு மொழி வெறும் கவிதை மற்றும் இலக்கிய உணர்வுகளுக்கு மட்டுமே பயன்படுமானால், அது சமூகத்தின் அறிவுசார் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க முடியாமல் தேங்கிவிடும். தமிழ் மொழியானது தனது தொடக்கக் காலத்திலிருந்தே இயற்கையியல், வானியல், கட்டடக்கலை, மருத்துவம், வணிகவியல் மற்றும் நீதியியல் என அனைத்து அறிவுத் துறைகளிலும் பயன்பாட்டு மொழியாக இயங்கியுள்ளது.

21-ஆம் நூற்றாண்டில் தரவு அறிவியல் (Data Science), இயற்கை மொழி ஆய்வு (Natural Language Processing), மற்றும் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) வரை தமிழ் அடைந்துள்ள வளர்ச்சி வியக்கத்தக்கது. இக்கட்டுரை, சங்க காலம் முதல் இக்காலம் வரை தமிழ் மொழியில் மேற்கொள்ளப்பட்ட பல்துறை ஆய்வுகளைத் தக்க இலக்கியச் சான்றுகளுடன் பகுப்பாய்வு செய்கிறது.

## 2. சங்க காலம்: இயற்கையியல் மற்றும் அறிவியல் ஆய்வுகள்

சங்க இலக்கியங்கள் வெறும் கற்பனைக் கவிதைகள் அல்ல. அவை அக்காலத் தமிழர்களின் வாழ்வியல், அறிவியல் மற்றும் சமூக புவியியல் அறிவைப் பதிவு செய்த முதன்மை ஆவணங்கள் ஆகும்.

### 2.1. திணைக்கோட்பாடும் சமூக புவியியலும் (Socio-Geography & Ecology)

தொல்காப்பியர் தனது *பொருளதிகாரத்தில்* மனித வாழ்வியலை இயற்கைச் சூழலோடு இணைத்து ஐந்து திணைகளாகப் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) பகுத்துள்ளார்.

**சான்று நூல்:** *தொல்காப்பியம்*, பொருளதிகாரம், அகத்திணையியல், நூற்பா .

*"மாயோன் மேய காடுறை உலகமும்*
*சேயோன் மேய மைவரை உலகமும்*
*வேந்தன் மேய தீம்புனல் உலகமும்*
*வருணன் மேய பெருமணல் உலகமும்*
*முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலென*
*சொல்லிய முறையான் சொல்லவும் படுமே."*
— (தொல்காப்பியம், பொருளதிகாரம்: 5)

**விளக்கம்:** நிலத்தைக் காடும் காடு சார்ந்த இடமும் (முல்லை), மலையும் மலை சார்ந்த இடமும் (குறிஞ்சி), வயலும் வயல் சார்ந்த இடமும் (மருதம்), கடலும் கடல் சார்ந்த இடமும் (நெய்தல்) எனப் பிரித்து, அந்தந்த நிலத்தின் காலநிலை, உயிரினங்கள் மற்றும் தொழில்களைப் பகுத்தாய்ந்தமை நவீனச் சூழலியல் (Ecology) மற்றும் சமூக புவியியல் (Socio-Geography) ஆய்வுகளின் மூல அடித்தளமாகும்.

### 2.2. வானியல் மற்றும் இயற்பியல் (Astronomy & Physics)

சங்கப் புலவர்கள் கோள்களின் இயக்கம், வளிமண்டலம் மற்றும் வெற்றிடம் பற்றிய துல்லியமான அறிவைப் பெற்றிருந்தனர்.

**சான்று நூல்:** *புறநானூறு*, பாடல் 30, வரிகள் 1-6 (பாடியவர்: முடமோசியார்; பாடப்பட்டோன்: சேரமான் பெருஞ்சேரலாதன்).

*"செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்*
*பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்*
*வளி திரிதரு திசையும் வறிது நிலைஇய காயமும் என்று இவை*
*அளந்து அறிந்தோர் உவப்ப..."*
— (புறநானூறு: 30, வரிகள் 1-4)

**விளக்கம்:** ஞாயிற்றின் சுழற்சி (Solar movement), அதனைச் சுற்றியுள்ள கோள்களின் மண்டலம் (Planetary orbit), காற்றின் திசைகள் (Wind movement), மற்றும் விண்வெளியின் வெற்றிடம் (Space Vacuum - *வறிது நிலைஇய காயம்*) ஆகியவற்றை அளந்தறிந்த வானியல் வல்லுநர்கள் பற்றி இப்பாடல் பேசுகிறது.

### மேலும், விண்கல் வீழ்வதைக் கணித்த வானியல் நுட்பம்

**சான்று நூல்:** *புறநானூறு*, பாடல் 229, வரிகள் 1-5 (பாடியவர்: கூடலூர் கிழார்).

*"ஆட லமைந்த வகன்ற மார்பின்...*
*எரிஅவிர் சுடரொடு இருநிலம் மிளிரப்*
*பெருமீன் வீழ்ந்தன்றால் விசும்பினானே..."*
— (புறநானூறு: 229)

### 2.3. கடல்சார் பொறியியலும் வணிகமும்

(Naval Engineering & Commerce)

தமிழர்களின் கப்பல் கட்டும் கலையும், காற்றைப் பயன்படுத்தி நாவாய் செலுத்தும் தொழில்நுட்பமும் சங்கப் பாடல்களில் பதிவாகியுள்ளன.

**சான்று நூல்:** *புறநானூறு*, பாடல் 66, வரிகள் 1-2 (பாடியவர்: வெண்ணிக்குயத்தியார்; பாடப்பட்டோன்: கரிகால் பெருவளத்தான்).

*"நளிஇரு முந்நீர்ப் நாவாய் ஓட்டி*
*வளிதொழில் ஆண்ட உரவோன் மருக!"*
— (புறநானூறு: 66, வரிகள் 1-2)

**விளக்கம்:** கடலில் காற்ற வீசும் திசையை அறிந்து, அதனைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து நாவாய்களைச் (கப்பல்களை) செலுத்திய பழந்தமிழனின் கடல்சார் தொழில்நுட்பம் இதில் குறிப்பிடப்படுகிறது.

### கலங்கரை விளக்கம் பற்றிய குறிப்பு

**சான்று நூல்:** *பட்டினப்பாலை*, வரிகள் 152-153 (ஆசிரியர்: உருத்திரங்கண்ணனார்).

*"மாட ஒள்ளெரி ஞாங்கர் நின்ற*
*தூண்டு விளக்கு விளிப்ப..."*

— (பட்டினப்பாலை: 152-153)

## 3. சங்கம் மருவிய காலம்: அறவியலும் அரசியல் அறிவியலும்

சங்க காலத்திற்குப் பிந்தைய நீதி நூல்கள், சமூகவியல் (Sociology), அரசியல் அறிவியல் (Political Science) மற்றும் சட்டவியல் (Jurisprudence) துறைகளின் மிகச்சிறந்த ஆய்வுகளாக அமைந்தன.

### 3.1. திருவள்ளுவரின் அரசியல் மற்றும் பொருளியல் கோட்பாடுகள்

திருக்குறள் அரசியல் மேலாண்மை மற்றும் நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பைத் துல்லியமாகவரையறுக்கிறது. **சான்று நூல்:** *திருக்குறள்*, பொருட்பால், அரசியல், அதிகாரம் 39 (இறைமாட்சி), குறள் 381.

*"படைக்குடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்*
*உடையான் அரசருள் ஏறு."*
— (திருக்குறள்: 381)

**விளக்கம்:** ஒரு நாட்டின் ஆறு முக்கிய அங்கங்களாகப் படை (Army), குடிமக்கள் (Citizens), கூழ்/பொருளாதாரம் (Economy), அமைச்சு (Ministry), நட்பு/அண்டை நாடுகள் (Allies), அரண்/பாதுகாப்பு (Defense) ஆகியவற்றை வள்ளுவர் பட்டியலிடுகிறார்.

### அரசின் வருவாய் ஆதாரங்கள் (Public Finance)

**சான்று நூல்:** *திருக்குறள்*, பொருட்பால், அரசியல், அதிகாரம் 76 (பொருள்செயல்வகை), குறள் 756.

*"உறுபொருளும் உல்கு பொருளும் தன் ஒன்னார்த்*
*தெறுபொருளும் வேந்தன் பொருள்."*
— (திருக்குறள்: 756)

**விளக்கம்:** வாரிசு இன்றி வரும் சொத்துக்கள் (உறுபொருள்), சுங்க வரி (உல்கு பொருள்), பகைவரிடமிருந்து பெறப்படும் கப்பத் தொகை (தெறுபொருள்) ஆகியவையே அரசின் வருவாய்கள் ஆகும்.

### 3.2. சட்டவியலும் நீதியியலும்

வழக்காடு முறையும், சாட்சியங்களை ஆராய்ந்து தீர்ப்பு வழங்கும் நடுநிலைமையும் காப்பியங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

**சான்று நூல்:** *சிலப்பதிகாரம்*, வழக்குரைகாதை, வரிகள் 60-64.

*"தேரா மன்னா செப்புவது உடையேன்...*
*எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்*
*புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்...*

*என்புறு கண்ணீர் பரப்பல் செல்லா*
*நன்சிறைத்தோ Bன் பாண்டியன் தேவி..."*
— (சிலப்பதிகாரம்: வழக்குரைகாதை, வரிகள் 60-68)

**விளக்கம்:** கண்ணகி பாண்டிய மன்னனின் அவையில் வழக்குரைத்து, தனது சிலம்ப உடைப்புச் சான்றின் மூலம் (Evidenciary proof) தவறான தீர்ப்பை நிரூபித்து நீதியை நிலைநாட்டும் சட்டவியல் நிகழ்வு இதுவாகும்.

## 4. இடைக்காலம்: மருத்துவம், கணிதம் மற்றும் கட்டடக்கலை

பல்லவர், சோழர், பாண்டியர் ஆட்சிக் காலத்தில் தமிழ் மொழி தொழினுட்ப மற்றும் அறிவியல் தரவுகளைப் பதிவு செய்யும் முதன்மை ஊடகமாக மாறியது.

### 4.1. சித்த மருத்துவத் தமிழ்

உடற்கூறியல் மற்றும் நோய்க்கணிப்பு முறைகள் தமிழில் கவிதை வடிவில் சுவடிகளில் பதிவு செய்யப்பட்டன.

**சான்று நூல்:** *திருக்குறள்*, மருந்து அதிகாரம் (அதிகாரம் 95), குறள் 948.

*"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று."*
— (திருக்குறள்: 948)

**விளக்கம்:** வாதம், பித்தம், கபம் (வளி, அழல், ஐயம்) ஆகிய மூன்று தாதுக்கள் கூடினாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும் என்ற மருத்துவக் கோட்பாட்டை இக்குறள் கூறுகிறது.

உடலின் முக்கியத்துவத்தை உணர்த்தும் சித்த மருத்துவப் பாடல்:

**சான்று நூல்:** *திருமந்திரம்*, பாயிரம், இரண்டாம் தந்திரம் (உடம்பினை ஓம்புதல்), பாடல் 724.

*"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே."*
— (திருமந்திரம்: 724)

### 4.2. கணிதமும் நில அளவையியலும் (Mathematics & Epigraphy)

சோழர் காலக் கல்வெட்டுகளிலும் சுவடிகளிலும் கணித அளவீடுகள் செய்யுள் வடிவில் விளக்கப்பட்டன.

**சான்று நூல்:** *கணக்கதிகாரம்* (ஆசிரியர்: காரிநாயனார்).

*"ஒன்று பத்து நூறாயிரம் பதினாயிரம் நியுதம்
பிரயுதம் கோடி சங்கமோடு விந்தம்..."*
— (கணக்கதிகாரம், பாடல் 2)

**விளக்கம்:** $1$ முதல் கோடி, சங்கமம், விந்தம் வரையிலான மிகப்பெரிய எண்களின் அடுக்குகளைப் பழந்தமிழர் கணிதவியலில் பயன்படுத்தினர். மேலும் *காணி* ($1/80$), *முந்திரி* ($1/320$), *கீழ்முந்திரி* ($1/102,400$) போன்ற மிகச்சிறிய பின்ன அளவுகளும் நில அளவையில் பயன்படுத்தப்பட்டன.

### 4.3. கட்டடக்கலை மற்றும் நகரமைப்பு (Architecture & Engineering)

கோவில்கள் மற்றும் நகரங்கள் அமைப்பதற்கான சிற்பசாஸ்திர நுட்பங்கள் தமிழ் நூல்களில் இடம்பெற்றன.

**சான்று நூல்:** *சிலப்பதிகாரம்*, இந்திரவிழா ஊரெடுத்த காதை, வரிகள் 142-145.

*"நூல்அறி புலவர் நுணங்குவினைத் தச்சரும்*
*சித்தன்னச் செப்பிய செப்புச் செய்நூலோரும்...*

*கண்கவர் ஓவியக் கைவினை ஞரும்..."*
— (சிலப்பதிகாரம்: இந்திரவிழா ஊரெடுத்த காதை)

**சான்று நூல்:** *மணிமேகலை*, கச்சி மாநகர் புக்க காதை, வரிகள் 42-45.

*"மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்*
*அவந்தி பெற்ற கொல்லரும் நுனைவினை*
*யவனத் தச்சரும் மகத வினைஞரோடு*
*ஒன்றியி னியற்றிய உவ வனம்புகுந்து..."*
— (மணிமேகலை: கச்சி மாநகர் புக்க காதை)

**விளக்கம்:** மகதம், மராட்டம், அவந்தி மற்றும் யவனத்தைச் சேர்ந்த பல்வேறு பொறியியல் மற்றும் சிற்பக்கலை வல்லுநர்கள் ஒருங்கிணைந்து நகரமைப்பில் ஈடுபட்டதை மணிமேகலை பதிவு செய்கிறது.

## 5. ஐரோப்பியர் வருகையும் தமிழ் உரைநடை வளர்ச்சியும் (16 - 19-ஆம் நூற்றாண்டு)

ஐரோப்பியர்களின் வருகை, தமிழின் ஆய்வு முறையியலில் அச்சுக்கலையையும் அகராதியியலையும் கொண்டு வந்தது.

### 5.1. அச்சுக்கலை மற்றும் முதல் தமிழ் நூல்கள்

**1578:** ஹென்றிக் ஹென்றிக்ஸ் (Henriques) பாதிரியாரால் கொல்லத்தில் அச்சிடப்பட்ட *‘தம்பிரான் வணக்கம்’* எனும் நூல், ஆசிய மொழிகளிலேயே முதன்முதலில் அச்சில் ஏறிய மொழி தமிழ் என்பதை நிரூபித்தது.

### 5.2. அகராதியியல் மற்றும் ஒப்பிலக்கணம்

**சதுரகராதி (1732):** வீரமாமுனிவர் (Beschi) தமிழ் அகராதியியலை அகரவரிசைப்படுத்தி (Alphabetical ordering) நவீனப்படுத்தினார்.

**திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (1856):** ராபர்ட் கால்டுவெல் (Robert Caldwell) எழுதிய *'A Comparative Grammar of the Dravidian or South-Indian Family of Languages'* எனும் நூல், தமிழின் தனித்தியங்கும் ஆற்றலை அறிவியல் பூர்வமாக உலகிற்கு நிறுவியது.

## 6. 20-ஆம் நூற்றாண்டு: அறிவியல் தமிழ் மற்றும் கலைச்சொல்லாக்கம்

20-ஆம் நூற்றாண்டில் தமிழ் மொழி உயர்கல்வி மற்றும் அறிவியல் பரப்பல் ஊடகமாக மாறியது.

### 6.1. பாரதியின் அறிவியல் தொலைநோக்கு

அறிவியல் கருத்துகளைத் தமிழில் கொண்டு வர வேண்டும் என்று பாரதியார் முழங்கினார்.

**சான்று நூல்:** *பாரதியார் கவிதைகள்*, ‘தமிழ் வளர்ச்சி’.

*"சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்*

*செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!"*
— (மகாகவி பாரதியார்)

## தொழில்நுட்ப வளர்ச்சியைக் கவிதையாக்கியமை

**சான்று நூல்:** *பாரதியார் கவிதைகள்*, ‘பாரத தேசம்’.

*"ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்...*
*வானை அளப்போம் கடல் மீனை அளப்போம்*
*சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்!"*
— (மகாகவி பாரதியார்)

### 6.2. கலைச்சொல்லாக்கம் (Technical Terminology)

அறிவியல் மற்றும் பொறியியல் துறைகளுக்காகக் கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டன. மணவை முஸ்தபா, ப.அருளி போன்றோர் இத்துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கினர். தமிழ் வளர்ச்சிக் கழகம் மூலம் 10 தொகுதிகள் கொண்ட *கலைக்களஞ்சியம்* வெளியானது.

## 7. தற்காலம்: கணினித் தமிழ் மற்றும் செயற்கை நுண்ணறிவு (21-ஆம் நூற்றாண்டு)

21-ஆம் நூற்றாண்டில் தமிழ் மொழி டிஜிட்டல் தளங்களில் தவிர்க்க முடியாத மொழியாக உருவெடுத்துள்ளது.

### 7.1. ஒருங்குறி (Unicode) மற்றும் எழுத்து உணரி (OCR)

**Unicode:** தமிழ் எழுத்துக்கள் கணினியில் சர்வதேச அளவில் இயங்க ஒருங்குறி தரப்படுத்தப்பட்டது.

**OCR (Optical Character Recognition):** ஓலைச்சுவடிகள் மற்றும் பழைய அச்சுப் புத்தகங்களைக் கணினி வாசிக்கும் தரவுகளாக மாற்றும் தொழில்நுட்பம் தமிழ் இணையக் கல்விக்கழகம் (TVA) மூலம் உருவாக்கப்பட்டுள்ளது.

### 7.2. கணினி மொழியியல் (Computational Linguistics) & AI

**சொல் பகுப்பாய்வி (Morphological Analyzer):** தமிழின் ஒட்டுநிலை (Agglutinative) இயல்புக்கு ஏற்பச் சொற்களைப் பிரிக்கும் மென்பொருள்கள்.

**இயற்கை மொழி ஆய்வு (NLP):** Speech-to-Text, Text-to-Speech மற்றும் தானியங்கி மொழிபெயர்ப்புச் செயலிகள்.

**செயற்கை நுண்ணறிவு (AI):** ChatGPT, Gemini போன்ற பெரிய மொழி மாதிரிகளில் (LLMs) தமிழ் தரவுத்தளங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டுப் பயன்பாடு துல்லியமாக்கப்பட்டு வருகிறது.

## 8. பலத்துறை ஆய்வில் உள்ள சவால்கள் & தீர்வுகள்

| **சவால்கள்** (Challenges) | **தீர்வுகள்** (Solutions) |
|---|---|
| கலைச்சொல் பற்றாக்குறை: நவீன தொழில்நுட்பச் சொற்கள் உடனுக்குடன் தமிழில் கிடைக்காதிருத்தல். | உலகளாவிய தமிழ் அறிஞர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு 'திறந்த மூல கலைச்சொல் வங்கி' (Open-source Term Bank) அமைத்தல். |
| உயர்கல்விப் பயன்பாடு: அறிவியல், பொறியியல், மருத்துவக் கட்டுரைகள் ஆங்கிலத்திலேயே அதிகம் எழுதப்படுதல். | தமிழ் வழியில் உயர்கல்வி பயில்வோருக்குச் சிறப்புச் சலுகைகள் அளித்தல் மற்றும் ஆய்வுக் கட்டுரைகளைத் தமிழில் எழுத நிதியுதவி வழங்குதல். |
| AI தரவுத்தளக் குறைபாடு: AI பயிற்சிக்கான தரமான தமிழ் தரவுத்தளங்கள் (Datasets) குறைவாக இருத்தல். | விக்கிப்பீடியா, அரசு ஆவணங்கள் மற்றும் இலக்கியங்களை உள்ளடக்கிய பிரம்மாண்டமான 'Open Tamil Corpora' அமைத்தல். |

## 9. முடிவுரை

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்ற பாரதியின் கூற்றிற்கு ஏற்ப, தமிழ் மொழி வெறும் பழம்பெருமைகளைப் பேசும் மொழியாக மட்டுமின்றி, இக்காலத் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஈடுகொடுக்கும் இளமைமிக்க மொழியாகவும் விளங்குகிறது. சங்க காலத்தில் கல்வெட்டுகளிலும் ஓலைச்சுவடிகளிலும் எழுதப்பட்ட தமிழ், இன்று கணினியின் சிலிக்கான் சில்லுகளிலும், செயற்கை நுண்ணறிவுத் தரவுத்தளங்களிலும் வெற்றிகரமாக இயங்குகிறது. ஒரு மொழி அழியாமல் வாழ வேண்டுமெனில், அது அனைத்துத் துறைகளிலும் தன்னைத் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்பதற்குத் தமிழே சான்றாகும். அறிவியல், கணினி, மருத்துவம், சட்டம் போன்ற பலதுறைகளிலும் தமிழின் பயன்பாட்டை மேலும் விரிவுபடுத்துவதே வருங்கால தலைமுறையினரின் கடமையாகும்.

### அடிக்குறிப்புகள் (Notes)

1. தொல்காப்பியம் (பொருளதிகாரம்), அகத்திணையியல், நூற்பா 5, கழக வெளியீடு, சென்னை.
2. புறநானூறு, பாடல் 30, வரிகள் 1-4 (பாடியவர்: முடமோசியார்; பாடப்பட்டோன்: சேரமான் பெருஞ்சேரலாதன்).
3. புறநானூறு, பாடல் 66, வரிகள் 1-2 (பாடியவர்: வெண்ணிக்குயத்தியார்).
4. திருக்குறள், பொருட்பால், அரசியல், அதிகாரம் 39 (இறைமாட்சி), குறள் 381.
5. சிலப்பதிகாரம், வழக்குரைகாதை, வரிகள் 60-68 (இளங்கோவடிகள்).
6. திருமந்திரம், இரண்டாம் தந்திரம் (உடம்பினை ஓம்புதல்), பாடல் 724 (திருமூலர்).
7. காரிநாயனார், கணக்கதிகாரம், பாடல் 2, உ.வே.சா. நூலகப் பதிப்பு.
8. Xavier S. Thani Nayagam, Antão de Proença's Tamil-Portuguese Dictionary A.D. 1679, University of Malaya, 1966.
9. பாரதியார் கவிதைகள், 'தமிழ் வளர்ச்சி', ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை.
10. கி. ராமசாமி, கணினி மொழியியல் மற்றும் தமிழ் தரவுத்தளங்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2012.

## துணைநூற் பட்டியல் (References)

1. தொல்காப்பியம் (பொருளதிகாரம்), கழக வெளியீடு, சென்னை, 2000.
2. புறநானூறு (மூலமும் உரையும்), உ.வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை.
3. திருக்குறள் (பரிமேலழகர் உரை), ஸ்ரீசெண்பகா பதிப்பகம், சென்னை, 2010.
4. சிலப்பதிகாரம் & மணிமேகலை (மூலமும் உரையும்), கழக வெளியீடு, சென்னை.
5. திருமந்திரம் (திருமூலர்), சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
6. கால்டுவெல், ராபர்ட்., திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் (தமிழாக்கம்: K. கோவிந்தன் & K. இரத்தினம்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.
7. மணவை முஸ்தபா., அறிவியல் தமிழ் வளர்ச்சி, கலைவாணி பதிப்பகம், சென்னை, 1995.
8. சுந்தரம், பி. எஸ்., கணினித் தமிழ்: அறிமுகமும் பயன்பாடும், வானதி பதிப்பகம், சென்னை, 2010.

**ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று (Declaration of Conflicting Interests)**

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.

**ARTICLE 10 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 73–78

# ஆண்டாள் திருப்பாவை கூறும் உளவியல் கருத்துக்கள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு சிந்தனைகள் - ஓர் ஆய்வு

## Psychological Insights and Concepts of Social Unity in Andal's Thiruppavai: A Study

**முனைவர். செ. ராஜேஸ்வரி**
உதவித் தமிழ் பேராசிரியை, ராம்கோ தொழில்நுட்பக் கல்லூரி
மின்னஞ்சல்: rajeshwariraji19910@gmail.com
கைபேசி: 9524841633

### Abstract

Thiruppavai,graced by Andal ,is a treasure chest of devotional literature. Beyond being an expression of spirituality, this text serves as a grand psychological arena that penetrates deep into the recesses of the human mind.

All thirty hymns (Pasurams) of Thiruppavai sing the glories of Lord Vishnu (Thirumal) and narrate the history of obtaining his divine grace. The core concept of this text is that it is a wonderful piece of literature denoting the penance (Nonbu) undertaken by Andal and the young girls of the cowherd community for themselves and for the people of the world to receive all kinds of excellent benefits, keeping the attainment of Lord Krishna’s (kannan) divine grace as their ultimate goal. The feeling that arises while reading this book reflects the Gita, which says, “In whatever way men approach Me, in that same way do I accept them”. The objective of this research is to analyze where and how psychological and aesthetic unification thoughts have been handled in this outstanding devotional literature.

### ஆய்வுச் சுருக்கம்

பக்தி இலக்கியத்தின் முத்துப் பெட்டகம் ஆண்டாள் அருளிய திருப்பாவை. ஆன்மீக வெளிப்பாட்டைக் கடந்து மனித மனத்தின் ஆழடுக்குகளைச் செம்மைப்படுத்தும் மாபெரும் உளவியல் களமே இத்திருப்பாவை.

திருப்பாவை முப்பது பாசுரங்களும் திருமாலின் பெருமைகளைப் பாடி, அவனுடைய திருவருளைப் பெற்ற வரலாற்றை எடுத்துக் கூறுவது. இப்பிரபந்தத்தின் உட்கருத்து, கண்ணனின் திருவருளைப் பெறுவதை, இறுதி இலட்சியமாகக் கொண்டு ஆண்டாளும், ஆயர்குல சிறுமியும் தங்களுக்கும், உலகத்தார்க்கும் எல்லாவித சிறப்பான நன்மைகள் கிடைக்க மேற்கொண்ட இந்நோன்பைக் குறிக்கும் ஓர் அற்புத இலக்கியம். இந்நூலைப் படிக்கும் போது ஏற்படும் உணர்வு "யாவர் என்னை எங்ஙனம் வேண்டுகிறார்களோ அவர்களை நான் அங்ஙனமே சார்கிறேன்" (1-11) கூறுவதை பிரதிபலிக்கும் கீதை.

இச்சிறந்த பக்தி இலக்கியத்தில் உளவியல் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு சிந்தனைகள் எங்கெங்கு, எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது என்பதை இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்:** உளவியல் - Psychology; சமூக ஒருமைப்பாடு - social integration; பக்தி இலக்கியம் - Devotional literature; நோன்பு - Fasting; பாவனை - Pretense; தன்வய சிந்தனை - Self-centered thinking; உளகட்டுப்பாடு - Mental control; மனஉறுதி, - Strength of Mind; விழிப்புணர்வு - Awareness; அகந்தை - Ego Dissolution

## முன்னுரை: -INDRODUCTION

ஆண்டாள் தந்தருளிய திருப்பாவை எனும் பக்தி இலக்கியம், மாநில மக்களின் மனம், மற்றும் நற்பண்புகளை மேம்படுத்தும் உன்னதமான உளவியல் கருத்துக்களை பாசுரங்களால் கோர்த்தெடுத்த பக்தி பாமாலை என்றால் அது மிகையாகாது.

"மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்" (குறள் 457)

அஃதாவது ஆண்டாள் நாச்சியார் தன் தேனினிக்கும் பாசுரங்களில், தோழியரை, தன் ஆயர் குலச் சிறுமியரை ஒன்றிணைத்து நோன்பு நோற்பதும், சோம்பலை அகற்றி மனதை ஒருமுகப்படுத்துவதும் வள்ளுவர் காட்டும் 'மனநலம்' மற்றும் இனநலத்தின்

வடிவமன்றோ?திருப்பாவை பாசுரங்கள் முப்பதும் இளம் மங்கையரின் உள்ளங்களில் நல்லொழுக்கத்தையும், இல்லறவாழ்வில் இணைந்த இல்லதரிசிகளுக்கும்

அறநெறியையும் பக்தி மார்க்கத்தை நாடு பரம பதம் அடைய நினைப்பவர்களுக்கு இறைவனை அடைவதற்கான பக்தி மார்க்கத்தையும் எடுத்துரைக்கின்றன.

திருப்பாவை சொல் நயமும், பொருள் நயமும், கற்பனை அழகும், கவிச்சிறப்பும் கொண்ட ஒரு சிறந்த இலக்கியப் பொக்கிஷம்.

இவ்விலக்கிய பாசுரங்களை சமய நூல், சமுதாய நூல், தத்துவ நூல் என ஒவ்வோர் அடிப்படையிலும் படித்து மகிழும் வகையில் அமைந்தது. இக்கட்டுரையின் கீழ் அப்பாசுரங்களில் உளவியல் மற்றும் சமூக ஒருமைப்பாட்டுச் சிந்தனைகள் பொருந்து மாற்றைக் காண்போம்.

## ஆண்டாள் - பெண் ஆழ்வார் :- நாச்சியார் – ANDAL THE FEMALE ALVAR

ஆண்டாள் நாச்சியார், சூடிக் கொடுத்த சுடர்க் கொடி, பெரியாழ்வாரின் அருமைத் திருமகள், திருவில்லிப்புத்தூரில் வாழ்ந்த விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வாரின் அருமைத் திருமகள்.

திருப்பாவை **'பட்டர்பிரான் கோதை'** என்றும், திருமொழி **'விட்டுசித்தன் கோதை' 'வில்லிப்புத்தூர்க் கோன் கோதை'** என்றும் ஆண்டாளைக் குறிப்பிடுகின்றன. கண்ணன், மணிவண்ணன், ஆயர்குல தலைவன், யதுகுல மன்னன் அவதார பெருமை, மகிமைகளைப் பெரியாழ்வார் மனமுருகிப் பாடுவதைக் கேட்டுக் கேட்டு, ஆண்டாளின் உள்ளம் அதில் தன்னையும் ஈர்த்ததை அறிந்து தந்தையிடம் ஆன்ம ஞான அறிவைப் பெற்று வளர்ந்தாள்.

குழந்தைப் பருவத்திலிருந்தே ஆண்டாளின் உள்ளத்தில் முளையிடபட்ட பக்தி உணர்ச்சி, அவள் வளர்ந்த நிலையில் மேலும் மலர்ந்து மணம் பரப்பியது.

அவள் வளர்ந்த தெய்வீகம் சூழ்நிலை பின்னாளில் நாச்சியாரை பக்தி நெறி மிக்க தெய்வீகப் பெண்ணாக உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.

**"அடிமனதில் உறைந்து கிடக்கும் உணர்வுகள் தான் மனிதனின் ஆளுமையை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. இளமைப் பருவத்தில் ஏற்படும் பிற்காலத்தில் ஏதேனும் ஒரு வடிவில் வெளிப்படும்.** இத்தகைய **அடிமன உணர்வுகள் கலைஞனுடைய படைப்புகளில் ஏதேனும் ஒரு வடிவில் வெளிப்படுத்தக் கூடும்"** என்பது **'பிராய்டு'** தரும் விளக்கமாகும்.

பிரபந்த நூலான திருப்பாவை ஆண்டாளின் திருவாக்காக தோன்றியதன் நோக்கம் திருமாலே பரம்பொருள், அவனை நம் திருவாயால் பாடி, நல் மனத்தால் சிந்தித்தால் தீவினை அனைத்தும் நெருப்பிலிட்ட தூசியாய் போகும், எத்தனைப் பிறவி எடுத்தாலும் திருமாலுக்கு தொண்டு செய்து வாழ்வதே பேரின்ப வாழ்வு என்பவற்றை உலக மாந்தர் அனைவரும் அறியும் வண்ணம் எடுத்துரைக்க எழுந்ததே இத் திருப்பாவை பாசுரங்களாகும்.

## திருப்பாவையில் உளவியல் கருத்துக்கள்: - PSYCHOLOGICAL ASPECTS IN THIRUPPAVAI

ஆண்டாளின் தன்னலமற்ற, பரந்த உலக நோக்கில் உருவானவையே இப்பாஅரப்பாடல்கள். திருப்பாவை ஒரு கற்பனை இலக்கியப் படைப்பாக இருந்தாலும், இளம் பருவத்தினர்களுக்கு இருக்க வேண்டிய

ஒழுக்க நெறிகள், கட்டுப்பாடு, நல்வாழ்விற்கான உயர்ந்த வழிமுறைகள் ஆகியன வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன.

பொதுவான உடன்பாடு குழுக்களிடம் இருந்தாலும் மனஉறுதி மிகுந்திருக்க வேண்டும். நல்லதொரு மனஉறுதிக்கு சில இன்றியமையாத காரணிகள் உண்டு.

முதல் ஐந்து பாடல்களில் நோன்பு நோற்பவர் யார், நோன்பு மேற்கொள்ளக் காரணம், நோன்பின் போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகள், நோன்பின் பயன்கள் ஆகியன கூறப்படுகின்றன. முதல் பாடலில்

"மார்கழிகழித் திங்கள் தொடங்கி……..
…
"நீர் ஆடப் போதுவீர்
போதுமினோ நேர் இழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச்
செல்வச் சிறுமீர்காள்" - (பா. 1)

இப்படி அழைப்பதிலிருந்தே பக்திக்கும், இறைத் தொண்டிற்கும் விருப்பம் மட்டுமே போதும், வேறேதும் தேவையில்லை எனத் தெரிகிறது.

"நோன்பு உளக்கட்டுப்பாடு நிலையில் அமைகிறது எப்படி என்றால், தான் விருப்பம் நிறைவேற இன்ன செயல்களைச் செய்கிறேன், இன்ன செயல்களைச் செய்ய மாட்டேன் என்றோ உள்ளத்தைக் கட்டுப்படுத்துவது நோன்பு. எடுத்த காரியம் முடிக்க சில விதிகளையும், சில நியமங்களை, விலக்குகளை கடைபிடிக்க வேண்டும் அல்லவா?

இறைவன் அடி பாடுதல்

காலை நீராடுதல்
ஐயமும் பிச்சையும்
நெய், பால் உண்ணாதிருத்தல்
மையும், மலரும் அலங்கரித்து கொள்ளாதிருத்தல்
போன்றவற்றை கடைபிடிக்கின்றனர்.மேலும்
"தூயோமாய் வந்து நாம்
தூ மலர்தூவித் தொழுது
வாயினால் பாடி
மனத்தினால் சிந்திக்க
புகுதருவான் நின்றனவ தீயினில் தூசாகும்" (பா. 5)

அஃதாவது மனம், மொழி, மெய் என்ற மூன்றாலும் இறைவனை வழிபடும் கிரியை நெறி, மனத்தை ஒருமுகப்படுத்தும் யோக சக்தி நெறி, இறைவனை வழிபட்டால் தீமைகள் நீங்கி கிடைக்கும் ஞான நெறியும் ஒருங்கே அமைவதை மனஉறுதியோடு கூறுகிறாள் ஆண்டாள் நாச்சியார்.

உள்ளத்தின் பல்வேறு நிலைகளும், சமுதாய ஒற்றுமையும்:HEART VARIOUS STATE SOCIAL UNITY:

திருப்பாவையின் ஆறாம் பாசுரம் முதல் பத்து பாடல்கள் பெண்களுக்குரிய இயல்பான அன்பும் பேச்சும், பரிகாசப் பேச்சும், உரையாடல்கள், என இப்பாடல்கள் ஒரு நாடக நிகழ்ச்சி நடைபெறுவது போலவே அமைந்துள்ளது சிறப்பானதாகும்.

துயில் எழுந்தவர்கள், துயில் கொள்பவர்களை துயிலெழுப்பும் தோழி
வயதில் சிறியவளாக இருப்பதால்
"பிள்ளாய் எழுந்திராய், புள்ளும் சிலம்பின காண்"
என எழுப்புகிறாய்.

பறவைகளின் ஒலி, கோயிலில் பெரிதாகக் ஒலிக்கும் சங்கொலி, ஆச்சியல் மத்தினால் ஓசைப்படுத்தும் தயிர் மத்தின் ஓசை கேட்கவில்லையா என்பதிலிருந்து அவள் சாதாரண வீட்டுப்பெண் எனத் தெரிகிறது.

செல்வம் படைத்த குடும்பப் பெண்ணை
"தூமணி மாடத்து"...... (பா. 9)
எழுப்புதலும் கும்பகர்ணன் போல் தூங்குபவளை பொற்றொடிமே என்றும், நற்செல்வன் தங்கையை காலடியில் பால் வெள்ளமுட எனச் உணர்ச்சி பொங்கிடவும்

"எல்லே இளங்கிளியே இன்னும் உறங்குதியோ"
என்று இளங்கிளியை ஒத்த பெண்ணையும் அழைப்பதிலிருந்து, இவர்கள் அழைத்துச் செல்லும் தோழிப் பெண்கள் வெவ்வேறு குணகியல்பற்றவர்களாகவும் வெவ்வேறு குடிப்பிறப்பில் பிறந்தவர்களாக இருப்பத்தையும் காணுகையில் சமுதாய வாழ்க்கையில் ஒற்றுமையைக் காட்டி, அன்பின் இன்றியமையாமையை இளம் உள்ளங்களுக்கு அறிவுறுத்தவே இப்பாசுரத்தை ஆண்டாள் பாடினாளோ என எண்ணத் தோன்றுகிறது.

## நம்பிக்கையும் மனஉறுதியும்: - BELIEF AND MIND FIRMNESS

நம்பிக்கையும், மனஉறுதியுமே இறைவழிபாட்டிற்கு இரு கண்கள் போன்றது. இதையே இவரது சமகாலத்து ஆழ்வார்கள் பாடியிருப்பதை இங்கு உற்று நோக்கத்தக்கது.

"அன்பே தகளியா
ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா -
நன்புகழ் நாரணனஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன்
நாரணற்கு ஞானத் தமிழ் புரிந்த நான்"

பூதத்தாழ்வார்இரண்டாம் திருவந்தாதி.

என்பதற்கு ஏற்றாற்போல கண்ணன் தங்களுக்கு அருள் செய்வான் என்ற தளராத நம்பிக்கை.

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும
உற்றோமே ஆவோம்
உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்று" (பா. 29)

என்ற பாசுரத்தைக் காணும் போது இவர்கள் கண்ணனிடம் கொண்ட ஆழ்ந்த விருப்பத்தையும், மனத் திடத்தையும் உணர முடிகிறது.

## நிறைவுரை: - CONCLUDING REMARKS

மார்கழி நோன்பை மையமாகக் கொண்டு ஆண்டாள் தன் திருப்பாவை பாசுரங்கள் மூலம் இந்நோன்பை ஒற்றை நபராக இல்லாமல் தோழிப் பெண்களுடன் சேர்ந்து செய்யும் கூட்டு பிரார்த்தனையாக விவரிக்கிறாள்.

பேதமை நீங்க, குலபேதம், செல்வமிக்கவர், ஏற்றத்தாழ்வு போன்ற வேறுபாடுகளைக் கடந்து அனைத்து தரப்புப் பெண்களையும் உறக்கம் நீங்க எழுப்பி அழைத்து கண்ணனை வாயாரப் பாடி, மனதினால் சிந்தித்துச் செய்வது சமூக ஒருமைப்பாட்டை எடுத்துரைக்கிறது.

மேலும் பொது நலமாக, தனிமனித வேண்டுகோள் இன்றி, "நாங்கள்" என்ற ஒருமித்த கூட்டுச் சொல்லாலும்
"நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி" என உலக நன்மைக்காக, மழையைப் பொழியச் செய்ய இறைவனை வேண்டுவது சமூக நலத்தைக் குறிக்கிறது.
சமத்துவ உணர்வு தரும் பாசுரமாக
"அங்கண்மா ஞாலத்தரசர்
அபிமான பங்கமாய் வந்து...

யாமும் வந்தோம்..." (பா. 22)

பெரிய, பெரிய அரசர்களும் கூட தங்களின் அகந்தையை விட்டுவிட்டு இறைவனின் சன்னதியில் எளிய மக்களோடு மக்களாக நிற்பதைக் காணும் போது ஆன்மீகத்திலும், சமூகத்திலும் அனைவரும் சமம் என்ற சமத்துவக் கோட்பாட்டை உணர்த்துகிறது.

மக்கள் உள்ளங்களைக் கவரக் கூடிய, பதியக் கூடிய, ஏற்றுக் கொள்ளக் கூடிய பாடல்களும், இலக்கியமும்தான் காலம் கடந்து வாழும். அந்த வகையில் மழலைகள் முதல் இறையடி சேரும் பெரியோர் வரை,

பல்வேறு நிலையிலுள்ள யாவரும் உய்த்துணர்ந்து, நல்ல வாழ்க்கைக்கும், நற்கதிக்கும் வழிகாட்டியாகவும், உளவியல் கருத்துக்கள் உள்ளடக்கியதாகவும், சமூக ஒருமைப்பாட்டை உயர்த்திக் காட்டுவதாகவும் இத்தெய்வ பிரபந்த பாசுரங்கள் ஒவ்வோர் ஆண்டிலும், ஒரு மாதமாம் திரு மாதமான மார்கழித் திங்களில் உருகிப் பாடுகின்ற காரணத்தால் உலகம் வாழ்கிறது என்று

## வாழும், பல்லாண்டு வாழும் என்பது உறுதி

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ் செந் நெல் ஊடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்று
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்" — (பா. 3)

என்ற இப்பாசுரமே இக்கட்டுரையின் மொத்த கருத்திற்கும் ஒத்த எடுத்துக்காட்டாய் திகழ்கிறது எனக் கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

## துணைநூற் பட்டியல் (References)

1. ஆர். சண்முகம் — மனிதனும் மனமும்
2. திரு ஆண்டாள் நாச்சியார் — திருப்பாவை
3. பூதத்தாழ்வார் — இரண்டாம் திருவந்தாதி
4. திருவள்ளுவர் — திருக்குறள் (457)
5. சிஞ். பிராய்டு — உளவியல் சிந்தனைகள்

**ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று (Declaration of Conflicting Interests)**

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.

**ARTICLE 11 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 79–84

# தமிழ் வளர்ச்சியில் பல்துறை ஆய்வுகள் சங்க காலம் முதல் தற்காலம் வரை

## Multidisciplinary Studies on the Development of Tamil: From the Sangam Age to the Present Day

*ஆய்வாளர்:* **திருமதி.அ.கேத்தரின்**
முனைவர் பட்ட ஆய்வாளர், டாக்டர் என்.ஜி.பி கலை அறிவியல் கல்லூரி
கோயமுத்தூர் 641 048.

**நெறியாளர்: முனைவர் எம்.சம்பத்குமார்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் என்.ஜி.பி கலை அறிவியல் கல்லூரி
கோயமுத்தூர் 641 048.

### Abstract

The Sangam era was defined by the interplay of Akam (the inner world of emotions and love) and Puram (the outer world of public life and valor). Various rituals were intertwined with the daily lives of the people—encompassing love, marriage, worship, warfare, agriculture, death, and hospitality. Information regarding these rituals is widely found in texts such as Tolkappiyam, Akananuru, Purananuru, Natrinai, Kuruntokai, Ainkurunuru, Kalittokai, Patitruppattu, and Pattinappalai. These rituals were not merely religious activities; they were deeply connected to social order, family relationships, beliefs regarding nature, the spirit of valor, and the remembrance of ancestors. People in different regions adopted specific customs suited to their living environments. Deeply integrated into the social fabric, communities adhered to various beliefs and the rituals associated with them. Ritualistic practices accompanied human life from birth to death. Sangam literature serves as a mirror, clearly reflecting the customs and beliefs of that ancient society. Special rituals were performed at various stages of life—from conception in the mother's womb to death—to mark and commemorate these milestones. Thus, a ritual represents a prescribed form of conduct. This research paper examines such rituals through the lens of Sangam literature....

### ஆய்வுச் சுருக்கம்

தமிழ் மொழியின் வளர்ச்சி என்பது இலக்கிய வளர்ச்சியுடன் மட்டும் தொடர்புடையது அல்ல. மொழியியல், வரலாறு, தொல்லியல், கல்வெட்டியல், சமூகவியல், மானுடவியல், அறிவியல், தொழில்நுட்பம், ஊடகம், கணினியியல் போன்ற பல்வேறு துறைகளின் பங்களிப்போடு தமிழ் தொடர்ந்து வளர்ந்து வந்துள்ளது. சங்ககாலத்தில் இயற்கை, நிலம், மக்கள் வாழ்க்கை ஆகியவற்றோடு இணைந்திருந்த தமிழ், இடைக்காலத்தில் சமயம், தத்துவம், கல்வெட்டு, நிர்வாகம் ஆகிய தளங்களில் விரிவடைந்தது. அச்சுக்கலை தோன்றிய காலத்தில் புதிய அறிவுப் பரவலைப் பெற்ற தமிழ், நவீன காலத்தில் இதழியல், திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களின் வழியாகப் பொதுமக்களை அடைந்தது. இன்றைய டிஜிட்டல் காலத்தில் செயற்கை நுண்ணறிவு, கணினி மொழியியல், மின்னூல்கள், இணைய ஊடகம் போன்ற புதிய தளங்களுடன் இணைந்து தமிழ் புதிய பரிணாமத்தை அடைந்து வருகிறது.

இக்கட்டுரை, தமிழ் வளர்ச்சியை ஒரே துறையின் வரலாறாகப் பார்க்காமல், பல்துறைகளின் இணைவால் உருவான அறிவியல் மற்றும் பண்பாட்டு இயக்கமாக ஆராய்கிறது.

**திறவுச் சொற்கள்:** தமிழ் வளர்ச்சி, சங்க இலக்கியம், மொழியியல், கல்வெட்டியல், தொல்லியல், அச்சுக்கலை, இதழியல், கணினித் தமிழ், செயற்கை நுண்ணறிவு, பல்துறை ஆய்வு.

## முன்னுரை

உலகின் தொன்மையான, வாழும் மொழிகளில் தமிழுக்கு தனித்துவமான இடம் உண்டு. தமிழ் மொழியின் சிறப்பு அதன் தொன்மையில் மட்டுமல்ல காலமாற்றங்களுக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொண்டு தொடர்ந்து இயங்கும் திறனிலும் உள்ளது. ஒரு மொழி உயிர்ப்புடன் இருப்பதற்குத் தேவையான முக்கியமான பண்பு அதன் சமூகப் பயன்பாடாகும். அந்த வகையில் தமிழ் இலக்கியம், கல்வி, சமயம், நிர்வாகம், அறிவியல், ஊடகம், தொழில்நுட்பம் எனப் பல தளங்களில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது.

“தமிழ் வளர்ச்சி” என்பதை இலக்கியப் படைப்புகளின் எண்ணிக்கை அதிகரிப்பதாக மட்டும் கருத முடியாது. மொழியின் சொல்வளம், இலக்கணப் பயன்பாடு, எழுத்து வடிவம், சமூகப் பயன்பாடு, அறிவியல் பயன்பாடு, தொழில்நுட்பப் பயன்பாடு ஆகிய அனைத்தும் அதன் வளர்ச்சியின் கூறுகளாகும். எனவே, தமிழ் வளர்ச்சியைப் புரிந்துகொள்ள பல்துறை அணுகுமுறை அவசியமாகிறது.

## சங்ககாலத் தமிழின் பல்துறைத் தன்மை

சங்க இலக்கியம் தமிழரின் வாழ்க்கையை இலக்கியத்தின் வழியாக மட்டும் பதிவு செய்யவில்லை. அக்காலச் சமூகத்தின் நிலவியல், பொருளாதாரம், அரசியல், வேளாண்மை, வணிகம், போர், காதல், பண்பாடு போன்ற பல்வேறு கூறுகளையும் பதிவு செய்கிறது.

தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் தமிழரின் வாழ்க்கையையும் இயற்கைச் சூழலையும் ஒன்றோடொன்று இணைத்துப் பார்க்கும் சிந்தனையை வெளிப்படுத்துகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நிலப்பரப்பின் அடிப்படையில் மனித உணர்வுகளை வகைப்படுத்தியிருப்பது, தமிழ் சிந்தனையின் தொடக்கத்திலேயே மொழி - இயற்கை - மனிதன் என்ற முப்பரிமாண உறவு இருந்ததை வெளிப்படுத்துகிறது.

இதனால் சங்க இலக்கியத்தை இலக்கியத் துறைக்குள் மட்டுப்படுத்தாமல், சமூகவியல், புவியியல், பொருளாதாரம், சூழலியல், மானுடவியல் ஆகிய துறைகளின் ஆய்வுக்கும் பயன்படுத்த முடிகிறது.

## கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் வழியாகத் தமிழ்

தமிழின் வரலாற்றை அறிய இலக்கியங்கள் மட்டுமே ஆதாரங்களாக இல்லை. கல்வெட்டுகள், நடுகற்கள், நாணயங்கள், பானை ஓடுகள், தொல்லியல் பொருட்கள் ஆகியவையும் முக்கிய ஆதாரங்களாக உள்ளன.

தமிழ் - பிராமி கல்வெட்டுகள் தமிழின் பழமையான எழுத்துப் பயன்பாட்டை அறிய உதவுகின்றன. கல்வெட்டுகள் மூலம் அக்கால மக்களின் பெயர்கள், தொழில்கள், வணிகம், சமயம், நிர்வாகம் போன்ற பல செய்திகளை அறிய முடிகிறது. இதனால் கல்வெட்டியல், தொல்லியல், மொழியியல், வரலாறு ஆகிய துறைகள் ஒன்றிணைந்து

செயல்படும்போது தமிழின் வளர்ச்சியை இன்னும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

## இடைக்காலத்தில் சமயமும் தமிழும்

இடைக்காலத் தமிழின் வளர்ச்சியில் பக்தி இயக்கங்கள் முக்கியமான பங்காற்றின. சைவம் மற்றும் வைணவம் சார்ந்த பக்திப் பாடல்கள் தமிழ் மொழியை மக்களின் அன்றாட சமய அனுபவத்தோடு இணைத்தன. தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் போன்ற படைப்புகள் தமிழ் மொழியின் சொல்வளம் மற்றும் வெளிப்பாட்டு ஆற்றலை விரிவுபடுத்தின.

இக்காலத்தை ஆராயும்போது இலக்கியம் மட்டுமின்றி சமய வரலாறு, கோயில் வரலாறு, கட்டடக்கலை, இசை, சிற்பம், கல்வெட்டியல் ஆகியவற்றையும் இணைத்துப் பார்க்க வேண்டியுள்ளது. இதன் மூலம் தமிழ் ஒரு இலக்கிய மொழியாக மட்டுமல்லாமல், சமூக மற்றும் பண்பாட்டு வாழ்க்கையின் இயக்க மொழியாகவும் வளர்ந்ததை அறியலாம்.

## அச்சுக்கலையும் தமிழின் புதிய பரிமாணமும்

அச்சுக்கலை தமிழின் வளர்ச்சியில் ஒரு முக்கியத் திருப்புமுனையாக அமைந்தது. முன்பு ஓலைச்சுவடிகளின் வழியாகப் பரவியிருந்த அறிவு, அச்சு நூல்களின் வழியாக அதிகமான மக்களைச் சென்றடைந்தது.

அச்சுக்கலையின் வளர்ச்சியால்,

- நூல்கள் பெருமளவில் வெளியிடப்பட்டன.
- பழைய இலக்கியங்கள் பதிப்பிக்கப்பட்டன.
- உரைநடை வளர்ச்சி பெற்றது.
- கல்வி சார்ந்த நூல்கள் பெருகின.
- செய்தித்தாள்கள் மற்றும் இதழ்கள் உருவாகின.
- பொதுமக்களின் வாசிப்பு பழக்கம் விரிவடைந்தது.

இதனால் தொழில்நுட்ப மாற்றம் → பதிப்புத்துறை வளர்ச்சி → வாசிப்பு வளர்ச்சி → மொழி வளர்ச்சி என்ற புதிய தொடர்பு உருவானது.

## இதழியல் மற்றும் நவீன தமிழ்

தமிழ் மொழியின் நவீன வளர்ச்சியில் இதழியலுக்கு தனிப்பங்கு உண்டு. நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள் ஆகியவை புதிய சொற்கள், புதிய கருத்துகள், புதிய அரசியல் மற்றும் சமூக சிந்தனைகளை மக்களிடம் கொண்டு சென்றன. இதழியல் வழியாக தமிழ் மொழி அரசியல், கல்வி, பெண்கள் முன்னேற்றம், சமூக சீர்திருத்தம், அறிவியல், பொருளாதாரம் போன்ற பல்வேறு துறைகளின் கருத்துகளை வெளிப்படுத்தும் கருவியாக மாறியது. இதன் மூலம் தமிழ் இலக்கிய மொழியிலிருந்து அறிவுப் பரிமாற்ற மொழியாக மேலும் விரிவடைந்தது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் தமிழின் உருவாக்கம்

நவீன அறிவியல் வளர்ச்சியுடன் தமிழ் எதிர்கொண்ட முக்கியமான சவால் புதிய அறிவியல் கருத்துகளுக்கான தமிழ்ச் சொற்களை உருவாக்குவதாகும். இயற்பியல், வேதியியல், உயிரியல், கணிதம், மருத்துவம், கணினியியல் போன்ற துறைகளில் புதிய சொற்கள் தேவைப்பட்டன.

இதன் விளைவாக மொழி வளர்ச்சி என்பது பழைய சொற்களைப் பாதுகாப்பதோடு முடிவடையாது| புதிய அறிவை வெளிப்படுத்தும் புதிய கலைச்சொற்களை உருவாக்குவதும் மொழி வளர்ச்சியின் அடிப்படைப் பணியாகும் என்ற கருத்து வலுப்பெற்றது

## திரைப்படமும் பேச்சுத் தமிழின் மாற்றமும்

தமிழ் மொழியின் வளர்ச்சியில் திரைப்படம் ஏற்படுத்திய தாக்கம் தனித்துவமானது. எழுத்துத் தமிழையும் பேச்சுத் தமிழையும் இணைக்கும் ஒரு பொதுத் தளமாக திரைப்படம் செயல்பட்டது. திரைப்படப் பாடல்கள் தமிழ் மொழியின் கவித்துவப் பயன்பாட்டை மக்களிடம் கொண்டு சென்றன. உரையாடல்கள் வழியாகப் பல்வேறு வட்டார வழக்குகள் பொதுமக்களின் கவனத்திற்கு வந்தன.

இதனால் திரைப்படத்தை வெறும் பொழுதுபோக்கு ஊடகமாகப் பார்க்காமல், மொழிப் பரவல் மற்றும் மொழி மாற்றத்தின் சமூக ஊடகமாகவும் ஆய்வு செய்ய முடியும்.

## கணினித் தமிழ் – புதிய மொழிப் பரிணாமம்

கணினியின் வருகை தமிழ் மொழிக்கு புதிய சவால்களையும் வாய்ப்புகளையும் உருவாக்கியது. தமிழ் எழுத்துருக்கள், விசைப்பலகை அமைப்புகள், ருniஉழனந, மின்னூல்கள், இணையதளங்கள், தமிழ் மென்பொருட்கள் போன்றவை மொழியின் பயன்பாட்டை புதிய தளத்திற்கு எடுத்துச் சென்றன. முன்பு ஒரு மொழியின் வளர்ச்சி அதன் அச்சு நூல்களின் எண்ணிக்கையால் அளக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இன்று ஒரு மொழியின் வளர்ச்சியை அதன் டிஜிட்டல் இருப்பு மூலமாகவும் மதிப்பிட வேண்டியுள்ளது.

தமிழில் தேடுபொறிகள், மின்னூல்கள், இணைய இதழ்கள், சமூக ஊடகப் பதிவுகள், கல்வித் தளங்கள் ஆகியவை பெருகியிருப்பது இந்த மாற்றத்தின் அடையாளமாகும்.

## செயற்கை நுண்ணறிவும் தமிழின் எதிர்காலமும்

தற்காலத்தில் செயற்கை நுண்ணறிவு மொழிகளின் பயன்பாட்டை மாற்றி வருகிறது. பேச்சை எழுத்தாக மாற்றுதல், எழுத்தை பேச்சாக மாற்றுதல், இயந்திர மொழிபெயர்ப்பு, தகவல் தேடல், உரை பகுப்பாய்வு போன்ற துறைகளில் தமிழ் பயன்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. இங்கு ஒரு முக்கியமான ஆய்வுக் கேள்வி எழுகிறது.

“தமிழை தொழில்நுட்பத்திற்கு ஏற்ப மாற்றுவது மட்டுமா வளர்ச்சி? அல்லது தொழில்நுட்பத்தையே தமிழின் தேவைகளுக்கு ஏற்ப

மாற்றுவதும் தமிழ் வளர்ச்சியா?" இக்கேள்வி எதிர்காலத் தமிழாய்வின் முக்கியமான திசையாக அமையக்கூடும்.

## பல்துறை ஆய்வின் புதிய அணுகுமுறை

தமிழ் வளர்ச்சியைப் பல்துறைகளோடு இணைத்துப் பார்க்கும்போது பின்வரும் ஆய்வுத் தொடர்புகள் உருவாகின்றன.

துறை - தமிழாய்வுக்கான பங்களிப்பு
இலக்கியம் - படைப்புகள், கருத்துகள், கலைநயம்
மொழியியல் - மொழி மாற்றம், சொல்வளம், இலக்கணம்
வரலாறு - காலப்பின்னணி, அரசியல் மாற்றங்கள்
தொல்லியல் - பழந்தமிழர் வாழ்வியல் ஆதாரங்கள்
கல்வெட்டியல் - பழைய மொழிப் பயன்பாடு, நிர்வாகச் செய்திகள்
சமூகவியல் - சமூக மாற்றமும் மொழிப் பயன்பாடும்
மானுடவியல் - பண்பாடு, பழக்கவழக்கங்கள்
இதழியல் - நவீன கருத்துப் பரவல்
திரைப்படவியல் - பேச்சுமொழி மற்றும் மக்கள் மொழி
கணினியியல் - டிஜிட்டல் தமிழ்

## செயற்கை நுண்ணறிவு - எதிர்கால மொழித் தொழில்நுட்பம்

இதிலிருந்து தமிழ் வளர்ச்சி என்பது ஒரு நேர்கோட்டுப் பயணம் அல்ல என்பது தெளிவாகிறது. ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு துறைகள் தமிழின் வளர்ச்சியை வெவ்வேறு விதங்களில் முன்னெடுத்துள்ளன.

புதிய ஆய்வுக் கோணம்: "தமிழின் வளர்ச்சி என்பது மொழியின் வளர்ச்சி மட்டுமல்ல"

தமிழ் வளர்ச்சியைப் பற்றிய பெரும்பாலான அணுகுமுறைகள் இலக்கியம், இலக்கணம் அல்லது மொழிப் பாதுகாப்பை மையமாகக் கொண்டிருக்கின்றன. அதற்கு மாறாக, இக்கட்டுரை முன்வைக்கும் புதிய பார்வை. "ஒரு மொழி எந்த அளவிற்கு புதிய அறிவுத் துறைகளைத் தன்னுள் ஏற்றுக்கொள்கிறதோ, அந்த அளவிற்கு அது வளர்ச்சியடைந்த மொழியாகக் கருதப்பட வேண்டும்."

சங்ககாலத்தில் தமிழ் இயற்கையையும் மனித வாழ்க்கையையும் பதிவு செய்தது. இடைக்காலத்தில் சமயம் மற்றும் பண்பாட்டை வெளிப்படுத்தியது. நவீன காலத்தில் அரசியல், சமூக சீர்திருத்தம், அறிவியல் போன்றவற்றை உள்வாங்கியது. டிஜிட்டல் காலத்தில் கணினி மற்றும் செயற்கை நுண்ணறிவுடன் தொடர்பு கொள்கிறது. எனவே தமிழின் வளர்ச்சி என்பது "பழமையைப் பாதுகாப்பது", "புதுமையை ஏற்றுக்கொள்வது" என்ற இரு இயக்கங்களின் தொடர்ச்சியாகக் கருதப்பட வேண்டும்.

## முடிவுரை

சங்க காலம் முதல் தற்காலம் வரை தமிழின் பயணம் பல்வேறு துறைகளின் இணைப்பால் உருவான நீண்ட பண்பாட்டு பயணமாகும். சங்க இலக்கியம் தமிழரின் இயற்கை மற்றும் சமூக வாழ்வைப் பதிவு செய்தது. கல்வெட்டுகள் அதன் வரலாற்றுப் பயன்பாட்டை

வெளிப்படுத்தின. பக்தி இலக்கியம் அதன் ஆன்மிகப் பரப்பை விரிவுபடுத்தியது. அச்சுக்கலை அறிவுப் பரவலை அதிகரித்தது. இதழியல் சமூகச் சிந்தனையை உருவாக்கியது. திரைப்படம் மற்றும் ஊடகங்கள் தமிழை மக்கள் மொழியாக மேலும் விரிவுபடுத்தின. கணினி தமிழ் அதன் இருப்பை டிஜிட்டல் உலகிற்கு எடுத்துச் சென்றது. செயற்கை நுண்ணறிவு தமிழின் எதிர்காலப் பயன்பாட்டிற்குப் புதிய வாய்ப்புகளைத் திறந்து வருகிறது.

ஆக, தமிழின் வளர்ச்சி என்பது ஒரு மொழியின் வரலாறு மட்டுமன்று| மனித அறிவின் பல்வேறு துறைகளோடு தமிழ் மேற்கொண்ட தொடர்ச்சியான உரையாடலின் வரலாறாகும். இதனால் எதிர்காலத் தமிழாய்வுகள் இலக்கியத்தை மட்டும் மையப்படுத்தாமல், “தமிழ், அறிவியல், தொழில்நுட்பம், சமூகம், பண்பாடு, வரலாறு” என்ற ஒருங்கிணைந்த அணுகுமுறையை நோக்கிச் செல்ல வேண்டும். அத்தகைய பல்துறை ஆய்வுகளே தமிழின் கடந்தகாலத்தை விளக்குவதோடு, அதன் எதிர்காலப் பாதையையும் வடிவமைக்கக் கூடியதாக இருக்கும்.

## துணைநூற் பட்டியல் (References)

1. தொல்காப்பியம் – பொருளதிகாரம்.
2. குறுந்தொகை, கழக வெளியீடு.
3. புறநானூறு, கழக வெளியீடு.
4. சிலப்பதிகாரம், கழக வெளியீடு.
5. தேவாரம், சைவ சித்தாந்த பதிப்பு.
6. தமிழ் இலக்கிய வரலாறு – மு. வரதராசனார்.
7. தமிழ் இலக்கிய வரலாறு – ச. வையாபுரிப்பிள்ளை.
8. தமிழண்ணல் – சங்க இலக்கிய ஒப்பீடு தொடர்பான ஆய்வுகள்.
9. தமிழ் மொழியின் வரலாறு மற்றும் மொழியியல் சார்ந்த ஆய்வு நூல்கள்.
10. தமிழ்க் கல்வெட்டுகள் மற்றும் தொல்லியல் ஆய்வு வெளியீடுகள்.

**ARTICLE 12 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 85–92

# எட்டுத்தொகை உணர்த்தும் திருக்குறள் வாழ்வியல் கூறுகள்

## Aspects of Life in Thirukkural as Reflected in Ettuthogai

**திருமதி. முனைவர். ஜெ.ஜெயபிரியா**
உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்த்துறை (சுயநிதிப் பிரிவு)
சீதாலட்சுமி இராமசுவாமி கல்லூரி
திருச்சிராப்பள்ளி – 620002.
drpriyaram22@gmail.com, https://orcid.org/0000-0002-7728-8538
Mrs. Dr. J.Jayapriya
Assistant Professor and Head, Department of Tamil (Sf)
Seethalakshmi Ramaswami College Trichy – 620002.
drpriyaram22@gmail.com, 6380134417., https://orcid.org/0000-0002-7728-8538

### Abstract

Sangam literature embodies the way of life articulated through the Tamil language under the aegis of the Sangam. Categorized into *Akam* (inner life/emotions) and *Puram* (outer life/public affairs), these works—specifically the *Ettuthogai* (The Eight Anthologies)—codify the human way of life, present it in a manner relevant to all eras, and endure by conveying the timelessness of these lived experiences. This article examines insights into life found in the distinguished *Ettuthogai* anthologies and analyzes how these themes are reflected in the *Thirukkural*.

The aim of this article is to examine elements of ancient life—specifically hospitality and generosity within domestic life, as well as politics and ethical principles suited to public life. When observing how the *Thirukkural* distills and refines the lifestyles depicted in the *Ettuthogai* anthology into concise couplets, one is prompted to investigate whether Valluvar was a poet of the Sangam era or the post-Sangam era.

Through this article, we can explore the linguistic artistry with which the poets of the Sangam era and Valluvar encapsulated—in simple couplets—the foundational elements of a virtuous life. Drawing upon the *Ettuthogai* (the Eight Anthologies), these verses illustrate key aspects of living such as noble birth, virtuous conduct, education, hospitality, valor, the nature of domestic and ascetic life, generosity, and friendship.

**Keywords:** Ethical living, hospitality, generosity, politics, valor, gratitude

### ஆய்வுச் சுருக்கம்

சங்கம் வைத்து தமிழோடு வாழ்வியல் முறைகளை எடுத்துரைத்தவை சங்க இலக்கியங்கள் ஆகும். அவை அகம் என்றும் புறம் என்றும் பாகுப்படுத்தி, மக்கள் வாழும் வாழ்க்கை முறையினை நெறிப்படுத்தி, எக்காலத்திற்கும் ஏற்ற வகையில் காட்சிப்படுத்தி, இன்றும் இந்நிலை தான் என உணர்வுபடுத்தி நிலைத்து நிற்கிறது எட்டுத்தொகை நூல்கள். அத்தகைய சிறப்பு பெற்ற எட்டுத்தொகை நூல்களிலிருந்து வாழ்வியல் செய்திகளை கண்டாய்ந்து திருக்குறளில் அவ் வாழ்வியல் செய்திகள் எவ்விதம் அமைந்துள்ளன என ஆய்கின்றது இக்கட்டுரை.

பண்டை வாழ்வியல் கூறுகளாக அறியப்படுபவன இல்லற வாழ்க்கையில் மேற்கொள்ளப்படும் விருந்தோம்பல், ஈகை, புற வாழ்வியலுக்கேற்ற அரசியல், வாழ்க்கை நீதி ஆகியவற்றை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது. எட்டுத்தொகை நூலில் மக்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையினைச் செம்மைப்படுத்தி இரு வரிகளில் திருக்குறள் எடுத்தியம்பியுள்ளதைக் காணும் போது வள்ளுவர் சங்க காலத்து

புலவர்தான்? இல்லை சங்கம் மறுவிய காலப் புலவரா? என ஆராயத் தோன்றுகின்றது.

ஆக சங்ககால புலவர்கள் கூறியதும் வள்ளுவர் மொழிந்ததும் மக்கள் நன்னெறியில் வாழ்வதற்குரிய வாழ்வியல் கருத்துகள் நிறைந்த நற்குடிப்பிறப்பு, பண்பொழுக்கம், கல்வி, விருந்தோம்பல், வீரம், இல்லறத் துறவற இயல்புகள், ஈகை, நட்பு என வாழ்வியலின் அங்கங்களாக விளங்குபவற்றின் சான்றாதாரங்களை எட்டுத்தொகையில் அமைந்தவற்றை எளிய இரு வரிகளில் விளக்கிய சொற்சிறப்பத்தை இக்கட்டுரை வழி காணலாம்.

**திறவுச் சொற்கள்:** வாழ்வியல் நீதி, விருந்தோம்பல், ஈகை, அரசியல், வீரம், நன்றியுணர்வு

## முன்னுரை

சங்க இலக்கியம் என்னும் ஆணிவேரினால் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த தமிழர்களின் வாழ்வாதாரங்களை உயிரோட்டமாக வெளிப்படுத்தியதின் பயனாக இன்று அரும்பாக தளிராக காயாக கனியாக தழைத்தேங்கி நிற்கும் இளமைமாறாமல் கற்பகவிருட்சமாக விளங்குவது தமிழ் இலக்கியம்.

அவ் இன்பத் தமிழ் இலக்கியத்தில் எட்டுத்தொகைப் பாடல்களில் அகத்தையும் புறத்தையும் உணர்த்தி அறநூலாக விளங்கும் திருக்குறளின் ஆன்றமைந்த வாழ்வியல் சார்ந்த செய்திகளை இக்கட்டுரை ஆய்கின்றது.

## சங்க இலக்கியம்

சங்க இலக்கியம் பதினெண் மேற்கணக்கு மற்றும் பதினெண்கீழ்க்கணக்கு என இரு நிலைகளில் நூல்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் காதலும் வீரமும் இருக்கண்களாகக் கொண்டு மக்களிடத்து பண்பையும் பயனையும் வளர்த்தவை எட்டுத்தொகை நூல்கள். எட்டுத்தொகை நூல் பற்றி,

*“நற்றிணை நல்லகுறுந்தொகை ஐங்குறுநூறு*
*ஒத்த பதிற்றுப் பத்தோங்கு - பரிபாடல்*
*கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புற மென்*
*றித்திறத்த எட்டுத்தொகை”1*

என்னும் பழம்பாடல் குறிப்பிடுகின்றது. அகமானாலும் புறமானாலும் வாழ்வியலுக்கு அடிப்படைத் தேவை அறம் என்பதை உணர்த்தி நின்று வாழ்வியலைப் பற்றி சங்கப்பாடலுக்குப் பின் வந்த பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான உலகப் பொதமறை என கூறப்படும் திருக்குறளில் ஒன்றமைந்த வாழ்வியல் சார்ந்த செய்திகளை அறியலாம்.

## இல்லற வாழ்க்கை

தலைவியானவள் இப்பிறப்பில் தான் விரும்பி திருமணம் செய்து கொண்டவனை மறுமைக்கும் கணவனாக வரவேண்டும் என்று நினைக்கிறாள்.

*“இம்மை மாறி மறுமை யாயினும்*
*நீயா கியரென் கணவனை*
யானா கியர் நின் நெஞ்சுநேர் பவளே”2 – (குறுந். - 49)

என்ற இப்பாடலின் வழி தலைவியின் உண்மையான மனத்தையும் சிறந்த நடத்தையையும் காண முடிகின்றது. தலைவனே தனக்கு எல்லாம் என்னும் அன்புடை நெஞ்சத்தினை,

*இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்*
கண்ணிறை நீர்கொண் டனள்”3 – குறள் - 1315: அதி – 132

என்ற குறளின் வழியிலும் காணமுடிகின்றது.

அன்பு என்பது இல்வாழ்க்கையில் அடிப்படைப் பண்பைக் குறிப்பது நெஞ்சம் நெகிழ்ந்து இயைந்து வாழ்வதற்கு அன்பு துணையாக அமையும் என்பதைக் குறுந்தொகைப் பாடலானது

*“யாயும் ஞாயும் யாரா கியரோ?*
*எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?*
செம்புலப் பெயல்நீர் போல”4 (குறுந் - 40)

சிவந்த நிலத்தில் பெய்த மழைநீர் ஒன்றெனக்கலந்து, அன்புடையாரின் நிலைமையை எடுத்துணர்த்தியமை போல இருவரிகளில்

*“அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்*
என்பும் உரியர் பிறர்க்கு”5 (குறள் - 72)

அருமையான உயிர் இவ்வுடம்போடு பொருந்தி இயங்குவதற்குக் காரணம் அனைத்து இடத்திலும் அன்பு செய்து வாழ்வதாலேயே என்பதை நிறுவுகின்றது.

## விருந்தோம்பல்

ஒரு மனிதனிடம் மனதில் ஈரம் உள்ளது என்ற பண்பு உண்டென்பதை வெளிப்படுத்துவது பசியென வந்தவற்கு உணவளித்தலாகும். “உண்டிக்கொடுத்தோர் உயிர்க்கொடுத்தோரே (புறம்-18) என பசிக்கு உணவுத் தருதலே சிறந்த விருந்தாகும். “விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின் மேற்றே”6 என்ற தொல்காப்பிய நூற்பாவில் ‘விருந்து’ என்பதற்கு ‘புதுமை’ என்று பொருள் கூறப்படுகிறது. அதன்பயன் புதிதாக வருபவரை வரவேற்று விருந்தயர்வதில் எந்தவொரு துன்பமும் இல்லை என்பதை,

*“வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை*
பருவந்து பாழ்படுதல் இன்று.”7 (குறள் - 83)

தன்பால் வந்த விருந்தினரை போற்றியதை இக்குறள் வழியறியலாம்.

புறநானூற்றுத் தலைவி, தன் இல்லத்திற்கு வந்த விருந்தினரை போற்றி பணியாற்றியதின் காரணமாக தமக்கு ஓய்வு என்பது இல்லை என்பதையும் அதனால் வருத்தம் இல்லை என்பதையும் தெரிவிக்கின்றாள். மற்றொரு முல்லை நிலத்தலைவி, தன்னை நாடி வந்த பாணர் கூத்தர் என அனைவருக்கும்

*“மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து*

நோக்கக் குழையும் விருந்து."8 (குறள் - 90)

என்ற குறளுக்கு ஏற்ப விருந்து படைத்து வருகையில் வரகும் தினையும் தீரவே வந்த விருந்தினரை பேணுவது நம் கடமை என்று உணர்ந்த புறநானூற்றுத் தலைவி,

*"வரகும் திணையும் உள்ளவை எல்லாம்*
*இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தென*
*குறித்து மாறு எதிர்ப்பை பெறா அமையின்*
*குரல் உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து*
சிறிது புறப்பட்டன்றோ இளளே"9 புறம் - 333 : 9-13

தன் இல்லத்தில் விதைக்காக வைத்திருந்த தினையினை உரலிலிட்டு உணவளித்த திறத்தினால் விருந்தோம்பல் பண்பில் உயர்ந்து நிற்பதை உணர்த்துகின்றது.

அன்பும், அறனும், பண்பும் உடைய இல்வாழ்க்கை விருந்தோம்பல் நிலையிலும் ஈதல் நிலையிலும் அமைதல் சிறப்பென்று குறுந்தொகை பாடல் வழி,

*"ஈதலும் துய்த்தலு மில்லோர்க் கில்லெனச்*
சேய்வினை கைம்மிக வெண்ணுமி யவ்வினை"10. (குறுந்.63: 1-2)
என ஈதலின் சிறப்பை வள்ளுவரும்,
*"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல தாம்உடைமை*
வைத்துஇழக்கும் வண் கணவர்"11 (குறள்.228)
என உணர்த்துகிறார்.

பிரிந்து சென்ற காதலன் மீண்டும் வரின் விருந்தயர்தல் மரபாகும். இதனை,
*"மாலை நனி விருந்நதயர் மார்*
தேர்வரு மென்று முறை வாராதே"12 –(குறுந் 155: 6-7)
என்ற பாடலில் விருந்தயர்தலைக் குறிப்பிடுகின்றது.

## ஈகை

பிறருக்கு உதவி செய்து வாழ்தல் மனிதப் பிறவியின் கடமை. ஒருவர் தம் உழைப்பில் ஈட்டிய பொருளின் பயன் மற்றவர்களின் வறுமையைப் போக்கவும், பிறர்க்குப் பயன் தரும் வகையில் உதவுவதே ஆகும். இக்கருத்தினை, ஒரு பொருளுமற்ற வறியவர்க்கு விரும்பி ஒரு பொருளைக் கொடுப்பதே உண்மையான ஈகை என்பதை, "எத்துணையாயினும் ஈதல் நன்று"13-(புறம்-143) என கோப்பெரும் பேகனை பரணர், மற்றொரு புலவரை ஆற்றுப்படுத்தும் நிலையில் வரையாது வழங்கும் வல்லாண்மை உடையவன் அவனை நீ காணின் உன் வறுமை போகும் என்று ஆற்றுப்படுத்துகிறார்.

*"வல்லார் ஆயினும் வல்லுநர் ஆயினும்*
*வருந்தி வந்தோர் மருங்கி நோக்கி*
அருள வல்லை ஆடுமதி"14 -(புறம்-27)

என வரும் புறம்பாடலில் வறியவர்களுக்கு வழங்குவதால் வானவூர்தி இல்லாமலேயே வானத்தில் பறக்கும் தன்மையை இறைவன் வழங்குவான்.

*"நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்*

இல்லெனினும் ஈதலே நன்று”15 -(குறள்-222)

மேலுலகம் இல்லை எனினும் ஈதலே சிறந்தது என்று மொழிவது போல பெருந்தொகைப் பாடல்கள் ஈதலின் மேன்மையை பல இடங்களில் செம்மைப்படுத்துகின்றன. “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே”16-(புறம்-18)

பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு ஈதலால் வரும் பேரின்ப வாழ்வை சுட்டும் போது மனிதனின் அடிப்படைத் தேவை உணவு, இதனை வழங்கும் நீ உயிhக்; கொடுத்த இறைவனாகவே கருதப்படுவாய் என்கிறார்.

*“வறியார்க் கொன்று ஈவதே ஈகை மற்று எல்லாம்*
குறியெதிர்ப்பை நீரது உடைத்து”17 -(குறள்-221)
எனவும்,
“சாதலின் இன்னாதது இல்லை இனிது அதூஉம்
ஈதல் இயையாக் கடை”18 -(குறள்-230)

எனவும் சங்கஇலக்கியம் எதிர்பாராமல் உதவுவது தமிழ்ப்பண்பாடு என்பதை உணர்த்துகிறது. சமூகத்தில் சமநிலை கெடின்;;; மற்ற எல்லா இடையூறுகளும் எழும் என்பதை உணர்த்தவே ஈதலை உயரிய வாழ்வியல் கடனாகப் புலவர்கள் உணர்த்தி நிற்பது சிந்தனைக்குரியது.

## வீரப் பண்பாடு

காக்கைப்பாடினியார், நச்செள;ளையார், தம் மகனின் வீரச் செயலை மறக்குல மங்கை ஒருத்தி வீர உணர்வினை

*“ ‘மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின், உண்ட என்*
*முலைஅறுத் திடுவென், யான்’ எனச் சினைஇ,*
*கொண்ட வாளொடு படுபிணம் பெயரா,*
*செங்களம் துழவுவோள், சிதைந்து வேறாகிய*
*படுமகன் கிடக்கை காணூஉ,*
ஈன்ற ஞான்றினும் பெரிதுஉவந் தனளே!”.19 –(புறம்.278: 4-9)

புறமுதுகில் புண்பட்டு இறந்தானேயானால் அவன் பாலுண்ட முலை அறுத்தெறிவேன் என்றவள் செறுகளத்தில் மார் மீது புண்பட்டு இறந்த மகனைக் கண்டவுடன் ஈன்ற பொழுதை விட பெரிதும் மகிழ்ந்ததனை இரு வரிகளில்,

*“ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்*
சான்றோன் எனக்கேட்ட தாய்”.20 -(குறள்.69 அதி.7)

என மக்கள் போற்றும் சான்றோனாக இருந்து குடிப்பழிப் போக்கினமையால் பெரிதும் மகிழ்ந்த தாயின் உணர்வினை எடுத்துக்காட்டுகிறது.

மற்றொரு மறக்குல மங்கை அரசனால் மதிக்கப்பட்ட தன் மகன் நன்றிக்கடனாக இன்னும் தன் உயிரைத் தருவதற்குரிய காலம் வரவில்லையே என்று ஏங்குவதாக,

*“பலர் மீது நீட்டிய மண்டை என்சிறுவனைக்*
*கால்கழி கட்டிலில் கிடப்பு,*
தூவெள் அறுவை போர்ப்பித்திலதே”21 (புறம்.286: 3-5)

என புறநானூற்றுப் பாடல் மறக்குடித் தாயின் ஏக்கத்தைக்
குறிப்பிடுகிறது. இது

*“புரந்தார்க்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு*
இரந்துகோள் தக்கது உடைத்து”.22 –(குறள்.780: அதி.78)

என வேந்தன் பொருட்டு சாவை ஏற்றுக்கொள்வது சிறப்புக்குரியது என்பதை விளக்குகிறது.

## அரசியல்

பகை மேற்கொள்ளவிருக்கும் தலைவனை இளையன் என்று கருதி போர் மேல் சென்றால் மானம் இழப்பர். எனவே, இகழ்வதை விட்டு பாதுகாப்பாக வாழ்க என்று ஔவையார் அதியனின் வீரத்தினை,

*“தாள் படு சில் நீர்க் களிறு அட்டு வீழ்க்கும்*
*ஈர்ப்புடைக் கராஅத் தன்ன வென்னை*
*நுண்பல் கரும நினையாது*
இளையன் என்று இகழின் பெறலரிது ஆடே”.23 –(புறம்.104: 3-6)

என அதியனை இளையவன் என்று இகழ்ந்து அவனிடத்தே போரிட வந்த தோல்வியுற்ற பகைவரிடத்து இடத்தாலும், மெய் வலியாலும் இயல்பாகவே பெருங்களிற்றினை கவர்ந்துக் கொள்ளும் முதலை போன்று வலிமையானவன் என்பதை, ‘நெடும் புனலுள் வெல்லும் முதலை’ (குறள்.495) என்ற குறள் மூலம் உருவத்தைக் கண்டு அளவிடமுடியாது என்ற அரசியல் நெறியை வழங்குகிறது.

## வாழ்க்கை நீதி

முன்னோர்கள் சேர்த்து வைத்த பொருள்களைக் கொண்டு ஒருவன் குடும்பம் நடத்த முற்படுவான் எனில் அவனை மனிதனாகவே மதிக்காத நிலை காட்டப்படுகிறது. தன் முயற்சியால் புதியப் பொருள்களைத் தேடி முன்னோர் ஈட்டியப் பொருள்களைக் காத்த உயரிய செந்நெறி,

*“உள்ளது சிதைப்போ ருளரெனப் படாஅர்*
இல்லோர் வாழ்க்கை யிரவினு மிளிவெனச்”24 -(குறுந்.283)

எனும் வரியில் வாழ்க்கை நீதியைப் புகட்டுகிறது. அறநெறிப் பிறழாமல் நீதி காத்தல் சான்றோர்க்கழகு என்பதை, ‘அறிகரி பொய்த்த ஆன்றோர்க்கில்லை’25 (குறுந்.184) என ஒவ்வொருவரும் சான்றோர்களாக வாழ்வதற்கு ஏற்ற வகையில் நீதிகளை வழங்குகிறது.

அனைத்திற்கும் பொருளே அடிப்படை என்று கருதும் சமகால சமூகம் பொருளுக்காக எதையும் செய்துவிட துணிகிறது.

*“நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்;*

## செல்வம் அன்று: தன்செய்வினைப் பயனே

*சான்றோர் செல்மென்பது சேர்ந்தோர்*
*புன்கண் அஞ்சும் பண்பின்*
மென்கண் செல்வம் செல்மென் பதுவே”26 (நற்றி – 210)

என்ற நற்றிணைப் பாடல் தன்னைச் சார்ந்து வாழ்வோரின் துன்பத்தினைக் கண்டு இரக்கம் கொண்டு அன்பு செலுத்தி அவர்தம் துன்பத்தை தமது துன்பமாக கருதும் பண்பையே சிறந்த செல்வமாக கருதியதை

*"அருட்செல்வஞ் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்*
பூரியார் கண்ணும் உள"27 – (குறள் -241 அதி 25)
என்பதிலும்
*"அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்*
கிவ்வுலகம் இல்லால் யாங்கு"28 – (குறள் 247 அதி 25)

என்பதிலும் பொருளை மட்டுமே நிலையான செல்வம் என்று நினைத்து மனித மாண்புகளற்ற செயல்களில் ஈடுபட்டு நுகர்வு கலாச்சாரத்தில் சிக்கி சீரழிவதைத் தடுக்க, கொடுக்க கொடுக்க குறையாத அறச்செல்வமான அருட்செல்வமே நீடித்து நிற்கும் உயர்ந்த செல்வம் என்று நம் தமிழர் கண்ட வாழ்வியலை எடுத்துக்காட்டுகின்றது.

## நன்றியறிதல்

ஒருவன் வழியற்று நிற்கும் காலத்தில் அவனுக்கு எவரேனும் சிறு உதவி புரிந்தாலும் கடல் என நினைத்து மறவாது இருக்க வேண்டும். அவ்விதம் செய்நன்றி மறந்தவர் மறுபிறப்பில் நற்கதியை அடைய மாட்டார்கள் என்பதை

*"ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கும்*
*மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்*
*குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்*
*வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென*
*'நிலம் புடைபெயர்வது ஆயினும் ஒருவன்*
செய்தி கொன்றோர்க்கு உய்திஇல்' என"29 – (புறம் 34 : 1-6)

ஒருவன் செய்த நன்றியை சிதைத்தோர்க்கு நரகம் உண்டு என்பதை ஆலத்தூர்க் கிழார் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனிடத்து செய்நன்றி மறத்தலின் விளைவினை எடுத்துரைக்கின்றார்.

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
செய்நன்றி கொன்ற மகற்கு"30 – (குறள் 110 அதி 11)

என்று செய்ந்நன்றியின் பெருமையை இருவரிகளிலும் குறள் மொழிகின்றது.

## தொகுப்புரை

எட்டுத்தொகைப் பாடல்களில் வாழ்க்கை விளக்கச் செய்திகளை இரு வரிகளில் துள்ளிய முறையில் திருக்குறள் எடுத்துரைக்கின்றது. இக்கட்டுரையின் வாயிலாக மக்களின் அரசியல், வீரப்பண்பாடு, விருந்தோம்பல், ஈதல் இன்பம், நன்றியுணர்வு போன்ற வாழ்வுக்குத் தேவையான உன்னத மேன்மையான அறநெறியினை இரு வரிகளில் சொற்சித்திரமாக வடிவமைத்துள்ளதை கண்டு உணர்ந்தோம்.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. சாமி.சிதம்பரனார் - தமிழர் வாழ்வும் பண்பாடும் ப – 4
2. குறுந். – 49
3. குறள் - 1315: அதி – 132
4. குறுந். – 40
5. குறள் - 72: அதி – 8
6. தொல் நூற்பா – 540

7. குறள் - 83
8. குறள் - 90
9. புறம் - 333 : 9-13
10. குறுந்.63: 1-2
11. குறள்.228
12. குறுந் 155: 6-7
13. புறம்-143
14. புறம்-27
15. குறள்-222
16. புறம்-18
17. குறள்-221
18. குறள்-230
19. புறம்.278: 4-9
20. குறள்.69 அதி.7
21. புறம்.286: 3-5
22. குறள்.780: அதி.78
23. புறம்.104: 3-6
24. குறுந்.283
25. குறுந்.184
26. நற்றி – 210
27. குறள் -241 அதி 25
28. குறள் 247 அதி 25
29. புறம் 34 : 1-6
30. குறள் 110 அதி 11)

## துணைநூற் பட்டியல் (References)


1. சாமி.சிதம்பரனார் - தமிழர் வாழ்வும் பண்பாடும் - சாரதா பதிப்பகம் சென்னை 14. முதற்பதிப்பு – டிசம்பர் 2011.
2. முனைவர் வி.நாகராசன் (உ.ஆ). சங்க இலக்கியம் குறுந்தொகை - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். சென்னை -98. 4 ஆம் பதிப்பு – அக்டோபர் 2011
3. பரிமேலழகர் உரை. திருக்குறள் - பழனியப்பா பிரதர்ஸ் சென்னை -14. ஏழாம் பதிப்பு -2007.
4. இளம்பூரணனார் உரை. தொல்காப்பியம் பொருளதிகாரம் - சாரதா பதிப்பகம் சென்னை 14. 11 ஆம்; பதிப்பு – ஜீன் 2011.
5. முனைவர் வி.நாகராசன் (உ.ஆ). சங்க இலக்கியம் புறநானூறு. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். சென்னை -98. 4 ஆம் பதிப்பு – அக்டோபர் 2011
6. முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ). சங்க இலக்கியம் நற்றிணை. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். சென்னை -98. 4 ஆம் பதிப்பு – அக்டோபர் 2011

**ARTICLE 13 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 93–99

# சங்க இலக்கியத்தில் குறிஞ்சிப்பண்

## Kurinjipan in Sangam literature

**முனைவர் த.மலர்விழி**
உதவிப்பேராசிரியர்,, தமிழ் இலக்கியத்துறை, அருள் ஆனந்தர் கல்லூரி
கருமாத்தூர், மதுரை-514., அலைபேசி: 9791236301
இமெயில்முகவரி: malarvizhipommu@gmail.com

### Abstract

References to musical modes (pans) are found in sangam literary works such as the Eattuthokai, Pathuppattu and other sangam period texts, particularly in the Arruppatai works. In this context, this study examines how the Kurinji pan is connected with the successive evolutionary development of music, as well as its transformations and the changes that occurred in the ways it was performed across different social strata.

Furthermore, the objective of this study is to examine the origin, development, transformation, and social use of the kurinji pan by drawing upon, with relevant quotations, the information concerning music, pans, landscapes,and social contexts mentioned in the Tholkappiyam. Based on references to pans found in sangam literature, the primary aim of this research article is to bring to light the musical and social evolution of the kurinji pan.

### ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கிய நூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு மற்றும் பிற சங்ககால இலக்கியங்களிலும் குறிப்பாக ஆற்றுப்படை நூல்களிலும் பண்கள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. அவ்வகையில் குறிஞ்சிப்பண் இசையின் அடுத்த பரிணாம வளர்ச்சியுடன் தொடர்புடையதாக எவ்வாறு அமைகிறது என்பதையும், அதன் நிலைமாற்றங்களையும், சமூகப் படிநிலைகளில் அதனை இசைக்கும் முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களையும் இவ்வாய்வு ஆராய்கிறது. மேலும், தொல்காப்பியம் குறிப்பிடும் இசை, பண், நிலம் மற்றும் சமூகச் சூழல் தொடர்பான செய்திகளை மேற்கோள்களுடன் எடுத்துக்கொண்டு, குறிஞ்சிப் பண்ணின் தோற்றம், வளர்ச்சி, மாற்றம் மற்றும் சமூகப் பயன்பாடு ஆகியவற்றை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். சங்க இலக்கியங்களில் இடம்பெறும் பண் குறித்த செய்திகளை அடிப்படையாகக் கொண்டு, குறிஞ்சிப் பண்ணின் இசையியல் மற்றும் சமூகப் பரிணாமத்தை வெளிக்கொணர்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்

**திறவுச் சொற்கள்:** பண், பண்ணை, பண்ணத்தி, குறிஞ்சிப்பண், துத்தம், அரும்பாலை, அரிகாம்போதி, ஆரோசை, அமரோசை.

முன்னுரை
எத்திசையும் காற்று
எங்கும் கடவுள்
எல்லாம் காதல்
சில இடங்களில் உள்நுழைந்து
இசையாகும் காற்றை என்ன என்பேன்?
மூக்கினிள் நுழைந்து உயிரின்
நரம்பினை மீட்டுகையில்.,
சர்வமும் இசை ஆகுகையில்.,

பண் அறியா உயிர்கள் இல்லை…
அறியாமையில் பிழை ஏதும் இல்லை…

உலக இசை வரலாற்றினை மகைவும் நுணுகி ஆராய்ந்தால் தொல் பழங்காலத்திலேயே நுணுக்கமான இசையறிவு பெற்றுத் திகழ்ந்தவர்களாகத் தமிழர்கள் விளங்கினர் என்ற உண்மையை உணர முடியும். பிற நாடுகளில் இசைக் கலை நாட்டுப்புற இசையின் தன்மையை அடைந்திருந்த காலத்திலேயே தமிழர் இசை செவ்வியல் நிலையை அடைந்திருந்தது. பண்டையக் கால ஆரியர்களும் எகிப்தியர்களும் ஹீப்ரு இனத்தவரும் உயர்ந்த, நேர்த்தியான இசை வடிவத்தைப் பெறுதற்கும் முன்னரே, பண்டைத் தமிழகம் அறிவியல் அடிப்படையில் மிகவும் உறுதியான, தலைசிறந்த, வளர்ச்சியுற்ற இசை முறைமையைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

இவ்விசை முறைமை இந்தியத் துணைக் கண்ட நாடுகள் சீனா, ஜப்பான், பாரசீகம், அரேபியா, கிரீஸ் ஆகிய நாடுகளிலும் பெருஞ்செல்வாக்கைச் செலுத்தியிருந்தது. பித்தகோரஸ் தம் இசையறிவை இந்தியாவிடமிருந்தே பெற்றார் என்று மேற்கத்திய அறிஞர் ஸ்ட்ரோபோ கூறுகின்றார். பித்தகோரஸ், கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் இந்தியாவிற்குப் பயணம் மேற்கொண்டிருக்கிறார். குரல் திரிபு முறையின் அடிப்படையில் பண்களை உருவாக்கும் முறையை தமிழர்கள் ஈராயிரம் ஆண்டுகளுக்கும் முன்னரே அறிந்து வைத்திருந்தனர். மூர்ச்சனைகளும் பாலைகளும் இவ்வடிப்படையிலேயே பெறப்பட்டன.

இதற்கான அடிப்படைச் சான்றுகள் தொல்காப்பியம், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, பெருங்கதை, கல்லாடம் முதலான பண்டைத்தமிழ் நூல்களில் காணப்படுகின்றன. பண்டைக்கால கிரேக்கர்களும் சீனர்களும் இம்முறையிலேயே தங்கள் இசை வடிவங்களைப் பெற்றனர் என்பது இசை ஆராய்ச்சியாளர்களின் கருத்து.

உலகில் மொழி உருப்பெறுவதற்கும் முன்னரே இசை பிறந்து விட்டது என்பது பரிணாம வளர்ச்சித் தத்துவத்தின் அடிப்படையிலானது. அதற்கு பின்னர் தான் மொழி தோன்றி இயலும் பாடலும் பிறந்தன. இவ்வடிப்படையில் தமிழைவிடத் தமிழிசை மிகவும் தொன்மையானது. தொல்பழங்காலத்தில் இசைக்கலை சீருடனும் சிறப்புடனும் விளங்கியற்குத் தொல்காப்பியமே சான்று பகர்கின்றது.

நிலத்தையும் பொழுதையும் முதல் பொருளாகக் கூறிய தொல்காப்பியர் அவற்றிற்கான கருப்பொருளாகப் பறையையும் யாழையும் குறிப்பிடுகிறார்.

*தெய்வ முணாவே மாமரம் புட்பறை*
*செய்தி யாழின் பகுதியொடு தொகை,*

**அவ்வகை பிறவுங் கருவென மொழிப (தொல்.அகத்.20)**

இங்கு ‘பறை’ என்பது அனைத்து தோற்கருவிகளையும், ‘யாழின் பகுதி’ என்பது அனைத்து இசைக் கருவிகளையும் பண்களையும் பற்றிக் குறிப்பதாக அமையும். எனவே, தொல்காப்பியக் காலத்திற்கு முன்னரே

நீண்ட நெடுங்காலமாகத் தமிழர்கள் கடைப்பிடித்து வந்த பழக்க வழக்கங்களின் ஒரு பதிவாகவே நாம் தொல்காப்பியத்தை அணுகவேண்டும்.

## சங்ககாலத்தில் பண்

இனிமையான இசைத் தொடருடைய, ஒலி உருவ அமைப்பைப் 'பண்' என்று கூறலாம். செம்மையான முறையில் ஒழுங்கான இசையமைப்புடன், பாடலில் பொருந்தி நுட்பவுணர்வால் அடையாளம் காணக்கூடிய வகையில், ஒலியுவருங்களாக அமைவது பண்ணாகும். பண்ணை இசைப்பதற்கு என்றே சில இலக்கண வரையறைகள் உள்ளன. இலக்கண முறைகளை அடியொற்றிப் பாடினால் தான் அப்பண் முழுமையடையும். பண்கள் இனிமையான உணர்வுத் தன்மைகளைத் தன்னுள்ளே கொண்டவை. பண் என்ற சொல் இசையைக் குறிக்கவே தொல்காப்பியத்தில் ஆளப்பெறுகிறது. மேலும் இசைபாடும் இடங்கள் 'பண்ணை' எனவும், பாடல்களை இசைக்கேற்ற வண்ணம் பாடும் அமைப்பைப் 'பண்ணத்தி;' எனவும் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. எட்டுத்தொகையில் ஒன்றாகிய பரிபாடல் இசைத்தமிழ்ப் பாடல்களைக் கொண்ட நூலேயாகும். ஓவ்வொரு பாடலிலும், அந்தந்தப் பாட்டுக்குரிய பண் இன்னதென்பது குறிக்கப்பெற்றுள்ளது.

பண் பெயர்க்காரணம்
*"பாவோ டிணைத விசையென்றார் - பண்ணென்ற*
*மேவார் பெருந்தான மெட்டாலும் - பாவா*
*யெடுத்தல் முதலா விருநான்கும் பண்ணிற்*
*படுத்தமையாற் பண்ணென்று பார்"*

'பண்' என்று பெயர் வருவதற்குக் காரணம் உடலில் ஒலி உறுப்புத் தானங்கள் எட்டாலும், எடுத்தல், படுத்தல் முதலிய செயல்கள் எட்டாலும், பண்ணப்படுவதால் 'பண்' என்று பெயர் ஆயிற்று என அடியார்க்கு நல்லார் விளக்கியுள்ளார்.

பெருந்தானம் எட்டாவன
'நெஞ்சும், மிடறும், நாக்கும், மூக்கும், அண்ணமும், உதடும், பல்லும், தலையும் என இவை'

## செயல்கள் எட்டாவன

*"எடுத்தல் படுத்தல் நலிதல் கம்பிதம்*
*குடிலம் ஒலி உருட்டு தாக்கு என இவை"* (சிலம்பு.3.26)

பாடலின் பொருளோடு அசை, சீர்கள் அளவோடு பொருந்தி இசைந்தது 'இசை' எனப்பட்டது. பாடலின் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற எட்டு மெய்பாடுகளுக்கு ஏற்பப் பாடற்பண் பொருந்துதல் வேண்டும். மெய்பாட்டிற்கும், பாடலின் சொல் நடைக்கும் பொருத்தம் வேண்டும்.

இப்பண் எனும் சொல், இடைக்கால மொழியில் அமைந்த இராகம் என்ற சொல் மதங்கரின் 'பிருகத்தேசி' என்ற வடமொழி நூலில் முதன்முதலில் காணப்படுகின்றது.

பண்டைக் காலப் பண்கள் 11,991 என்ற அரும்பதவுரையாசிரியர் சிலம்பதிகார உரையில் குறிப்பிட்டுள்ளார். "பண்களாவன, பாலையாழ் முதலிய நூற்று மூன்று" என்பார், திருக்குறளுக்கு உரைவகுத்த பரிமேலழகர். 103 பண்களின் பெயர்கள் சூடாமணி நிகண்டு, பிங்கல நிகண்டு முதலான நூல்களின் வாயிலாகக் கிடைத்துள்ளன. இவ்வாறாக, சங்க காலத்தில் வழங்கப்பட்ட பண்களைப் பற்றியும், இசைக் கருவிகளைப் பற்றியும் பல்வேறு செய்திகள் பத்துப்பாட்டு நூல்களில் காணப்படுகின்றன.

## குறிஞ்சிப்பண்

ஐந்திணைகளுள் குறிஞ்சி நிலத்திற்குரிய பெரும்பண் குறிஞ்சிப்பண். குறிஞ்சிநில மக்களாகிய மலைக்குரவர்களும், கொடிச்சியரும் இப்பண்ணைப் படுவர். சங்க இலக்கியத்தில் இது அகச் சான்றாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முருகனை ஆற்றுப்படுத்தலின்போது குறிஞ்சிப் பண்ணைப் பாடிய செய்தி திருமுருகாற்றுப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை,

*"நறும்புகை எடுத்து குறிஞ்சி பாடி,*
*இமிழிசை அருவியொடு இன்னியம் கறங்க," (திருமுருகு.239-240)*

என்ற பாடல் அடிகள், வெளிப்படுத்துகின்றன. குறிஞ்சி நிலத்திற்குரிய குறிஞ்சிப் பண்ணைப் பாடி, முழங்குகின்ற முருகன் வரும்படி அழைத்தனர் என்று முருகனை ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சியில் குறிப்பிடப்படுகின்றது.

பொருநராற்றுப்படையில், திணை மயக்கத்தினால் குறிஞ்சி நிலத்திற்குரிய பண்ணாகிய குறிஞ்சியை நெய்தல் நில மக்களாகிய பரதவர் பாடுகின்றனர் என்பதை,

*"குறிஞ்சி பரதவர் பாட" (பொருநர்.218)*

எனும் பாடல் அடி உணர்த்துகிறது.

மலைநாட்டிற்குச் சென்ற விறலியரும் குறிஞ்சிப் பண்ணைப் பாடினர் என்ற செய்தியை மலைபடுகடாமில்,

*"... பல்மாண்*
*செருமிக்குப் புகலும் திரு ஆர் மார்பன்*
*உரும் உரறு கருவிய பெருமலை பிற்பட இறும்பூது கஞலிய*
*நறுங்கார் அடுக்கத்து, குறிஞ்சி பாடி,*
கை தொழூஉப் பரவி, பழிச்சினர் கழிமின்" (மலைபடு.355-360)

என்னும் பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன. உலகம் புகழும் திருமகள் நிறைந்த நன்னனின், உருமேறு முழங்கும் மேகத்தொகுதியையுடைய பெரிய மலை நுமக்குப் பி;ன்னாக, வியப்பு நிறைந்த இனிய யாழினையுடைய விறல்பட ஆடும் ஆடு மகளிர், நறிய கரிய பக்க மலையில் குறிஞ்சி என்னும் பண்ணைப் பாட, நீங்களும் ஆண்டு உறையும் தெய்வங்களைக் கையால் தொழுது, எம் குறை முடிந்தால், நுமக்கு இவை தருவோம் எனப் பரவுக்கடன் நேர்ந்துகொண்டு வாழ்த்திச் செல்வீராக என்று குறிப்பிடப்படுகின்றது. சங்ககால மக்கள், தாம் சென்ற இடத்திற்கு ஏற்ப, நிலத்திற்கேற்ப அப்பண்ணைப் பாடியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

குறிஞ்சிப் பண் குறித்த பதிவு பெரும்பாணாற்றுப்படையிலும் காணப்படுகிறது. முல்லை நிலத்து ஆயர்கள் குழலிலே பாலை யாழை இசைத்தனர். மனத்திற்கு உகந்ததாக இல்லாததால் அவ்விசையை வெறுத்தனர். பின்னர் வில்யாழில் குறிஞ்சிப் பண்ணை இசைத்துக் கொண்டு பாடினர். இச்செய்தியை,

*“வில்யாழ் இசைக்கும் விரல் எறி குறிஞ்சி”* (பெரும்பாண்.182)

என்று பெரும்பாணாற்றுப்படைப் பாடலடி குறிக்கின்றது.

குறிஞ்சி நிலமானது மரங்கள் நிறைந்த மலை நிலம். மலையின் மக்களாகிய கானவர், மலைக்குறவர், கொடிச்சியர் ஆகியோர் வாழும் நிலம். இவர்கள் கிழங்கு முதலான காய், கனிகள், தானியங்களை விளைவித்து வாழ்க்கை நடத்துபவர்கள். தினைப்புனம் காக்கும்போதும், ஊர்காவலின்போதும், குறிஞ்சிப் பண்ணைப் பாடியுள்ளனர். முருக வழிபாட்டின்போதும் பாடப்பட்டுள்ளது. குறிஞ்சி நிலத்திற்குரிய குளிர்காலத்தில் நள்ளிரவில் மலையின மக்களால் பாடப்பட்டுள்ளது. இப்பண் குறிஞ்சி நிலத்திற்கு மட்டுமே உரிய பண்ணாக மட்டும் இல்லாமல் முல்லை, நெய்தல் ஆகிய இடங்களிலும் அவ்வப்போது பாடப்பட்ட பண்ணாகச் சங்க இலக்கியம் பதிவு செய்துள்ளது. நள்ளிரவில் பாடுவதால் யாமயாழ் எனும் நற்பெருரை இப்பண் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

நூற்றுமூன்று பண்களுள் குறிஞ்சிப் பெரும்பண். இது ஏழு சுரங்களை உடையது. பஞ்சமரபில் இந்தக் குறிஞ்சிப் பண் அரும்பாலையில் பிறந்ததாகவும், நைவளம், காந்தாரம், படுமலை, கவ்வாணம், மருள், அயிர்ப்பு, பஞ்சுரம், அரற்று செந்திறம் ஆகிய திறங்களை உடையதாகக் குறிப்பிடப்படுகின்றது.

செம்பாலையின் துத்தம் குரலாக ஒலிப்பதன்மூலம் கிடைப்பது குறிஞ்சி என்கிறார் வீ.ப.கா.சுந்தரம். (வீ.ப.கா.சுந்தரம், தமிழிசைக் கலைக்களஞ்சியம், முதல் தொகுதி, ப.188). பண்ணாராய்ச்சி மாநாட்டில் இப்பண் அரிகாம்போதி இராகமாக முடிவுசெய்யப்பட்டுள்ளது. தற்போது தேவாரப் பண்களைப் பாடும் ஓதுவார்கள் அரிகாம்போதி அல்லது குறிஞ்சி இராகங்களில் பாடுகின்றனர். தற்காலக் குறிஞ்சி இராகம் என்பது குறைந்த சுரங்களை உடையது. தவிர 29 ஆவது மேளமான சங்கராபரணத்தில் பிறந்தது. எனவே, குறிஞ்சி எனும் சங்க காலப் பண்ணிற்குத் தற்கால அரிகாம்போதி இராகமே மிகவும் பொருத்தமானதாகக் கொள்ளலாம்.

அரிகாம்போதி 72 தாய் இராகங்களில் 28 ஆவது தாய் இராகமாகும். இதன் ஆரோசை – சரிகமபதநிச; அமரோசை – ச்நிதபமகரிச. குரல், இளி, தவிர (சதுஷ்ருதி ரிஷபம்) குறை கைக்கிளை (அந்தர காந்தாரம்) குறை உழை (சுத்த மத்யமம்) நிறை விளரி (கைசிகி நிஷாதம்) என்று வருகின்றன. உழை, தாரம் ஆகியவை இராகத்தின் வடிவத்தை வெளிப்படுத்தும். தாரம், துத்தம், உழை ஆகியவை கமகங்களுடன் பாடப்படுகின்றன. கைக்கிளை, விளரி ஆகியன இணைக்கிளைச் சுரங்களாகும். பண் பழம் பஞ்சுரத்தின் இளியும், படுமலைப் பாலையின்

உழையும், குரலாகப் பாடப்பட்டால் இந்த இராகம் கிடைக்கிறது. அரிகாம்போதி இராகத்தின் து, உ, இ, வி, தா ஆகிய சுரங்களைக் குரலாகக்கொண்டு பண்ணுப் பெயர்க்கலாம்.

மெலிவு, வலிவு, சமன் எனும் மூன்று இயக்குகளிலும் பாடுவதற்கு ஏற்ற இராகம்.

இன்றைக்கு அரிகாம்போதி இராகம் குறிஞ்சிப்பண் எனும் பெயரில் வழங்கப்பட வில்லை. மாறாக, குறிஞ்சிப் பண் அரிகாம்போதி இராகம் என்ற பெயரில் வழங்கப்பட்டு வருகின்றது.

## நிறைவாக

இந்த ஆய்வுக்கட்டுரையின் வாயிலாக குறிஞ்சி நிலக்கடவுளான முருகனை வழிபடவும், விளங்குகளை அமைதிப்படுத்தவும், தினைப்புனம் காக்கும் காலத்தில் மக்களால் இப்பண் பாடப்பட்டது என்றும் அறியமுடிகிறது. சங்க காலத்தில் மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலத்துக்காகப் பாடப்பட்ட குறிஞ்சிப்பண் இன்று கர்நாடக இசையில் சங்கராபரணம் அல்லது ஹரிகாம்போஜி போன்ற செவ்வியல் இராகங்களின் வடிவமாகப் பரிணமித்துள்ளது. இது நாட்டுப்புற இசையின் வேர்களைக் கொண்டு வளர்ந்த மங்களகரமான தொன்மை வாய்ந்த இசைப்பண்ணாக குறிஞ்சிப் பண்ணாகும். தமிழ்மொழியில் பண்களை பயன்படுத்திட கல்வி பாடத்திட்டங்களில் கற்பிக்க அரசு முயற்சி செய்ய வேண்டும். இதன் வாயிலாக இசையின் மூலம் தமிழ்மொழியில் பிறந்த பண் இசை என உலகிற்கு பறைச்சாற்றிட முடியும்.

## துணைநூற் பட்டியல் (References)

1. அங்கயற்கண்ணி, இ., 2002, தமிழக இசையும் ஆய்வும், கலையாக வெளியீடு, தஞ்சாவூர்.
2. அடிகளாசிரியர் (ப.ஆ), தொல்காப்பியம், பொருளதிகாரம், 1985, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
3. அருணாச்சலம் பிள்ளை,மு., பாலசுப்பிரமணியம், உல.(ப.ஆ), 2009, தமிழ் இசை இலக்கிய வரலாறு தொகுதி-1, கடவு பதிப்பகம், மதுரை.
4. ஆலீஸ்,சு. (உ.ஆ), மு.ப.2004, பதிற்றுப்பத்து மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், சென்னை.
5. ஆளவந்தார், ஆர்., 1981, தமிழர் தோற்கருவிகள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
6. இராசமாணிக்கனார், மா., 2012, பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சாகித்திய அகாதெமி, சென்னை.
7. இளம்பூரணர் (உ.ஆ), 1986, தொல்காப்பியம், எழுத்ததிகாரம், கழக வெளியீடு,சென்னை.
8. கலைவாணி, தமிழ்வேலு, சு., 2005, சங்க இலக்கியத்தில் இசை, ஏழிசைப்பதிப்பகம், கும்பகோணம்.
9. கமலைத் தியாகராசன், பி.டி.ஆர்., 2001, இசைத்தமிழின் உண்மை வரலாறு, விவேகானந்தா அச்சகம், சென்னை.
10. புவனேஸ்வரி, கூ.,மு.,2023, பத்துப்பட்டில் இசை, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை.

11. பெருமாள்,ஏ.என்., 1984, தமிழர் இசை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
12. வெள்ளைவாரணார், 2008, இசைத்தமிழ், பாரி நிலையம், சென்னை.
13. விபுலாநந் சுவாமிகள், 1974, யாழ்நூல், கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சாவூர்.
14. முனைவர் மலர்விழி.த. 2026, ஆற்றுப்படை நூல்களில் இசைக்கருவிகள், அருள் ஆனந்தர் கல்லூரி, கருமாத்தூர்-514.

**ARTICLE 14 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 100–107

# திருக்குறள் காட்டும் நிர்வாகச் சிந்தனைகள் – அன்றும் இன்றும்

## Administrative Thoughts Propounded by Thirukkural – Then and Now

**சே. சுப்புத்தாய்**
பட்டதாரி ஆசிரியர் (அறிவியல்), அரசு மேல்நிலைப்பள்ளி, அழகியநல்லூர்
விருதுநகர் மாவட்டம் – 626109, தமிழ்நாடு, இந்தியா
மின்னஞ்சல்: gopikar2114@gmail.com

## Abstract

Thirukkural, acclaimed as a universal ethical classic, is a remarkable treatise that integrates the fundamental dimensions of human life, namely virtue, wealth and love. Among its three divisions, Porutpaal contains profound ideas relating to governance, leadership, administration, ministerial competence, justice, planning, efficiency, strategic timing and public welfare. The administrative principles articulated by Thiruvalluvar are not confined to the political system of his time; rather, they remain relevant to contemporary public administration, organisational management and leadership practices.

This research paper examines the administrative thoughts embodied in Thirukkural and compares them with selected principles of modern management. Particular attention is given to leadership, planning, informed decision-making, selection of competent personnel, ethical administration, justice, resource management and public welfare. The study seeks to establish that although administrative systems and technological tools have evolved over time, the fundamental values of good governance—ethics, wisdom, justice, responsibility and humanity—remain unchanged. Thus, Thirukkural continues to serve as a timeless source of administrative wisdom for both contemporary and future governance.

**Keywords:** Thirukkural, Administration, Leadership, Good Governance, Ethics, Planning, Decision-making, Management.

## ஆய்வுச் சுருக்கம்

உலகப் பொதுமறையாகப் போற்றப்படும் திருக்குறள் மனித வாழ்வின் அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பெரும் கூறுகளையும் ஒருங்கிணைத்து விளக்கும் தலைசிறந்த வாழ்வியல் நூலாகும். அவற்றுள் பொருட்பால் அரசியல், ஆட்சி, தலைமைத்துவம், அமைச்சு, நீதி, திட்டமிடல், வினைத்திறன், காலமறிதல், இடனறிதல் மற்றும் குடிமக்கள் நலம் போன்ற பல்வேறு நிர்வாகக் கூறுகளை உள்ளடக்கியுள்ளது. திருவள்ளுவர் முன்வைக்கும் இச்சிந்தனைகள் அக்கால அரசியல் நிர்வாகத்திற்கு மட்டுமல்லாமல், இன்றைய அரசு நிர்வாகம், நிறுவன மேலாண்மை மற்றும் தலைமைத்துவக் கோட்பாடுகளுக்கும் பொருத்தமானவையாகத் திகழ்கின்றன.

இவ்வாய்வுக் கட்டுரை திருக்குறளில் இடம்பெறும் நிர்வாகச் சிந்தனைகளை அடையாளம் கண்டு அவற்றை நவீன நிர்வாகக் கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு ஆராய்கிறது. குறிப்பாக தலைமைத்துவம், திட்டமிடல், அறிவார்ந்த முடிவெடுத்தல், தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்தல், அறநெறி நிர்வாகம், நீதி, வள மேலாண்மை மற்றும் மக்கள் நலம் ஆகிய கூறுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. காலமும் நிர்வாகக் கருவிகளும் மாறினாலும் நல்ல நிர்வாகத்திற்கான அடிப்படை மதிப்புகளான அறம், அறிவு, நீதி, பொறுப்பு மற்றும் மனிதநேயம் மாறவில்லை என்பதை நிறுவுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்:** திருக்குறள், நிர்வாகம், தலைமைத்துவம், நல்லாட்சி, அறநெறி, திட்டமிடல், முடிவெடுத்தல், மேலாண்மை.

## 1. முன்னுரை

தமிழ் இலக்கிய உலகில் காலத்தை வென்று நிலைத்திருக்கும் நூல்களில் முதன்மையான இடத்தைத் திருக்குறள் பெற்றுள்ளது. குறைந்த சொற்களில் நிறைந்த பொருளை வழங்கும் அதன் தனிச்சிறப்பு, பல்வேறு அறிவியல் மற்றும் சமூக அறிவியல் துறைகளில் புதிய ஆய்வுகளுக்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. திருக்குறள் பொதுவாக அறநூலாகக் கருதப்பட்டாலும், அதன் பொருட்பால் அரசியல் மற்றும் நிர்வாகவியல் சிந்தனைகளின் செறிவான களஞ்சியமாக விளங்குகிறது.

நிர்வாகம் என்பது வெறும் ஆணையிடுதல் அல்லது அதிகாரத்தைப் பயன்படுத்துதல் அல்ல. திட்டமிடுதல், மனித வளங்களை ஒருங்கிணைத்தல், சரியான முடிவெடுத்தல், வளங்களைப் பாதுகாத்தல், நீதியை நிலைநாட்டுதல் மற்றும் பொதுநலனை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த செயல்பாடே நிர்வாகமாகும். இத்தகைய நிர்வாகக் கூறுகளைத் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பல்வேறு அதிகாரங்களின் வழியாக விளக்கியுள்ளார்.

எனவே, திருக்குறளில் இடம்பெறும் நிர்வாகச் சிந்தனைகளை அன்றைய சமூக மற்றும் அரசியல் சூழலுடன் மட்டுப்படுத்தாமல், இன்றைய நவீன நிர்வாகக் கோட்பாடுகளுடன் ஒப்பிட்டு ஆராய்வது அவசியமாகிறது.

## 2. ஆய்வின் நோக்கமும் அணுகுமுறையும்

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் திருக்குறளில் இடம்பெறும் நிர்வாகச் சிந்தனைகளைத் தொகுத்து, அவை நவீன நிர்வாக நடைமுறைகளுடன் கொண்டுள்ள தொடர்பை ஆராய்வதாகும்.

இவ்வாய்வில் பின்வரும் கூறுகள் கருத்தில் கொள்ளப்படுகின்றன:
- தலைமைத்துவப் பண்புகள்
- திட்டமிடல் மற்றும் செயலாக்கம்
- அறிவார்ந்த முடிவெடுத்தல்
- தகுதியான மனிதவளத் தேர்வு
- அறநெறி மற்றும் பொறுப்புணர்வு
- நீதி மற்றும் நல்லாட்சி
- வள மேலாண்மை
- மக்கள் நலன்

இவ்வாய்வு திருக்குறளின் தொடர்புடைய அதிகாரங்களையும், நிர்வாகவியல் சார்ந்த கருத்துகளையும் ஒப்பீட்டு மற்றும் விளக்க ஆய்வு முறையில் அணுகுகிறது.

## 3. திருக்குறளில் நிர்வாகச் சிந்தனையின் அடித்தளம்

திருக்குறள் முன்வைக்கும் நிர்வாகச் சிந்தனையின் அடிப்படை அறமாகும். அதிகாரமும் பொறுப்பும் ஒன்றோடொன்று இணைந்திருக்க வேண்டும் என்ற கருத்தைத் திருவள்ளுவர் வலியுறுத்துகிறார். அதிகாரம்

பெற்றவர் தனது தனிப்பட்ட விருப்பத்திற்காகச் செயல்படாமல் பொதுநலனை நோக்கமாகக் கொண்டு செயல்பட வேண்டும்.

நிர்வாகத்தின் செயல்முறையை,
அறம் → அறிவு → திட்டமிடல் → செயலாக்கம் → கண்காணிப்பு → மக்கள் நலம்

என்ற தொடர்ச்சியான அமைப்பில் காண முடியும். இத்தகைய அணுகுமுறை நவீன நிர்வாகத்தின் திட்டமிடல், செயலாக்கம் மற்றும் மதிப்பீடு என்ற செயல்முறைகளுடன் தொடர்புடையதாகும்.

4. தலைமைத்துவம்: அதிகாரமல்ல, பொறுப்பு

திருக்குறளில் வேந்தனுக்குரிய பண்புகள் விரிவாகக் கூறப்படுகின்றன. அவை இன்றைய தலைமைத்துவக் கோட்பாடுகளுடன் ஒப்பிடத்தக்கவை.

“அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு.”[1]

தலைமைப் பொறுப்பில் இருப்பவருக்கு துணிவு, கொடைத்தன்மை, அறிவு மற்றும் செயல் ஊக்கம் ஆகியவை இன்றியமையாதவை என்பதை இக்குறள் உணர்த்துகிறது.

நவீன நிர்வாகத்தில் தலைமைத்துவம் என்பது அதிகாரத்தின் வெளிப்பாடு அல்ல; நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதற்காக மனிதர்களை ஊக்குவித்து வழிநடத்தும் திறனாகக் கருதப்படுகிறது. இக்கருத்துடன் திருவள்ளுவரின் தலைமைத்துவச் சிந்தனை நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

5. திட்டமிடல்: செயலுக்கு முன் சிந்தனை

சிறந்த நிர்வாகத்தின் முதல் படி திட்டமிடலாகும். திருவள்ளுவர் ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன்பாக அதன் அனைத்துப் பரிமாணங்களையும் ஆராய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார்.

“எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.”[2]

செயலைத் தொடங்குவதற்கு முன் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் என்பதே இக்குறளின் மையக் கருத்தாகும்.

நவீன மேலாண்மையில் ஒரு திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன் அதன் நோக்கம், தேவையான வளங்கள், கால அளவு, இடர்பாடுகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் மதிப்பிடப்படுகின்றன. இதுவே திருக்குறள் வலியுறுத்தும் முன்னறிவும் திட்டமிடலும் ஆகும்.

## 6. அறிவுடைமை மற்றும் நிர்வாக முடிவெடுத்தல்

நிர்வாகத் திறனின் அடிப்படை அறிவார்ந்த முடிவெடுத்தலாகும். தகவலைப் பெறுவது மட்டுமே அறிவாகாது; அதன் உண்மையை ஆராய்ந்து சரியான முடிவை எடுப்பதே அறிவுடைமை.

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.”[3]

தகவல்களின் மூலத்தை மட்டும் கருத்தில் கொள்ளாமல், அதன் உண்மைப் பொருளை ஆராய வேண்டும் என்ற உயர்ந்த அறிவியல் அணுகுமுறையை இக்குறள் எடுத்துரைக்கிறது.

இன்றைய தரவுசார் நிர்வாகத்தில் தகவல் சேகரிப்பு, தரவு பகுப்பாய்வு மற்றும் ஆதார அடிப்படையிலான முடிவெடுத்தல் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்நிலையில், திருக்குறளின் அறிவுடைமைச் சிந்தனை நவீன நிர்வாகத்திற்கும் பொருந்தக்கூடியதாக உள்ளது.

## 7. தகுதியறிந்து பொறுப்பளித்தல்

ஒரு நிர்வாகத்தின் வெற்றி அதன் மனிதவளத்தைச் சரியான முறையில் பயன்படுத்துவதில் உள்ளது. திறமை மற்றும் தகுதியை ஆராயாமல் பொறுப்புகளை வழங்குவது நிர்வாகத் தோல்விக்கு வழிவகுக்கும்.

திருவள்ளுவர்,
“அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.”[4]
என்று குறிப்பிடுகிறார்.

ஒருவரின் அறிவு, அனுபவம் மற்றும் திறனை ஆராய்ந்து அவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது இக்கருத்தின் சாரமாகும். இன்றைய மனிதவள மேலாண்மையில் காணப்படும் தகுதிக்கேற்ற பணியாளர் தேர்வு மற்றும் பொறுப்பளித்தல் என்ற கொள்கையுடன் இதனை ஒப்பிடலாம்.

## 8. அறநெறி நிர்வாகமும் பொறுப்புணர்வும்

நிர்வாகம் அறநெறியை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பது திருக்குறளின் அடிப்படைக் கருத்தாகும். அதிகாரம் தனிப்பட்ட ஆதாயத்திற்காகப் பயன்படுத்தப்படாமல் பொதுநலனுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

இன்றைய நிர்வாகத்தில் நேர்மை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு மற்றும் ஊழலற்ற செயல்பாடு ஆகியவை நல்லாட்சியின் அடிப்படைகளாகக் கருதப்படுகின்றன.

அறநெறியைப் பின்பற்றும் நிர்வாகம் மட்டுமே மக்களின் நம்பிக்கையைப் பெற முடியும். எனவே, திருக்குறள் வலியுறுத்தும் அறம் சார்ந்த நிர்வாகம், இன்றைய Ethical Governance என்ற கருத்திற்கு அடித்தளமாக அமைகிறது.

## 9. நீதி மற்றும் நல்லாட்சி

நல்லாட்சியின் மையப்புள்ளி நீதியாகும். சார்பின்றி செயல்படுதல், உண்மையை ஆராய்தல் மற்றும் அனைவருக்கும் சமமான அணுகுமுறையைக் கடைப்பிடித்தல் ஆகியவை நிர்வாகத்தின் உயர்ந்த பண்புகளாகும்.

“ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை.”[5]

இக்குறள் நிர்வாக முடிவுகளில் சார்பின்மையின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

இன்றைய ஜனநாயக நிர்வாகத்தில் சட்டத்தின் ஆட்சி, சமத்துவம், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு ஆகியவை நல்லாட்சியின் அடிப்படைக் கூறுகளாகக் கருதப்படுகின்றன. திருக்குறளின் செங்கோன்மைக் கருத்து இன்றைய நல்லாட்சிச் சிந்தனையுடன் நேரடியான தொடர்பு கொண்டுள்ளது.

## 10. செயல் திறனும் காலமறிதலும்

ஒரு செயலைச் சரியான முறையில் செய்வது மட்டுமல்லாமல், சரியான நேரத்தில் செய்வதும் நிர்வாக வெற்றிக்கு அவசியமாகும். காலத்தை உணர்ந்து செயல்படும் திறன் தலைமைத்துவத்தின் முக்கியப் பண்பாகும்.

திருக்குறள் வினைத்திட்பம், காலமறிதல் மற்றும் இடனறிதல் ஆகியவற்றின் மூலம் செயலின் வெற்றிக்குத் தேவையான சூழ்நிலைப் புரிதலை வலியுறுத்துகிறது.

இன்றைய நிர்வாகத்தில் இது திட்ட மேலாண்மை, கால மேலாண்மை மற்றும் இடர் மேலாண்மை போன்ற கருத்துகளுடன் தொடர்புடையதாகும்.

## 11. வள மேலாண்மை மற்றும் மக்கள் நலம்

ஒரு நாட்டின் அல்லது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அதன் வளங்களைச் சரியாக நிர்வகிப்பது அவசியம். பொருள், மனிதவளம், நேரம் மற்றும் அறிவு ஆகியவை நிர்வாகத்தின் முக்கிய வளங்களாகும்.

திருக்குறளில் பொருள் ஈட்டுதல், பாதுகாத்தல் மற்றும் முறையாகப் பயன்படுத்துதல் தொடர்பான கருத்துகள் இடம்பெறுகின்றன. வளங்களை வீணாக்காமல் எதிர்காலத் தேவையையும் கருத்தில் கொண்டு பயன்படுத்துவதே சிறந்த நிர்வாகமாகும்.

நிர்வாகத்தின் இறுதி நோக்கம் மக்களின் நலனாக இருக்க வேண்டும். பொதுநலன் இல்லாத நிர்வாகம் நீண்ட காலம் நிலைத்திருக்க முடியாது. இக்கருத்து அன்றைய அரசாட்சிக்கும் இன்றைய மக்களாட்சி நிர்வாகத்திற்கும் பொருந்தக்கூடியதாகும்.

## 12. அன்றும் இன்றும்: ஒப்பீட்டுப் பார்வை

திருக்குறள் காட்டும் நிர்வாகச் சிந்தனைகள் அன்றைய அரசாட்சி முறையை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும், அவற்றின் அடிப்படைக் கருத்துகள் இன்றைய நவீன நிர்வாகத்திலும் பொருந்தக்கூடியவையாக உள்ளன. காலத்திற்கேற்ப நிர்வாகத்தின் வடிவங்களும் கருவிகளும் மாறியுள்ளன; எனினும் அதன் நோக்கமும் அடிப்படைப் பண்புகளும் பெரும்பாலும் மாறாமல் தொடர்கின்றன.

### தலைமைத்துவம்

அன்று நாட்டை வழிநடத்தும் பொறுப்பு வேந்தனிடம் இருந்தது. இன்று அரசியல் தலைவர்கள், நிர்வாக அதிகாரிகள் மற்றும் நிறுவனத்

தலைவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்றுள்ளனர். ஆனால் இரு காலங்களிலும் திறமையான, பொறுப்பான தலைமை அவசியமாகும்.

## ஆலோசனையும் முடிவெடுத்தலும்

அன்று அரசன் அமைச்சர்களின் ஆலோசனையைப் பெற்று ஆட்சி செய்தான். இன்று நிர்வாகிகள் வல்லுநர்கள், ஆலோசகர்கள் மற்றும் குழுக்களின் கருத்துக்களைப் பெற்று முடிவெடுக்கின்றனர். அறிவார்ந்த ஆலோசனையின் அடிப்படையில் செயல்படுதல் அன்றும் இன்றும் முக்கியமானதாகும்.

## திட்டமிடல்

திருவள்ளுவர் எந்தச் செயலையும் தொடங்குவதற்கு முன் நன்கு சிந்தித்து முடிவெடுக்க வேண்டும் என வலியுறுத்துகிறார். இன்று திட்ட அறிக்கை, செயல்திட்டம் மற்றும் முன் மதிப்பீடு போன்ற முறைகள் நடைமுறையில் உள்ளன. எனவே திட்டமிட்டு செயல்படுதல் இரு காலங்களிலும் நிர்வாக வெற்றியின் அடிப்படையாக உள்ளது.

## தகுதியறிந்து பொறுப்பளித்தல்

அன்று அறிவும் திறனும் அனுபவமும் உள்ளவர்கள் அரசுப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இன்று கல்வி, திறன் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் பணியாளர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். சரியான நபருக்குச் சரியான பொறுப்பை வழங்குதல் என்ற கொள்கை காலம் கடந்தும் தொடர்கிறது.

## நீதி மற்றும் அறநெறி

அன்று வேந்தன் சார்பின்றி நீதி வழங்கி அறத்தின் வழியில் ஆட்சி செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இன்று சட்டத்தின் ஆட்சி, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு ஆகியவை நல்லாட்சியின் அடிப்படைகளாகக் கருதப்படுகின்றன. அறமும் நீதியும் அன்றும் இன்றும் சிறந்த நிர்வாகத்தின் உயிர்நாடியாக உள்ளன.

## வள மேலாண்மை

அன்று நாட்டின் பொருள் மற்றும் வளங்களைப் பாதுகாப்பது அரசனின் முக்கியக் கடமையாக இருந்தது. இன்று நிதி, மனிதவளம் மற்றும் இயற்கை வளங்கள் திட்டமிட்டு நிர்வகிக்கப்படுகின்றன. வளங்களை வீணாக்காமல் பயனுள்ள முறையில் பயன்படுத்துதல் இரு காலங்களிலும் அவசியமானதாகும்.

## காலமறிதலும் செயல்திறனும்

அன்று தக்க காலம் அறிந்து செயல்படுதல் நிர்வாக வெற்றிக்கு முக்கியமானதாகக் கருதப்பட்டது. இன்று கால அட்டவணை, காலக்கெடு மற்றும் செயல்திறன் மதிப்பீடு ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. சரியான நேரத்தில் சரியான செயலை மேற்கொள்ளுதல் என்ற சிந்தனை மாறாமல் தொடர்கிறது.

### மக்கள் நலம்

அன்று குடிமக்களின் பாதுகாப்பும் நலனும் அரசின் முக்கியப் பொறுப்பாகக் கருதப்பட்டது. இன்று மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் பொதுச் சேவைகள் அரசின் முதன்மைச் செயல்பாடுகளாக உள்ளன. மக்கள் நலனே நிர்வாகத்தின் இறுதி நோக்கம் என்ற கருத்து அன்றும் இன்றும் நிலைத்திருக்கிறது.

### ஒப்பீட்டின் சாரம்

இவ்வாறு நோக்கும்போது, அன்றைய வேந்தன் இன்றைய நிர்வாகத் தலைவராகவும், அமைச்சர் இன்றைய ஆலோசகர் அல்லது மேலாளராகவும், அரசவை இன்றைய நிர்வாகக் குழுவாகவும் வடிவம் மாற்றம் பெற்றுள்ளது. இருப்பினும் அறம், அறிவு, திட்டமிடல், தகுதியறிதல், நீதி, பொறுப்புணர்வு மற்றும் மக்கள் நலம் ஆகிய அடிப்படை நிர்வாகக் கோட்பாடுகள் கால மாற்றத்தால் மாறவில்லை. இதுவே திருக்குறள் காட்டும் நிர்வாகச் சிந்தனைகளின் காலம் கடந்த சிறப்பை வெளிப்படுத்துகிறது.

## 13. நவீன தொழில்நுட்பக் காலத்தில் திருக்குறளின் பொருத்தப்பாடு

இன்றைய நிர்வாகம் செயற்கை நுண்ணறிவு, பெருந்தரவு, மின்னணு ஆட்சி மற்றும் தானியங்கி அமைப்புகளின் உதவியுடன் செயல்படுகிறது. இத்தகைய தொழில்நுட்பங்கள் நிர்வாக முடிவுகளை விரைவுபடுத்துகின்றன.

எனினும் தொழில்நுட்பம் மனித அறிவுக்கும் அறநெறிக்கும் மாற்றாக அமைய முடியாது. தகவலை வழங்குவது தொழில்நுட்பத்தின் பணியாக இருக்கலாம்; ஆனால் அந்தத் தகவலை மனிதநேயம் மற்றும் நீதியின் அடிப்படையில் பயன்படுத்துவது நிர்வாகியின் பொறுப்பாகும்.

எனவே, தொழில்நுட்பம் வளர்ந்த இக்காலத்திலும் திருக்குறள் வலியுறுத்தும் அறிவுடைமை, அறநெறி மற்றும் பொறுப்புணர்வு ஆகியவை மேலும் முக்கியத்துவம் பெறுகின்றன.

## 14. ஆய்வுக் கண்டறிதல்கள்

இவ்வாய்வின் மூலம் பின்வரும் கருத்துகள் கண்டறியப்படுகின்றன:

திருக்குறள் நிர்வாகத்தை அறத்துடன் இணைத்து அணுகுகிறது.

தலைமை என்பது அதிகாரத்தைப் பயன்படுத்துதல் அல்ல; பொறுப்புடன் வழிநடத்துதலாகும்.

திட்டமிடல் மற்றும் முன்னறிவு நிர்வாக வெற்றியின் அடிப்படையாகும்.

தகவல்களை ஆராய்ந்து முடிவெடுப்பது அறிவார்ந்த நிர்வாகத்திற்கு அவசியமாகும்.

தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து பொறுப்பளிப்பது நிர்வாகத் திறனை உயர்த்துகிறது.

அறநெறி மற்றும் நீதி நல்லாட்சியின் அடிப்படைகளாக அமைகின்றன.

வளங்களைச் சரியான முறையில் பயன்படுத்துதல் நிர்வாகத்தின் முக்கியப் பொறுப்பாகும்.

மக்கள் நலனே அனைத்து நிர்வாக நடவடிக்கைகளின் இறுதி நோக்கமாக இருக்க வேண்டும்.

திருக்குறளின் நிர்வாகச் சிந்தனைகள் நவீன மேலாண்மைக் கோட்பாடுகளுடன் குறிப்பிடத்தக்க ஒற்றுமை கொண்டுள்ளன.

தொழில்நுட்பம் வளர்ந்தாலும் மனிதநேயம் மற்றும் அறநெறி சார்ந்த நிர்வாகத்தின் தேவை குறையவில்லை.

## 15. முடிவுரை

திருக்குறள் காட்டும் நிர்வாகச் சிந்தனைகள் காலத்தை வென்றவை. அன்றைய அரசியல் அமைப்பில் உருவான இக்கருத்துகள் இன்று அரசு நிர்வாகம், கல்வி நிர்வாகம், நிறுவன மேலாண்மை மற்றும் சமூகத் தலைமைத்துவம் ஆகிய பல்வேறு துறைகளிலும் பொருந்துகின்றன.

அன்றைய வேந்தன் இன்றைய நிர்வாகத் தலைவராக மாறியிருக்கலாம்; அமைச்சர் ஆலோசகராக மாறியிருக்கலாம்; அரசவை நிர்வாகக் குழுவாக மாறியிருக்கலாம்; அரசாணை மின்னணு நிர்வாகமாக மாறியிருக்கலாம். ஆனால் நல்ல நிர்வாகத்திற்கான அடிப்படை மதிப்புகளான அறம், அறிவு, நீதி, பொறுப்பு மற்றும் மக்கள் நலம் ஆகியவை என்றும் மாறாதவை.

எனவே, திருக்குறளை வெறும் தொன்மையான இலக்கிய நூலாகக் கருதாமல், காலந்தோறும் புதுப்பிக்கப்படும் நிர்வாக அறிவின் களஞ்சியமாகக் காண வேண்டும். நவீன நிர்வாகத்திற்கு தொழில்நுட்பம் வேகத்தை அளிக்கலாம்; ஆனால் திருக்குறள் அதற்கு நெறியை அளிக்கிறது என்பதே இவ்வாய்வின் நிறைவான முடிவாகும்.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. திருக்குறள், அதிகாரம்: இறைமாட்சி, குறள் 382.
2. திருக்குறள், அதிகாரம்: தெரிந்து செயல்வகை, குறள் 467.
3. திருக்குறள், அதிகாரம்: அறிவுடைமை, குறள் 423.
4. திருக்குறள், அதிகாரம்: பெரியாரைத் துணைக்கோடல், குறள் 441.
5. திருக்குறள், அதிகாரம்: செங்கோன்மை, குறள் 541.

## துணைநூற் பட்டியல் (References)

1. திருவள்ளுவர். திருக்குறள். பரிமேலழகர் உரை.
2. திருவள்ளுவர். திருக்குறள் தெளிவுரை. மு. வரதராசனார்.
3. சாலமன் பாப்பையா. திருக்குறள் உரை.
4. தேவநேயப் பாவாணர். திருக்குறள் ஆய்வுரைகள்.
5. திருக்குறளின் பொருட்பால் தொடர்பான நிர்வாகவியல் மற்றும் மேலாண்மை ஆய்வு நூல்கள்.
6. தலைமைத்துவம் மற்றும் நல்லாட்சி தொடர்பான நவீன மேலாண்மை நூல்கள்.
7. அறநெறி மேலாண்மை மற்றும் பொதுநிர்வாகம் தொடர்பான ஆய்வு நூல்கள்.

**ARTICLE 15 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 108–113

# கோமல் சுவாமிநாதன் நாடக நூலில் பெண்ணியத்தின் நிலைப்பாடு (என் வீடு என் கணவன் என் குழந்தை)

**The Feminist Perspective in Komal Swaminathan's Play (My Home, My Husband, My Child**

*ஆய்வாளர்:* **வ. மோ. சத்தியவதி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
விநாயகா மிஷன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
பையனூர், சென்னை - 603104.

*நெறியாளர்:* **முனைவர் ப. ஜெயபாரதி**
துறைத்தலைவி, விநாயகா மிஷன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
பையனூர், சென்னை - 603104.

## முன்னுரை

பெண்ணியம் என்பது பெண்களுக்கு எதிரான சமூகம் மற்றும் பொருளாதாரம், அடக்குமுறைகளை எதிர்த்தும் அதற்குச் சமமான உரிமைகளைப் பெற்றுத் தருவதும் கடமையாகும். இந்நிலையில் கோமல் சுவாமிநாதன் தமிழின் முக்கியமான முற்போக்கு நாடக ஆசிரியர், எழுத்தாளர், இதழாளர் மற்றும் திரைப்பட இயக்குனராகத் திகழ்ந்தவர். அவரது படைப்புகளில் முற்போக்கு சிந்தனை, சமூக விமர்சனம் பெண்ணியம் மற்றும் யதார்த்தவாதத்தை வெளிப்படுத்துகின்றன.

1971 - ல் சுவாமிநாதன் ஸ்டேஜ் ஃபிரண்டஸ் என்ற நாடகக் குழுவைத் துவக்கினார். அதில் பல நாடகத்தை அரங்கேற்றினார். அதன் பின்தான் 1977 - ல் என் வீடு என் கணவன் என் குழந்தை என்ற நாடகத்தை மேடையேற்றினார். ஏன்னென்றால் மனோரமா ஆச்சி தான் ஒரு பிராமண வேடத்தில் பேசி நடிக்க வேண்டும், என்கிற தீவிர ஆர்வத்திற்காக எழுதப்பட்ட நாடகம். இந்நாடகம் முன்னூறு முறைக்கு மேல் மேடையில் அரங்கேறியது. இந்நாடகம் சின்னத்திரை தொடராகவும் வந்தது.

## என் வீடு என் கணவன் என் குழந்தை நாடகத்தின் கதைச்சுருக்கம்

ஒரு பிராமணக் குடும்பத்தை மையமாக வைத்தும், அந்த குடும்ப வாழ்வில் ஏற்படும் சிக்கல்கள், பிரச்சனைகள் மற்றும் அன்பைப் பற்றியது. நாடகத்தில் அன்னபூரணியின் கணவன் மஹாலிங்கம் இந்த தம்பதியருக்கு குழந்தை இல்லை. அதனால் அன்னபூரணி, கணவனின் தம்பிகள், தங்கையைத் தன் குழந்தைகளாக வளர்த்து வருகிறாள். இதனால் குடும்பத்தில் எழும் பிரச்சனைகளையும், போராட்டங்களையும் சந்திக்கிறாள். இதற்குக் காரணம் இவள் இக்குடும்பத்தின் மேல் வைத்த அன்பு, தியாகம், மற்றும் குடும்பப் பிணைப்புதான். இதற்கு இடையில் ஒரு தம்பிக்கும், தங்கைக்கும் திருமணம் நடக்கின்றது. இதில் தங்கை

தன் வீட்டிலிருந்து என் அம்மா ஆண்டது எனக்குத் தான் என்று மாமியார் வீட்டிற்கு வேண்டும் என்று கேட்டு வாங்கிக் கொள்ளும் சாமார்த்யத்தை எடுத்துரைக்கிறது.

மஹாலிங்கம் மன உளைச்சல் காரணமாக வேலையை ராஜனாமாச் செய்துவிட்டு ரி~pகேசம் செல்லத் திட்டமிடுகிறார். இதனை அறிந்த அன்னபூரணி நீங்கள் சென்றுவிட்டாள் எனக்கென்ன நானும் உங்களுடன் வருகிறேன் என்கிறாள். இல்லை என்றால் நான் இறந்த பிறகு செல்லுங்கள் என்று உறுதிபடக் கூறுகிறாள். ஒவ்வொரு முறை கிளம்பும் போது தடங்கல் வருகிறது. இறுதியில் கடைசி தம்பியின் காதல் கல்யாணத்தை முடிக்கிறாள். மேலும் தங்கையின் கணவன் வேறு மதத்திற்கு மாறிவிட்டதால் அவருடன் சண்டையிட்டுக் கொண்டு வீட்டிற்கு வந்தவளை சாமார்த்தியமாகச் சம்பந்தியின் உதவியுடன் கணவனுடன் வாழ அனுப்புகிறாள், அன்னபூரணி. குடும்பம் மீது மற்றுமின்றி வீட்டில் வளர்க்கும் பசுவின் கன்றும் இறந்துவிட்டதை எண்ணிக் கதறுகிறாள். அப்படியே மயக்கம் போட்டு விழுகிறாள். மருத்துவரை அழைக்கிறார்கள். மருத்துவர் வந்து அன்னபூரணியைப் பார்த்துவிட்டு கங்கிராஜுலே~ன்ஸ் நீங்க அப்பாவாகப் போறீங்க என்று மஹாலிங்கத்திடம் கூற அன்னபூரணியும் வெட்கப்படுகிறாள். என்பதோடு இறுதிக் காட்சி முடிவடைகிறது.

## முதன்மை மாந்தர்கள்

1. அன்னபூரணி - முதன்மை கதாநாயகி, “குடும்பத் தலைவி” பிறருக்காக மன உருகும் இளகிய மனம் கொண்டவள். குழந்தை பேறு இல்லாதப் பிராமணப் பெண். தன் கணவர் மஹாலிங்கத்தின் தம்பிகளையும் தங்கையையும் தன் குழந்தைகளாக வளர்த்து அவர்களுக்குத் திருமணம் செய்கிறாள். தங்கையின் கணவன் மதம் மாறியதற்காகக் கோபித்துக் கொண்டு வந்தவளையும், கடைசி தம்பியின் காதலையும் பிரச்சனைகளின்றி தீர்க்கிறாள். இவள் குழந்தை இல்லாதவளாக இருந்தாலும் குடும்பத்தை ஒருங்கிணைத்து நடத்துகிறாள், இது மட்டுமல்லாமல், வீட்டிலுள்ள மாடு, கன்று, நாய் மீதும் அன்பைக் காட்டக் கூடியவளாக இருக்கிறாள்.

2. மஹாலிங்க ஐயர்: இந்நாடகத்தின் கதாநாயகியாக விளங்க கூடியவள் அன்னபூரணியின் கணவன் மஹாலிங்கம் தான் செய்ய வேண்டிய குடும்பப் பொறுப்புகளைத் தன் மனைவியே செய்வதால் வேலைக்குச் சென்று வருவது தான் தன் கடமை என்று இருந்தார். மேலும் குழந்தை இல்லை என்ற கவலை தம்பி தங்கைக்குத் திருமணம் செய்விக்கிறார். இதனால் அதிக பாரம,; மன உளைச்சல் ஏற்படுகிறது. இதனால் வேலையை விடுத்து, ரி~pகேசம் போக வேண்டும் என்று முடிவுச் செய்கிறார்.

## துணைமாந்தர்கள்

1. கிச்சா - முதல் தம்பி
2. மைதிலி - கிச்சாவின் மனைவி
3. வெங்கட்டா - இரண்டாம் தம்பி
4. சக்கு - ஒரே தங்கை

5. சிவராம கிரு~;ணன் - சக்குவின் கணவன்
6. ரங்கதுரை - சம்பந்தி
7. ராமசுப்பு - அன்னபூரணின் தம்பி
8. கோனார் - பசு மாட்டைக் கவனிப்பர்
9. பிரணதார்த்தி - உதவி செய்பவர்

## உத்திகள்

1. அன்னபூரணி - பிரணதார்த்திடம், அப்பா போயிட்டா அம்மாவை பிள்ளைகள் ஆதரிப்பா… அண்ணா போயிட்ட மன்னிய ஆதரிக்க யாரும் முன்னுக்கு வர மாட்டாப்பா. இவர் இங்கு இருக்கிற வரைக்கும் தான் நேக்கு இங்க மதிப்பு, - (பக்கம் எண் 17) கணவர் ரிசிகேச~ம் தன்னை விட்டு செல்லப் போவதாய் இருப்பதில் உள்ள ஆதங்கம் மட்டுமல்லாமல் வீடு என்பது ஒரு வண்டி உருண்டோட வேண்டுமானால் அச்சாணி தேவை என்பதை இச்சமூகத்தில் பெண்கள் தனித்து வாழ்வது என்பது எளிய காரியமில்லை என்பதைக் கருத்தியல் என்ற உத்தி வழியாகத் தெளிவுப்படுத்துகிறது.

2. குழந்தை வரான் ஹோட்டல்லியே சாப்டு அவனுக்கு நாக்கு செத்துப் போயிருக்கும் அவனுக்கு வாய்க்கு ருசியா ஏதாவது பண்ணிப் போடணும் அப்புறம் அவனுக்கு கல்யாணம் பண்ணி வைக்கணும்:(பக்கம் எண் 99)

மைத்துனர் வருகின்றான் என்று தெரிந்தவுடன் அன்னபூரணி குடும்பத்தின் மேலுள்ள அவளின் ஒரு தாயின் அன்பும் உண்மையானப் பாசத்தையும், அக்கரையும் ஆதங்க உத்தியின் மூலம் வெளிப்படுத்துகிறாள்.

## சமூக சார் கருத்துகள்

• “அன்னபூரணி - மஹாலிங்கத்திடம்” அதெப்படி உமக்கு விடுதலை கொடுக்க முடியும்? நீங்க சூரியன் மாதிரி, நான் பூதக்கண்ணாடி மாதிரி உங்ககிட்டெயிருந்து ஒளியை வாங்கி என் வழியா செலுத்திண்டிருக்கிறேன். சூரிய ஒளியே போனதுக்குப்புறம் பூதக் கண்ணாடி வெறும் சோடா பாட்டில் கண்ணாடி தான்:

விக்ரஹம் திருட்டுப் போயிடுத்துன்னா கோவிலுக்குள்ள யாரும் வரமாட்டாது. ஆனால் நான் தானாக ஒளி தருபவள் அல்ல அவரின் ஒளியைப் பெருக்கிக் காட்டும் கருவி மட்டுமே நான். கணவர் ரிசிகேச~ம் தன்னை விட்டுச்செல்ல போனால் தன் நிலையை உணர்ந்து ஆதங்கத்தை வெளிப்படுத்துவது.

• “அன்னபூரணி - கிச்சாமியிடம்” வீடு நிலம் காருன்னு வாங்கினா அது சொத்துப்பா… குழந்தை பொறந்தா அது பாக்கியம். புத்திர பாக்கியம் அந்த புத்திர பாக்கியத்தை என்கிட்டே ஒரு வார்த்தை கூட சொல்லாம மருந்தை சாப்பிட்டு முடிச்சுட்டேளே:

குழந்தை வேண்டாமென்று நீ மறுத்தாலும், கர்ப்பத்திற்காக இங்கே ஒரு வயிறு இருபது ஆண்டுகளாக ஏங்கிக் கிடக்கிறது என்பதை உணரவில்லையே எனக் குழந்தை இல்லாமல் ஏங்கும் ஒரு தாயின் புலம்பலாக வெளிப்படுகிறது.

• "சிவராம கிரு~;ணனிடம் அன்னபூரணி கிறிஸ்மஸ_ம் கொண்டாடலாம், தீபாவளியும் கொண்டாடலாம் தை வெள்ளிக்கிழமையும் கொண்டாடலாம் புழழன குசனையல -யும் கொண்டாடலாமா"?

சிவராமன் பண்டிகைகள் கொண்டாடறதே மனசு குதூகலமா இருக்கத்தானே? மனச எப்போதும் குதூகலமா வெச்சுண்டா பண்டிகைகளே தேவையில்லையே மாமி. பண்டிகைகள் கொண்டாடுவதற்கு மதங்கள் தடை இல்லை மனசு தான் என்பதை அன்னபூரணிக்கு விளங்குகிற மாதிரி சொன்னதை, மஹாலிங்கமும் ஆதரிக்கிறார் என்பதோடு யாரும் எம்மதத்தையும் பின்பற்றலாம் என்பது தெளிவாக்கிறது.

## பெண்ணியத்தின் வெளிப்பாடு

என் வீடு என் கணவன் என் குழந்தை என்ற பெயரில் வந்த நாடகம், இதில் பிராமணக் குடும்பத்தின் சூழலில் பெண்ணின் தியாகம், உணர்ச்சி, பெண்ணின் அர்ப்பணிப்பு, ஆதங்கம், புலம்பல், மதப்பற்று, அன்பு போன்றவை இந்நாடகத்தில் வெளிப்படுகின்றன.

• அன்னபூரணி - சக்குவிடம் நீ புக்காத்துக்கு போனா அங்க என் மண்டைதான் கிடந்து உருளும். அம்மா இல்லாத பொண்ணு தான் இந்த அன்னபூரணி என்ன பண்ணினா, பொண்ணை இப்படியா வளக்கறதுன்னு அங்கே என்னைச் சந்தி சிரிக்க வைப்போ - பக்கம் எண் - 19 நாத்தனாரின் மேல் உள்ள அக்கரையோடு தன்னைக் கடமையிலிருந்து தவறியவள் எனக் குறைச் சொல்லக்கூடாது என்பதிலிருந்து பெண்ணிய கடமை உணர்வு வெளிப்படுகிறாள்

• அன்னபூரணி - தன் கணவனிடம் நீங்க வேலையை விட்டுட்டு வந்திட்டேள் நான் எந்த செலவேன்னு குறைக்கிறது? ஹவுஸ்டாக்ஸ், அர்பன் டாக்ஸ் இன்~_ரன்ஸ், எலெக்ட்ரிக் பில்லு இந்த பில்லெல்லாம் கட்டி முடிக்கறதுக்குள்ள போதுன்னு ஆயிடும். வரிசையாகப் பத்திரிக்கைகள் வாரம், மாதம், வரு~ம். ஆத்துல மாட்டை வெச்சுண்டே பால்கூப்பன், மளிகைக்கடை பில்லு மாசமாசம் டெலிவி~ன் டவர் மாதிரி ஏறிண்டே போறது, சபாக்களின் சஸ்க்ரிப்~ன், வரவா போறவாளுக்கெல்லாம் கல்யாணம் கார்த்தின்னு நன்கொடை, ஹோமங்கள் வேற செலவு பண்டிகைகள் வேற, திரும்பிப் படுத்தா தீபாவளி, புரண்டு படுத்தா பொங்கல். இதுல எந்தச் செலவேன்னு நான் குறைப்பேன். (பக்கம் 77)- குடும்பத்திலுள்ள பிரச்சனைகள், பொறுப்புகள் போன்றவை வருமானம் இல்லாமல் எப்படி செய்வது என்ற தன் ஆதங்கத்தைப் பெண்ணின் வழியாகப் புலம்பலை வெளிப்படுத்துகிறாள்.

•. அன்னபூரணி - தன் கணவனிடம் இத பாருங்கன்னா நாம ஒண்ணும் அத்வானத்தில் குடியிருக்கல. நாலு பேருக்கு மத்தியில் வாழ்ந்திண்டுருக்கோம். ஊருக்கு கண்யமா வாழ்ந்து தான் ஆகணும் நீங்க நாளைக்கே ராஜினாமாவை திரும்ப வாங்கிண்டு வேலையில் சேந்துடுகோ அவ்வளவு தான் நான் சொல்வேன். (பக்கம் - 78)

சுற்றுவட்டாரத்தில உள்ள நிலைக்கு ஏற்ப வாழவேண்டும் என்று தன் குடும்ப கௌரவத்தைப் பெண்ணிய வெளிபாடாகக் கூறுகிறாள்.

•. அன்னபூரணி - கோனாரிடம் இத பாரு கோனாரே இனிமே பணம் கிணம்னு கேட்டு இங்க வராதே, இங்க ஒண்ணும் கொட்டிக் கிடக்கில. இவர் (கணவர்)பண்ணிட்டு வந்திருக்கிற கூத்துக்கு, நானும் தட்டை தூக்கிண்டு நாலு இடத்துப் போகாம இருந்தா அதுவே பெரிய வி~யம் உனக்கு என்ன நெருக்கடி இருந்தா எனக்கென்னா? உனக்கு ஆயிரம் நெருக்கடி இருக்கும் ஒரு நயா பைசா தர முடியாது என்றாள். (பக்கம் - 79) மன ஆதங்கத்தைக் பெண்ணிய வெளியீடாக கோபமாக பேசுகிறாள்.

•. அன்னபூரணி - கோனாரின் மனைவி உண்டா இருக்கிறாள் என்று கோனார் கூறியதுமே சிரிப்புடன் உன் ஆம்படையா பிள்ளையாண்டிருக்காளா, தலைச்சனா? அட அசடே இத ஏன் முன்னாடியே சொல்லப்படாது? இதோ வரேன் இரு திரும்ப வந்து இந்தா நூறு ரூபாய் வெச்சுக்கோ, பணம் இல்லைன்னு கவலைப்படாதே அப்பப்போ என்னண்ட வந்து கேளு நான் தரேன் - (பக்கம் - 79) குழந்தை என்றவுடன் இரக்கம் கொள்கிறாள் என்றால் அவளின் குழந்தையின்மை என்ற பெண்ணிய ஏக்கத்தை அறிய முடிகிறது.

குறியீடுகள் •. மஹாலிங்கம்: அன்னபூரணியிடம் யார் வேணும்னாலும் எந்த மதத்தில் வேணும்னாலும் சேரலாம். நாம் மனசை நிர்மலமா வெச்சுண்டா தெய்வத்தோட ஒளி எப்போ வேணும்னாலும் யாருக்கு வேணும்னாலும் வரலாம். (பக்கம் - 89) யாரும் எம்மதத்திலும் இருக்கலாம் என்ற சமதத்துவத்தை வெளிப்படுத்துகிறார்

•. மஹாலிங்கம்: அன்னபூரணியிடம் இப்போ உலகம் முழுக்க வெள்ளம் பெருக்கெடுத்து ஓடறதுன்னு வெச்சுகோ. அப்போ நம்ம கொல்லப்பக்கத்துல இருக்கிற கிணறு எந்த அளவுக்கு நமக்கு பயன்படும்? பயன்படாதோல்யோ? அதே மாதிரி தான் லோகத்தை கடந்த பிரம்ம ஞானிகளுக்கு வேதங்கள் பயன்படறதில்லை. இத நான் சொல்லல பகவான் சொல்லியிருக்கிறார். (பக்கம் எண் - 93) மதத்தால் எந்த பிரிவும் இல்லை என்பதை அன்னபூரணிக்கு விளக்குகிறார்.

•. அன்னபூரணி - ராமசுப்புவிடம் ஐயர் இங்க ஒண்ணும் சத்திரம் கட்டிப் போட்டிருக்கல. வேலை வெட்டி இல்லாத சோம்பேறிகளுக்கெல்லாம் வடிச்சு கொட்டறதுக்கு. (பக்கம் - 51) ராமசுப்பு, அக்காவான அன்னபூரணியை ஏமாற்றி விட்டுச் சென்ற பிறகு மீண்டும் அக்காவை நாடி வந்த பிறகு கூறும் அறிவுரை.

## முடிவுரை

என் வீடு என் கணவன் என் குழந்தை நாடகம் மனோரமாவின் குணச்சித்திர நடிப்புத் திறனை உலகுக்கு நிரூபித்தது. இந்நாடகக் கதையின் படி இவர் தியாகச் செல்வந்தி, குடும்பத்து பிரச்சனையைச் சமரசம் செய்யும் உறுதியான பெண், தைரியமான பெண், குடும்பத்தை விட்டுக் கொடுக்காத தன்மையுடையவள், மனிதர்கள் முதல் மாடு, நாயிடம் வரை அன்பைக் கொட்டியவள், கோனாரின் மனைவி பிரசவம் ஆகியிருக்கிறாள் என்பதை அறிந்தவுடன் அவளின் தயாளக் குணம்

கொண்டுள்ளவள் என்று இந்நாடகம் மையப்படுது;துகிறது இத்தகைய குடும்ப பெண்கள் இருந்தால் கூட்டுக் குடும்பமும், குடும்ப உறவுகளும் எப்படி கெடும்? அன்னபூரணியின் குணத்தை அனைத்து பெண்களும் முடிந்த வரை தைரியமும், தெளிவும், நம்பிக்கையும், சரியான முடிவும் பின்பற்றினால் உறவுகள் நீடிக்கும் மகிழ்ச்சியும் பொங்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. செக்கு மாடுகள் பக்கம் எண் - 15 அலமேலு தண்ணீர் எடுக்க ஆற்றங்கரைக்குச் சென்றாள். அங்கு ஆற்றங்கரை பிள்ளையாரைத் தரக் குறைவாகவும் ஆணவத்துடன் பேசியதோடு மட்டுமல்லாமல் பண்ணையார் பாபநாசம் அலமேலுவைப் பாலியல் வன்கொடுமைச் செய்ததால் அவள் இறந்துவிடுகிறாள். பணக்காரர்களின் ஆணாதிக்குமும், அகங்காரமும் இருப்பதினால் இவர்களின் இழிவானச் செயலையும் கடவுளை தூற்றும் எண்ணத்தையும் வெளிபடுத்துவதால் இத்தகையோருக்கு மரணதண்டனை அளித்தால் போதும் மற்றவர்களுக்கும் இது ஒரு பாடமாகும்.
2. கோடு இல்லாக் கோலங்கள் பக்கம் எண் - 70, 71 அடலிங்கம் பரிமளத்தைப் ‘பசுத்தோல் போர்த்திய புலி’ சாது மாதிரி நடிச்சிட்டு தப்புத் தண்டா பண்ணுது. என்றதற்கு பரிமளம் மானதோட வாழ்கிற குடும்பம். இப்படி நாகூசாம பேசாதீங்க என்றாள். அப்படி என்றால் உன் புரு~ன் யாரு? எப்ப கல்யாணம் பண்ணிக்கிட்ட? தாலியைக் காட்டு? என்று மானம் பங்கம் செய்வது - தந்தையை இழந்து வறுமையிலுள்ள ஒரு பெண், தன் தங்கையைப் படிக்க வைப்பதற்காகத் தன்னையே இழக்கவும் துணிக்கிறாள் என்றால் அவளைப் பாராட்டவும் வேண்டாம், பழிக்கவும் வேண்டாம். அமைதிக் காத்தால் நன்று. இவ்வாறு ஆராய்ந்து இழிவுச் செய்வது கூடப் பெண்களுக்கு செய்யும் வன்கொடுமைகளுள் ஒன்றாகும்.

## துணைநூற் பட்டியல் (References)

1. ஆசிரியர் - கோமல் சுவாமிநாதன்
2. செக்கு மாடுகள் - முதற் பதிப்பு - 2024
3. என் வீடு என் கணவன் என் குழந்தை - முதற் பதிப்பு - 2025
4. கோடு இல்லாக் கோலங்கள் - முதற் பதிப்பு - 2025

**ARTICLE 16 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 114–121

# நாட்டுப்புறப் பாடல்களில் இசைநயங்கள்

## Musical Nuances in Folk Songs

**முனைவர் கி.கீதா**
இணைப்பேராசிரிரர், தமிழ்த்துறை, நேரு நினைவுக் கல்லூரி
புத்தனாம்பட்டி – 621007, அலைபேசி – 9789165904
geethachand4272@gmail.com

### Abstract
Rural folk hold the belief that ‘work is divine.’ Music serves as a source of relief whenever fatigue sets in during their labor; this very music evolves into poetry and is passed down through generations. It is only among rural people that these poems can be found in their authentic form. Conversely, a film song that mocks the traditional lullaby has become a symbol of urban life. These musical expressions resonate with the innermost feelings of rural folk. Their thoughts, yearnings, dreams, aspirations, and aversions serve as reflections of their culture and customs. From the moment of birth—through growth and the journey of life—until the final passage to the cremation ground, music and song accompany every stage of existence.

### ஆய்வுச் சுருக்கம்
‘உழைப்பே தெய்வம்’ என்ற கொள்கையுடையவர் நாட்டுப்புற மக்கள். இவர்கள் செய்யும் தொழிலில் சோர்வு ஏற்படும் போது அதனை மாற்றத் தோன்றுவது இசை. அவ்விசையே கவிதையாகிப் பரம்பரை பரம்பரையாக வளர்ந்து வருகிறது. இக்கவிதைகளை நாட்டுப்புற மக்களிடையே தான் உண்மை வடிவத்தில் காண இயலும். தாலாட்டைக் கேலி செய்யும் திரைப்படப் பாடலொன்று நகர்ப்புற வாழ்வின் சின்னமாகிறது. நாட்டுப்புற மக்களின் உள்ளத்து உணர்வின் எதிரொலிகளாக இசைப்பவை. எண்ணங்கள், ஏக்கங்கள், கனவுகள், விழைவுகள், வெறுப்புகள் இவை நாட்டுப்புற மக்களின் பண்பாட்டு விளக்கமாகவும், பழக்க வழக்கமாகவும் திகழ்கின்றன. குழந்தை பிறந்தது முதல் வளர்ந்து, வாழ்ந்து சுடுகாட்டுக்குச் செல்லும்வரை வாழ்க்கையின் ஒவ்வொரு படியிலும் பாடலுடன் இசையும் இணைந்து இடம்பெற்று விடுகிறது.

**திறவுச் சொற்கள்:** இசை நயம், தாலாட்டு, தாளம், மெட்டு, யாப்பு, சிந்து, கற்பனை வளம், உடுக்கை

## முன்னுரை

‘பாட்டினைப் போல் ஆச்சிரியம் பாரின்மிசை இல்லை யடா’ என்றார் பாரதி. உரைநடையையும் இசையோடு படித்துப் பார்ப்பதில் இன்பம் கண்டவன் மனிதன். நாட்டுப்புறப் பாடல்களில் நிலைப்பேற்றிற்கு முதற் காரணம் இயற்கையில் தோன்றி வளர்வது அவர்களது இசை. எனவே தான் தொட்டில் முதல் சுடுகாடு வரை வாழ்க்கையுடன் இசை இரண்டறக் கலந்துள்ளது.

கும்மி, நடவுப்பாடல், அறுவடைப் பாடல், பொலி பாடல், கோலாட்டம் போன்றவை பலர் சேர்ந்து பாடும் கூட்டுப் பாடலாகும். இவ்வாறு பாடும்போது மற்றவர் கூட்டாகத் தங்களது ஓசையைக் கூட்டியோ, குறைத்தோ இசையச் செய்து கேட்பதற்கு இனிமையாக்கி விடுவர்.

ஒருவர் பாட பலர் சேர்ந்து பின்னர் பாடுதலும் உண்டு. சிலம்பப் பாடல், தெருக்கூத்துப் பாட்டு போன்றவை இம்முறையில் அமைந்தவையாகும். இன்றும் ஒருவர்க்கு ஏற்பப் பேசுகின்றவர்களை நாட்டுப்புறத்தில் கேலி செய்யும் போது பின்பாட்டுப் பாடுபவன், தாளம் போடுபவன், ஒத்து ஊதுபவன் எனக் கூறுவதுண்டு. தெருக்கூத்தில் வேடந்தாக்கி நடிப்பவன் பாடி முடித்தவுடன் அவ்வடியையே பின்பாட்டுக்காரர்கள் பாடுவார்கள். இவ் இடைவேளை ஆடுபவனுக்கு ஓய்வாகவும், அடுத்த அடியை நினைவுப்படுத்தக் கொள்ளவும் உதவுகிறது.

## இசையொலிகள்

நாட்டுப்புறப் பாடல்களில் பெரும்பாலான இசையொலிகள் உண்டு. நாவால் ஒலியெழுப்பிக் குலவையிட்டு வரவேற்கும் பழக்கம் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் இன்றும் உண்டு. இசையொலிகள் பாடுவோரின் உணர்வு, சூழ்நிலைக் கேற்ப மாறுபடுவதும் உண்டு. உழவுப் பாடலில் ஏலேலக் குயிலே, ஏலேலங்கடிலேலோ, ஏலேலோ அன்னக்கிளி, பொலி பொலி பொலியோ, குலகுல குலலோ என்ற இசையொலிகள் இடத்துக்கேற்ப இடம்பெறும்.

பாரம் தூக்குவோர் ஐஏல், ஐலசா, ஏலேலம்படி ஏலம் என்றும், சாந்து இடிப்போர், வண்டிக்காரர் வேலங்கடி லேலோ என்றும், சாலை போடுபவர் ஏலேலோ ஐலசா என்றும், விறகு சுமப்பவர் ஏதில்லலோ லேலொ என்றும் ஒலியெழுப்பிப் பாடுவர். தாலாட்டு ஆராரோ ஆரிரரோ என்றும், ராராரோ ராரிரரோ என்றும் ஒலிக்கப் பெறும் இசையொலி அமைத்தது. இவ்வாறு பல்வகை நிலைகளிலும் பல்வேறு இசையொலிகள் நாட்டுப்புறப் பாடல்களில் காணலாம்.

## மெட்டுகள்

நாட்டுப்புறப் பாடல்களுக்குரிய மெட்டுகளை ‘ஏட்டில் எழுதாக் கவிதைகள்’ என்ற நூலில் செ. அன்னகாமு அவர்கள் விளக்கமாக வகுத்துப் பகுத்துள்ளார்.

நடவுப்பாடல்
*தன்ன னானே னான ன்னனே*
*னானானே னானே னன்னே*
கதிறுப்புப் பாடல்
*ஏலோ ஏலோ ஏலோலங்கடி*
*ஏலோ ஏலோ ஆமாச் சொல்லு*
களையெடுப்புப் பாடல்
*நன்ன னன்னே னான னன்னே*
*னானே னன்னே னானே னன்னே*
கரகப் பாடல்
*தன்னதன தன்னதன தனான*
கும்மிப் பாடல்
*தன்னனா னானன னானாலே*
*தன்ம் தன்னேனான தினம் தன்னானே*
வண்டிக்காரன் பாடல்
*தன்ன னன்னே னானே னன்னே*

## னானே னன்னே தினம் தன்னானே

நாட்டுப்புறப் பாடல்களின் இசை, பண்கள் இவற்றை ஆய்வு செய்த அறிஞர்கள் அவ்வப்பாடலுக்குரிய பண்களையும் குறிப்பிட்டுள்ளனர். இவ்விசையையும் பண்களையும் அறியாதவர்களால் பாடப்பெற்ற பாடல்கள் பாடுவோரின் ஆற்றலுக்கேற்றவாறு மாறி மாறி வளருமேயன்றி ஒரே நிலையில் அமைந்து விடுவதில்லை. தற்போதும் பாரதியாரின் ஒரு பாடலை பல்வேறு இசைகளில் பாடுவதைக் கேட்கிறோம். நாட்டுப்பாடலும் பாடுபவரின் ஆற்றலுக்கேற்றவாறு பல்வேறு மெட்டுகளைப் பெற்றுவரும்.

## இசைக்கருவிகள்

நாட்டுப்புறப் பாடல்களைப் பாடும்போது உடுக்கைப் பறை, தப்பு, தம்பட்டம், பம்பை, ஜால்ரா, கஞ்சிரா, கரடிவாத்தியம், வில், மகுடம், டேப், கைத்தாளம், நையாண்டிமேளம் போன்ற இசைக்கருவிகள் பயன்படுகின்றன.

தாலாட்டுப் பாடும் தாய்க்கு நாக்கே இசைக்கருவியாகிறது. ராராரோ ராரிரரோ என்ற ஒலியே இசைக்கருவியின் ஒலிபோன்று ஒலிக்கும். குளத்துமேட்டில் கும்மியடிக்கும் பெண்களுக்கும் அவர்களது கைகளே இசைக்கருவிகளாகின்றன. ஏரோட்டும் உழவனுக்கு காளைகளின் மணி ஒலியும், கால்நடையொலியும் இசைக்கருவிகளாகின்றன. வண்டியோட்டிச் செல்பவனுக்கு மாடுகளின் சல், சல் என்ற சலங்கை ஒலி இசைக் கருவியாகிறது. துணி துவைக்கும் வண்ணாத்திக்குக் கல்லில் அடிபடும்போது எழும் ஒலியே இசையாகிறது. படகோட்டிக்குத் தண்ணீர் தள்ளும்போது ஏற்படும் சளக், சளக் என்ற ஒலியே இசைக்கருவி ஒலியாகிறது. இவ்வாறு இயற்கைக் கருவிகளின் ஒலியிலேயே அமைதிகொண்டு பாடுபவர்களும் உண்டு.

நாட்டுப்புறப் பாடல்கள் யாப்பமைப்பில் சிந்து வகையைச் சார்ந்தவை. சிந்து, சமனிலைச் சிந்து, வியனிலைச் சிந்து, நொண்டிச்சிந்து, வழிநடைச் சிந்து, ஆனந்தக் களிப்பு, காவடிச் சிந்து, வளையற் சிந்து, தங்கச் சிந்து, சேவற் பாட்டு, வளையற் சிந்து, தங்கச் சிந்து, பாங்கு, கும்மி, இலாவணி, ஏசல், ஏற்றப்பாட்டு, உடுக்கைப்பாட்டு, ஒப்பாரி, தாலாட்டு எனப் பலவகையாக வழங்குகின்றது. நாட்டுப்புறப் பாடல்களில் இடம்பெற்றுள்ள சிலவகைகளின் அமைப்பைக் காண்போம்.

தன் மனைவியின் மீது குறைகூறும் தாயிடம் மனைவியை அனுசரித்துச் செல்லுமாறு தாய்க்கு மகன் கூறும் அறிவுரை இப்பாடலாகும். இது இருசீறடி இரண்டும், தனிச் சொல்லும் பெற்று வந்த சமனிலைச் சிந்துவாகும்.

*”முல்லையரும்படி நீயெனக்கு – சின்ன*
*மூக்குத்தி நத்தடி நானுனக்கு*
*முல்லை யரும்புக்கும் மூக்குத்தி நத்துக்கும்*
*மோகமுண்டோ முத்த வீராயி”*

இது ஒரு காதல் பாடல். இப்பால் முச்சீரிரட்டை சமனிலைச் சிந்துப் பாடலாகும்.

சிந்துப் பாடல்களில் சீர் வேறுபட்டு அமையுமாயின் வியனிலைச் சிந்து எனப்பெயர் பெறும். 'கான்சாகிபு சண்டை'ப் பாடலில்,

*"பிரட்டனொரு தலையிருக்கு மானால் – அவன்*
*பிடிப்பானடா எப்படியுந் திசைமதுரைக் கோட்டை*
*பிரட்டனுட தலைவிழுந்து போனால் – அப்போ*
*பருந்தெடுத்த குஞ்சல்லவோ மம்முதலி சாய்பு*

என்று இடம்பெறும் வரிகள் வியனிலைச் சிந்து எனும் பாடலாகும்.

வழிநடைச் சிந்து

*"பாரடி நாமக்கல்லுப் பேட்டை – அங்கு*
*பாங்காய்த் தெரியுது*
*மலைமேலொரு கோட்டை*
*சேரடி திருச்சி சேலம் ரோட்டை – தாண்டிச்*
*சென்றால் நாமக் கல்லதனைச்*
*சேருமிந்தப் பாட்டை"*

இவ்வழிநடை சிந்து பாடலில் முதலடி மூன்று சீராகவும் இரண்டாம் அடி நான்கு சீராகவும் அமைந்துள்ளது.

நொண்டி சிந்து

*"காவிரிப்பூம் பட்டினமாம் – அதில்*
*கனத்த வணிகர் செல்ல இனத்துதித்த*
*மேவிய மாசாத்து வானென்பார் – பெற்று*
*மேவளர்த்த மைந்தனென்பேர் கோவலன் என்பார்"*

இப்பாடலில் முதலடியில் இரண்டு சீரும் அடுத்த அடியில் மூன்று சீருமாக வந்துள்ளது. இவ்வோசையமைந்த பாடல்களெல்லாம் நொண்டிச் சிந்து வகையாகும். பாரதியார், பாரதிதாசன் பாடல்களில் இவ்வோசையமைந்த பாடல்களைக் காண்கிறோம்.

## ஆனந்தக் களிப்பு

முதலடியில் மூன்று சீரும், இரண்டாமடியில் நான்கு சீரும் அமைய வரும்போது வேறுபடும் ஓசையினால் இவ்வகை, ஆனந்தக் களிப்பு எனப் பெயர் பெறும்.

*"தந்தன னத்திலோ ராண்டி- அவன்*
*நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி*
*கொண்டு வந் தானொரு தோண்டி – அதைத்*
*கூத்தாடிக் கூத்தாடிப் போட்ட்டைத் தாண்டி"*

இப்பாடல் ஆனந்தக் களிப்பு வகையைச் சார்ந்தப் பாடலாகும். முதலடி மூன்று சீரும் இரண்டாம் அடி நான்கு சீரும் பெற்று தனிச் சொல்லுடன் இரட்டையாக வரும்.

வளையல் சிந்து

*வாருமையா வளையற்செட்டி*
*வளையல் விலைகூறும் – நீர்*
*மகிழ்ந்துமே கைபாரும் – பசி*
*வன்கொடுமை தீரும் – எந்த*
*மாநகரம் பேரினங்கள்*

*வகை விபரம் கூறும்”*

உரையாடல் பொருளமைந்து பாடுதற்கு ஏற்ற சிந்தாகும். இருசீர் அடுக்கிவந்து இயைபும் மோனையும் எதுகையும் அமைந்துள்ளது.

தங்கச் சிந்து
*ஆடுவதும் பாடுவதும்*
*ஆளடிமை செய்கிறதும்*
*ஓடுவதும் தேடுவதும் தங்கமே*

## ஒருசாண் வயிற்றுக்கடி

மோனை எதுகையுடன் இருசீர் இரட்டையாக அமைந்தது. தங்கமே என விளி பெறுவதால் தங்கச் சிந்து எனப் பெயர் பெற்றது. தங்கச்சிந்து போன்று சேவல் பற்றியும் புறா பற்றியும் வரும் சிந்துப்பாடல் சேவல் பாட்டு, புறாப்பாட்டு எனப் பெயர் பெறும்.

தெம்பாங்கு
*மதுரைக்கு நேர்கிழக்கே மாரியம்மன் தெப்பக்குளம்*
*மஞ்சள் நீராடையிலே தங்கத்தில்லாலே – நானும்*
*குஞ்சரத்தைத் தோற்றேனடி பொன்னுந்தில்லாலே*

முதலடி நாற்சீராகவும் ஏனைய இரு அடிகள் முச்சீராகவும் பெற்ற தெம்பாங்கு பாடலாகும்.

கும்மி

கும்மிப்பாடல்கள் ஒரே எதுகையுடன் எழுச்சீர் கழிநெடிலடி இரண்டு வரும்.

*ஆரியநாட்டுப் பிராமணராம் – இவர்*
*ஆறண்ண மாருக்குச் சிறிய வராம்*
*காரணமான முத்துப்பட் டனுக்குக்*

## கலியாணக் கும்மி கொட்டுங்கடி

இது முத்துப்பட்டன் கதையில் வரும் கும்மிப் பாடலாகும். நாட்டுப்புறப் பாடல்களில் தனிச்சொல் இன்றி அறுசீர் ஓசையுடன் கும்மிப்பாடல் பாடுவதுண்டு.

*கொட்டடி கொட்டடி தையமுத்து*
*குனிந்து கொட்டடி தையமுத்து*

இது ஒருவகை இசைநயம் பெற்றது.

*ஆடுங்கடி பெண்கள் பாடுங்கடி*
*ஆறுமு கனவன் கோவிலிலே*
*வெள்ளிச் சிலம்பெடுத் தாடுங்கடி*

## வேலவன் வெள்ளித்தேர் ஓடையிலே

இது வேறொரு இசைநயம் பெற்ற கும்மிப் பாடலாகும். இவ்வாறு கும்மிப்பாடல்கள் பல்வேறு இசைநயங்களுடன் பாடப்பெறும்.

## இசைவணி

அறுசீருடன் ஈற்றில் அடுக்குச் சொல் பெற்று வருவது இலாவணியின் இயல்பாகும். எரிந்த கட்சி, எரியாத கட்சியென இரு கருத்தில் நின்று பாடலால் வாதிடுவது இலாவணி. மன்மதன் எரிந்தான் என்பதும்,

மன்மதன் எரியவில்லை யென்பதும் பாடுபொருள். இதற்கேற்பத் தங்கள் கற்பனை வளத்துக்கேற்பப் பாடலைப் புனைந்து பாடுவர். ஓசைநயம் ஒன்றாகவே இருக்கும்.

*மண்டலமெ லாநடுங்கத்*
*தொண்டைகிழி யக்கத்திடும்*
*மகாசூர வித்துவானே அய்யா அய்யா!*
*மங்கலமி குந்த குண*
*சங்கரனு தல்விழியால்*
*மன்மதவேள் மடிந்ததும் பொய்யா பொய்யா?*
*கண்டனம்பு ரியவந்தீர்*
*அண்டசரா சரமெல்லாம்*
*காமனாலே உற்பத்தியா சொல்லும் சொல்லும்.*

*கற்பனையாப் பேசியிங்க*
*அற்பமான மன்மதனைக்*
*கடவுளென் றுரைக்காதீர் செல்லும் செல்லும்!*

## ஏசல்

பழிப்பது போலப் புகழும் வஞ்சப் புகழ்ச்சியில் வரும். பள்ளு இலக்கியத்தில் சிவன், திருமால், சிறப்பியல்புகளை மூத்தப் பள்ளியும் இளைய பள்ளியும் ஏசிக்கொள்வதுண்டு.

*"வேண்டுமென்றே சோறுகறி மிக்கவிருக்க*
*விடத்தைக்கு டித்தாரோடி உங்கள் சிவனார்*
*மாண்டுபோக வெண்ணெய்தயிர் தாழியிருக்க*
*மண்ணைவாரித் தின்றாரோடி உங்கள் பெருமாள்"*

இது முச்சீரட்டையால் அமைந்த சிந்துவாகும்.

ஏற்றப்பாட்டு

இருசீர் பெற்று எதுகை, மோனை, இயைபுநயம் பெற்று அமைவது.

*முருகருக்கோ வள்ளி*
*மோகனப்பெண் ணானாள்*
*கந்தருக்கோ வள்ளி*
*கானமயி லானாள்*
*குமரருக்கோ வள்ளி*
*குடிவிளக்காய் நின்றாள்*

இவ்வாறு குறளடியால் வளர்ந்து வரும்.

## உடுக்கைப் பாட்டு

உடுக்கையடித்துக் கொண்டு ஒருவன் பாட, பின்னால் இருவர் தாளமிட்டுக் கொண்டு திரும்பிப் பாடுவர். முதலடிப் பாடும்போது, 'ஆமாமாம்' என்று பின்பாட்டுக்காரர் சொல்லுவார். இதனைக் கண்ணுற்றே எதையும் ஏற்றுக்கொள்பவர்பவர்களை 'ஆமாம் சாமி' எனக் கிண்டல் செய்வதுண்டு. முதற் சீரை நிறுத்தி இரண்டாவது சீரை நீட்டிப் பாடுவர். உடுக்கைப் பாடல்கள் இரு சீரடுக்கில் வரும். நாட்டுப்புறங்களில் திரௌபதியம்மன் கோவிலில் பாரதம் உடுக்கையடிப் பாடலாகப் பெறும். அப்போது,

*கேளுமையா ஜென்மேஜெயா*

*கீர்த்தியுள்ள ஐவர்கதை*
*நாடாளும் நாளையிலே*
*நடந்தகதை சொல்லுகிறேன்*
*குருநாடாம் குருகுலமாம்*
*குந்திமைந்தர் சரித்திரத்தை*
*பரிவானதொரு சந்திரகுலம்*
*பாண்டவர்கள் சரித்தரத்தைக்*
*கேட்டுக்கேட்டு மனமகிழ்ந்தார்*
*கீர்த்தியுள்ள ஜென்மேஜெயன்*

எனத் தொடங்கிப் பாடுவர்.

## ஒப்பாரி

ஒப்பாரிப் பாடல் அளவடியாலமைந்த குறள் வெண்டுறையாகும். முதற்சீரும் மூன்றாம் சீரும் மோனை அமைந்து வரும். முதலிரு சீருக்கிடையில் ஒலியை நீட்டிப் பின்னர் இரு சீரைப் பாடுவர்.

*கட்டிப் பொறப்பே கைநழுவ விட்டவுக*
*வாய்ச்ச பொறப்பே வகைதப்ப விட்டவுக*
*செல்லப் பிறப்பே திசைதப்ப விட்டவுக*
*ஊருப் பிறப்பிலேயும் உசத்தியுள்ள நற்பிறப்பு*
*நாட்டுப் பிறப்பிலேயும் நயமான நற்பிறப்பு*

## பாலிலேயும் தேனிலேயும் பட்சமுள்ள நற்பிறப்பு

இப்பாடல் ஒப்பாரிப் பாடலுக்கு எடுத்துக்காட்டாகும். இக்குறள் வெண்டுறை வகையிலேயே அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை, பஞ்ச பாண்டவர் வனவாசம், அபிமன்னன் சுந்தரி மாலை, ஆரவல்லி சூரவல்லி கதை, நல்லதங்காள் கதை போன்ற கதைப்பாடல்கள், அமைந்துள்ளன. சான்றாக அல்லி அரசாணிமாலையில்,

*கண்டாளே அல்லியரும் கண்கள் சிவந்தாளே*
*கழுத்திலே மங்கிலியங் கட்டின தாரடா சொல்*
*திருட்டுப் பயலேயுன் சிவன் பறித்திடுவேன்*

## என்சமத்தும் சேவகமும் இப்போ தெரியுமடா

எனும் பாடல் குறள் வெண்டுறையாக அமைந்துள்ளது. இவ்வோசையினின்றும் மாறுபட்ட ஓசையுடன் குறள் வெண்டுறையாக வருவது தேசிங்கு ராசன் கதை

*தெற்கே வெகு தூரமிருக்குது செஞ்சிக் கோட்டை பாரு*
*செஞ்சிக்கோட்டை ஆளும் ராசன் தேரணிமகராசன்*
*தேரணிராசன் குமாரன்நான் தேசிங்கு மகிபாலன்*
*சிற்றப்பதுரை தரணிசிங்குமே சிறையிலிருக்கிறாராம்*
*குதிரை ஏற வலுவில்லாமல் கொலுவிருக்கிறாராம்*
*குதிரையேறிச் சவாரிசெய்துநான் கொண்டுபோக வந்தேன்*

என்ற பகுதி எடுத்துக்காட்டாகும்.

## தாலாட்டு

ஓரேதுகை பெற்று அளவடி இரண்டாய் வரும் தாழிசையாய் தாலாட்டுப் பாடல்கள் அமையும். இதனின் வேறுபட்டு வரும்போது குறள் வெண்டுறையாகி விடும்.

*ஆத்து மணகுவிச்சு*
*அருந்தவசு செய்யயிலே*
*பார்த்திருந்த பரமசிவன்*
*பாலகனைத் தந்தாரோ*
*மார்நிறைய சந்தனமாம்*
*மடிநிறைய வெற்றிலையாம்*
*சேர் நிறைந்த களிப்பாக்காம்*
*சீர் கொடுப்பார் தாய்மாமன்*

அளவடி இரண்டாய் எதுகை பெற்று வந்த தாழிசை, எதுகை பெறாது குறள் வெண்டுறையாய்,

*வெள்ளி விளக்கெரியும் விசயருடை வாசலிலே*
*தங்க விளக்கெரியும் தருமருட வாசலிலே*

போன்றும் வரும்.

நிறைவாக,

நாட்டுப்புறப் பாடல்களின் உயர்வு அவற்றின் பண்களிலும் எளிமையிலும் இனிமையிலும் இருக்கின்றன. சேசி. ஹாட்ஹார்ட் என்னும் ஆங்கில அறிஞர் நாட்டுப்புறப் பாடலின் இசை அவற்றின் வளத்தையும் கம்பீரத்தையும் அதிகப்படுத்துகிறது என்று கூறுவது கருதத்தக்கதாகும். என நாட்டுப்புறவியல் ஆய்வறிஞர் சரசுவதி வேணுகோபால் அவர்கள் கூறுகிறார்கள்.

நாட்டுப்புறப்பாடல்கள் இசை நயத்துடன் யாப்பமைதிக்கேற்ப அமைந்துள்ள பாங்கினைக் காணும்போது இலக்கியத்தின் கருவாய் விளங்கும் நாட்டுப்புற மக்களிடமிருந்தே இலக்கணத்தின் கருவும் அமைகிறது எனலாம்.

தமிழர்களின் உணர்வோடும், உழைப்போடும் கலந்த மிக முக்கியமான ஒரு கூறாகும். ஏட்டுக் கல்வியறிவு இல்லாத பாமர மக்கள், தங்களின் உழைப்பின் களைப்பை மறக்கவும், மகிழ்ச்சியை வெளிப்படுத்தவும் இயற்கையாகவே இந்த இசைநயத்தைக் கையாண்டுள்ளனர்.

## துணைநூற் பட்டியல் (References)

1. அழகப்பன். முனைவர். ஆறு – நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு, பாரி நிலையம், 90, பிராட்வே, சென்னை – 600 108. மறு பதிப்பு – 2018.
2. ஆறுமுகம், எம்.ஏ.,பி.டி.,. அ- நாட்டுப்புற இலக்கியமும் பண்பாடும், தேன்தமிழ்ப் பதிப்பகம், 85, சுப்பிரமணியம் பிள்ளைத்தெரு, சேலம் – 636 001. முதற்பதிப்பு – செப்டம்பர், 1984.
3. சக்திவேல்.சு.முனைவர், நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், பாரி முனை, சென்னை -600 108.
4. வானமாமலை. நா, - தமிழர் நாட்டுப் பாடல்கள், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை – 600 098.

**ARTICLE 17 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 122–127

# சங்க இலக்கியங்கள் உணர்த்தும் பண்டைய கால மகளிரின் வாழ்வியல்

## The Lifestyle of Ancient Women as Depicted in Sangam Literature

**முனைவர் மு. நளா**
உதவிப்பேராசிரியர் வரலாற்றுத்துறை
ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி) சேலம் – 636016.
மின்னஞ்சல் முகவரி – mnalanand@gmail.com

### Abstract

Sangam literature constitutes a significant body of ancient literary records documenting the lives of the early Tamils. Through the two major thematic categories of Akam (inner life/love) and Puram (outer life/public affairs), these texts provide a detailed account of the people's experiences—encompassing love, family life, food, clothing, occupations, agriculture, trade, hospitality, generosity, valor, politics, arts, their relationship with nature, and social culture. Works such as Akananuru, Purananuru, Natrinai, Kuruntokai, Ainkurunuru, Pattinappalai, and Porunaratruppadai serve as primary literary sources for understanding the daily lives of the ancient Tamils. These texts reveal the nature of the lives led by women during the Sangam era, acting as a mirror that reflects their commitment to truth, their unwavering adherence to righteousness (Aram), and their loving nature. This research paper aims to systematically analyze and elucidate these aspects.

### ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் வாழ்க்கையைப் பதிவு செய்துள்ள மிகப் பழமையான இலக்கிய ஆவணங்களுள் குறிப்பிடத்தக்கவை. அகம், புறம் என்ற இரு பெரும் வாழ்க்கை நிலைகளின் வழியாக அக்கால மக்களின் காதல், குடும்பம், உணவு, உடை, தொழில், வேளாண்மை, வாணிகம், விருந்தோம்பல், கொடை, வீரம், அரசியல், கலை, இயற்கையோடு கொண்டிருந்த உறவு, சமூகப் பண்பாடு ஆகியவை விரிவாகப் பதிவாகியுள்ளன. குறிப்பாக அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை போன்ற நூல்கள் பண்டைய தமிழரின் அன்றாட வாழ்வை அறிந்துகொள்ள முதன்மையான இலக்கியச் சான்றுகளாகத் திகழ்கின்றன. சங்ககாலத்தில் பெண்கள் எத்தகைய வாழ்க்கையை வாழ்நதுள்ளனர் என்பதை இந்த இலக்கியங்களே வெளிப்படுத்துகின்றன. சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவர்களாகவும், அறத்திலிருந்து துளியும் மீறாதவர்களாகவும், அன்பு மிக்கவர்களாகவும் வாழ்ந்துள்ளனர் என்பதைப் படம்பிடித்துக் காட்டும் காலக்கண்ணாடியாக இந்த இலக்கியங்கள் திகழ்கின்றன. அவற்றை முறையாக ஆராய்ந்து விளக்குவதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** தமிழர் வாழ்வியல், அகநானூறு, புறநானூறு, வேளாண்மை, வாணிகம், விருந்தோம்பல், கொடை, பண்பாடு

## ஆய்வு நோக்கம்

எந்தவகையான அறிவியல் வளர்ச்சியும் இல்லாத பண்டைய காலத்தில் வாழ்ந்த பெண்கள் எவ்வாறு ஒழுக்கத்தில் சிறந்த வாழ்வியலை வாழ்ந்துள்ளனர் என்பதை சங்க இலக்கியங்கள் மூலம்

ஆராய்ந்து வெளிப்படுத்துவதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு அணுகுமுறை

சங்ககால பெண்களின் அன்பு கலந்த வாழ்வியல், வீரம் கலந்த வாழ்வியல், கற்புநெறி தவறாத வாழ்வியல், இல்லறம் காத்த வாழ்வியல், அன்னையாய் உயர்ந்த வாழ்வியல் போன்ற வாழ்வியல் முறைகளை சங்க இலக்கியங்கள் வழி ஆராய்ந்து எடுத்துரைப்பதால் இந்த ஆய்வுக்கட்டுரை விளக்கமுறை ஆய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## முன்னுரை

சங்க ,லக்கியங்களான அகநானூறு குறிப்பாக காதல் மற்றும் குடும்ப வாழ்க்கையின் பல்வேறு நிலைகளை வெளிப்படுத்துகிறது. அதேவேளையில் புறநானூறு அரசியல், போர், கொடை, புலவர்–மன்னர் உறவு, சமூக வாழ்க்கை போன்ற புறவாழ்வுக் கூறுகளைப் பதிவு செய்கிறது. எனவே, சங்க இலக்கியங்களை “பண்டைய தமிழரின் வாழ்வியல் ஆவணம்” எனக் கருதுவதில் மிகுந்த பொருத்தம் உள்ளது. இத்தகைய சங்க இலக்கியங்கள் பண்டைய தமிழ் மக்களின் வாழ்க்கை நெறிமுறைகளைப் படம் பிடித்துக் காட்டுவன. அதனால் தான் சங்க இலக்கியங்கள் தமிழர்களின் இரு கண்களாகத் திகழ்கின்றன. சங்க காலத்தில் பெண்கள் வீரமிக்கவராகளாகவும், புலமை பெற்று அரசர்களுக்குக்கூட அறிவுரை வழங்கியும் வாழ்ந்துள்ளனர். மேலும் விருந்தோம்பல் என்ற தலையாயப் பண்பைப் பெற்றவர்களாகவும் இருந்தனர். இத்தகைய சிறப்புகளையெல்லாம் பெற்றுள்ள பெண்களின் வாழ்வியலை சங்க இலக்கியங்கள் கொண்டு ஆராய்வதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

## கற்பு நெறியில் பெண்கள்

பெண்கள் இல்லாத சமூகம் வெறுமையுற்றது. இவ்வுலகில் பெண்மையைப் போற்ற வேண்டும். “சங்ககாலப் பெண்கள் ஆண்கள் அளவிற்குச் சமவுரிமை பெறவில்லை என்றாலும் அடிமைகளாய், வாழமுடியாதவர்களாய் ஒருபோதும் இருந்ததில்லை. சமயம், கல்வி, காதல் ஆகியவற்றில் உரிமை மகளிராய்த் திகழ்ந்தனர் என இறையரசன் கூறுவது வண்மையானது. சங்க காலத்தில் நச்செள;ளையார், நல்முல்லையார், ஆதி மந்தியார், நப்பசலையார், முடத்தாமக் கண்ணியார், பொன்முடியார், காக்கைப் பாடினியார், ஔவையார் போன்ற பெண்பால் புலவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியுள்ளனர். அவர்களின் செருக்குப் பற்றிக் கூறும்போது,

> *“எத்திசைச் செல்லினும், அத்திசைச் சோறே”*
> *(புறம்:206 :13)*

எனக் குறிப்பிட்டுள்ளனர்.

என்னிடம் புலமை இருக்கிறது. நான் எந்த ஒரு மன்னனையாவது புகழ்ந்து பாடிப் பரிசினைப் பெற்று விடுவேன். நீ இல்லையென்றால் என்ன? எனக்கு எந்தத் திசைச்சென்றாலும் சோறு கிடைக்கும் என

ஔவையார் அதியமானிடம் கேட்பதிலிருந்து பெண்களுடைய உயர்வை சங்ககாலத்தில் நலமாக உள்ளது என அறியலாம்.

*“உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்*
*சேயிர் தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றென”*
*(தொல்.பொருள். களவு :23)*

பெண்களுக்கு உயிரைவிட நாணமே சிறந்தது என்றும், அந்நாணத்தைவிடக் குற்றமில்லாத கற்புதான் சிறந்தது எனத் தொல்காப்பியரும் பெண்ணினுடைய கற்பின் சிறப்பைப் பற்றிக் கூறியுள்ளார். கற்பு என்பது தன் கணவனைத் தெய்வமென்று உணர்வதன் மேற்கொள் என்பர் நச்சினார்க்கினியர். சங்க இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள பெண்கள் சுதந்திரமாகவும், அதே நேரத்தில் தன்னுடைய தலைவனைத் தானே தெரிவு செய்யும் மனப்பான்மையும் பெற்றிருந்தனர். தங்கள் தலைவர்களோடு தினைப்புனம், காடு, வயல், கடற்கரை மணல், சுனை போன்ற இடங்களில் காதலை வளர்த்துக் கொண்டார்கள்.

*“நிலத்தினும் பெரியதே, வானினும் உயர்ந்தன்று*
*நீரினும் ஆர் அளவின்றே”.*

*(குறுந் : 3 : 1)*

இங்குத் தலைவனோடு தலைவி கொண்ட காதலானது நட்பு, மொழி, மனம், மெய் என்பதைக் கடந்து நிற்பது ஆகும். நிலம், வான், நீர் என மூன்றினையும் விட உயர்ந்தது என்கிறார் தேவகுலத்தார். ஊரில் ஏற்பட்ட அலரால் தலைவியுடைய காதல் பெற்றோருக்குத் தெரிய வருகிறது. பெற்றோரும் எதிர்ப்பு தெரிவிக்கும் நேரத்தில் தலைவி தன் தலைவனோடு உடன்போக்குச் செல்வதற்கும் தயங்கமாட்டாள் என்கிறது சங்க இலக்கியப் பாக்கள்.

## துள்ளித் திரிந்த மகளிர்

எப்போதும் மகிழ்ச்சியும் மனநிறைவுமாகவே வாழ்ந்து வந்திருக்கிறார்கள் மகளிர். இல்லையென்றால் குறிஞ்சிப் பாட்டிலே தலைவவி ஒருத்தி தன் தோழிகளுடன் சுனை நீராடுகையில் அங்கே இருக்கும் கற்பாறையில் தொண்ணூற்று ஒன்பது வகையான மலர்களைப் பறித்து வைத்து அழகு பார்த்திருக்கமாட்டாள்.

*“பொலம் செய் கழங்கின் தெற்றி ஆகும்”*
*(புறம் : 36 : 4)*

அழகிய வளையல்களை அணிந்த மகளிர்கள் வண்டல் மண்ணால் பார்வை செய்வதும், மணல் மேட்டில் சுழற்சிக் காய்களை ஒருவருக்கொருவர் வீசி விளையாடுவதும், பொற்சிலம்பு ஒலிக்க மேல்நிலை மாடத்தில் பந்தாடுவதையும், சுனை நீராடல், சிற்றில் இழைத்தல், துணைங்கையாடல், குரவை ஆடல் போன்ற விளையாட்டுகளில் ஈடுபடுவது மாக இருந்துள்ளனர்.

## நல்லறமே இல்லறம்

ஒவ்வொரு மனிதனுக்கும் திருமணம் தவிர்க்க முடியாதது. தன்னைத் திருமணப் பந்தத்திலே ஈடுபடுத்தி வாழ்க்கையை முழுமை

ஆக்குகின்றான். ஒவ்வொரு பெண்ணும் தனக்கு எவ்வாறு கணவன் அமைய வேண்டும் எனக் கனவு காண்பாள். அக்கால மகளிரும் தனக்கு வாய்க்கும் கணவன் வீரம் உடையவனாகவும், அஞ்சா நெஞ்சம் உடையவனாவும் இருக்க வேண்டுமென விரும்பினர். காளையை அடக்கும் வீரர்கள், வட்டக்கல் தூக்கும் வீரர்களுக்கே தங்கள் மனதினைப் பறிகொடுத்தனர். வீரம் இல்லாத ஆண்களை வேண்டாம் என ஒதுக்கினர் என்பதை,

*“கொல் ஏற்றுக்கோடு அஞ்சுவானை மறுமையும்*
*புலலாளே, ஆய மகள்”*
*(கலித் : 103)*

கலித்தொகை தலைவி மறுபிறப்பும் கூட அந்த வீரமற்றவனைத் திருமணம் செய்ய மாட்டேன் என்கிறாள். சங்க இலக்கியத்தில் ஒத்த வயதுடைய தலைவனும் தலைவியும் கால் கொண்டு திருமணம் செய்யலாம் என்கிறது. தலைவியின் திருமணத்தின் போது, பந்தலிட்டு, புதுமணல் பரப்பி, மனை விளக்கு ஏற்றி மாலைகளைத் தொங்கவிட்டனர் என்றும், புதல்வனைப் பெற்றெடுத்த மகளிர்கள் நெல்லும் மலரும் கலந்ததை அம் மணமக்கள் மேல் தூவி வாழ்த்துவதாகக் கூறுகிறது. (அகம் :86) நல்ல நேரம் பார்த்தல், சகுனம் பார்த்தல், திருமணத்தின் போது உணவு பரிமாறுதல் (அகம் :136) முரசு கொட்டுதல் போன்ற நிகழ்வுகள் சங்க காலத்தில் இருந்ததாக அறிகின்றோம். ஆனால் அக்காலத்தில் தாலிகட்டும் வழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. மலைப்பகுதியில் வாழும் குறவர்கள் தம் மனைவிமார்கள் தவறாது தங்கள் கணவர்களைத் தினம் தினம் தொழுதெழுவதால் அக்குறவர்கள் தொடுக்கும் அம்புகள் குறி தவறிச் செல்லாதாம் எனச் சங்கப் பாடல் கூறுகிறது. சங்ககாலத்து மகளிர் தங்களுடைய கணவர்களையும், கண்ணுக்குக் கண்ணாகப் போற்றி வந்தனர். திருமணத்திற்கு முன் துள்ளித் திரிந்த மகளிர் திருமணமான பிறகு தன் கணவனே உயிர் என்று அதன்பிறகு ஏங்கும் பாவைகளாகவும் திகழ்கின்றனர்.

*“இம்மை மாறி மறுமை ஆயினும்*
*நீ ஆகியர் எம் கணவனே”*
*(குறுந் : 49 : 3-4)*

இந்தப் பிறப்பு மட்டுமின்றி இனி வருகின்ற ஏழ் எழு பிறப்புகளிலும் நீயே என் கணவனாக வர வேண்டும் எனச் சங்ககால மகளிர் ஆசைப்பட்டனர். மேலும் பொருள் தேடத் தன் தலைவன் பிரிந்து சென்றால் அவன் இல்லாத நாட்களை ஒவ்வொரு நாளும் யுகமாக கழித்தும், முள்படுக்கையில் இருப்பது போன்று எண்ணியும், பிரிந்து சென்ற தலைவனின் காட்டு வழிக் கொடுமையினை எண்ணி வருந்தியும், கார்காலத்தை எதிர்நோக்கியும், சுவரிலே கோடிட்டுத் தலைவன் வரவை எதிர்நோக்கிக் காத்துக்கொண்டிருந்தனர் என நற்றிணைப் பாடல் (நற் : 324) மூலம் அறியமுடிகிறது. அதுபோல் ஐங்குநுறூற்றில் ஒரு தலைவி திருமணமாகித் தலைவனுடன் தன் புகுந்த வீட்டிற்கு வரும் தலைவியிடம் நலம் விசாரிக்கிறார்கள். உறவினர்கள் என்பதனை “மான் உண்டு எஞ்சிய கலிழி நீரே”

*(ஐங் : 203)*

என்னும் பாடல் வரியில் குளத்திலே கலங்கிய தண்ணீரை வெப்பம் மிகுதியால் அந்தப் பக்கம் சென்ற மானானது பருகியது. அந்த எச்சில் தண்ணீர் கூட எனக்கு இனிய தேனோடு கலந்த பசுவின் பாலைவிட இனிமையானது என்கிறாள் தலைவி, தன் புகுந்த வீடும், நாடும், ஏழ்மை வறட்சி உடையது என்பதை அறிந்திருந்தும;, உறவினர்களிடம் தன் கணவனின் நலம் கெடாதவாற தலைவி கூறுகிறாள். இதைவிட ஒரு பெண் தன்னுடைய புகுந்த வீட்டிற்கு வேறென்ன பெருமை சேர்க்க முடியும்.

விருந்தோம்பல் நம் தமிழ்ப் பண்பாட்டில் பகைவர்களாக இருந்தாலும் வீட்டிற்கு வந்தால அவர்களைவ வா என்று அழைக்கும் வழக்கும் நம்மக்களிடையே உள்ளது. மகிழ்ச்சியிலும் பெரும்மகிழ்ச்சி மற்றவர்களுக்கு உணவு அளித்து ஆனந்தப்படுவதே ஆகும். அப்படிப்பட்ட உயர்வான பண்பினை எப்போதும் குறையாத அளவிற்குப் பெற்றிருந்தனர் சங்க காலப் பெண்கள். தொல்காப்பியர் கூட,

*“விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓப்பலும்*
*பிறவும் அன்ன இழவோள் மாண்புகள்”*
*(தொல்.பொருள்:11)*

எனக் கூறுகிறார்.

ஒழுக்கமும், பொறுமை குணத்தையும், அடக்கமான உடைமையினையும் கொண்ட பெண்கள் விருந்தினரை நன்றாகக் கவனிப்பார்கள். விருந்தினரை வரவேற்று அவர்கள் விடைபெறும் போது அவர்கட்கு வெற்றிலைப் பாக்கு கொடுக்கும் வழக்கம் உள்ளது. விருந்தினரை வழி அனுப்பும் போது ஏழடி உடன்பின் சென்று அனுப்புதல வழக்கம் போன்றவை தமிழரின் பண்பாட்டைக் கூறுகிறது. “செழுஞ்கோள் வாழை அகல் இனப்பகுக்கும்”. (புறம்:168:13) பன்றி தோண்டிய வயலில் திணை விதைத்து, அவற்றை அறுவடையும் செய்த உழவுப் பெண்கள் தினைச் சோற்றோடு பாலை உலை நீரோடு வார்த்த மானிறைச்சியைத் தன்னுடைய விருந்தினர்க்குப் படைத்தனர். மேலும், தங்கள் கணவன் இல்லாத நேரங்களில் விருந்தோம்பல் செய்வதில்லை என்ற செய்தி அவர்களின் கற்புத்திறத்தைக் காட்டுவதாக அமைகிறது.

## குழந்தைச் செல்வம்

செல்வம் எவ்வளவு இருப்பினும் அது குழந்தைச் செல்வத்திற்கு ஈடாகாது. ஒரு பெண் பிறந்துவிட்டால் அவள் தாய்மையை எய்தாவிடில் அவளுடைய உடல் தீயிலே வேகாது.

*“இட்டும், தொட்டும், கல்வியும், துழந்தும்*
*நெய்யுடை அடிசில் மெய்படவிதிர்த்தும்”.*

*(புறம்: 188: 14-5)*

குழந்தையானது குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி இட்டும், பிசைந்தும், வாயால் கவ்வியும், கையில் துழாவியும், சோற்றைத் தன் உடம்பிலே கொட்டியும் உண்ணுகின்ற அழகைப் பார்ப்பதற்கு அந்தத் தாய்க்கு ஆயிரம் கண்கள் வேண்டும். இப்படிப்பட்ட பாசம் மிகுந்த தாயாக மட்டும் அல்லாமல் வீரம் மிகுந்த தாயாகவும் இருக்கின்றாள். புறநானூற்றிலே

ஒரு தாய் முதல் தந்தை, அடுத்த நாள் கணவன், அடுத்த நாள் தன் மார்மேலும் தோள்மேலும் போட்டு வளர்த்த பிள்ளையைப் போருக்கு அனுப்புகிறாள். அப்போரிலே தன் மகன் மார்பிலே புண்பட்டு வீரமரணம் அடைந்ததை எண்ணி மார்பிலே பால் சுரந்ததாம் அந்தத் தாய்க்கு என்கிறார் ஆசிரியர்.

## விருந்தோம்பல்

விருந்தினரைப் போற்றுதல் சங்ககாலத் தமிழரின் உயர்ந்த பண்பாடுகளில் ஒன்றாக விளங்கியது. நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு போன்ற நூல்கள் இதற்குச் சான்றுகளை வழங்குகின்றன. குறிப்பாக நற்றிணையில்:

*"அல்லி லாயினும் விருந்துவரின் உவக்கும்*
*முல்லை சான்ற கற்பின் மெல்லியல்..." (நற்றிணை - பா – 123)*

என்று விருந்தினர் வந்தபோது மகிழ்ந்து அவர்களை வரவேற்கும் இல்லறப் பண்புடைய பெண்ணைப் பற்றிக் கூறப்படுகிறது. மேலும் குறுந்தொகை 205-ஆம் பாடலில் இரவு நேரத்திலும் விருந்தினரை எதிர்பார்த்து அவர்களுக்கு உணவளிக்கும் பண்பு சுட்டப்படுகிறது. இதன் மூலம் விருந்தோம்பல் தனிப்பட்ட பண்பாக மட்டுமன்றி இல்லறக் கடமையாகவும் கருதப்பட்டதை அறியலாம்.

## முடிவுரை

சங்க இலக்கியங்களில் பெண்கள் வெறும் குடும்ப உறுப்பினர்களாக மட்டும் காட்டப்படவில்லை. அவர்கள் காதல், குடும்பம், சமூகப் பொறுப்பு, அறிவு, மனவலிமை ஆகியவற்றில் சிறப்புடையவர்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர். அகப்பாடல்களில் தலைவி தன் காதலையும் மனநிலையையும் நேரடியாக வெளிப்படுத்துகிறாள். தோழி தலைவியின் வாழ்க்கையில் முக்கியமான அறிவுரையாளராகச் செயல்படுகிறாள். இதன் மூலம் பெண்களின் உணர்வுச் சுதந்திரம், கருத்து வெளிப்பாடு, குடும்பப் பொறுப்பு ஆகியவற்றைச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. இவற்றையெல்லாம் கொண்டு ஆராய்ந்துப் பார்த்தால் பண்டைய தமிழரின் வாழ்க்கை வெறும் பொருளாதார வாழ்வாக இல்லாமல் அறம், அன்பு, பண்பு, சமூகப் பொறுப்பு ஆகியவற்றை மையமாகக் கொண்ட வாழ்வாக இருந்ததை உணர்த்துகின்றன.

## துணைநூற் பட்டியல் (References)

1. இளம்பூரணர், தொல்காப்பியப் பொருளதிகாரம் இளம்பூரணர் உரை, சாரதா பதிப்பகம், சென்னை -24
2. சாமிநாதையர் உ.வே. சங்க இலக்கிய மூலமும் உரையும் உ.வே.சா பதிப்பகம், சென்னை.
3. முத்துகமலம் இதழ்க் கட்டுரை சங்க இலக்கியங்களின் வாழ்வியல் நெறிகள், 2011
4. சாமிநாதையர்.உ.வே. சங்க இலக்கிய மூலமும் உரையும், உ.வே.சா பதிப்பகம், சென்னை.

**ARTICLE 18 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 128–133

# எழுத்தாளர் மௌனி படைப்புகளில் கதைப் பின்னனியின் தன்மைகள்

## Characteristics of the Narrative Setting in the Works of Writer Mouni

**பெ.நித்தியா**
உதவி பேராசிரியர் தமிழ்த்துறை,எக்ஸல் வணிகவியல் மற்றும் அறிவியல் கல்லூரி
குமாரபாளையம் நாமக்கல்,அலைபேசி எண் – 6383437960
மின்னஞ்சல் முகவரி: tnnithi90@gmail.com

### Abstract

A literary work does not rest solely on the author's imagination; that imagination must be grounded in a specific background—or more accurately, such a background invariably exists. An event witnessed, heard, or experienced by the author typically serves as the catalyst for writing; this is what is termed the "background." These backgrounds are categorized into three types: a "social background" arises when a socially relevant event impacts the author and prompts them to write; a "temporal background" emerges when a past or contemporary event influences the author to create; and a "historical background" applies when the author is inspired to write by a historical event. This research paper examines the works of the writer Mouni through this framework, demonstrating that his creations are indeed grounded in these three types of backgrounds.

### ஆய்வுச் சுருக்கம்

ஆசிரியரிர் கற்பனையோடு மட்டுமே எந்தவொரு படைப்பிலும் கதை நின்றுவிடாது. அந்தக் கற்பனைக்கு ஏதேனும் ஒரு பின்னனி இருக்கவேண்டும். இருக்கவேண்டும் என்பதை விட இருக்கும் என்பதே பொருத்தமானதாகும். தான் கண்ட, கேட்ட, உணர்ந்த ஏதேனும் ஒரு நிகழ்வு ஆசிரியரை எழுதத்தூண்டியிருக்க வேண்டும். அதுவே பின்னனி என்கிறோம். இந்தப் பின்னனி மூன்று வகையாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஏதேனும் சமுதாயம் சார்ந்த நிகழ்வு ஆசிரியரைப் பாதித்து அதன் விளைவாக அவர் எழுதத் தொடங்கினால் அது சமுதாயப் பின்னனி என்றும், காலம் கடந்த நிகழ்வோ அல்லது சமகால நிகழ்வோ ஆசிரியரை பாதித்து அதன்மூலம் எழுதத் தொடங்கினால் அது காலப் பின்னனி என்றும், ஏதேனும் வரலாற்று நிகழ்வில் மனம் ஈடுபட்டு அதன் விளைவாக அவர் எழுதத் தொடங்கியிருந்தால் அது வரலாற்றுப் பின்னனி என்றும் அளவிடுவர். இதன் அடிப்படையில் ஆராய்ந்துப் பார்க்கும்போது எழுத்தாளர் மௌனி அவர்களும் தன்னுடைய படைப்பை இந்த மூன்று பின்னனியுடன்தான் படைத்துள்ளார் என்பதை ஆராய்ந்து விளக்குவதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

## ஆய்வு நோக்கம்

எழுத்தாளர் மௌனி அவர்களின் படைப்புகளில் காணப்படும் சமுதாயப் பின்னனி, வரலாற்றுப் பின்னனி, காலப்பின்னனி ஆகியவற்றை முறையாக ஆராய்ந்து விளக்குவதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

## ஆய்வு அணுகுமுறை

எழுத்தாளர் மௌனி அவர்களின் படைப்புகளில் உள்ள கதைக்கான பின்னனியை ஆராய்ந்து எடுத்துரைப்பதனால் இந்த ஆய்வுக்கட்டுரை எடுத்துக்கூறும் முறையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

## முன்னுரை

கதைப்பின்னணி என்பது ஒரு கதையின் நிகழ்வுகள் நடைபெறுவதற்கான காலம், இடம், சமூகச் சூழல், வரலாற்றுச் சூழல் மற்றும் கதாபாத்திரங்களின் வாழ்க்கைச் சூழல் ஆகியவற்றின் மொத்த அமைப்பாகும். ஒரு கதை “எங்கே? எப்போது? எந்தச் சூழலில்? எப்படிப்பட்ட சமூகத்தில்?” நடைபெறுகிறது என்பதை விளக்குவது கதைப்பின்னணி ஆகும். கதைா நிகழ்வுகள் நடைபெறும் சூழல் ஸ்ரீ கதைப்பின்னணி. இதன் அடிப்படையில் எழுத்தாளர் மௌனி அவர்களின் படைப்புகளுக்கான கதைப்பின்னனியை ஆராய்ந்து விளக்குவதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

## கதைப்பின்னணி

கதைப் பின்னணி என்பது கதை நடைபெறும் காலம், இடம் மற்றும் சூழ்நிலையைக் குறிக்கும். இது கதையின் மையக்கருத்தை நிலை நிறுத்தவும், கதாப்பாத்திரங்களின் செயல்பாடுகளை வழிநடத்தவும் மற்றும் படிப்பவர்களின் உணர்வுகளை ஈர்க்கவும் அடிப்படையாக அமையும் மிக முக்கியமான கட்டமைப்பாகும். காலம், இடம், சூழல் இவை மூன்றும் கதைப்பின்னணிக்கான முக்கியக் கூறுகள் ஆகும். இந்தக் கதைப் பின்னணி கீழ்க்கண்ட நான்கு வகைப்படும்.

## இடப் பின்னணி

எந்த இடத்தைச் சார்ந்து கதை நகர்கின்றது என்பது நேரடியாகத் தெரியும்படி கதை அமைப்பது நேரடிப் பின்னணி எனப்படும். இப்பின்னணி தெளிவாகத் தெரிந்தால் மட்டுமே கதையின் போக்கு நமக்கு விளங்கும். கிராமம், நகரம், அரண்மனை, காடு போன்ற வெளிப்படையான இடங்களை மையமாகக் கொண்டு கதை நகருவதை நேரடிப் பின்னணி என்று அழைப்பர். இதில் கதை நடைபெறும் இடம் மிகவும் வெளிப்படையாகத் தெரியபடுத்தப்பட்டிருக்கும். ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தினை மையமாகக் கொண்டு இயற்றப்படும் கதைகள் அனைத்தும் இந்த நேரடிக் கதைப்பின்னணியின் பாங்கிலேயே அமைந்திருக்கும்.

எழுத்தாளர் மௌனி அவர்களின் கதைகளிலும் இந்த நேரடிக் கதைப் பின்னணியைக் காண முடியும். “அழியாச்சுடர்” என்னும் கதையில் ஒரு வீட்டின் ஒரு அறைக்குள் கதை நடப்பதாக அவர் அக்கதையை அமைத்துள்ள பாங்கு இந்த நேரடிக் கதைப்பின்னணியை விளக்குவதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

*“நேற்றைய முன்தினம் இது நிகழ்ந்தது. மாலை நாலரை மணி சுமாருக்கு, நான் அவன் வீட்டை அடைந்தேன். அவன் என் பாலிய சினேகிதன். நான் சென்றபோது, தன் வீட்டின் முன் அறையில் அவன்*

*வழக்கம்போல் ஒரு நாற்காலியில் அமர்ந்திருக்நதான். திறந்த ஜன்னலுக்கு எதிரே இட்காந்திருந்த அவன் ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருப்பதாக எண்ணி, திடீரென உட்புகச் சிறிது தயங்கி, ரேழியில் நின்றேன். என் பக்கம் பாராமலே, என்னை அவன் உள்ளே அழைத்தது திடுக்கிடத்தான் செய்தது. அவனுடைய அப்போதைய தோற்றமும் கொஞ்சம் ஆச்சரியம் அளிப்பதாகவே இருந்தது. உள்ளே ஒரே நாற்காலியும், அதன் அருகில் ஒரு மேஜையும் இருந்தன. மற்றும் எதிரில் வீதிப்பக்கம் பார்த்து ஜன்னல் திறந்து இருந்தது."*

*(மௌனி படைப்புகள் - க.நா.சுப்பிரமணியன் (தொ.ஆ) – ப- 84)*

## காலப் பின்னணி

வரலாற்று நிகழ்வுகள், குறிப்பிட்ட சகாப்தம் அல்லது நவீன காலகட்ட நிகழ்வுகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு படைக்கப்படுவது காலப் பின்னணி எனப்படும். இதில் கதைக்கு எந்த அளவு முக்கியத்துவம் தரப்படுகின்றதோ அந்த அளவு முக்கியத்துவம் அக்கதை பயணிக்கும் காலத்திற்கும் தரப்படும். இம்மாதிரியான பின்னணியைக் கொண்ட கதைகளில், அது பயணிக்கும் காலம் தெளிவாகத் தெரிந்தால் மட்டுமே கதையின் தன்மையை உணர்ந்துகொள்ள இயலும்.

மௌனி அவர்களின் படைப்பில் நவீன காலகட்டத்தின் நிகழ்வுகள் மட்டுமே இந்தக் காலப் பின்னணியை அழகூட்டும். ஏனெனில் நவீனம் மேல் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் மௌனி. எனவே யாரும் எதிர்பார்க்காத நவீனம் பல்வேறு இடங்களில் இவருடைய படைப்பில் புகுத்தப்பட்டிருக்கும். இவை அனைத்தும் கதையின் தன்மையைப் பன்மடங்கு உயர்த்திக் காட்டும். மேலும் படிப்போருக்குப் பல்வேறு கற்றல் அனுபவங்களைத் தருவதாகவும் இது அமையும்.

*"காதல் சாலை" என்ற கதையில் காதலில் உணர்வுகளைப் பதிவு செய்யும் இடத்தில் யாரும் அனுபவிக்காத நவீன கதைப்பின்னலை மிக அழகாகப் படைத்துக்காட்டுகிறார் ஆசிரியர். காதலியின் நினைவுகளோடு அவள் ஊரை விட்டு வெளியேறும் காதலன் தன் நினைவுகளை,*

*"ஓடி ஓடி அவ்வூரை விட்டகன்றான். அவன் வழிநடந்தான். காதல்? எங்கே? எப்படி? என்றான். உணர்ந்தானா? அதோ அங்கே என்று ஆகாயத்தை இரு கைகளையும் விரித்து நீட்டிக் காட்டினான். விரல்களைக் கெட்டியாக மூடி அசைத்துப் பயமுறுத்தினான். பொழுது நன்றாக விடிந்துவிட்டது. அன்று பொழுது போயிற்று. இரவும் வந்தது. ஆனால் அவனுக்கு மறுபடியும் பொழுது புலரவில்லை.*

*நேருக்கு நேரே காதலைக் கண்டதேபோலும். கண்ட தன் கதிபோலும்...காண்பவரின் கதிபோலும்..."*
*(மௌனி படைப்புகள் - க.நா.சுப்பிரமணியன் (தொ.ஆ) – ப- 38)*

என்ற வரிகளில் கண்டுணர முடிகின்றது.

சமூகப் பின்னணி

மக்களுடைய பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், வாழ்க்கைமுறை மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றின் அடிப்படையில் கதையின்

பின்னணியை அமைப்பதே சமூகப் பின்னணி ஆகும். ஒருவர் வாழும் நிலை அல்லது செயல்படும் சூழலின் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பினை மையமாகக் கொண்டு எழுதப்படுவது இது.

கதை நடைபெறும் காலம், புவியியல் இடம், அங்குள்ள கலாச்சார சூழ்நிலைகள் ஆகியவற்றைத் துள்ளியமாக வெளிப்படுத்த இந்தச் சமூகப்பின்னணி உதவுகின்றது. படிப்பவர்களைக் கதையோடு ஒருங்கிணைப்பது இதுவே. மேலும், ஒரு தனி மனிதனின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை வெளிச்சம்போட்டுக் காட்டுவதும் இதுவே. ஒரு மொழி அவன் சார்ந்த சமூகத்தில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை விளக்குவதும் இதுவே.

சமூகத்தில் நிகழும் ஏற்றத்தாழ்வுகள், மூட நம்பிக்கைகள், வர்க்கபோராட்டங்கள் முதலியவற்றை இச்சமூகப்பின்னணி மையமாகக் கொண்டுள்ளதால் இவற்றையெல்லாம் சமூகத்திற்கு வெளிப்படுத்திக் காட்டும் ஒரு காலக்கண்ணாடியாகவும் இது திகழ்கின்றது. இந்தச் சமூகப் பின்னணி மூலம் எழுத்தாளர்கள் சமூக அநீதிகளைச் சுட்டிக்காட்டுவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. தாங்கள் சுட்டிக்காட்டும் சமூக அநீதிகளுக்குத் தேவைப்படும் மாற்றங்களையும், சீர்திருத்தங்களையும் கூடவே விளக்கிக் கூறுகின்றனர். எனவே கதையில் கையாளப்படும் இந்தச் சமூகப் பின்னணியால் ஒரு மாபெரும் சமூக மாற்றமே நிகழ்வதற்கும் வாய்ப்புள்ளது என்பது கூர்ந்துநோக்கத்தக்கது.

மௌனி அவர்கள் தன் கதைகளில் பல இடங்களில் சமுதாய சிக்கல்களைப் பதிவுசெய்துள்ளார். அவர் கதைகளில் காணப்படும் சமுதாயப் பின்னணி மிகவும் விசித்திரமானதாக காணப்படும். பல நேரங்களில் அவர் முன்வைக்கின்ற பிரச்சனைகளும் அதற்கான தீர்வுகளும்கூட பலராலும் ஏற்றுக்கொள்ள இயலாததாகக்கூடக் காணப்படும்.

‘அழியாச் சுடர்’ என்ற சிறுகதை தன்னிலிருந்து புற உலகைப் பார்க்கின்ற ஒரு தனி மனிதனின் அகச்சிக்கலைப் பேசுகிறது. இச்சிறுகதை 27 வயது நிரம்பிய ஒருவன் தன் நண்பனுடன் நடத்தும் உரையாடலிலே நகர்த்தப்படுகிறது. அந்த உரையாடலில் வருகின்ற கடந்தகாலத்தையும் கோவிலையும் கதை களமாகக் கொண்டுள்ளது. கதையில் உவமைகளாகக் காட்சிப்படுத்தப்படுகின்ற வானை நோக்கி நிற்கும் பட்ட மரம் கதைமாந்தரின் வாழ்க்கையுடன் பொருத்திப்பார்க்கும்போது, சொல்லப்படாமல் விடப்பட்ட நிகழ்ச்சிகளை நிறைவு செய்வதாய் அமைந்திருக்கிறது. ஒரு தருணம் அல்லது நிகழ்வுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை விரிவுப்படுத்திக் கூறாமல் அந்தத் தருணத்திற்குப் பிறகான உணர்வுகளையும் மனவோட்டத்தையும் இந்தக் கதையில் பார்க்க முடிகிறது. மனவோட்டத்தின் வழி கதை சொல்கின்ற பாணியை மௌனியிடத்தில் காண முடிகிறது.

மக்களின் கலாச்சாரம், பழக்கவழக்கம், நம்பிக்கைகள் போன்றவற்றை சமூகப் பின்னணி என்ற தன் வித்தைமூலம் ஒரே நகர்வுகளில் காட்சிப்படுத்தும் ஆசிரியரின் கவியாழத்தை,

*“ஈசுவர சந்நிதியில் நின்று, தலைகுனிந்து அவள் மௌனமாகத் தியானத்தில் இருந்தாள். அவளுக்குப் பின் வெகு சமீபத்தில் நான் நின்றிருந்தேன். அவளுடைய கூப்பிய கரங்களின் இடைவழியாகக் கர்ப்பக்கிருக சரவிளக்குகள் மங்கி, வெகு தூரத்திற்கு அப்பாலே பிரகாசிப்பதாகக் கண்டேன். அவள் கண்கள், விக்கிரகத்திற்குப்பின் சென்று வாழ்க்கையின் ஆரம்ப இறுதி எல்லைகளைத் தாண்டி இன்ப மயத்தைக் கண்டுகளித்தன போலும். எவ்வளவு நேரம் அப்படியோ தெரியாது. காலம் அவள் உருவில் அந்தச் சந்நிதியில் சமைத்து நின்றுவிட்டது.*

*தியானத்திலிருந்தும் விடுபட்டு என்பக்கம் அவள் திரும்பியபோது ஒரு பரவசம் கொண்டவனேபோல் என்னையும் அறியாமலே, ‘உனக்காக நான் எது செய்யவும் காத்திருக்கிறேன். எதையும் செய்ய முடியும்.’ என்றுசொல்லிவிட்டேன். இது அவள் காதில் விழுந்தன என்பது நிச்சயம். அவள் சிரித்தாள்.”*

*(மௌனி படைப்புகள் - க.நா.சுப்பிரமணியன் (தொ.ஆ) – பக்- 86-87)*

என்ற வரிகளிலும் மேலும்,

*“அவளுக்கு மட்டுந்தான் நான் சொன்னது கேட்டது என்பதில் எனக்கு அப்பொழுதே சந்தேகம். உள்ளிருந்த விக்கிரகம், எதிர்த்தூணில் ஒன்றி நின்ற யாளி அவையும் கேட்டு நின்றன என்று எண்ணினேன். எதிரே லிங்கத்தைப் பார்த்தபோது, கீற்றுக்குமேலே, சந்தனப் பொட்டுடன் விபூதி அணிந்த அந்த விக்கிரகம் உருக்கொண்டு, புருவஞ்சுழித்துச் சினங்கொண்டது. தூணில் ஒன்றி நின்ற யாளியும் மிக மருண்டு, பயந்து கோபித்து முகம் சுளித்தது. பின் கால்களில் எழுந்து நின்று பயமூட்டியது. அவளைப் பார்த்தேன். அவள் மறுபக்கத் திரும்பியிருந்தாள். பின்னிய ஜடை பின் தொங்க மெதுவாகத் தன்னுடன் கூட வந்தவர்களுடன் சென்றாள். நான் அவளைச் சிறிது தொடர்ந்து நோக்கி நின்றேன். ஆழ்ந்து அமுங்கிய உலக நிசப்தத்தைக் குலைக்க, அவளுடைய சதங்கைகள் அணிந்த அடிச்சுவடு இன்றி முடியாதுபோலும். வந்தவர்களுடன் குதூகலமாகப் பேசி, வார்த்தைகளாடிக்கொண்டே கால் சதங்கைகள் கணீர் என்று ஒலிக்க போய்விட்டாள். சந்நிதியின் மௌனம் அவளால் உண்டான சப்தத்தின் எதிரொலியில் சிதைவுற்றது. வௌவால்கள் கீரிச்சிக்கொண்டு குறுக்கும் நெடுக்குமாகப் பறந்தன.”*

*(மௌனி படைப்புகள் - க.நா.சுப்பிரமணியன் (தொ.ஆ) – ப- 87)*

என்ற வரிகளிலும் உவமைகளுடன் வெளிப்படுத்துகின்றார்.

இவ்வாறு தான் படைக்கும் படைப்பில் இடம் சார்ந்த பின்னணிகள், காலம் சார்ந்த பின்னணிக் குறிப்புகள், சமுதாயம் சார்ந்த பின்னணிக் குறிப்புகள் போன்றவற்றைத் திறம்பட புகுத்திக்காட்டுவதில் வல்லவர் எழுத்தாளர் மௌனி என்பது கூர்ந்து நோக்கத்தக்கது.

## துணைநூற் பட்டியல் (References)

1. மௌனி படைப்புகள் - க.நா.சுப்பிரமணியன் (தொ.ஆ) – காலச்சுவடு பதிப்பகம் - சென்னை – முதல் பதிப்பு – 2009
2. தொல்காப்பியம் – பொருளதிகாரம்- இளம்பூரணர் (உரையாசிரியர்) - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - பதிப்பு ஆண்டு – 1956
3. முல்லை பி.எல்.முத்தையா(உ.ஆ), திருக்குறள், முல்லை பதிப்பகம், சென்னை-2003
4. புலியூர்க்கேசிகன்(உ.ஆ), தமிழ் இலக்கிய வரலாறு, சாரதா பதிப்பகம், சென்னை-2009.

**ARTICLE 19 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 134–139

# சங்க இலக்கியங்கள் வழி அறியலாகும் பண்டைய சடங்குகள்

## Ancient rituals known through Sangam literature

**முனைவர் உ நிர்மலா**
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
ஏவிஎஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி) சேலம் -106
மின்னஞ்சல் முகவரி: nirmalakumar75@gmail.com

**Abstract**

The Sangam era was defined by the interplay of Akam (the inner world of emotions and love) and Puram (the outer world of public life and valor). Various rituals were intertwined with the daily lives of the people—encompassing love, marriage, worship, warfare, agriculture, death, and hospitality. Information regarding these rituals is widely found in texts such as Tolkappiyam, Akananuru, Purananuru, Natrinai, Kuruntokai, Ainkurunuru, Kalittokai, Patitruppattu, and Pattinappalai. These rituals were not merely religious activities; they were deeply connected to social order, family relationships, beliefs regarding nature, the spirit of valor, and the remembrance of ancestors. People in different regions adopted specific customs suited to their living environments. Deeply integrated into the social fabric, communities adhered to various beliefs and the rituals associated with them. Ritualistic practices accompanied human life from birth to death. Sangam literature serves as a mirror, clearly reflecting the customs and beliefs of that ancient society. Special rituals were performed at various stages of life—from conception in the mother's womb to death—to mark and commemorate these milestones. Thus, a ritual represents a prescribed form of conduct. This research paper examines such rituals through the lens of Sangam literature.

**ஆய்வுச் சுருக்கம்**

அகமும் புறமும் சேர்ந்ததே சங்ககாலம். அக்கால மக்களின் காதல், திருமணம், வழிபாடு, போர், வேளாண்மை, இறப்பு, விருந்தோம்பல் போன்ற வாழ்வியல் நிகழ்வுகளோடு பல்வேறு சடங்குகளும் இணைந்திருந்தன. தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து, பட்டினப்பாலை முதலிய நூல்களில் சடங்குகள் தொடர்பான செய்திகள் பரவலாகக் காணப்படுகின்றன. இச்சடங்குகள் வெறும் சமயச் செயல்பாடுகளாக அமையாமல், சமூக ஒழுங்கு, குடும்ப உறவு, இயற்கை நம்பிக்கை, வீர உணர்வு, முன்னோர் நினைவு ஆகியவற்றோடும் தொடர்புடையனவாக விளங்கின. உலகில் வாழும் சூழ்நிலைக்கேற்ப ஒவ்வொரு பகுதியில் வாழும் மக்கள் சில பழக்க வழக்கங்களைப் பின்பற்றினர். சமூகத்தோடு பின்னிப்பிணைந்துள்ள மக்கள் சமூகத்தில் நம்பிக்கைகளையும் அதனை சார்ந்து சடங்குகளையும் பின்பற்றி வந்தனர். மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை அனைத்து செயல்களிலும் சடங்கு முறைகள் காணப்பட்டனர். சங்க இலக்கியங்கள் பண்டைய சமூக பழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும் வெளிப்படையாக காட்டும் கண்ணாடியாக விளங்குகிறது. தாயின் கருவில் உருவானது முதல் இறப்பு வரை ஒவ்வொரு கட்டத்திலும் அதனின் நினைவூட்டுவதற்காக சில சிறப்பு செயல் சடங்குகளைச் செய்கின்றனர். எனவே சடங்கு என்பது நிர்ணயிக்கப்பட்ட நடத்தைகள் வடிவம் ஆகும். இத்தகைய சடங்குகளை சங்க இலக்கியங்கள் வழி ஆராய்வதாக இந்த ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** சடங்குகள், திருமணம், வழிபாடு, வெறியாட்டு, நடுகல், முன்னோர் வழிபாடு, வேளாண்மை.

## ஆய்வு நோக்கம்

நாம் வாழ்க்கையில் அன்றாடம் மேற்கொள்ளப்படுகின்ற சடங்குகளைச் சங்க இலக்கியம் மிகத்தெளிவாக வெளிப்படுத்துகினை;றது. அத்தகைய வாழ்வியல் சடங்குகள் அவர்களுடைய அன்றாட வாழ்வியலை உயர்த்தும் செயலையும் செய்கின்றன. எனவே அத்தகைய சடங்கு முறைகளை சங்க இலக்கியங்கள் வழி ஆராய்ந்து விளக்குவதே இந்த ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வு அனுகுமுறை

சங்ககால மக்களின் வாழ்வியல் சடங்குகளைச் சங்க இலக்கியங்கள் வழி ஆராய்ந்து எடுத்துரைப்பதால் இந்த ஆய்வுக்கட்டுரை எடுத்துக்கூறும் முறையில் அராய்ந்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## முன்னுரை

சடங்கு என்பது ஒரு சமூகத்தினரால் குறிப்பிட்ட நம்பிக்கையின் அடிப்படையில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் ஒழுங்கமைந்த செயல்பாடாகும். மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்க்கைப் பயணத்தில் பல்வேறு சடங்குகள் இடம்பெறுகின்றன. இவை தனிமனிதச் செயல்களாக மட்டுமன்றி, சமூகத்தின் பண்பாடு, நம்பிக்கை, அறவியல், வாழ்க்கை முறை ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. பண்டைய தமிழரின் சடங்குகளை அறிந்துகொள்வதற்கு சங்க இலக்கியங்கள் சிறந்த ஆதாரங்களாக அமைந்துள்ளன. குறிப்பாக அக இலக்கியங்கள் குடும்பம் மற்றும் காதல் சார்ந்த சடங்குகளையும், புற இலக்கியங்கள் போர், வீரர், மன்னர், இறப்பு மற்றும் நடுகல் சார்ந்த சடங்குகளையும் எடுத்துரைக்கின்றன. இவற்றையெல்லாம் முறையாக ஆராய்ந்து இந்த ஆய்வுக்கட்டுரை வெளிப்படுத்துகின்றது.

## சடங்கு வரையறை

மனிதன் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளப்படுமானால் அதற்கு சடங்குகள் என்று பெயர் .மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை சடங்குகள் நிறைந்து காணப்படுகின்றனர் .சடங்கு என்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்திலோ அல்லது சமயத்திலோ குறிப்பிட்ட நோக்கங்களுக்காக செய்யப்படும் அடையாளபூர்வமான முறைப்படுத்தப்பட்ட செயல்களில் தொகுப்பு ஆகும்.

சடங்குகளில் மக்கள் தங்களை பெரிதும் ஈடுபடுத்திக் கொண்டு செய்வதற்குரிய காரணமாக" கடவுளிடம் உள்ள அச்சமும் முன்னோர் பின்பற்றிய பழக்க வழக்கங்களையும் மீறாமல் நடந்து கொண்டால் தான் வாழ்க்கை சுகமானதாய் கவலையின்றி அமையும் என்ற நம்பிக்கையும் சேர்ந்து அத்தகைய சடங்குகளை விடாமல் செய்துத் தூண்டுகின்றனர் ".என்று தே. ஞானசேகரன் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. மேலும் அவர்

இது பற்றி "மனித வாழ்வினை சுற்றி நிலைத்திருக்கும் மர்மமே சடங்குகளின் தோற்றத்திற்கு காரணம் "என்று குறிப்பிடுகின்றார் .மனிதன் இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்றும் ஒழுக்கங்கள் மற்றும் நடத்தைகளை சடங்குகள் என்று குறிப்பிடப்படுகின்றனர்.

## சடங்குகள் நோக்கம்

சடங்கு பல்வேறு நோக்கங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குடும்பம் தழைக்க, நோயின்றி வாழ ,துன்பம் நீங்க இன்பத்தோடு வாழ, இயற்கை வசப்படுத்த, போன்றவைகள் நமக்கு கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புகள் நிறைவேற வேண்டும் என்பதற்காக சடங்குகள் கையாளப்பட்டனர்.

## பிறப்பு சடங்கு

குழந்தை பிறந்த நாளை பெரிதும் கொண்டாடுவர். இதனால் குழந்தை பிறந்த நாள் முதலியன குறிக்கும் இக்கால சாதகம் போன்றறொரு வழக்கம் முன்பு இருந்ததோ என்று ஐயுறவு தோன்றலாம்.

மன்னர் தமது பிறந்தநாளை வெகு விமர்சையாக கொண்டாடுவதில் இருந்து மக்களிடையே அவ்வழக்கம் தோன்றியது. நன்னன் என்பவன் தனது பிறந்த நாளில் கொண்டாடிய சேரி விழாவை உவமையாக எடுத்துக்காட்டுகிறது மதுரை காட்சி

*'பேரிசை நன்னன் பெரும் பெயர் நன்னாள்*
*சேரி விழாவின் ஆப்பு எழுந்தாங்கு" (மதுரை:618 -619)*

## பூப்புச்சடங்கு

மனிதன் வாழ்க்கை வட்டாரசடங்குகளாக காணப்பட்டது. பூப்பு ஒரு பெண் குறிப்பிட்ட வயது வந்ததும் அவர் பக்குவமடைகிறாள். பெண் பூப்படைந்தவுடன் அதை பயத்தோடும் அச்சத்தோடும் தாய் அல்லது சுற்றி உள்ளவர்களிடம் தெரிவிப்பார்கள் அன்று மாலையில் மாமன் வீட்டார் மற்றும் உறவுக்காரரர் ஊரார்கள் போன்றோர் சீர்வரிசையுடன் வந்து பெண்ணுக்கு சடங்குகளை செய்வார்கள். தண்ணீர் ஊற்றி அலங்கரித்தல், குச்சி கட்டுதல் ,பூப்பெய்தி பெண்ணிற்கு உணவு கொடுத்தல் ,சடங்கு சுற்றுதல், கொடி போடுதல் போன்ற சடங்குகளை மேற்கொள்கின்றன.

பெண்கள் பூப்படைந்ததை ஒட்டி செய்யப்பட்ட சடங்குகளைப் பற்றி சங்க இலக்கியங்கள் விரிவான தகவல்கள் இல்லை. மக்கட்பாற் காஞ்சித் துறையில் மட்டும் பெண்ணின் முதல் பூட்டும், அதனை ஒட்டி நிகழ்த்தப்பட்ட சடங்குகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. பூப்புச் சடங்குகள் குறித்துப் புறநானூறு ஆசிரியர்,

*'பாரி பரப்பின் பணிச்சுமனை*
*போல் காண்டற் கரியளாகிய மாண்டா*
*பெண்மை நிறைந்த பொலிவொரும் மண்ணிய*
*துகில் வரி கடுப்ப நுங்கி தண்டிணை வரி*
*கடுப்ப நுங்கி தண்டிணை*
*அதில் அரும்பும்புகை சென்றடங்கிய*
*கபில நெடுநகர்க் கமலும் நாற்றமொரு*

*மனைச் செறிந் தன்னை வானுதல்"; (புறநானூறு 337)*
எனச் சுட்டுகிறார்.

## திருமணம்

ஒரு சமூக சட்ட மற்றும் உறவுமுறை அமைப்பாகும். ஆணும் பெண்ணும் இணைந்து சேர்ந்து இல்லறம் நடத்துவதற்கான ஒரு வாழ்க்கையே திருமணம் ஆகும்.

## திருமணம் சொல்லும் பொருள்

திருமணம் என்ற சொல்லுக்கு விளக்கம் கூறுகின்ற போது 'திரு' என்பது அழகு, செல்வம், செம்மை, சிறப்பு முதலிய பொருட்கள் தருகிறது .திருமணம் என்பதற்கு மணம், விவாகம் ,வினை கல்யாணம் மற்றும் இல்லறம் போன்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இல்லறம் என்பது வீட்டிலிருந்து வாழும் அறநெறி என்பது பொருளாகும். இல்லறமல்லது நல்லறமில்லை.வாழ்வே மக்களை மாக்களின்றும் வேறுபடுத்தி உயர்த்துவதாகும்.

சங்ககாலத்தில் மணமகன் வீட்டார் பெண் வீட்டாரிடம் பெண் கேட்டு திருமணத்தை நல்ல முகூர்த்தம் பார்த்து நிச்சயத்தனர் என்பதை

*'துரைதொன்றும் பரக்குந் தூமணற்*
*சேர்ப்பனை காதலென் யாயஜநனி வெல்லம்*
*எந்தையுங் கொடீஇயர் வேண்டும்*
*அம்பலூரு பவனொரு மொழிமே" (குறுந்4)*
எனக் குறுந்தொகை பாடல் வழி அறியலாம்.

தமிழகத்தில் திருமணம் எனத் தாம் எழுதிய கட்டுரையில் பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளையவர்கள் பாணிக் கிரகணம் ஓமம், தீவும் வருதல் சப்தபதிமுதலியன சங்ககாலத்தில் நிகழ்ந்தன அல்ல. புரோகிதர்கள் மந்திரம் ஒதுதலும் மண வினையில் இல்லை என்றே கூறால் தாலி கட்டும் சடங்கும் காணப்படவில்லை என்று எழுதியுள்ளார்.

## தீயின் வலம் வருதல்

தீனை வலம் வருதல் என்பது ஒரு பழமையான சடங்கு ஆகும் .கோயில்களில் இறைவனை வழிபடும் போது அவற்றை சுற்றி வருவது வழக்கமாக உள்ளது .இதனை பிரதட்சணம் என்றும் கூறுவார்கள். இது இடமிருந்து வளமாக சுற்றி வருவது இந்தச் செயலை செய்தவன் மூலம் பாவங்கள் நீங்கும் புண்ணியம் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

சங்க இலக்கியங்களில் திருமணம் நடைமுறை பற்றி செய்திகள் அரிதாகக் காணப்பெறுகின்றனர். அகநானூற்றுப் பாடலில் தீவலம் வருவது சுட்டப் பெறவில்லை .மணமக்கள் மணதின்போது எரி வலம் வருதலை முதற்கண் சிலப்பதிகாரம் குறிப்பிடுவதைக் காணலாம்.

'எரியும் செய்வான் சால மீன் தகையாளைக்
கோவலன் முழுதும் பார்ப்பான் மறை வழிக் காட்டிடத்
தகவல் செய்து கொண்டார்கள் நோன்பென்னை" (சிலப்பதிகாரம் 51-53)

## தை நீராடும்

தை நீராடல் என்பது இளம் பெண்களால் நிகழ்த்த பெருமை நிகழ்ச்சி .சங்க இலக்கியங்களில் சுட்ட பெரும் பண்டைய தமிழர் தம் பண்பாட்டு தொடர்புடையது மணமகாத பெண்கள் மார்கழி முழுமதி நாள் தொடங்கி தை முழுமதி நாள் வரை விடியற்காலையில் போராடி நோன்பு இருப்பர்.

பெண்பால் பிள்ளைத் தமிழ் இலக்கணத்தைக் கூறுமிடத்தே, பிங்கலந்தை நிகண்டு, சூத்திரம் 1369 இவ்வாறு கூறுகிறது.

*'பேணும் சிறப்பின் பெண் மகவாயின்
ஐந்தின் முதலா
ஒன்பதின்காறும்ஐங்கணைக் கிழவனை
யார்வமொடு நோற்றலும்பனி நீர
தோய்தலும் பாவை யாடலும்." (நிகண்டு1369)*

ஐந்து முதல் ஒன்பது வயது வரையிலான பருவத்தில் உள்ள சிறுமியர் பனி நீர் தோய்ந்து, பாவை ஆடி, ஐங்கணைக் கிழவன் எனப்படும் ஐந்து பாணங்களை உடைய காம தேவனுக்கு ஆர்வமோடு நோன்பு நோற்பர் என்பது இதன் பொருள்.

## கைம்மை நோன்பு

திருமணத்திற்கு முன்பிருந்தே பூச்சூடி வளையலணிந்து நல் உணவு உண்ட மகளிர் கணவரை இழந்த பிறகு அனைத்தையும் துறந்தவராகின்றனர். பஞ்சணையிலோ, நல்ல படுக்கையிலோ படுத்துறங்கிய மகளிர் பாயும் இல்லாது சிறிய கற்கள் நிறைந்த வெறுந்தரையில் படுத்து உறங்கியிருக்கின்றனர். தாளிப்புடன் கூடிய நல்ல கொழுவிய சுவையுடனான அடிசிலைத் தவிர்த்து நறு நெய்யின்றி நீர்ச்சோற்றையும் புளிகூட்டப்பட்ட வேளைக் கீரையினையும் உணவாகக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர் அவ்விடத்து உண்டான புல்லரிசியினையே தம் உணவாக உட்கொண்டனர். இதனை குறுந்தொகையில்,

*'நறுநெய் தீண்ட துடையிடைக்கிடந்த
கைபிழி பிண்ட வெள்ளெட் சாந்தோடு
புளிப்பெய் வேளை வெந்தை
வல்சியாகப் பரப்பெய் பள்ளிப் பாயின்று வதியும்"
(குறுந்தொகை – பா -87)*

எனச் சுட்டுகின்றனர்.

கைம்மை நோன்பு என்பது கீழ்க்கண்ட ஐந்து நிலைகளில் அமைய காணப்படுகிறது.

1.அணிகலன்களை நீக்குதல்
2.கூந்தல் கொய்தல்
3.பாயின்றி படுத்தல்
4.கட்டுப்படானஉணவு உண்ணுதல்
5.குறிப்பிட்ட தொழில் மேற்கொள்ளுதல்

இவ்வாறாக சடங்குகள் மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வடை சடங்குகள் வாழ்வின் அங்கமாகவும் கொண்டனர் என்பதை இலக்கியங்களில் வழி அறிய முடிகிறது.

## வேளாண்மை சார்ந்த சடங்குகள்

சங்ககாலத் தமிழரின் வாழ்க்கையில் வேளாண்மை முக்கியமான இடம் பெற்றிருந்தது. எனவே மழை, நீர், நிலம், விளைச்சல் ஆகியவற்றோடு தொடர்புடைய நம்பிக்கைகளும் சடங்குகளும் இருந்தன. மருத நில வாழ்க்கையில் வயல், நெல், நீர், உழவு ஆகியவை தொடர்ந்து இடம்பெறுகின்றன. புறநானூறு 18-ல்:

*"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" (புறம் - 18)*

என்று உணவின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகிறது.உணவு உற்பத்தியின் அடிப்படை நிலமும் நீரும் என்பதால், வேளாண்மை சார்ந்த சடங்குகள் இயற்கையை மதிக்கும் மனப்பான்மையோடு தொடர்புடையதாக இருந்தன.

## முடிவுரை

மனிதன் நாகரிகம் பெறத் தொடங்கிய பின்னர் பழக்கவழக்கங்களும் சடங்குகளும் மெல்ல மெல்ல நிலைக் கொண்டன. பெரும்பாலான சடங்குகள் சமயம் சார்ந்தே நிகழ்த்தப்படுகின்றன. மனிதன் வாழ்வைச் சுற்றி நிலைத்திருக்கும் மர்மமே சடங்குகளில் தோற்றத்திற்கு காரணம் ஆகும். சங்க கால மக்கள் தங்களின் வாழ்க்கையை தீமைகளில் இருந்து நன்மை நிறைந்ததாக அமைத்துக் கொள்வதற்கு இத்தகைய சடங்கு முறைகளை மேற்கொண்டுள்ளனர் என்பதை இந்த ஆய்வின்மூலம் உணர முடிகிறது. குடும்ப உறவை வலுப்படுத்துதல், சமூக ஒற்றுமையை உருவாக்குதல் தெய்வ நம்பிக்கையை நிலைநிறுத்துதல், இயற்கையுடன் மனிதனை இணைத்தல்,வீரர்களின் நினைவைப் பாதுகாத்தல், முன்னோர்களைப் போற்றுதல், சமூக ஒழுங்கை நிலைநிறுத்துதல், மக்களின் அச்சத்தையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்துதல், தலைமுறைதோறும் பண்பாட்டைக் கடத்துதல் ஆகிய் சமூகப்பணிகளை சங்ககாலச் சடங்குகள் செய்துள்ளன என்பதை அறியலாம்

## துணைநூற் பட்டியல் (References)

1. மாங்குடி மருதனார், மதுரைக்காஞ்சி, நச்சினார்க்கினியர் உரை, உ.வே. சாமிநாதையர் பதிப்பாசிரியர், கேசரி அச்சுக்கூடம், சென்னை.
2. புறநானூறு, ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை உரை, புறநானூறு மூலமும் உரையும், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
3. குறுந்தொகை, புலியூர்க் கேசிகன் உரை, சாரதா பதிப்பகம், ஜி-4, சாந்தி அடுக்ககம், 3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை – 600 014.
4. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், புலியூர்க் கேசிகன் உரை, கௌரா பதிப்பகம்/சாரதா பதிப்பகம், சென்னை.
5. நிகண்டு சூத்திரம் - சாரதா பதிப்பகம் - ஜி-4, சாந்தி அடுக்ககம், -3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, -ராயப்பேட்டை, சென்னை – 600 014.

**ARTICLE 20 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 140–146

# தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கியத்தின் பங்களிப்பு

## The Contribution of Devotional Literature to the History of Tamil Literature

**மு. சபரி அனந்த்**
உதவிப் பேராசிரியர்
ஏவிஎஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), சேலம் – 636106

### Abstract

Devotional literature holds a unique place in the history of Tamil literature. Between the 6th and 9th centuries CE, devotional songs served as a vital medium for spreading Saivite and Vaishnavite religious sentiments among the people. The Nayanmars and Alvars expressed their faith, love, sense of surrender, righteousness, and social perspectives through simple Tamil. In Saivite devotional literature, the hymns of Thirugnanasambandar, Thirunavukkarasar, Sundarar, and Manickavasagar hold great significance. Within the Vaishnavite tradition, the *Pasurams* (hymns) of the twelve Alvars are noteworthy. These literary works are not merely religious in nature; they also document aspects of language, music, art, culture, and social life.

### ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கியம் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதியில் சைவ, வைணவ சமய உணர்வுகள் மக்களிடையே பரவுவதற்கு பக்திப் பாடல்கள் முக்கிய ஊடகமாக அமைந்தன. நாயன்மார்களும் ஆழ்வார்களும் தங்கள் இறைநம்பிக்கை, அன்பு, சரணாகதி, அறம், சமுதாயப் பார்வை ஆகியவற்றை எளிய தமிழில் வெளிப்படுத்தினர்.

சைவப் பக்தி இலக்கியத்தில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரின் பாடல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. வைணவ மரபில் பன்னிரு ஆழ்வார்களின் பாசுரங்கள் குறிப்பிடத்தக்கவை. இவ்விலக்கியங்கள் சமயம் சார்ந்தவை மட்டுமன்றி மொழி, இசை, கலை, பண்பாடு, சமூக வாழ்வு ஆகியவற்றையும் பதிவு செய்கின்றன.

**திறவுச் சொற்கள்:** பக்தி இலக்கியம், நாயன்மார்கள், ஆழ்வார்கள், தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், இறையன்பு, சரணாகதி, தமிழ் பண்பாடு

ஆய்வின் நோக்கங்கள்

தமிழ் பக்தி இலக்கியத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் ஆராய்தல்.

சைவ, வைணவ பக்தி இலக்கியங்களின் தனித்தன்மைகளை விளக்குதல்.

நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களின் இலக்கியப் பங்களிப்பை எடுத்துரைத்தல்.

பக்தி இலக்கியங்களில் காணப்படும் அறம், அன்பு, சமத்துவம் ஆகிய கருத்துகளை ஆராய்தல்.

பக்தி இலக்கியம் தமிழ் மொழி, இசை, கோயில் பண்பாடு ஆகியவற்றில் ஏற்படுத்திய தாக்கத்தை விளக்குதல்.

இன்றைய சமூகத்தில் பக்தி இலக்கியத்தின் பொருத்தத்தைப் புரிந்துகொள்ளுதல்.

## முன்னுரை

இலக்கியம் என்பது ஒரு சமூகத்தின் சிந்தனை, உணர்வு, நம்பிக்கை, வாழ்க்கை முறைகளைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகும். தமிழில் சங்க இலக்கியத்திற்குப் பிந்தைய காலத்தில் சமய உணர்வு இலக்கியப் படைப்புகளின் முக்கிய மையமாக மாறியது. இதன் விளைவாக பக்தி இலக்கியம் பெரும் வளர்ச்சி பெற்றது.

பக்தி என்பது இறைவனை அன்புடன் அணுகுதல், தன்னைவிட உயர்ந்த ஆன்மிக உண்மையின் மீது நம்பிக்கை கொள்ளுதல், இறை அருளை நாடுதல் ஆகியவற்றைக் குறிக்கிறது. இந்த உணர்வை பொதுமக்களுக்கும் எளிதில் சென்றடையச் செய்தது தமிழ் பக்தி இலக்கியத்தின் சிறப்பாகும்.

## பக்தி இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழகத்தில் பக்தி இயக்கம் வலுப்பெற்ற காலம் சமய வரலாற்றிலும் இலக்கிய வரலாற்றிலும் முக்கியமான திருப்புமுனையாகக் கருதப்படுகிறது. சமயக் கருத்துகள் மக்களின் அன்றாட வாழ்க்கையோடு இணைந்தன. கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமின்றி கலை, இசை, கல்வி, சமூக உறவு ஆகியவற்றின் மையங்களாகவும் விளங்கின.

பக்திப் பாடல்கள் உயர்ந்த தத்துவக் கருத்துகளை மட்டும் எடுத்துரைக்கவில்லை. தனிமனிதனின் துயரம், மகிழ்ச்சி, குற்ற உணர்வு, வேண்டுதல், நன்றி, அன்பு போன்ற உணர்வுகளையும் வெளிப்படுத்தின. இதனால் பக்தி இலக்கியம் மக்களின் மனத்தோடு நெருக்கமாக இணைந்தது.

## சைவ பக்தி மரபு

சைவ சமயத்தை மக்களிடையே வலுப்படுத்தியவர்களில் நாயன்மார்கள் முக்கியமானவர்கள். அறுபத்து மூவர் எனப் போற்றப்படும் நாயன்மார்களின் வாழ்க்கை மற்றும் இறைப்பற்று பின்னாளில் பெரியபுராணம் போன்ற படைப்புகளில் விரிவாகப் பதிவு செய்யப்பட்டது.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரின் தேவாரப் பாடல்கள் சைவ பக்தி இலக்கியத்தின் முக்கியச் செல்வமாகும். இப்பாடல்களில் சிவபெருமானின் பெருமை, கோயில் சிறப்பு, அடியார்களின் பக்தி ஆகியவை விரிவாகப் பாடப்படுகின்றன.

## தேவாரம் – பக்தியின் இசை வடிவம்

தேவாரம் என்பது சைவ சமயத்தின் முக்கியமான பக்திப் பாடல் தொகுப்பாகும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய

மூவரின் பாடல்கள் இதில் இடம்பெற்றுள்ளன. கோயில்களை மையமாகக் கொண்டு பாடப்பட்ட இப்பாடல்கள் தமிழின் இசை மரபோடும் நெருக்கமாக இணைந்துள்ளன.

திருஞானசம்பந்தரின் பாடல்களில் குழந்தைமையின் தூய்மை, இறைவனின் மீது கொண்ட ஆழ்ந்த அன்பு, சைவ நம்பிக்கை ஆகியவை வெளிப்படுகின்றன. திருநாவுக்கரசரின் பாடல்களில் பணிவு, உழைப்பு, நிலையாமை, இறைச்சேவை போன்ற கருத்துகள் வலியுறுத்தப்படுகின்றன. சுந்தரரின் பாடல்களில் இறைவனுடன் நெருக்கமான உறவு காணப்படுகிறது.

## எடுத்துக்காட்டு

தேவாரப் பாடல்களில் கோயில் அமைந்துள்ள ஊரின் இயற்கை வளம், ஆறு, குளம், வயல், மலர், பறவை போன்றவை இறை அனுபவத்துடன் இணைக்கப்படுகின்றன. இதன் மூலம் சமயம் மற்றும் இயற்கை ஆகிய இரண்டிற்கும் இடையிலான தொடர்பையும் அறிய முடிகிறது.

## திருவாசகம் – உள்ளத்தின் உருக்கம்

மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகம் தமிழ் பக்தி இலக்கியத்தின் உச்சங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இறைவனிடம் முழுமையான சரணாகதி, தன்னிலை உணர்வு, ஆன்மிகத் தேடல், மன உருக்கம் ஆகியவை இதன் மையக் கருத்துகளாக அமைகின்றன.

திருவாசகத்தில் பக்தன் தன் குறைகளையும் பலவீனங்களையும் ஒப்புக்கொண்டு இறைவனின் அருளை நாடுகிறான். இத்தகைய நேர்மையான உள்ளப் பதிவு வாசகனின் மனத்திலும் பக்தி உணர்வை உருவாக்குகிறது.

## பக்தியும் மனித உணர்வுகளும்

பக்தி இலக்கியம் மனித உணர்வுகளை மறுப்பதில்லை; மாறாக அவற்றை இறை அனுபவத்தின் வழியாக உயர்த்துகிறது. அன்பு, பிரிவு, ஏக்கம், பயம், நம்பிக்கை, நன்றி போன்ற உணர்வுகள் பல்வேறு உருவகங்களால் வெளிப்படுத்தப்படுகின்றன.

## வைணவ பக்தி இலக்கியம்

வைணவ பக்தி மரபில் பன்னிரு ஆழ்வார்களின் பாசுரங்கள் மிக முக்கியமானவை. அவர்கள் திருமால் மற்றும் அவரது அவதாரங்களைப் பற்றிய ஆழ்ந்த பக்தியைப் பாடல்களாகப் பதிவு செய்தனர். இப்பாடல்கள் பின்னர் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் என்ற தொகுப்பில் நிலைபெற்றன.

ஆழ்வார்களின் பாடல்களில் இறைவனை அடைவதற்கான அன்பு, சரணாகதி, இறைவனின் அருள், திருமாலின் திருத்தலங்கள், பக்தரின் மனநிலை ஆகியவை பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகின்றன.

## ஆண்டாள் – பெண் பக்தியின் குரல்

ஆண்டாள் தமிழ் பக்தி இலக்கியத்தில் தனிச்சிறப்பு பெற்ற பெண் ஆளுமையாகத் திகழ்கிறார். திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழி ஆகிய படைப்புகள் அவரது பக்தி உணர்வின் ஆழத்தை வெளிப்படுத்துகின்றன. பெண்ணின் காதல் உணர்வும் இறைநம்பிக்கையும் ஒன்றிணையும் தனித்துவமான கவிதை உலகை ஆண்டாள் உருவாக்குகிறார்.

திருப்பாவை மார்கழி வழிபாட்டு மரபோடு நெருங்கிய தொடர்புடையது. தோழியருடன் கூடி இறைவனை நாடும் பெண்களின் குரல், சமூக ஒற்றுமை, அறம், இறைநம்பிக்கை ஆகியவற்றை இப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

## பக்தி இலக்கியத்தில் சமூகச் சிந்தனை

பக்தி இலக்கியம் சமய உணர்வை மட்டும் எடுத்துரைக்காமல் சமூக வாழ்வையும் தொடுகிறது. இறைவனின் முன் மனிதர்கள் அனைவரும் சமம் என்ற உணர்வு பல பக்திப் படைப்புகளில் வலுப்பெறுகிறது. அடியார்களின் சேவை, பணிவு, அன்பு ஆகியவை உயர்ந்த மதிப்புகளாகக் காட்டப்படுகின்றன.

நாயன்மார்களின் வரலாற்றில் பல்வேறு சமூகப் பின்னணியைச் சேர்ந்தவர்கள் இறைவனடியார்களாகப் போற்றப்படுவது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் பக்தி என்பது பிறப்பு, செல்வம் போன்ற வெளிப்புற வேறுபாடுகளை விட உள்ளத்தின் தூய்மையை முன்னிறுத்துகிறது என்ற கருத்து வலுப்பெறுகிறது.

## அன்பும் அறமும்

பக்தி இலக்கியங்களில் இறையன்பும் மனித அன்பும் ஒன்றோடொன்று இணைந்துள்ளன. பிறருக்கு உதவுதல், விருந்தோம்பல், தானம், பணிவு, அடியார்களுக்கு சேவை செய்தல் போன்ற அறக்கருத்துகள் பல இடங்களில் வலியுறுத்தப்படுகின்றன.

## பக்தி இலக்கியமும் கோயில் பண்பாடும்

பக்தி இலக்கியத்தின் வளர்ச்சியோடு கோயில் மையப் பண்பாடும் வளர்ச்சி பெற்றது. பாடல்களில் குறிப்பிடப்படும் திருத்தலங்கள் தமிழகத்தின் சமயப் புவியியலை அறிய உதவுகின்றன. கோயில், ஊர், நதி, குளம், வயல், மலர், திருவிழா போன்ற கூறுகள் இலக்கியத்துடன் இணைந்துள்ளன.

தேவாரம் மற்றும் திவ்யப் பிரபந்தப் பாடல்கள் பல கோயில்களின் சிறப்பை எடுத்துரைப்பதால் அவை சமய வரலாற்றுக்கும் பண்பாட்டு வரலாற்றுக்கும் முக்கிய ஆதாரங்களாக அமைகின்றன.

## இசை மற்றும் கலை

பக்திப் பாடல்கள் இசையுடன் பாடப்பட்டதால் தமிழ் இசை மரபின் வளர்ச்சிக்கும் பங்களித்தன. கோயில் வழிபாட்டில் பாடல், இசை, நடனம்

ஆகியவை இணைந்து செயல்பட்டன. இதன் தாக்கம் பின்னாளில் கோயில் கலை மரபுகளிலும் காணப்படுகிறது.

## பக்தி இலக்கியத்தில் இயற்கை

பக்தி இலக்கியங்களில் இயற்கைக் காட்சிகள் இறை அனுபவத்தின் பின்னணியாக அமைகின்றன. மலர்கள், மலைகள், ஆறுகள், குளங்கள், வயல்கள், தேனீக்கள், பறவைகள் போன்றவை இறைவனின் திருத்தலச் சிறப்பை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இயற்கை வெறும் அழகுக் காட்சியாக மட்டும் இல்லாமல், இறைவனின் படைப்பாற்றலை உணர்த்தும் அடையாளமாகவும் அமைகிறது. இதனால் பக்தி இலக்கியம் சுற்றுச்சூழல் உணர்வை நேரடியாகப் பிரசாரம் செய்யாவிட்டாலும் இயற்கையின் மதிப்பை உணர்த்தும் இலக்கியச் சான்றுகளைக் கொண்டுள்ளது.

## மொழிநடை

பக்தி இலக்கியத்தின் மொழிநடை பொதுமக்களுக்கு நெருக்கமானதாகவும் உணர்ச்சிச் செறிவு கொண்டதாகவும் அமைந்துள்ளது. உவமை, உருவகம், இறைநாமம், திருத்தல வர்ணனை, உருக்கமான வேண்டுதல் போன்ற இலக்கிய உத்திகள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

## பக்தி இலக்கியத்தில் பெண்ணின் இடம்

பக்தி இலக்கியத்தில் பெண்களின் குரலும் முக்கிய இடம் பெறுகிறது. ஆண்டாளின் படைப்புகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். பெண் தன் தனிப்பட்ட உணர்வை இறைநம்பிக்கையின் வழியாக வெளிப்படுத்தும் வாய்ப்பை பக்தி இலக்கியம் வழங்கியது.

பெண் பக்தரின் குரலில் காதல், ஏக்கம், வேண்டுதல், தோழமை, சமூக வழிபாடு ஆகியவை ஒன்றோடொன்று கலக்கின்றன. இதனால் பக்தி இலக்கியம் பெண்களின் ஆன்மிக அனுபவத்தையும் பதிவு செய்த இலக்கியப் பரப்பாகத் திகழ்கிறது.

## உளவியல் நோக்கு

பக்திப் பாடல்களில் மனக்குழப்பம், குற்ற உணர்வு, இறைவனை நாடுதல், பிரிவு, நம்பிக்கை, அருள் கிடைத்த மகிழ்ச்சி போன்ற உளவியல் நிலைகள் வெளிப்படுகின்றன. எனவே பக்தி இலக்கியத்தை ஆன்மிக இலக்கியமாக மட்டுமல்லாமல் மனித மனத்தின் ஆவணமாகவும் வாசிக்கலாம்.

பக்தி இலக்கியத்தின் இலக்கியச் சிறப்புகள்

உணர்ச்சிச் செறிவு – பக்தரின் உள்ளுணர்வுகள் நேர்மையாக வெளிப்படுதல்.

இசைநயம் – பாடல்களைப் பாடுவதற்கேற்ற ஓசை மற்றும் சொல் அமைப்பு.

இயற்கை வர்ணனை – திருத்தலங்களின் இயற்கை வளம் விரிவாகச் சித்தரித்தல்.

உவமை மற்றும் உருவகம் – இறை அனுபவத்தை விளக்க பல்வேறு காட்சியுருவங்கள் பயன்படுதல்.

எளிய மொழிநடை – பொதுமக்களும் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துகள் வெளிப்படுதல்.

சமூக மதிப்புகள் – அன்பு, பணிவு, சேவை, அறம் போன்ற கருத்துகள் வலியுறுத்தப்படுதல்.

## பக்தி இலக்கியத்தின் வரலாற்றுப் பயன்

பக்தி இலக்கியங்கள் சமய வரலாற்றை அறிய உதவுவதோடு அக்கால சமூகத்தின் பண்பாடு, வழிபாடு, நகரங்கள், ஊர்கள், தொழில்கள், உணவு, உடை, திருவிழா போன்ற பல கூறுகளைப் பற்றியும் தகவல்களை வழங்குகின்றன. எனவே அவை இலக்கிய ஆதாரங்களாக மட்டுமன்றி பண்பாட்டு ஆவணங்களாகவும் மதிக்கப்படுகின்றன.

## இன்றைய காலத்தில் பக்தி இலக்கியத்தின் முக்கியத்துவம்

இன்றைய வேகமான வாழ்க்கையிலும் பக்தி இலக்கியங்கள் வாசிப்பு, இசை, கோயில் வழிபாடு, கலை நிகழ்ச்சிகள், கல்வி ஆகிய துறைகளில் தொடர்ந்து பயன்படுகின்றன. தேவாரம், திருவாசகம், திருப்பாவை போன்றவை பல தலைமுறைகளாகப் பாடப்பட்டு வருகின்றன.

இலக்கிய மாணவர்களுக்கு பக்தி இலக்கியம் தமிழ் மொழியின் வரலாற்றையும் கவிதை வளர்ச்சியையும் அறிய உதவுகிறது. சமூக ஆய்வாளர்களுக்கு சமய இயக்கம், மக்கள் வாழ்க்கை, கோயில் மையச் சமூகம் ஆகியவற்றைப் புரிந்துகொள்ள உதவுகிறது. இசை ஆர்வலர்களுக்கு பாரம்பரியப் பாடல் மரபுகளை அறிய வழிகாட்டுகிறது.

## கல்வியில் பக்தி இலக்கியம்

பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வியில் பக்தி இலக்கியங்களைப் படிப்பதன் மூலம் மாணவர்கள் தமிழ் மொழியின் செழுமை, பண்பாட்டு மரபு, அறச்சிந்தனை, கவிதை நயம் ஆகியவற்றை அறிந்து கொள்ள முடியும். பாடல்களை வெறும் மனப்பாடப் பகுதிகளாக அணுகாமல் வரலாறு, சமூகம், உளவியல், கலை ஆகிய பல கோணங்களில் வாசிப்பது பயனுள்ளதாகும்.

## முடிவுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கியம் ஒரு முக்கியமான மாற்றத்தை உருவாக்கியது. இறைநம்பிக்கையை மக்களின் அன்றாட வாழ்வோடு இணைத்ததுடன், தமிழ் மொழியில் உணர்ச்சி, இசை, கலை, சமூகச் சிந்தனை ஆகியவற்றை ஒருங்கிணைத்தது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடிய படைப்புகள் பல நூற்றாண்டுகளைக் கடந்து இன்றும் வாழும் இலக்கியச் செல்வங்களாக உள்ளன.

தேவாரம், திருவாசகம், நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், திருப்பாவை போன்ற படைப்புகள் பக்தியின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்துகின்றன. அவற்றில் இறைவனை நாடும் தனிமனிதனின்

மனநிலை மட்டுமின்றி சமூக அன்பு, அறம், பணிவு, சேவை, இயற்கை உணர்வு, கோயில் பண்பாடு போன்ற பல கருத்துகளும் இடம்பெற்றுள்ளன.

எனவே பக்தி இலக்கியத்தை வெறும் சமய இலக்கியமாகக் கருதாமல், தமிழ் மொழி மற்றும் பண்பாட்டின் பல்துறை ஆவணமாக அணுக வேண்டும். அதன் வழியாக தமிழரின் ஆன்மிகச் சிந்தனை, கலை உணர்வு, சமூக மதிப்புகள் ஆகியவற்றை ஆழமாகப் புரிந்துகொள்ள முடியும்.

## ஆய்வின் நிறைவுக் குறிப்பு

பக்தி இலக்கியம் தமிழின் ஆன்மிக மரபை மட்டுமன்றி அதன் மொழி, இசை, கலை, பண்பாடு, சமூக நினைவகம் ஆகியவற்றையும் வளப்படுத்தியதாகும். அதன் இலக்கியப் பெறுமதியை வரலாற்று மற்றும் சமூக நோக்கில் தொடர்ந்து ஆய்வு செய்வது தமிழ் ஆய்வுலகிற்கு பயனளிக்கும்.

## துணைநூற் பட்டியல் (References)

1. தொல்காப்பியம் – பொருளதிகாரம்.
2. தேவாரம் – திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பாடல்கள்.
3. திருவாசகம் – மாணிக்கவாசகர்.
4. நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்.
5. திருப்பாவை – ஆண்டாள்.
6. பெரியபுராணம் – சேக்கிழார்.
7. தமிழ் இலக்கிய வரலாறு – பல்வேறு ஆய்வுநூல்கள்.
8. தமிழ் பக்தி இலக்கிய ஆய்வுகள் – பல்கலைக்கழக வெளியீடுகள்.